2951

T.N.L.A Debates

Official Report

Vol 29 No 4

14, 17 November 1986

D I
V211,31 N86
N86.29.3.4
136496

வெளியீடு 25-6-1987 Issued 25-6-1987

1080/87 2951

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை நவம்பர் 14, 1986—தொகுதி 29 எண் 3

Friday the 14th November 1986—Volume 29 No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600009
**Legislative Assembly Secretariat, Fort St. George, Madras-600009**

விலை ரூ. 3] [Price Rs. 3

1080/87.
136496
சென்னை-600 008.

## உள்ளடக்கம்.

**14–11–1986.**

| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்-விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. .. | 123—159 |
| 2. முன்னாள் பாரதப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுக்குப் பிறந்த நாள் புகழ் அஞ்சலி. | 159—162 |
| 3. உரிமைப் பிரச்சினை— | |
| மின் வாரியத் தலைவர் மீது .. .. .. | 162—165 |
| 4. அறிவிப்புகள்— | |
| (அ) 1986–87 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள் அறிக்கையைப் பேரவைக்கு அளித்தல் .. .. .. .. | 165 |
| (ஆ) 1980–81 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவைக்கு அளித்தல். .. .. .. . | 165 |
| (இ) கோவை, பாரதியார் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல். .. .. .. | 166 |
| (ஈ) திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக் கழக ஆட்சிக்குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல். .. .. .. | |
| (உ) காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு உறுப்பினர் தேர்ந்தெடுத்தல். .. .. .. .. | 166 |
| 5. கவன ஈர்ப்பு— | |
| குவாரிகள் ஏலம் விடப்படும் தொகையை ஊராட்சிகளுக்கு பகிர்ந்தளித்தல். .. | 167—168 |

| | பக்கங்கள் |
|---|---|
| 6. அரசினர் சட்ட முன்வடிவுகள்— | |
| (அ) சென்னை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986. .. | ..169—174 |
| (ஆ) கோயம்புத்தூர் மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986. .. | ..175—178 |
| (இ) மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986. .. | ..178—180 |
| (ஈ) தமிழ்நாடு நகராண்மைச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986. .. | 181 |
| (உ) தமிழ்நாடு இந்து சமய அறநிலையக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1986. | 182 |
| 7. அமைச்சரின் அறிக்கை— | |
| கரும்பு விலை குறித்து .. .. | .182—183 |
| 8. தனியார் அலுவல்கள்— | |
| தனித் தீர்மானம்— | |
| சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டிய அவசியம் குறித்து | 182 |
| திருமதி பா. வளர்மதி .. .. | .184—186 |
| திரு. க. பாரமலை .. .. .. | .186—191 |
| திரு. பொன். முத்துராமலிங்கம் .. | ..192—196 |
| திரு. பொ. உத்திராபதி .. .. | ..196—299 |
| திரு. மா. சின்னராசு .. .. | .199—205 |
| திரு. எஸ். என். இராமசாமி .. | .205—206 |
| திரு. வை. பாலச்சந்திரன் .. | ..206—207 |
| திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம் .. | ..208—209 |
| 9. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள் .. | ..209—210 |


## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**1986, நவம்பர் 14, வெள்ளிக் கிழமை**

**ஐப்பசி 29, அட்சய-திருவள்ளுவர் ஆண்டு, 2017**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்."

சொல்லும்போது கேட்டவரை தன் வயப்படுத்தும் பண்புகளுடன் கேட்காதவரும் கேட்க விரும்புமாறு கூறப்படுவது சொல் வன்மை ஆகும்.

### 1. வினாக்கள்—விடைகள்

#### உடுக்குறியிட்ட வினாக்கள்

#### தேனியைத் தலைமையிடமாகக் கொண்டு தனி வட்டம் அமைத்தல்

1— (*வினா எண் 9361) திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தேனியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு தனி வட்டம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு செயற்குறிப்பு பரிசீலனையில் இருந்து வருகிறது. முடிவு எடுக்கப்படவில்லை.

திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்தச் சட்டமன்றத்தில் தேனியைத் தலைநகரமாகக் கொண்டு ஒரு வட்டம் அமைக்கின்ற செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறதென்று கடந்த

இரண்டாண்டுகளுக்கு முன்னதாக உறுதியளிக்கப்பட்டது. அது மிக விரைவாகத் துவக்கப்படுகிற காலத்தை உத்தேசமாக அறிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனை செய்வது என்பது உறுதி அளிப்பதாக ஆகாது. பெரியகுளம் மற்றும் உத்தமபாளையம் தாலுக்காக்களைச் சீரமைத்து ஒரு புதிய வட்டம் அமைக்கும் செயற்குறிப்பு பரிசீலனையில் இருந்தது. அப்போது தேனியைத் தலைநகரமாகக் கொண்டு புதியதொரு வட்டம் அமைக்கலாமா என்று ஒரு செயற்குறிப்பு இருந்தது. பிறகு, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயரால் புதியதொரு மாவட்டம் உருவாக்கப் பெற்று, பெரியகுளத்தினுடைய ஒரு பகுதியாக இருக்கிற கொடைக்கானல் பகுதி அண்ணா மாவட்டத்தில் சேர்க்கப்பட்டு விட்டது. ஆகவே, இப்போது பெரியகுளம், உத்தமபாளையத்தினுடைய பகுதியைக் கொண்டு புதிய வட்டம் உருவாக்குவதைப் பற்றி புதிய சிந்தனைகள் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன.

ஆகவே, தேனியைத் தலைநகராகக் கொண்டு புதியதொரு வட்டம் உருவாக்குவதா என்பது ஒன்று. இப்போது அங்கே பெரியகுளம், உத்தமபாளையம் தாலுக்காக்களைச் சீரமைத்து தேனி தாலுக்கா அமைப்பதற்குப் பதிலாக பெரியகுளம் தாலுக்காவை மட்டும் இரண்டாகப் பிரித்து, கடமலைக்குண்டு பகுதியைத் தலைநகரமாகக் கொண்டு ஆண்டிப்பட்டி தாலுக்காவை அமைக்க வருவாய் நிருவாக ஆணையர் செயற்குறிப்பு ஒன்றை அனுப்பி இருக்கிறார்கள். ஆண்டிப்பட்டி பகுதி சமூக, பொருளாதார மற்றும் கல்வி வளர்ச்சியில் மிகவும் பின்தங்கிய பகுதி என்றும், தேனி, பெரியகுளத்திலிருந்து 15 கிலோ மீட்டர் தூரத்தில்தான் இருக்கிறது என்றும், ஆகவே, இந்தச் செயற்குறிப்பும் பரிசீலனையிலே வைக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பு இருக்கிறது. விவரங்கள் மேலும் கேட்கப்பட்டு இருக்கின்றன. இந்த இரண்டு செயற்குறிப்புகளும் அரசின் பரிசீலனையில் இருந்து வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பார்கள்.

**திரு. என். எஸ். வி. சித்தன்** : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, தேனியைத் தலைமையிடமாகக் கொண்டு தனி வட்டம் அமைக்கின்ற பரிசீலனை ஒருபுறம் இருக்க, மதுரை நகரத்திலே இருக்கின்ற 'ஆர்ம்ட் ரிசர்வ்' என்று சொல்லக் கூடிய ஆயுதப் படைக் காவலினுடைய தலைமையிடத்தை தேனிக்கு மாற்றுவதற்கு ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்ப





தாக நான் அறிகிறேன். அப்படி மாற்றப்படுமேயானால், திருமங்கலம், மேலூர் பகுதியில் இருக்கின்ற மக்கள் தேனிக்குச் செலவதற்கு சற்றேறக்குறைய 120 கிலோ மீட்டருக்கும் அதிகமாக செல்ல வேண்டியிருக்குமென்ற காரணத்தினாலே, எப்படி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், அதைப்போலவே, செஷன்ஸ் நீதிமன்றம் மதுரையிலே இருக்கின்றனவோ, அவைகளைப் போலவே இந்த ஆயுதப் படை தலைமையிடத்தை மதுரையிலேயே வைத்திருப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றிய விவரக் குறிப்புகள் என்னிடத்தில் இப்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வு, மற்றவைகளை எல்லாம் ஆராய்ந்து, என்ன நிலைமை என்பதைப் பற்றி எடுத்துச் சொல்லலாம்.

**திரு. எல்ல. இராசமாணிக்கம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, தமிழகத்திலுள்ள பெரிய வட்டங்களை எல்லாம் இரண்டாகப் பிரிக்கும் குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல பெரிய வட்டங்களை இரண்டாகப் பிரித்து புதிய வட்டங்களை உருவாக்கிக் கொண்டு வருகிறோம். ஏற்கனவே துணை வட்டங்களாக இருந்தவைகள் எல்லாம் ஏறத்தாழ அல்ல, எல்லாவற்றையுமே கூட இப்போது வட்டங்களாக மாற்றி விட்டோம். பல பெரிய வட்டங்களை வேலைப் பளுவின் காரணமாகவும், மக்களுடைய நலன் கருதியும் இரண்டாகப் பிரிக்கின்ற பல செயற்குறிப்புகள் பல மாவட்டங்களில் இருந்து கொண்டு வருகின்றன. ஏழு, எட்டு ஆண்டு காலத்திலே மட்டும், 40, 50-க்கு மேற்பட்ட புதிய வட்டங்கள் தமிழகம் முழுவதும் உருவாக்கப்பட்டு இருக்கின்றன. அந்த அடிப்படையிலேதான் பல பெரிய வட்டங்கள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

**திரு. பாப்பா சுப்பிரமணியன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை வட்டம் மிகப் பெரிய வட்டமாக இருக்கிற காரணத்தால் மயிலாடுதுறை வட்டத்தை இரண்டாகப் பிரித்து, குத்தாலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு குத்தாலம் வட்டம் என்று அமைக்கும் செயல் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

### அரூரைப் பொதுத் தொகுதியாக மாற்றல்

2—(*வினா எண் 9644) திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அரூர் தனித் தொகுதியாக உள்ளதை மாற்றி பொதுத் தொகுதி ஆக்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. க. ரா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தர்மபுரி மாவட்டம் அரூர் தொகுதி நீண்ட நெடுங்
காலமாகவே பொதுத் தொகுதியாக இல்லாமல் ஒரு ரிசர்வ்
தொகுதியாக இருந்து வருகிறது. இந்தத் தொகுதியைப் பொதுத்
தொகுதியாக வரும் 1989 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கு
முன்னால் அறிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, 1950 ஆம் ஆண்டு மக்கள்
பிரதிநிதித்துவச் சட்டம் இரண்டாவது ஆம் ஆண்டு மக்கள்
அடிப்படையில் மாநிலத்திற்கு மாநிலம் நாடாளுமன்ற உறுப்
பினர்களுடைய தொகுதிகளின் எண்ணிக்கையும், சட்டமன்ற
உறுப்பினர்களின் தொகுதிகளுடைய எண்ணிக்கையும் வகுக்கப்
படுகின்றன. மக்கள் எண்ணிக்கையின் அடிப்படையில் இந்தியா
முழுவதும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய தொகுதிகள்
வகுக்கப்படுகின்றன. அதற்கு ஏற்ப மாநிலத்திற்கு மாநிலம்
நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொகுதிகளின் கீழே எத்தனை
சட்டமன்றத் தொகுதிகள் இருப்பது என்பதைப் பற்றி மாநிலமே
முடிவு செய்து, மத்திய அரசும் தேர்தல் கமிஷனும் ஒப்புக்
கொள்கிற அளவுக்கு முடிவு செய்யப்படுகின்றன. தமிழகத்தைப்
பொறுத்த வரையில் 234 சட்டமன்றத் தொகுதிகள் இருக்
கின்றன. அதில் 42 தொகுதிகள் ஆதி திராவிடர் வகுப்பிற்கும்



3 தொகுதிகள் பழங்குடியினர்களுக்கும் என்று வகுக்கப்பட்டிருக்கின்றன. அதனுடைய தொகுதி அமைப்புகள் என்பது 1972 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட சீரமைப்புக் குழுவினால் (Delimitation Commission) முடிவு செய்யப்பட்டதாகும். 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை (Delimitation Commission) என்கிற சீரமைப்புக் குழு இதனை முடிவு செய்ய வேண்டும் என்ற ரீதியில் கி.பி. 2001 ஆம் ஆண்டு எடுக்கப்பட இருக்கிற சென்சஸ் எண்ணிக்கையை வைத்துத்தான் இனிமேல் இந்த எல்லை மாற்றம் செய்யப்பட வேண்டும் என்று மத்திய அரசு, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 170-வது பிரிவின் அடிப்படையில் ஒரு தடை ஆணையைப் பிறப்பித்திருக்கிறது.

ஆகவே, இப்போதிருக்கிற தொகுதியின் எல்லையைப் பொறுத்த வரையில் பிரித்து அமைப்பதற்கான வாய்ப்பு வசதிகள் இப்போது எந்த வகையிலும் இல்லை. மத்திய அரசு அதற்கு மறுபடியும் ஒரு சட்டம் கொண்டு வந்து தடை ஆணையை நீக்கினால்தான் அது முடியும். என்றாலும் கூட தேர்தல் கமிஷன் மத்திய அரசுக்குக் கடிதம் ஒன்று எழுதியிருக்கிறது. அதாவது 1981 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்புக்கு ஒப்ப நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்காமல் அவற்றின் எல்லையை மாற்றுவதற்கு மத்திய அரசு அனுமதி அளிக்கலாம் என்றும், தனித் தொகுதியாக இருப்பதைப்பொதுத் தொகுதியாக மாற்றுகிற அளவுக்கும் மற்றும் பொதுத் தொகுதியாக இருப்பதைத் தனித் தொகுதியாக மாற்றுகிற அளவுக்கும் எல்லையைப் பொறுத்த வரை மாற்றம் செய்யலாம் என்றும் அதற்கு மத்திய அரசு தடை ஆணையை நீக்கி ஒரளவிற்கு உத்தரவிடவேண்டும் என்றும் அதற்கு ஏற்றபடி அரசியலமைப்புச் சட்டத்திற்கும் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்றும் தேர்தல் கமிஷன் மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறது. இந்தக் கருத்தை மத்திய அரசு ஏற்றுக் கொண்டு, அரசியலமைப்பு சட்டத்திற்குத் திருத்தம் கொண்டு வந்தால், அதற்குப் பிறகு தான் தனித் தொகுதியைப் பொதுத் தொகுதியாகவோ அல்லது பொதுத் தொகுதியைத் தனித் தொகுதியாகவோ ஆக்க முடியும். அது இல்லாதவரை கி.பி. 2001 ஆம் ஆண்டு வரை பொதுத் தொகுதி பொதுத் தொகுதியாகவும், தனித் தொகுதி தனித் தொகுதியாகவும்தான் இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 3 மற்றும் 4 மாண்புமிகு உணவுத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்பெறுகின்றன.

[1986 நவம்பர் 14

சேரன்மாதேவியில் ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டும் பணி

5—(*வினா எண். 3280) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :(பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்கண்டவினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம் சேரன்மாதேவி' சேரன்கோவில்பத்து, அண்ணா நகர் பகுதிகளில் கட்டப்பட்டுவரும் ஆதிதிராவிடர்களுக்கான வீடுகள் எப்போது கட்டி முடிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, நடப்பு நிதியாண்டான 1986—87க்குள் கட்டி முடிக்கப்படும்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேரன்கோயில்பத்து பகுதியில் ஆதிதிராவிடர்களுக்காகக் கட்டப்படும் இந்த வீடுகள் நீண்டகாலமாக தாமதப்பட்டு வருகிறது. அதற்கான காரண காரியங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் அவர்கள் தொகுதியில் இந்தக் கட்டிடங்கள் கட்டப்படுகின்றன. இந்தக் கட்டிடங்களுடைய அடித்தளங்கள் எல்லாம் களிமண்ணாக இருக்கிறது என்று கண்டுபிடிக்கப்பட்டிருப்பதால் அது மறுபரிசீலனை செய்யப்பட்டு இந்த ஆண்டு இறுதிக்குள் அவற்றைக் கட்டி முடிக்க முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. ஜான் வின்சென்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர்களுக்கென வீடு கட்டும் திட்டத்தில் கிறிஸ்துவர்களுக்கு இல்லை என்பதாக அரசாணை பிறப்பித்துள்ளதாக அதிகாரிகள் கூறுகிறார்கள். அரசாணை பிறப்பிக்கப்பட்டிருந்தாலும், ஏழை ஆதிதிராவிட கிறிஸ்தவர்களுக்கும் ஆதிதிராவிடர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தில் இடம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது குறித்து என்னிடத்திலே தகவல் இல்லை. தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.



1986 நவம்பர் 14]

திருப்பத்தூரில் பிற்படுத்தப்பட்டோர் மகளிர் விடுதி கட்டும் திட்டம்

6—(*வினா எண் 9623)—திரு. எஸ். பி. மணவாளன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூரில் பிற்படுத்தப்பட்டோர் மகளிர் விடுதி கட்டிடம் துவக்க உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே (அ) மற்றும் (ஆ) திருப்பத்தூரில் பிற்படுத்தப்பட்டோர் மகளிர் விடுதி ஏதும் இல்லை. எனவே கட்டிடம் கட்டுவதற்கான அவசியம் எழவில்லை.

திரு. எஸ். பி. மணவாளன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது போல தற்சமயம் அங்கு பிற்பட்டோர் மகளிர் விடுதி எதுவும் இல்லை என்பது சரிதான். ஆனால் அங்கு இருக்கின்ற அரசினர் ஆதிதிராவிட மாணவியர்கள் விடுதியில் பிற்பட்ட மாணவியர்களைச் சேர்க்கும் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. ஆகவே பிற்பட்ட மாணவியர்களுடைய வசதியை முன்னிட்டு புதியதாக பிற்பட்ட வகுப்பு மாணவியர்கள் விடுதியை ஏற்படுத்த அரசு உத்தேசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த நிதியாண்டில் நிதிநிலையைப் பொறுத்து பரிசீலித்து முடிவு எடுக்கலாம்.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் பகுதி இரண்டு தொகுதிகளுக்கு மையப் பகுதியாக இருப்பதால் பிற்படுத்தப்பட்ட மாணவர் இல்லங்களுக்கு கட்டிட வசதி தேவைப்படுவதால் அவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு வசதி ஏற்படுத்தி அங்கே ஒரு மாணவர் விடுதியை ஏற்படுத்தித் தர அரசு ஆலோசனை செய்யுமா ? ஓராண்டுக்கு எந்தளவிற்கு கட்டிட வசதிகள் செய்து தரப்படுகின்றன ? அவர்களுடைய தேவைகளை நிறைவு செய்யும் வகையில் இந்த எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு தகுந்த நடவடிக்கையை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம்** : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, நடைபெறுகிற நிதியாண்டில் 9 இடங்களில் புதிய கட்டிடங்களைக் கட்ட அரசு ஆணை பிறப் பித்து கட்டுமானப் பணி நடந்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் கேட்டது போல திருப்பத்தூரின் அவசியத்தை அரசு உணர்ந்திருக்கிறது. அதைப் பற்றி வருகிற நிதியாண்டில் பரிசீலித்து முடிவு எடுக்கும் என்று தெரிவித்திருக்கிறேன்,

## +2-ல் விருப்பப்பாடமாக தொழிக பயிறசிப் பாடம்

7—(*வினா எண் 649)—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்க ளுக்கு விடையளிப்பாரா—

(அ) +2 வகுப்புகளில் விருப்பப்பாடங்களுள் தொழிற் பயிற்சிப் பாடத்தையும் கற்பிக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்பொழுது முதல் செயலுக்கு வரும் ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : மாண்புமிகு தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) மேல்நிலைக் கல்வி பொதுப் பாடம் முதல் பிரிவில், வீட்டு மின் சாதனங்கள், மின்சார மோட்டார்களுக்கு கம்பி சுற்றுதல், பொது இயந்திரவியல், வானொலி மற்றும் தொலைக்காட்சி பெட்டி பராமரித்துப் பழுது பார்த்தல், மின்கணிப்புப் பொறி அறிவியல், வங்கிக் கணக்கியல், மின்னணுவியல், அலுவலக மேலாண்மை, தட் டச்சு மற்றும் பொது இன்சுரன்ஸ் என்னும் தொழிற் பாடங்களில் ஒன்றை போதிக்கும் திட்டத்தை 1986–87 முதல் அமுல் படுத்த ஆணையிடப்பட்டுள்ளது.

**திரு. இரா. தாமரைக்கனி** : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, இப்போது தொழிற் பிரிவு பாடங்களைப் பயில் வதற்கு ஐ.டி.ஐ., பாலிடெக்னிக் போன்றவற்றிற்குப் போக வேண்டியிருக்கிறது. அங்கே குறைந்த சீட்டுகளே இருப்பதால் எல்லா மாணவர்களுக்கும் தொழிற் பிரிவு கல்வியைப் பயில்வதற்கு வாய்ப்பு கிட்டுவதில்லை. ஐ.டி.ஐ. யைப் போல பிட்டர், டர்னர் போன்ற பாடங்களை எல்லா மேல்நிலைப் பள்ளிகளிலும் கற்பிக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.





**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற கருத்தில் பலவற்றை ஏற்கனவே நாம் கொண்டு வந்தி ருக்கிறோம். எலெக்ட்ரிக் டொமஸ்டிக் அப்ளையன்செஸ், எலெக்ட்ரிக் மோட்டார் வைன்டிங், ஜெனரல் மெஷின்ஸ் என்ற சிலவற்றைக் கொண்டு வந்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் கூறியதைப் போல எல்லாப் பள்ளிகளிலும் கொண்டு வர வேண்டும் என்பதுதான் அரசின் நோக்கம். லைஃப் ஓரி யண்டட் எஜுகேஷன் என்ற முறையிலே, தொழிற் கல்வியை எல்லா மட்டங்களிலும் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று தமிழக முதல்வர் அவர்கள் ஆணையிட்டபடி எல்லா இடத் திற்கும் நீட்டிக்கப்படும்.

**திரு. இரா. தாமரைக்கனி** : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, கம்ப்யூட்டர் கல்வியை மத்திய அரசும் மாநில அரசும் ஊக்குவிக்க எல்லா மாணவர்களும் கம்ப்யூட்டர் கல்வியைக் கற்றுக்கொள்கின்ற அளவுக்கு வாய்ப்பு அளிக்க ஆகும் நிதியை கல்வித் துறை ஏற்குமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, சையன்ஸ் அண்டு டெக்னாலஜி ஓரியண்ட்டட் மாடல் எஜுகேஷன் என்பதுதான் மாநில அரசி னுடைய கொள்கையாக தற்போது இருக்கின்றது. கல்வி முறையில் மாற்றத்தை மேற்கொள்ளவேண்டும் என்று ஏற் கெனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டு, அதையொட்டித்தான் லைஃப் ஓரியண்டட் கல்வி முறை கொண்டுவரப்பட்டு அது நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணம் கட்டாயம் நிறைவேறும்.

**திரு. ந. சிவஞானம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எஸ்.எஸ்.எல்.சி., பிளஸ் 2 வகுப்புகளில் மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் கூறிய பல்வேறு தொழில் கல்வி பாடங் களுக்குப் போதிய ஆசிரியர்களை நியமிப்பதற்கு அரசு உத்தர விடுமா ? பல பள்ளிகளிலே ஆசிரியர்கள் இல்லாமல் இருக்கின் றனர். அங்கு பகுதி நேர ஆசிரியர்களையாவது நியமிக்க அரசு உத்தரவிடுமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, இருக்கின்ற ஆசிரியர்களுக்கு இதற் காக தனிப்பயிற்சி அளிக்கப்படுகிறது. தேவையான, புதிய கல்வி முறைகளுக்கு ஏற்ற ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள்.

**திரு. கு. ரமணி** : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பிளஸ் 2 வகுப்பில் தொழில்கள் பற்றிய பாடங்களைக் கற்றுக் கொடுப்பதற்கு அரசு எடுக்கின்ற நடவடிக்கைகளை வரவேற்க

வேண்டியதுதான். இன்று தேவையான ஓர்க்ஷாப் பெசிலிட்டிஸ் இல்லை. இன்றைக்குத் தொழிற் கல்வியில் மாணவர்கள் கற்றுக்கொள்கின்ற பாடங்களை நடைமுறைப்படுத்துவதற்கு, செயல்படுத்துவதற்கு என்று ஓர்க் ஷாப் பெசிலிட்டிஸ் வர வேண்டும். அது இப்போதுள்ள மேல்நிலைப் பள்ளிகளில் கிடையாது. வாரத்திற்கு ஒரு நாள் என்று ஒன்றிரண்டு பள்ளிகள் சேர்ந்துகொண்டு ஓர்க்ஷாப்புக்குக் கூட்டிச் சென்று பயிற்சி கொடுக்கும் நிலை இருக்கின்றது. அதனால் உண்மையில், அதை நடைமுறையில் செயல்படுத்த முடியவில்லை. அதில் பலன் இல்லை. 2, 3 பள்ளிகள் ஒன்றாகச் சேர்ந்து ஓர்க்ஷாப் பெசிலிட்டிஸ் தனியாகப் பெற்று கற்றுக்கொடுக்கின்ற நடைமுறையை ஏற்படுத்த ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வொக்கேஷனல் எஜுகேஷன் என்று சொல்லக் கூடிய .இதுபோன்ற தொழில் படிப்பு அளிக்கப்பட வேண்டும் என்ற அளவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணைப்படி, செல்ஃப் ஓரியண்டட் எஜுகேஷன் முறை கொண்டு வரப்பட்டிருக்கின்றது. அதற்குக் கிட்டத்தட்ட ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு நிதி தேவைப்படுகின்றது. காரணம் இந்தத் தொழிற் கல்வி அடிப்படையிலான கல்வியை பள்ளிப் படிப்பிலிருந்தே மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதற்கு, இன்ப்ராஸ்ட்ரக்ச்சர்ஸ், எக்விப்மென்ட்ஸ் தேவைப்படுகிறது. லாபரட்டரி எக்விப்மென்ட்ஸ் தேவைப்படுகின்றது. அதற்குக் குறைந்தபட்சம் ஆயிரம் கோடி ரூபாய் செலவாகும். இந்த நிதியை மைய அரசு ஒதுக்க வேண்டுமென்று மாநில அரசு கேட்டு மைய அரசு உதவி தர முன்வரவில்லை. மாநில அரசு இதற்கு ரூ. 10 கோடி ஒதுக்கியிருக்கின்றது. அதற்குப் பள்ளிகளுக்கு நிதி ஒதுக்க வேண்டும். தொழிற் கல்விக்குத் தேவையான இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் பெசிலிட்டீஸ், அதற்கான லாப்ரட்டரி எக்குவிப்மெண்ட்ஸ் கட்டாயம் தேவை என்பதை அரசு உணர்ந்து அதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

**டாக்டர் தே. குமாரதாஸ்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர்கள் இல்லாமல் இருக்கின்ற பிரச்சினை பற்றி அரசுக்குத் தெரியுமா ? குறிப்பாக கெமிஸ்ட்ரி, பிசிக்ஸ் போன்ற சப்ஜக்ட்களுக்கு இந்த ஆண்டு முதலிலிருந்தே பள்ளிகளில் ஆசிரியர்கள் இல்லாமல் இருக்கின்றனர். போதிய ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்து அந்தக் குறையை நிவர்த்திக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்**; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி எந்தப் பள்ளியிலும் ஆசிரியர் இல்லை என்ற நிலையில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்





அதைப் பற்றி குறிப்பிட்டுச் சொன்னால் அதை உடனடியாக நிவர்த்திக்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. பழனிமுத்து** : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்தில் பிளஸ் 2 வகுப்பில் வொக்கேஷனல் கோர்ஸ், தொழிற் கல்வி, மற்ற படிப்புகளைப் படிக்கின்ற மாணவர்கள் பலர்நல்ல மதிப்பெண்களைப் பெற்று வருகின்றார்கள். இப்போது மொத்தம் 100 இடங்கள்தான் இருக்கின்றன. அவை மிகக் குறைவாக இருக்கின்றன. 40,000 மாணவர்கள் தொழிற் கல்வி பயில்கின்றார்கள். அவர்களுக்கு 100 இடம் என்று இருப்பதை அதிகப்படுத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வொக்கேஷனல் எஜுகேஷன் என்னும் தொழில் படிப்பு முறையில் படித்து விட்டு வரும் மாணவர்களுக்கு மேற் படிப்புகளில் நாம் வாய்ப்பை அதிகப்படுத்த வேண்டும் என்பது ஏற்கெனவே அரசின் பரிசீலனையில் இருக்கின்றது. அதைப்பற்றி ஆய்ந்து தக்க முடிவெடுக்கப்படும்.

## மத்திய அரசுப் பள்ளிகளில் தமிழ் போதனா மொழி

8—(*வினா எண் 5804) **திரு. செ. செம்மலை** : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசு நிறுவும் மாதிரிப் பள்ளிகளில் தமிழையும் போதனா மொழியாக வைக்குமாறு தமிழ்நாடு அரசு வற்புறுத்த முடிவெடுத்துள்ளதா ?

(ஆ) அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : மாண்புமிகு தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) மத்திய அரசு, நிறுவப்படவிருக்கும் மாதிரிப் பள்ளிகளில் இந்தி மற்றும் ஆங்கில மொழிகளைக் கற்பிப்பு மொழியாகக் கொண்டுவர உத்தேசித்துள்ளது. தமிழக அரசு இருமொழிக் கொள்கையினைப் பின்பற்றி வருவதால், மாதிரிப் பள்ளிகளில் தாய் மொழிதான் கற்பிப்பு மொழியாக இருக்க வேண்டும் என்றும், ஒரு சில இடங்களில் ஆங்கிலமும் கற்பிப்பு மொழியாக இருக்க வேண்டும் என்றும் தமிழக அரசு மைய அரசிடம் வலியுறுத்தி வருகிறது.

[1986 நவம்பர் 14

(முற்பகல் 9-20)

**திரு. செ. செம்மலை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் இந்த விஷயத்தில் உறுதியாக இருந்தாலும், அடிக்கடி இதை வற்புறுத்தி வந்தாலும் மத்திய அரசு இதுவரை திட்டவட்டமாக முடிவை அறிவிக்கவில்லை. இந்த நிலையில் நவோதயா வித்யாலயா என்கிற மாதிரிப் பள்ளிகளை மத்திய அரசு ஆரம்பிக்கின்ற அறிகுறிகள் தென்படுகின்றன. மத்திய அரசு இந்த விஷயத்தில் தன்னுடைய முடிவைச் சொல்லாமல் இன்னும் மவுனம் சாதிக்கிறது. ஆதலால் நம்முடைய சந்தேகமும் வலுப்பட்டிருக்கிறது. கல்வி வளர்ச்சிக்காக ஆரம்பிக்கப்பட்ட அத்தனைக் குழுக்களின் பரிந்துரைகளின் பேரில் 1968 ஆம் ஆண்டிலேயே கல்வி கற்பிப்பதானது தாய் மொழியில்தான் இருக்க வேண்டுமென்ற தீர்மானம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானத்துக்கு மாறாகவும், நம்முடைய நீண்டகாலக் கோரிக்கையை ஏற்காமலும் ஏற்கெனவே அவர்கள் திட்டமிட்டபடி மாதிரிப் பள்ளிகளை தமிழ்நாட்டில் ஆரம்பிக்க முன்வந்தால் தமிழக அரசு அதை எந்த வகையில் தடுத்து நிறுத்த இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நவோதயா வித்யாலயா கல்வி முறையைப் பொறுத்த வரையில் அவர்கள் கூறுகிறவாறு தமிழகம் என்றைக்கும் ஏற்காது என்பதைத் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஏற்கெனவே மைய அரசுக்கு என்.டி.சி. கூட்டத்திலேயே தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். இது பற்றி மைய அரசு அறிவிக்கும்போது கோத்தாரி குழுவின் பரிந்துரைக்கு ஏற்ப மாணவர்கள் தங்கிப் படிக்கும் முன்னோடி நிலையங்களாக அமைக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள். இந்தக் கல்வி நிலையங்களிலே ஆங்கிலமும், இந்தியும் இடம்பெறும் என்று தெரிவித்திருக்கிறார்கள். தமிழக அரசு இதனைக் கொள்கையளவில் எதிர்க்கிறது. மாநில அரசு மொழி அல்லாத வேறு எந்த மொழியையும் ஏற்க முடியாது என்று ஆட்சேபணை தெரிவித்திருக்கிறோம்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 42-வது திருத்தத்தின்மூலம் கல்வியானது மாநிலப் பட்டியலில் இருந்து பொதுப் பட்டியலுக்கு மாற்றப்பட்டுள்ளது. அனைத்தையும் தீர ஆலோசித்துதான் அன்றைக்கு இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கிய பெரியவர்கள் கல்வியானது மாநிலப் பட்டியலில் இருக்க வேண்டுமென்ற முடிவை எடுத்திருக்கிறார்கள். 42-வது திருத்தத்திற்குப் பிறகு கூட தமிழகமும் இன்னும் சில மாநிலங்களும் கல்வியானது மறுபடியும் மாநிலப் பட்டியலில்தான் இருக்க வேண்டுமென்று மைய அரசை வலியுறுத்தி வருகின்றன.



1986 நவம்பர் 14]

மேலும் இந்தியக் கல்விக் கொள்கை என்கின்ற கொள்கையை மைய அரசு ஏற்படுத்துகின்ற அச்சம் கூட இருக்கிறது. எனவேதான் அவர்களுடைய கருத்துக்களை ஏற்க முடியாது என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மைய அரசை வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. செ. செம்மலை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பொதுப் பட்டியலில் கல்வி இருந்தாலும் கூட இதுபற்றிய முடிவை எடுக்கும்போது மத்திய அரசு மாநில அரசுகளைக் கலந்து ஆலோசித்திருக்க வேண்டும். அவர்கள் அவ்விதம் கலந்தாலோசித்ததாகத் தெரியவில்லை. மாதிரிப் பள்ளி ஒன்றுக்கு கிட்டத்தட்ட 2 கோடி ரூபாய் செலவாகும் என்று சொல்கிறார்கள். இந்தப் பணம் மக்களுடைய வரிப்பணம். இந்தப் பணத்தைக் கொண்டு இத்தகைய செலவுகளைச் செய்வதை விட்டுவிட்டு இன்றைக்கு மாநில சர்க்கார் நடத்துகின்ற பள்ளிகளில் கூடுதல் வசதிகளைச் செய்து கொடுக்கலாம். அந்த வகையில் இந்தப் பணத்தை செலவு செய்ய வேண்டுமென்று மாநில அரசு மைய அரசை வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழ்க்கைக் கல்விக்கான முதலமைச்சருடைய திட்டம் என்று சொல்கிற லைஃப் ஓரியன்டட் எஜுகேஷன் என்கிற கல்வி முறையைத் தமிழகத்தில் எல்லா மட்டங்களிலும் கொண்டு வரும்போது நேஷனல் எஜுகேசன் பாலிசி என்று நாம் சொல்லும்போது மத்திய அரசின் கல்வி முறையில் நல்ல விஞ்ஞான முறையிலான அமைப்புகள் என்னென்ன இருக்கின்றனவோ அவற்றை எல்லாம் நம்முடைய கல்வி முறையிலேயும் இம்புரூவ்மென்ட் என்கிற ஒரு அடிப்படையில் கொண்டு வர வேண்டும் என்கிற எண்ணத்தில் ஆயிரம் கோடி ரூபாய் செலவில் இந்த அரசு ஒரு திட்டத்தைத் தீட்டியது. இதற்கு மத்திய அரசிடமிருந்து நிதி கேட்டிருக்கிறோம். அவர்களால் அது தரப்படவில்லை. தமிழக அரசு அதற்காக 10 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது.

நாம் அவர்களுக்குத் தெளிவுபடுத்தியிருக்கிறோம். நவோதயா கொள்கையை ஏற்க மாட்டோம். கல்வியை மீண்டும் மாநிலப் பட்டியலிலே கொண்டு வரவேண்டும் என்ற தமிழக அரசினுடைய கொள்கை தொடர்ந்து வலியுறுத்தப்படும். அது மட்டுமல்ல. தமிழ், தேவையானால் ஆங்கிலம் மட்டுமே பயிற்சி மொழியாக அந்தப் பள்ளிகளில் வரவேண்டும், இரு மொழிக் கொள்கை என்றும் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் மைய அரசு இணங்குமானால், அது குறித்து மாநில அரசு பரிசீலிக்கும் என்று தமிழக முதல்வர் மைய அரசிற்குத் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

[1986 நவம்பர் 14

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த நவோதயா பள்ளிகளில் தமிழில் பயிற்சி என்ற
நமது தமிழக அரசினுடைய கோரிக்கையையும், மேற்கு வங்
காளத்தின் கோரிக்கையையும் பல்வேறு மாநிலங்கள் ஏற்றுக்
கொண்டு, தாய் மொழியில் பயிற்சி இருக்க வேண்டும் என்று
ஹைதராபாத்தில் நடைபெற்ற மாநாட்டில், அதேபோன்று பல்
வேறு இடங்களில் வற்புறுத்தப்பட்டது உண்மையா? அப்படி
யென்றால், எந்தெந்த மாநிலங்கள் தமிழக அரசு தாய் மொழி
யிலே பயிற்றுவிக்க வேண்டுமென்ற கோரிக்கை வைத்ததுபோல்
தாய்மொழியில் இருக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்
வைத்திருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இதுகுறித்து முழுத் தகவல் இல்லை.
ஆனால், மேற்கு வங்காள அரசும், தமிழக அரசும் வெளிப்படை
யாக, ஆணித்தரமாக இதை ஏற்க மறுத்து, மாற்றங்களைத் தெரி
வித்து மைய அரசிற்குத் தெளிவுபடுத்தியிருக்கிறது,

***திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு அவைத் தலைவர்
அவர்களே, இந்த நவோதயா பள்ளிகளில் தமிழை போதனா
மொழியாக்க வேண்டுமென்ற கோரிக்கையை மத்திய அரசிலே
இருக்கின்ற தமிழக அமைச்சர்கள் முன் வைத்திருக்கிறார்கள்
என்று நான் அறிகிறேன். சாதாரண ஏழை எளிய மக்கள்
இந்தக் கல்விக் கூடங்கள் மூலமாக வாய்ப்பும் வசதியும் உள்ள
மக்கள் பெறுகின்ற இந்தக் கல்வியை சாதாரணமாக வேளாண்
விதைப் பண்ணை என்று சொல்வதுபோல், சரியான பண்ணை
யாக அமைகின்ற இந்த கல்விக் கூடத்தில் ஒரு மாவட்டத்திற்கு
80 மாணவர்களில், 30 சதவிகித அரிஜன மாணவர்கள் பங்கு
கொள்கின்ற காரணத்தினால், 9-ஆவது வகுப்பிற்கு மேல் ஒரு
மாணவன் ஒரு மாநிலத்திலே இருந்து இன்னொரு மாநிலத்
திற்குச் சென்று படிக்கின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்
தினால், இதனால் தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்குகின்ற
காரணத்தினால், மேலும் மக்களுக்கு விஞ்ஞான அறிவை நல்ல
முறையிலே திட்டமிட்டு பயில்விக்கின்ற கூடமாக இருக்கின்ற
காரணத்தினால், ஏனைய மாநிலங்கள் ஏற்றுக் கொண்டிருக்
கின்ற காரணத்தினால், இந்தப் பள்ளிகளை அதிகமாக ஏற்
படுத்துவதற்கு மைய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என்று
அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
எண்ணுவது போல் இந்தத் திட்டத்தினால் எவ்வித நன்மையும்
பயக்காது என்பதை மைய அரசு அனுப்பியிருக்கின்ற தாக்கீது
தெளிவுபடுத்தியிருக்கிறது. இந்தப் பள்ளியைப் பொறுத்த



1986 நவம்பர் 14]

வரையில், இரண்டு விதமான குடிமக்களை உருவாக்க இருக்கிறது.
ஒன்று, மேட்டுக்குடி மக்கள், இன்னொன்று அடிமைத்தனத்திலே
இருக்கிற கீழ்க்குடி மக்கள்.

"…. The Board has sent broad norms for the establishment of Navodaya Vidhyalayas to achieve the objective of excellence coupled with equity, to promote National Integration, to provide opportunities to the talented children to develop their full potential …."

என்று அதிலே தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. அதிலே அவர்
கள் அப்படிச் சொல்கிற போது, 5-வது படித்து முடித்த பிள்ளை
கள் போட்டியில் பங்கேற்க முடியும். அந்தப் பள்ளியில் பின்
தங்கிய மக்கள், வறுமையிலே வாடுகின்ற மக்கள், சமுதாயத்
திலே மேம்பாடு இல்லாத ஆதி திராவிட, அருந்ததிய, தாழ்த்தப்
பட்ட மக்கள் எல்லாம் இதிலே பங்கேற்க முடியும். இந்தப்
போட்டியிலே ஐந்தாவது படித்து முடித்த மாணவர்கள் போட்டி
யிட முடிகிறது. ஆனால், அந்த மாணவர்கள் 'மெரிட்-பேசிஸ்'
இல் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். மெரிட் பேசிசிலே ஒவ்
வொரு மாநிலத்திலே இருந்தும் அவர்கள் தேர்ந்தெடுக்கப்படு
கிறார்கள். தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணா அவர்
களும் தமிழ் மண்ணிலே தவழ விட்டிருக்கின்ற உணர்வுகளை
மறைந்த பெரியவர் காமராஜர் அவர்களும் ஏற்றுக் கொண்
டுள்ளார். 'ரூல் ஆப் ரிசர்வேஷன்' என்று சொல்லப்படுகிறது.
சமுதாயத்திலே பின் தங்கிய, நலிந்த மக்கள் பெரும்பான்மை
மக்களாக இருக்கின்ற காரணத்தினால், அதுவும் போட்டித்
திட்டத்தை உடனடியாக நீட்டிக்கின்ற இந்தக் கல்வி முறையில்
தாழ்த்தப்பட்ட மக்கள், பின்தங்கிய மக்கள், பிற்படுத்தப்பட்ட
மக்கள் 'டேலன்ட்' என்ற போர்வையில் போட்டியிட்டு எப்படி
வெற்றி பெற முடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டிய
நிலையில் இருக்கிறோம். அது இயலாத காரியம். அதிலும்
ஒன்றைச் சொல்லுகிறார்கள். ரிசர்வேஷன் பாலிசியைக்கொண்டு
வருகிறார்கள். மைய அரசு இதைத் தந்திரமாகக் கொண்டு
வருகிறது. அவர்களுடைய நோக்கம், ''டேலன்டட் பர்சன்ஸ்'
என்று சொல்லி, மேட்டுக்குடி மக்களை உருவாக்கி, அந்த மேட்டுக்
குடி மக்கள், தமிழகத்தில் படிக்கின்ற கோவையிலுள்ள
மாணவர்கள் 20 சதவிகிதத்தினர், உ.பி.யிலுள்ள பள்ளி
களுக்குச் செல்ல வேண்டும். உ.பி.யிலுள்ள மாணவர்கள்
இங்கு வர வேண்டும். அப்படிக் கொண்டு வருகிறார்கள்.
மும்மொழித் திட்டம் கொண்டு வரப்பட்டது. மும்மொழித்
திட்டம் ஒரு மொழிக் கொள்கையாக வட புலத்தில் ஈடேறு
கின்றபோது, தமிழகத்திலே இருந்து 20 சதவிகித மாணவர்கள்
வடபுலத்திற்கு அனுப்பப்படுவார்கள். அங்கேயிருக்கின்ற
மாணவர்கள் இங்கே வரமுடியாது. மும்மொழித் திட்டத்தையே
நடை முறைப்படுத்த முடியாத மத்திய அரசு, இதை எவ்வாறு

நடைமுறைப்படுத்தப் போகிறது? 'ரூல் ஆப் ரிசர்வேஷன்' என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள். அதுவும் தவறு.

ஒரு எண்ணத்தைச் சொல்லியிருக்கிறார்கள் :

"If sufficient number of children of one of these two categories —— Scheduled Castes and Scheduled Tribes —— do not qualify, it would be possible to interchange the seats between the two categories."

என்று சொல்லக்கூடிய முறையிலே அப்படிப்பட்ட டேலன்டட் பீயூபிளைத் தான் எடுக்கிறார்கள். சிலவற்றை மெரிட் பேஸிஸ் என்று வைத்து விடுகிறார்கள். தாழ்த்தப்பட்ட மற்றும் பிற் படுத்தப்பட்ட மக்கள் அந்தப் போட்டியிலே தோற்றுவிடுவார் கள். வாய்ப்பு வசதி பெற்ற மக்கள், உயர் குடியிலே உள்ளவர் கள், படிப்பு நிலையில் உள்ளவர்கள், மேல் வகுப்பைச் சேர்ந் தவர்கள் தான் அப்படிப்பட்ட இடங்களிலே சேருகிறார்கள். அப்படிப்பட்ட இடங்களில், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப் பட்ட மக்கள் வரமுடியாத நிலை ஏற்பட்டால் மேல் குடி மக்களி லிருந்து அந்த இடங்களை நிரப்பலாம் என்று சொல்லப்படுகிறது. இது எந்த விதத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பிற்படுத்தப் பட்ட மக்களுக்கும் தீங்கை இழைக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேன்.

(முற்பகல் 9-30)

**திரு. சைதை. சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நவோதயா பள்ளிகளிலே தமிழ் மொழியை கட்டாயமாக்க வேண்டுமென்று நாம் எப்படிப் போராடிக் கொண்டு இருக்கிறோமோ அதைப் போல் தமிழகத்திலே உள்ள தனியார் பள்ளிகளில், குறிப்பாக, நகர்ப்புறங்களிலே உள்ள பள்ளிகளிலே ஆங்கிலமும் மலையாளமும், ஆங்கிலமும் கன்னட மும், ஆங்கிலமும் தெலுங்கும் என்று சொல்லி மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிற அவல நிலை உள்ளதே, அந்த நிலையை மாற்றி கர்நாடகம், ஆந்திரம் மற்றும் பல மாநிலங் களிலே இருப்பதைப் போன்று தமிழைக் கட்டாயமாகப் படிக்க வேண்டும் என்ற முறையை நடைமுறைப்படுத்த அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் சட்டத்தில் உள்ள பிரிவின் அடிப்படையில் சிறுபான்மை மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கு அந்த உரிமை வழங்கப்பட்டாக வேண்டும்.



**திரு. டி. என். முருகானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நவோதயா பள்ளிகளைப் பொறுத்த வரையில் தமிழ்நாடு அரசு அனைத்துக் கட்சிகளையும் கூட்டித் தமிழைப் பயிற்சி மொழியாக நவோதயா பள்ளிகளில் கொண்டு வர வேண்டுமென்ற கோரிக்கையை முன் வைப்பார்களா ? அதே கோரிக்கையை சட்டமன்றப் பேரவையில் தீர்மானமாக நிறை வேற்றி மத்திய அரசுக்கு அனுப்ப முன்வருவார்களா ?

Mr. SPEAKER. It is a policy matter. There is involvement of policy. (குறுக்கீடுகள்)

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பாலிசி இல்லை. அமைச்சர் பதிலளிக்கத் தயாராக இருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பாலிசி தான். அமருங்கள்.

**திரு. எஸ். வேணுகோபால் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர் ........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி நேரத்தின்போது பாயின்ட் ஆப் ஆர்டர் கிடையாது. விதிகளை தயவுசெய்து இன்னொரு முறை படித்துப் பாருங்கள்.

திருச்சி-திருவரங்கம் இரயில் பாதையில் மேம்பாலம் கட்டுதல்.

**9—*(வினா எண் 5137)—திரு. அ. மலர்மன்னன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

திருச்சி—திருவரங்கம் பாதையில் உள்ள இரயில்வே கிராசிங், பாலக்கரை இரயில்வே கிராசிங், தென்னூர் இரயில்வே கிராசிங் ஆகிய இடங்களில் மேம்பாலம் கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இல்லை.

[1986 நவம்பர் 14

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அதுபோன்ற செயற்குறிப்பு இல்லை என்று கூறினார்கள். ஆனால் திருச்சி போன்ற பெரு நகரங்களிலே இன்றைய தினம் உலக வங்கியிலே இருந்து பெறப் படுகிற தொகையிலிருந்து இந்தப் பாலங்கள் மேலும் சீர் செய்யப்படுவதாகச் சொல்கிறார்கள். எனவே உலக வங்கியி லிருந்து பெறப்படுகின்ற தொகையிலிருந்து அந்தப் பாலங்கள் செப்பனிடப்படுமா? புதிய பாலங்கள் அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கியிலிருந்து பெறப்படுகின்ற நிதியின் மூலம் பீமன் நகர், தென்னூர் ஆகிய 2 இடங்களில் மேம்பாலங்கள் கட்டுவதற்கு ஆய்வு நடந்து கொண்டிருக்கிறது. இதற்கு முன்னாலேயே உலக வங்கித் திட்டத்தின் மூலம் காந்தி லெவல் கிராசிங் ரோடில் ஒரு மேம்பாலம் கட்டுவதற்கான வேலை கள் நடந்து கொண்டிருக்கின்றன. கேள்வியிலே கேட்கப்பட் டிருக்கிற எந்தப் பாலமும் இப்போது பரிசீலனையில் இல்லை. அதைச் சேர்த்து பரிசீலிக்க முடியுமா என்று எதிர்காலத்திலே வேண்டுமானால் பார்க்கலாம்.

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலிலிருந்து தென்னூர் இரயில்வே கிராசிங்கிலும், பாலக்கரை இரயில்வே கிராசிங்கி லும் பாலங்கள் கட்ட இருப்பதாக அறிகிறேன். ஆகவே, தென்னூர், பாலக்கரை போன்ற லெவல் கிராசிங்கில் பாலங்கள் கட்டுகிற நேரத்திலே, அங்கேயிருக்கிற பெரிய கட்டிடதாரர் கள், உரிமையாளர்கள் கோர்ட்டுக்குச் சென்று ஸ்டே வாங்காத நிலையிலே இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பாலம் கட்டுவது என்றால் முறையாகக் கட்டப்பட வேண்டும். அதற்கு எவ்வளவு இடம் தேவையோ அந்த இடத்தை நாம் ஆர்ஜிதம் செய்தே ஆக வேண்டும். அந்த நிலைமையிலே அங்கேயிருக்கிற கட்டிடதாரர்கள் கோர்ட்டுக்குப் போகாமல் இருக்க எப்படி நடவடிக்கை எடுப்பது என்று தெரிய வில்லை. ஆனால், அந்தப் பகுதியிலே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள், நகராட்சி மன்ற உறுப்பினர்கள், அவர்களைப் பார்த்து, இது ஒரு நல்ல காரியம், ஆகவே கோர்ட்டுக்குப் போக வேண்டாம் என்று எங்களோடு சேர்ந்து ஏதாவது செய்தால் அது சரியாக இருக்கும் என்று கருதுகிறேன்.



1986 நவம்பர் 14]

சேலத்தில் விமான நிலையம்.

10—(*வினா எண் 7295): திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

மத்திய அரசு, சேலம் விமான நிலையம் அமைக்க அனுமதி அளித்தும் திட்டம் அமுலாக்கப்படாமல் காலதாமதப்படுவது ஏன் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இம்மாநில அரசு நெடு நாட்களாகவே சேலத்தில் விமான நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்று மத்திய அரசைக் கோரி வந்துள்ளது. 7–2–1986 தேதியிட்ட இவ்வரசின் கடிதத்தில், சேலத்தில் விமான நிலையம் அமைக்க காமலாபுரம் என்ற கிராமத்தில் 200 ஏக்கர் நிலத்தினை கையகப்படுத்தி இலவசமாகத் தர ஒப்புக் கொள்வதாக மத்திய அரசிற்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது. விமான தளம் அமைப்பதை உறுதிப் படுத்துமாறும் மைய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மைய அரசின் பதில் எதிர் பார்க்கப்படுகிறது.

திரு. கே. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசுக்கு எழுதியிருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப் பிடுகிறார்கள். மிகவும் நன்றி. விமான நிலையப் பணிகள் விரைவில் தொடங்குவதற்கு தொடர்ந்து மத்திய அரசை வற்புறுத்தவும் அதுபற்றிய தொடர்ச்சியான follow-up action எடுக்கவும் மாநில அரசு முன்வருமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இந்த சேலம் விமான நிலையம், அதே போன்று தூத்துக்குடி விமான நிலையம் இவை இரண்டையும் புதிதாக அமைப்பதற்கும் அது மட்டுமல்லாமல், கோவை விமான நிலையத்தை விரிவு படுத்தவும் விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பல முறை மத்திய அரசுக்கு மாநில அரசு கடிதம் எழுதியிருக்கிறது. நாம், 25–8–1986 ஆம் தேதியன்று கூட, மத்திய அரசு அமைச்சர் இங்கே வந்திருந்தபொழுது நேரடியாகவே இதைப்பற்றி விவா தித்து கடிதம் கொடுத்திருக்கிறோம். அதோடு நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் நானும் அந்த மேடையிலேயே கோரிக்கை வைத்தோம். நாங்கள் தொடர்ந்து வலியுறுத்திக்

கொண்டிருக்கிறோம். எனவே, மாநில அரசு இதைப் பொறுத்தவரை உடனடியாக அமைப்பதற்கு என்ன என்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமோ அத்தனை நடவடிக்கைகளையும் விரைவாக எடுத்துக் கொண்டிருக்கிறது. எனவே, மத்திய அரசினுடைய பதில் சாதகமாக வருமானால் இந்த வேலை துவக்கப்படும்.

திரு. கே. சுப்பராயன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வேறு மாவட்டங்களில் விமான நிலையங்களை அமைக்க மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் ஏற்கனவே சொன்னேன், தூத்துக்குடி அருகிலே என்று. நீங்கள் சார்ந்திருக்கிற கோவை மாவட்ட விமான நிலையத்தை விரிவுபடுத்த வேண்டுமென்ற கோரிக்கையும் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழகத்தில் இதே போல் எத்தனை இடங்களில் விமான நிலையம் அமைப்பதற்குத் தமிழக அரசு கோரி இருக்கிறது? அதே போல், தஞ்சை மாவட்டத்திலும் விமான நிலையம் அமைப்பதாக இதற்கு முன்னர் அறிவிக்கப்பட்டது. தற்போது அது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஏற்கனவே ஒரு விமான நிலையம் கோவையிலே இருக்கிறது. அதை விரிவுபடுத்த வேண்டுமென்பது ஒரு கோரிக்கை. சேலத்தில் அமைக்கப்பட வேண்டும், தூத்துக்குடியில் அமைக்கப்பட வேண்டும், அடுத்து தஞ்சையிலே, இப்படி இந்த 3 இடங்களிலும் அமைக்கப்பட வேண்டுமென்பது அரசினுடைய நோக்கம். அதிலே சேலத்திலும் தூத்துக்குடியிலும் உடனடியாகச் செய்ய வேண்டுமென்றும் தஞ்சையிலே தொடர்ந்து எடுக்கப்பட வேண்டுமென்றும் உணர்வு நமக்கு இருக்கிறது. அதை அரசு தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறது. தொடர்ந்து வலியுறுத்துவோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் உறுப்பினர்கள் அனைவரும் அவரவர் இடத்தில் அமரவேண்டும்.

திரு. சா. ஞானசுந்தரம்: தலைர் அவர்களே, தஞ்சையிலே இந்த ஆண்டு அக்டோபர் முதல் 'வாயு தூத்' விமானம் விடுவதற்கு மத்திய அரசு அனுமதித்திருப்பதாகச் செய்திகள் வந்தன. ஆனால் தற்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அதற்குத் தேவையான பெரிய அளவிலான விமான தளம் அங்கே இருக்கிறது



என்பதை நான் அமைச்சருக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, விரைவிலே விமான சர்வீஸ் துவக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுப்பதற்கு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இந்த நிலைமைகளைக் கருதி மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யலாம்.

(முற்பகல் 9-40)

**கூட்டுறவு பஞ்சாலைகளில் நிர்வாக போர்டுக்கு தேர்தல்.**

11—(*வினா எண் 10493)—திரு. ஆர். ரெங்கசாமி: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு பஞ்சாலைகளில் நிர்வாக போர்டுக்கு தேர்தல் நடத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடத்தப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கூட்டுறவுத் துறையில் தேர்தல்கள் நடைபெறுவதற்கான சட்டம் அமுலாக்கப்பட்டபின் தேர்தல்கள் நடைபெறும்.

திரு. ஆர். ரெங்கசாமி: தலைவரவர்களே, கூட்டுறவு நூற்பாலைகள் எல்லாம் தற்போது நஷ்டத்தில் செயல்பட்டுக் கொண்டிருப்பதால் தொழிலாளர்கள், முதலாளிகள், நிபுணர்கள் கொண்ட போர்டை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவரவர்களே, ஏற்கனவே அரசு அதிகாரிகளையும், இதர பிரதிநிதிகளையும் கொண்ட குழு இயங்கி வருகிறது. தேவை என்றால் அந்தந்த ஆலையில் நியமிக்கப்பட்டிருக்கிற இயக்குநர் மாற்றம் செய்யப்படுவார்.

திரு. ஆர். ரெங்கசாமி: தலைவரவர்களே, தற்போது எல்லா மில்களிலும் அந்தந்த ஜில்லா கலெக்டர் சேர்மேனாக இருக்கிறார். இந்த முறையை மாற்றி, முன்பு இருந்த மாதிரி அந்தப் பகுதி எம்.எல்.ஏ. சேர்மேனாக நியமிக்கப்படுவாரா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவரவர்களே அதைப் போன்ற சிந்தனை எதுவும் அரசிடம் இல்லை.

[1986 நவம்பர் 14

கண்மாய்களில் நாட்டு கருவேல மரம்.

12—(*வினா எண் 7572)—திரு. க. பாரமலை: மாண்புமிகு சுற்றுலா மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கண்மாய்களில் நாட்டு கருவேல மரங்களை நடுவதில் கையாளப்படும் முறைகள் யாவை ?

(ஆ) மாநிலத்திலுள்ள அனைத்துக் கண்மாய்களிலும் மரம் நடுவதற்கு காலவரையுடன் கூடிய திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அவைமுன் விவர அறிக்கை **ஒன்று வைக்கப் பெற்றுள்ளது.

திரு. க. பாரமலை : தலைவரவர்களே, கண்மாய்களில் நாட்டுக் கருவேல மரங்களை 'பேஸ்டு ப்ரோகிராமாக' ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் நடவு செய்ய அரசு திட்டமிட்டிருக்கிறதா ? ஏனென்றால் பல இடங்களில் சிறு விவசாயிகள், ஏழை எளிய மக்கள் பல்லாண்டுக்காலமாக பயிரிட்டு வந்தாலும் அதிகாரிகளால் பலவந்தமாக அவர்கள் வெளியேற்றப்படுகிறார்கள். ஆனால் செல்வந்தர்கள் வசதி வாய்ப்பு படைத்தவர்கள் ஆக்கிரமிப்பு செய்திருப்பதை அதிகாரிகளால் ஒன்றும் செய்ய முடியவில்லை ; அவர்களை அகற்ற முடியவில்லை. இந்தப் பாகுபாடு இல்லாமல் ஒரு குறிப்பிட்ட காலவரையறையை நிர்ணயம் செய்து, அனைத்துக் குளங்களிலும் ஏரிகளிலும் நாட்டுக் கருவேல மரங்களை நடவு செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் மொத்தம் 38,314 ஏரி, குளங்கள் இருக்கின்றன. 1985 மார்ச் முடிய 2.20 இலட்சம் ஹெக்டேர் பரப்பில் கண்மாய்களில் மரங்கள் நடப்பட்டுள்ளன. மேலும் 1.88 இலட்சம் ஹெக்டேர் பரப்பில்தான் மரங்கள் நடமுடியும் என்று ஆய்வுமூலம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஏழை, பணக்காரர் என்ற பாகுபாடு இல்லாமல் எல்லா ஏரிகளிலும் குளங்களிலும் கால்வாய்களின் இரு கரைகளிலும் மரங்கள் நடப்பட்டு வருகின்றன.

*211ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.



1986 நவம்பர் 14]

திரு. க. பாரமலை : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்திருக்கிற அறிக்கையில் எப்படி மரங்கள் நடப்படுகின்றன என்ற விவரம் இருக்கிறது. நான் கூற விரும்புவது, ஏரிகள், கண்மாய்கள் ஆக்கிரமிப்பை அகற்றவும், புதிய ஆக்கிரமிப்பைத் தடுக்கவும் மரம் நடவு செய்ய வேண்டியது அவசியம். 1946 ஆம் ஆண்டுக்கு முன்னால் பட்டா வழங்கப்பட்ட இடங்களைத் தவிர புதிய ஆக்கிரமிப்புகளை அகற்றி, அனைத்துக் கண்மாய்களிலும், ஏரிகளிலும் மரங்களை நடவேண்டும். இன்னும் சுமார் 2 இலட்சம் ஹெக்டேர் பரப்பில்தான் மரங்கள் நடமுடியும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்த இடத்திலாவது, ஒரு குறிப்பிட்ட காலவரையறையை நிர்ணயித்து, மரங்கள் நடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, ஏற்கனவே இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு, மரங்கள் நடப்பட்டு வருகின்றன. 1986 மார்ச் மாதத்தில் சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 17 ஆயிரம் ஹெக்டேர் நிலப் பரப்பில் மரங்கள் நடவு செய்ய வேண்டுமென்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. வனத்துறையின் மூலம் அல்லது ஊரக வளர்ச்சித் திட்டம், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், ஆர். எல். இ. ஜி. பி. திட்டம் ஆகியவற்றின் மூலம் மரங்கள் நடப்படுவதற்கு உள்ளாட்சித்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும். 1986 முதல் மரம் நடும் பணியில் உள்ளாட்சித் துறை ஈடுபட்டிருக்கிறது. 1987-லிருந்து கண்மாய்களில் புதிதாக மரங்கள் நடும் பணியை உள்ளாட்சித் துறையே செய்ய வேண்டுமென்று அரசு முடிவு செய்திருக்கிறது. ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. க. இரா. சின்னராசு : தலைவரவர்களே, கண்மாய்கள், ஏரிகளில் மரங்கள் நட்டு வளர்ப்பதன் மூலம் வருகின்ற வருமானத்தில் 50 சதவீதம் பஞ்சாயத்துக்களுக்கு வழங்கும் திட்டம் இருக்கிறது. இந்தத் திட்டத்தின் அடிப்படையில் இதுவரையில் எல்லா மாவட்டங்களிலும் வருமானம் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கிறதா ? அதோடு, மேற்கொண்டு வரக்கூடிய வருமானத்தில் பஞ்சாயத்துக்களுக்கு 50 சதவீதம் என்பதை மாற்றி, 60 சதவீதமாக உயர்த்திக்கொடுக்க அரசு முன்வருமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் வளர்க்கப்பட்ட மரங்கள் வெட்டப்பட்டு அதனால் கிடைக்கிற வருமானம் அங்கேயுள்ள ஊராட்சிகளுக்குத்தான் கொடுக்கப்படுகிறது. இதுவரையில் சில மாவட்டங்களில் அவ்வாறு கொடுக்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய

மாவட்டத்தில்கூட அவ்வாறு 16-ஆம் தேதி கொடுக்க நட
வடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 50 சதவீதத்திலிருந்து அதிக
மாகக் கொடுக்க அரசு முயற்சி எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

திரு. ஆர். எஸ். ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே,
இந்த ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக செய்யப்படுகின்ற வேலை
களுக்கு தொழில்நுட்பம் தெரிந்த ஆட்களை நியமித்து இருக்
கிறார்களா ? அல்லது ஆங்காங்குள்ள அதிகாரிகளே அந்தக்
காரியத்தைச் செய்கிறார்களா ? அனுபவம் இல்லாத காரணத்
தால் அங்கே வேலை சிறிது தாமதம் ஆகிறது என்று அந்தத்
துறை அதிகாரிகளிடத்திலிருந்து ஏதேனும் தகவல்கள் வந்திருக்
கின்றனவா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலை
வர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது
போல் குறை எதுவும் வரவில்லை ; வன இலாக்காவில் தகுதி
உள்ளவர்களே இதில் ஈடுபட்டு இருக்கிறார்கள்.

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் இத்தனை
ஆயிரம் ஏக்கர் பயிரிடவேண்டுமென்று அரசின் தாக்கீது இருந்
தாலும் சோஷியோ ஃபாரஸ்டில் நடவு செய்கிறபோது நடவு
செய்யாமல் நடவு என்ற பெயரால் கணக்குக் காட்டி பில்
போடப்படுகிற வகையில். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் குற்றச்
சாட்டு கூடாது. கேள்விதான் கேட்கவேண்டும்.

திரு. எஸ். சிவராமன் : பேரவைத் தலைவர் அவர்களே,
இவ்வாறு தவறாக நடந்துகொண்டிருக்கிறது என்று அரசுக்கு
ஏதாவது தகவல் வந்திருக்கிறதா ? அவ்வாறு ஏதேனும் வந்
திருந்தால் அதன்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா?
என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலை
வர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது
போல் தகவல் எதுவும் வரவில்லை. குறிப்பிட்டு இந்த, இந்த
இடங்களில் தவறு நடக்கிறது என்று சொன்னால் அதற்குரிய
நடவடிக்கையை அரசு எடுத்து பதிலையும் தெரிவிக்கும் என்பதை
நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. த. பழனி : பேரவைத் தலைவர் அவர்களே, கருவேலஞ்
செடி போன்றவற்றை ஊராட்சி ஒன்றியங்களில் நட்டபிறகு
அதற்குத் தண்ணீர் ஊற்ற வாய்ப்பு இல்லை, நிதி ஒதுக்கம் இல்லை





என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். இதுபற்றி அரசின் கவனத்
திற்கு வந்திருக்கிறதா ? அவ்வாறு வந்திருந்தால் நட்ட செடி
களுக்குத் தண்ணீர் ஊற்றுகிற அந்தப் பணத்திற்கும் அரசு அனு
மதி அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலை
வர் அவர்களே, அரசு நடவடிக்கை எடுக்கும்.

குமரி மாவட்டத்தில் பரளியாறு மின் திட்டம்.

13—(*வினா எண். 10008)—டாக்டர் தே. குமாரதாஸ் :
மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர்
கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் பரளியாறு மின்திட்டம் அரசின்
பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது நிறைவேற்றப்
படும் ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு
தலைவர் அவர்களே—(அ) ஆம்.

(ஆ) ரூ. 17.70 கோடி மதிப்புள்ள 25 மெகாவாட் திறன்
கொண்ட இத்திட்டம் மத்திய மின் அதிகார மன்றத்தின் பரி
சீலனையில் உள்ளது. அதன் ஒப்புதலும் மற்றும் திட்டக்குழு
ஒப்புதலும் கிடைத்தவுடன், நிறைவேற்ற எடுத்துக்கொள்ளப்
படும்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, பரளியாறு மின்திட்டத்தைப் பொறுத்த வரையில்
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல 25
மெகாவாட் திறன் கொண்டதுதான். ஆனால் மற்ற விதங்களில்
அதாவது அனல் மின்சார நிலையம் போன்றவற்றை அமைக்க
பல இடங்களில் பல கோடி ரூபாய் செலவு செய்வதுபோல் அல்லா
மல் இந்தத் திட்டத்திற்கான செலவு மிகக் குறைவாக இருப்ப
தால் வெகு விரைவில் இந்தத் திட்டத்தை இந்த ஆண்டு எடுத்துக்
கொள்ள அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலை
வர் அவர்களே, இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில்
மார்ச் 1984-ல் மைய மின் ஆணையத்தின் ஒப்புதல் பெற அனுப்
பப்பட்டது. மார்ச் 1985-ல் சுகாதாரம், சுற்றுப்புறச் சூழ்நிலை
இலாக்கா அனுமதி தந்திருக்கிறது. மேலும் இந்தத் திட்டத்தைப்
பொறுத்த வரையில் மைய மின் ஆணையம், மத்திய நீர் வாரியம்

போன்ற பல்வேறு துறைகளால் ஆராயப்பட்டு வருகிறது. மத்திய ஆணையம் மற்றும் திட்டக் குழுவினுடைய ஒப்புதல் பெறப்பட்டு விரைவில் இத்திட்டம் நிறைவேற்றப்பட அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பரளியாறு மின்சாரத் திட்டத்தைப்போல் இன்னும் அங்கே உலக்கையருவி பகுதியில் ஒரு திட்டம் அமைக்கலாம் என்று சொல்கிறார்கள். அந்தத் திட்டத்தைக்கூட அரசு பரிசீலனை செய்து, வருகிற நிதியாண்டில் எடுத்துக்கொள்ள முயற்சி மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, தனி வினா போடப்படவேண்டும்.

திருபுவனம், பந்தநல்லூர் பகுதியில் கோரைப்பாய் நெய்யும் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்.

14—(*வினா எண். 8359)—திரு. மு. இராசாங்கம் : மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருபுவனம், பந்தநல்லூர் பகுதியில் கோரையில் பாய் நெய்யும் தொழிலாளர்களுக்கென கூட்டுறவுச் சங்கம் அமைத்து அதன் மூலம் நியாயமான விலையில் கச்சாப் பொருள்கள் வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு தலைவர் அவர்களே—(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. மு. இராசாங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பந்தநல்லூர், திருபுவனம் பகுதியில் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் பாய் நெசவுத் தொழிலை நம்பி இருக்கிறது. எனவே, கூட்டுறவுச் சங்கங்களை ஆரம்பித்து அவர்கள் வாழ்க்கைக்கு உறுதுணையாக அந்தத் தொழிலுக்குச் சம்பந்தப்பட்ட கச்சாப் பொருட்களை வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பந்தநல்லூர், திருபுவனம் பகுதியில் கூட்டுறவு கோரைப்பாய் நெய்யும் தொழிற்சாலை ஒன்றைத்





துவங்க வேண்டுமென்றால் அந்தத் தொழிலைப் புரிபவர்கள், போதுமான எண்ணிக்கையில் இருப்பார்களேயானால், அவர்கள் விண்ணப்பிக்க வேண்டும். அப்படி யாரும் விண்ணப்பிக்கவில்லை. விண்ணப்பிப்பார்களேயானால் அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. மு. இராசாங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருபுவனம் நகர பஞ்சாயத்துப் பகுதியிலே நூற்றுக்கும் மேற்பட்ட அங்கத்தினர்கள் பாய் நெசவுத் தொழிலுக்காக கூட்டுறவுச் சங்கத்திலே அங்கத்தினர்களாக ஆகி, ஒரு ஆண்டுக்கு மேலாகியும், சங்கம் தொடங்கப்படாமல் இருக்கிறது. அது குறித்து அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது குறித்து அரசின் கவனத்திற்கு இன்னும் வரவில்லை.

குற்றாலம் பட்டு நூல் வளர்ப்புப் பண்ணை.

15—(*வினா எண். 4276)—திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குற்றாலம் பட்டு நூல் வளர்ப்புப் பண்ணையை விஸ்தரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே— (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குற்றாலம் பட்டு நூல் வளர்ப்புப் பண்ணையை சமீபத்திலே பார்வையிட்ட போது நானும் உடன் இருந்தேன் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். அப்போது பட்டுப் பூச்சி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அங்கே சில திட்டங்களை நிறைவேற்ற வேண்டும்

என்று சொல்லி கோரிக்கைகள் வெளியிடப்பட்டபோது, அது
தொடர்பாக ஆவன செய்வதாக அமைச்சர் அவர்கள் உறுதி
அளித்தார்கள். அது தொடர்பாக அமைச்சர் அவர்கள் என்ன
நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகி
றேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, குற்றாலம் பட்டு வளர்ப்புப்
பண்ணையை மாண்புமிகு உறுப்பினரோடு சென்று நான் பார்வை
யிட்டேன். அந்த இடத்தில் புதியதாக தேவையான அளவுக்கு
நல்ல நோயற்ற, வீரியம் உள்ள பட்டு முட்டைகளை உற்பத்தி
செய்கிற அளவிற்குச் சரியான நல்ல சூழ்நிலை அமைந்திருக்கிறது.
இருந்தாலும்கூட, திருநெல்வேலி, கன்னியாகுமரி போன்ற
மாவட்டங்களுக்கும், அங்கேயிருந்து தான் பட்டு முட்டைகளை
வினியோகம் செய்து கொண்டிருக்கிறோம். ஆகவே மேலும்
தேவைப்படுகிறபோது, நிச்சயமாக விரிவாக்கப்படும் என்
பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, தமிழகத்திலே முதன் முதலாக ஆரம்பிக்கப்
பட்டிருக்கிற ஒரு சில பட்டுப் பூச்சி வளர்ப்பு பண்ணைகளிலேயே
குற்றாலத்திலே அமைந்திருக்கிற நிலையம்தான் முதன்மை
யானது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள்.
ஆனால் அதற்குப் பின்னாலே அமைக்கப்பட்ட நிலையங்கள்
எல்லாம் மிகச் சிறப்பாக வளர்ச்சி பெற்றிருந்தும்கூட, குற்றா
லத்திலே அதற்கான இயற்கை சூழ்நிலையும் மிகச் சிறப்பாக
இருந்த நிலையிலும்கூட, இன்னும் அபிவிருத்திச் செய்யப்பட
வில்லை. ஆகவே அங்கே குளிர் சாதன வசதிகளைச் செய்து
கொடுப்பதோடு, Mating centres-ஐ சீராக்கி சரிப்
படுத்தினால் உற்பத்தியை அதிகமாகப் பெருக்கலாம் என்று அதி
காரிகளும், விவசாயிகளும் அமைச்சரிடத்திலேயே நேரிடை
யாகச் சொன்னார்களே, அதுபற்றி உடனடியாக நடவடிக்கை
எடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, குற்றாலத்தைப் பொறுத்த
மட்டில் நீண்ட நெடுங்காலமாக அந்தப் பட்டுப் பூச்சி வளர்ப்புப்
பண்ணை இயங்கி வருகிறது, சிறப்பாக இயங்கி வருகிறது.
திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய இரண்டு மாவட்டங்களுக்
கும் தேவையான பட்டு முட்டைகளை அங்கேயிருந்துதான்
வழங்கிக் கொண்டிருக்கிறோம். அந்த இரண்டு மாவட்டங்
களுக்கும் எவ்வளவு தேவையோ அந்த அளவிற்கு அந்தப் பண்
ணையில் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.





தமிழகத்தில் வருங்காலத்தில், ஏறக்குறைய 7-வது ஐந்தாண்டு
திட்டக்காலம் முடிவடைவதற்குள் ஒரு லட்சம் ஏக்கரில் பட்டு
விவசாயம் செய்ய வேண்டும், முசுக்கொட்டைச் செடியைப்
பயிரிட வேண்டும் என்று ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம்.
அந்த நேரத்திலே நிச்சயமாக அந்தப் பண்ணையை விரிவாக்கம்
செய்ய வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. ஆகவே,
அவசியம் ஏற்படுகிறபோது நிச்சயமாக எந்த அளவிற்கு விரி
வாக்க வேண்டுமோ அந்த அளவிற்கு விரிவாக்குகிறோம் என்
பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டம் கரம்பக்குடியில் பாலிதின் பை உற்பத்தி
கூட்டுறவுச் சங்கம்.

16—(*வினா எண்.8141)—திரு. அ. வெங்கடாசலம்: மாண்புமிகு
ஊரகத் தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு
விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி,
கரம்பக்குடியில் பாலிதின் பை உற்பத்தி செய்யும் தொழில்
கூட்டுறவுச் சங்கம் அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன் : மாண்புமிகு
தலைவர் அவர்களே—(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. அ. வெங்கடாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், இன்றைக்கு இருக்கிற
மாவட்டங்களிலேயே மிகவும் சாதாரண நிலையில் உள்ள பின்
தங்கிய மாவட்டம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அத்த
கைய மாவட்டத்தில் என்னுடைய தொகுதியாகிய கரம்பக்குடி
பகுதி மிகவும் பின் தங்கிய பகுதியாக இருக்கிற கால கட்டத்
தில், குறிப்பாக புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தொகுதி
யில், எந்த ஒரு தொழிற்சாலையும் இல்லாத நிலையில், அந்தக்
கரம்பக்குடி பகுதியில் உள்ள படித்தவர்களுக்கும், சாதாரண
மக்களுக்கும் வேலை கிடைக்கக் கூடிய அளவிற்கு, பாலிதின் பை

[1986 நவம்பர் 14

உற்பத்தி செய்யக் கூடிய தொழில் கூட்டுறவுச் சங்கத்தை அமைப் பதற்கு நம்முடைய அரசு முனைந்து நடவடிக்கை எடுக்கிறபோது, இந்தத் தொகுதிக்கு முன் உரிமை கொடுக்கப்படுமா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன் :** தலைவர் அவர்களே, தாட்கோ நிதியுதவியோடு ஒரு சங்கத்தை அமைத்து அங்கே பாலிதின் பைகளைத் தயாரிக்க வேண்டுமென்று சொல்லி அசிஸ்டெண்ட் டைரக்டர் அவர்கள் இயக்குநருக்கு ஒரு செயற் குறிப்பை அனுப்பினார். இப்போது இருக்கிற நிலைமையில் பாலிதின் பைகள் உற்பத்தி செய்யக் கூடிய தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் ஏறக்குறைய 16, தமிழ் நாட்டில் இயங்கிக் கொண் டிருக்கின்றன. அந்த 16 சங்கங்களுக்கும் குறிப்பிட்ட அள விற்குத்தான் ஆர்டர்கள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. அதிகப் படியான ஆர்டர்கள் கிடைக்கவில்லை. தற்போது அதே தாட்கோ நிதியுதவியோடு திருச்சி மாவட்டத்திலும், தென்னாற் காடு மாவட்டத்திலும் பாலிதீன் பைகளைத் தயாரிக்கிற தொழிற் சாலைகளை ஏற்படுத்த வேண்டுமென்ற செயற் குறிப்பு நடை முறையில் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே 16 இடங்களுக்கு அதிகமான வழங்கல் ஆணை அதாவது ஆர்டர்கள் கிடைக்க வில்லை. கூடுதலாகக் கிடைக்கிறபோது நிச்சயமாக கரம்பக் குடியில் புதிய சங்கம் அமைத்து அவற்றை உற்பத்தி செய் வதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கோமுகி அணை மலைவாசி அரசினர் உயர்நிலைப் பள்ளி.**

17—(*வினா எண். 3994)-திரு. சோ. கலிதீர்த்தான்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோமுகி அணையிலுள்ள மலைவாசி அரசினர் உயர் நிலைப் பள்ளியை மேல் நிலைப் பள்ளியாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே—(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



1986 நவம்பர் 14]

**திரு. எஸ். சிவராமன் :** தலைவர் அவர்களே, கேள்விக்கு இடமில்லையென்று சொன்னார்கள். அது வருத்தத்திற்குரிய ஒன்று. இருந்தாலும் கல்வராயன் மலைப்பகுதியில் இருக்கக் கூடிய ஒரே ஒரு அரசு உயர்நிலைப்பள்ளி இதுதான். அந்த மலைவாழ் மக்கள் வேறு இடங்களுக்குச் சென்று படிக்கக் கூடிய வசதியில்லாத காரணத்தால்தான் அந்தப் பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக்க வேண்டுமென்று சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இதைக் கொடுத்திருந்தார்கள். ஆகவே கேள்விக்கு இடமில்லை என்று சொன்னதற்கு வருத்தம் தெரி வித்து, அடுத்த ஆண்டு, அதாவது வருகிற ஆண்டிலாவது மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். அடுத்து அந்தப் பள்ளி ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து அதற்கு நிரந்தரமான கட்ட டம் கிடையாது. கோமுகி அணை கட்டுகிறபோது குவார்ட்டர்ஸ் கட்டினார்கள். அந்த குவார்ட்டர்ஸ் கட்ட டத்தில்தான் ஹாஸ்டலும், பள்ளியும் நடந்து கொண்டிருக்கின் றன. எனவே நிரந்தரமான கட்டடமும் மற்றும் அங்கே தங்கிப் படிக்கிற மாணவர்களுக்கு விடுதியும் கட்டிக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம் :** தலைவர் அவர்களே, தமிழகத்தில் எந்த ஆண்டும் இல்லாத அளவில் 1986–87 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 21 நடுநிலைப் பள்ளிகளை உயர் நிலைப் பள்ளிகளாகவும், 5 உயர்நிலைப் பள்ளிகளை மேல் நிலைப் பள்ளிகளாகவும், ஒரு பழங்குடி மாணவர்கள் உயர் நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும் உயர்த்தி இருக்கிறோம். இந்த ஆண்டு அதற்காகச் செலவு செய்தது 40 இலட்சம் ரூபாய். இந்த ஆண்டு மற்றும் வருகிற ஆண்டு இரண்டிற்கும் சேர்த்து 81 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கி றது. இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல பழங்குடி மக்களின் நலன் காக்கிற அரசாகத்தான் இதயதெய்வம் புரட்சித் தலைவர் ஆட்சி எந்த ஆண்டும் இல்லாமல் இந்த ஆண்டு இப்படிப்பட்ட நல்ல திட்டத்தின் வாயிலாக ஆதிதிராவிட பழங்குடி மக்களுக்கு உதவுகிற வகையில் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக்குகிற நல்ல திட்டத்தைக் கொண்டு வந்து செயலாற்றிக் கொண்டிருக்கிறது. கோமுகி அணையைப் பொறுத்த வரையில் அங்கே இருக்கிற பள்ளிக்கூடத்தின் நிலையை அறிந்து மாவட்ட ஆதிதிராவிட அதிகாரி அவர்கள் செயல் குறிப்பினை அனுப்பி வைப்பார்களானால் வருகிற ஆண்டிலே இந்த அரசு நிதிநிலைக்கு ஏற்ப ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தில் கிட்டத்தட்ட 961 பள்ளிகள் இருக்கின்றன. ஆண்டிற்காண்டு ஒவ்வொரு பள்ளிக் கூடத்திற்கும் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே அந்தப் பள்ளியைப்

பொறுத்தவரையில் வருகிற ஆண்டில் நிதிநிலைக்கு ஏற்ப
நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில்
சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

### ஆற்காடு நகராட்சியில் ''தாட்கோ'' மூலம் வீடுகள்

**(18)**—(வினா எண். 8870, *திரு. த. **பழனி** : மாண்புமிகு ஆதி
திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு
விடையளிப்பாரா—

ஆற்காடு நகராட்சிப் பகுதியில் (கஸ்பா) கொடுக்கப்
பட்டுள்ள ஆதி திராவிட மக்களுக்கு '' தாட்கோ '' மூலம்
வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில்
உள்ளதா ?

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம் :** மாண்புமிகு தலைவர்
அவர்களே, இல்லை.

திரு. த. **பழனி :** தலைவர் அவர்களே, நகர்ப்பகுதியிலே
ஆதிதிராவிட மக்களுக்கு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்
தலைவர் அரசு நில ஆர்ஜிதம் செய்து கொடுத்திருக்கிறது. மிக
வும் ஏழைகளாக இருக்கிற அவர்களுக்கு வீட்டு மனைகள்
வழங்கப்பட்டிருப்பதால், மாண்புமிகு புரட்சித் தலைவர்
அவர்களின் அரசு வீடுகளையும் கட்டித்தர வேண்டுமென்று
கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கலந்து நகர்ப்
பகுதி மக்களுக்கும் இந்தத் திட்டத்தை விஸ்தரிப்பார்களா
என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10–00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் அனு
மதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம் :** தலைவர் அவர்களே,
கிராமப்புறத்தைப் பொறுத்தவரையில் ஆதி திராவிட மக்க
ளுக்கு நில ஆர்ஜிதம் செய்து வீடு கட்டிக் கொடுக்கிற
திட்டம் தாட்கோ மூலமாக ஆர். எல். இ. ஜி. பி. மற்றும்
என். ஆர். இ. பி. திட்டங்கள் மூலமாக நடைபெற்றுக் கொண்டி
ருக்கிறது. ஆனால் நகரத்தைப் பொருத்தவரையில் அங்கேயிருக்
கின்ற ஆதி திராவிட மக்களுக்கு நிலத்தை ஆர்ஜிதம் செய்து,
அங்கே இருக்கின்ற குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக





வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால்
தற்போது அரசின் செயற்குறிப்பில் இப்படிப்பட்ட திட்டத்
தின் வாயிலாக கட்டிக் கொடுப்பதற்கு இல்லை. அப்படி
இருந்தால், அதைப்பற்றி அரசு தீவிரமாகப் பரிசீலனை செய்
யும்.

திரு. மா. **மணிமாறன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, ஆதி திராவிட மக்களுக்கு வீட்டு மனைகள்
ஒதுக்குகின்ற நேரத்தில், நஞ்சை நிலத்தை வீட்டு மனை
களுக்கு எடுக்கக்கூடாது என்றும், அப்படி எடுக்கவேண்டும்
என்றால்—கோயில் நிலங்கள், மற்றும் நஞ்சை நிலங்களை
எடுக்கவேண்டும் என்றால்—மாண்புமிகு முதலமைச்சரின்
ஒப்புதல் வேண்டும் என்ற காரணத்தால் பல இடங்களில் ஆதி
திராவிட மக்களுக்குக் குடியிருப்பு மனைகள் வினியோகிப்பதில்
காலதாமதம் ஏற்படுவது உண்மையா ? அப்படி என்றால்
தஞ்சை மாவட்டத்தில் இருக்கக்கூடிய நஞ்சை நிலங்களைத்
தவிர, புஞ்சை நிலங்கள் இல்லாத இடங்களில் ஆதி திராவிட
மக்களுக்கு வீட்டு மனை கொடுக்க என்ன வழிவகையை அரசு
பின்பற்ற இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம் :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நஞ்சை நிலத்தை ஆர்ஜிதம் செய்கின்ற
போது—மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும், மாண்புமிகு
முதல் அமைச்சர் அவர்களும் பார்த்த பிறகு—ஆர்ஜிதம்
செய்து எடுத்துக் கொடுக்கின்ற திட்டத்தின் வாயிலாக
நிறைய இடங்களில் எடுத்து கொடுக்கப்பட்டு இருக்கிறது.
அதுவும் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், உட
னடியாக மயான பாதைக்கு நிறைய நஞ்சை நிலங்கள்
எடுத்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே இதைப்
பொறுத்தவரையில் இதிலே எந்தவிதமான சிக்கலும் இல்லை
என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டு
இருக்கிறேன்.

**திரு. மா. சின்னராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நகர்ப்புறங்
களில் வீடு கட்டிக் கொடுப்பதற்கு ஸ்லம் கிளியரன்ஸ் போர்டு
நடவடிக்கை எடுத்து வருவதாகச் சொன்னார்கள். இந்த
ஸ்லம் கிளியரன்ஸ் போர்டு திட்டங்கள் கோவை, மதுரை,
சென்னை போன்ற பெருநகரங்களில் தான் செயல்படுகின்றன.
எனவே சிறிய நகரங்களில் வாழ்கின்ற ஆதி திராவிட மக்க
ளுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்க சிறப்பான திட்டத்தை
எடுப்பதற்கு அரசு மூலமாக அமைச்சர் அவர்கள் முயற்சி
செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, அதற்காகத்தான் முதலிலேயே நான் சொன்னேன், அரசு இதைப்பற்றி தீவிரமாகப் பரிசீலிக்கும் என்று.

திரு. மா. கதிர்வேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களுக்காகக் கட்டப்படுகின்ற வீடு களை பச்சை செங்கலால் கட்டி, மண்ணை வைத்துப் பூச வேண்டும் என்று தாக்கீது வந்திருக்கிறது. இந்த நிலையை மாற்றி, சுட்ட செங்கலால் கட்டுவதற்கும், அவற்றைப் பூசு வதற்கு சிமெண்ட் வழங்குவதற்கும் அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி கேட்டால் விளக்கமாகப் பதில் அளிக்கப்படும்.

### குத்தாலம் தொகுதியிலுள்ள பொட்டையார் வாய்க்காலை சீர் செய்தல்

19—(*வினா எண். 7932) திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல ஒன்றியத்தில் சுமார் 10 ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்கு வடிகாலாக இருக்கும் ''பொட்டையார் வாய்க்காலை'' சீர் செய்து தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, குடவாசல் ஒன்றியத்தில் ஓடும் பொட்டையார் வாய்க்காலை சீர் செய்வதற்கான செயற குறிப்பு அரசால் அங்கீகாரம் அளிக்கப்பட்டது. இதற்கான சீர் செய்யும் திட்ட மதிப்பீடு ரூ. 60,000-க்கு கும்பகோணம் காவிரி சீரமைப்புக் கோட்ட செயற் பொறியாளரால் ஒப்புதல் அளிக்கப் பட்டு ஜூலை 1984-ல் வேலை ரூ. 49,397 செலவில் முடிக்கப் பட்டது. இதைத்தவிர புதிய செயற்குறிப்பு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றி யத்தில் ஓடும் பொட்டையார் வாய்க்காலின் நீளம் சுமார் 10 கிலோ மீட்டராகும். 1984 ஆம் ஆண்டு இதிலே ஒரு பகுதியை மட்டும் செப்பனிட்டு இருக்கிறார்கள். கடந்த ஆண்டு ஏற்பட்ட



வெள்ளத்தின் காரணமாக சுமார் 10 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டதைக் கருத்தில் கொண்டு, மாண்பு மிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அரசு இந்த ஆண்டு அந்த வாய்க்காலின் நீளமான 10 கிலோ மீட்டரையும் முழுமையாகச் செப்பனிட்டு, பாசனத்திற்குத் தேவையான இடங் களில் ரெகுலேட்டர்களைக் கட்டி, சீர்திருத்தம் செய்யும் திட் டம் இந்த அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சீர் செய்யும் திட்டம் அரசினுடைய கவனத்தில் இல்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக் காட்டியதைப்போல இருக்குமானால் இந்தத் திட்டத்தை ஆய்வு செய்ய வேண்டிய நடவடிக்கையை அரசு எடுக்கும்.

திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரிப் படுகையில் இந்த ஆண்டு எத்தனை வாய்க்கால்கள் வெட்டப்பட்டு இருக்கின்றன என்ற விவரத்தை இந்த அவையில் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரிப் படுகையில் ஏறத்தாழ 696 வாய்க்கால்கள் உள்ளன. இந்த 8 வருட காலத் தில் சுமார் 300 வாய்க்கால்களை நாங்கள் சரி செய்திருக்கிறோம். இன்னும் மீதி இருப்பதை, தமிழக முதலமைச்சர் அவர்கள் 5 ஆண்டுகளுக்குள் முடிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார் கள். வருடத்திற்கு சுமார் 70 லட்சம் ரூபாய் செலவில் இந்த வாய்க்கால்களை செப்பனிட்டுக் கொண்டு இருக்கிறோம்.

### மதுரை மாவட்டம், வாடிப்பட்டி தாலுகா முல்லையாற்றில் வாய்க்கால் அமைத்தல்.

20—(*வினா எண். 9249) திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், வாடிப்பட்டி தாலுக்கா, அலங் காநல்லூர் போலீஸ் சரகத்தைச் சேர்ந்த பெரிய ஊர்ச்சேரி கிராமத்தில் ஓடிக்கொண்டிருக்கும் முல்லையாற்று தண்ணீரை வாய்க்கால் அமைத்து அந்த ஊருக்கு பாசன வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், அப்பணி எப்போது துவங்கும் ?

[1986 நவம்பர் 14

**மாண்புமிகு** திரு. கே. கே. **எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்** மாண்புமிகு தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முல்லை ஆற்றின் இரண்டு பகுதிகள் அதாவது கிழக்குப் பகுதியிலும், மேற்குப் பகுதியிலும் 180 ஏக்கர் நிலங்கள் இருந்து கொண்டு இருக்கின்றன. இந்த ஆற்றில் தண்ணீர் செல்ல வாய்க்கால் இல்லாததன் காரணமாக அந்த நிலங்களைப் பயிர் செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, ஒரு வாய்க்கால் அமைத்து அந்தப் பகுதிகளுக்கு தண்ணீர் கொடுப் பதற்கு அல்லது லிப்ட் இர்ரிகேஷன் மூலம் அந்தப் பகுதிகளுக்குத் தண்ணீர் கொடுத்து நிலங்களை விவசாயம் செய்வதற்கு வசதி செய்து கொடுப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்பு கிறேன் ?

**மாண்புமிகு** திரு. கே. கே. **எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முல்லை ஆற்றினுடைய இந்த வடிகால் பகுதியும் அதனுடைய ஆயக்கட்டு கள் அத்தனையும் வலதுபுறம் அமைந்து இருக்கிறது இடது புறம் இருக்கின்ற பகுதிகள் வாய்க்கால் பகுதிகளை விட உயர மாக இருக்கின்ற காரணத்தால் அங்கே தண்ணீர் பாசனம் செய்து கொடுக்க முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினருடைய அந்த உணர்வைப் புரிந்து பள்ள மான பகுதியிலிருந்து வாய்க்கால் அமைத்து அந்தப் பகுதிகளுக்குக கொண்டு வந்து தரமுடியுமா என்ற சாத்தியக்கூறுகளை இந்த அரசு ஆய்ந்து பார்க்கும்.

திரு. ஆ. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வாய்க்காலை அமைத்தால் அங்கே பல்வேறு கிராமங்களுக்குப் பாசன வசதி செய்து கொடுக்க முடியும் என்ற காரணத்தாலே இந்தத் திட்டத்தை அரசு வெகு தீவிரமாகப் பரிசீலித்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு** திரு. கே. கே. **எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், இருக்கின்ற தண்ணீரை எந்த எந்தப் பகுதிகளுக்குக் கொடுக்க முடியும் என்பதைப் பார்த்துக் கொடுக்க வேண்டும் என்ற உணர்வோடுதான் இருந்து கொண்டு இருக்கிறார் கள். இந்தக் கால்வாயின் அமைப்பே வலதுபுறமாக இருக்கின்ற ஆயக்கட்டுக்குக் கொடுக்கும் அளவுக்குத்தான் அமைந்து இருக் கிறது. ஆகவே, இடது புறமாக இருக்கின்ற பகுதிகளுக்கு எல்லாம் கொடுக்க முடியாமல் இருக்கிறார்கள். இருந்தாலும் அதனை ஆய்ந்து பார்த்து நடவடிக்கை எடுக்கப்படும்.



1986 நவம்பர் 14]

**திரு. மா. மணிமாறன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறையில் ஒரு ஆண்டுக்குத் தேவை யான மெயின்டெனன்ஸ் செலவை விடக் கூடுதலாக $1\frac{1}{2}$ பங்கு, 2 பங்கு செலவு செய்து திட்டங்களுக்கு ஒப்புதல் பெற்று விடுவ தாக சொல்கிறார்கள். எனவே, தொடர்ந்து 2 பங்கு 3 பங்கு ஒரு ஆண்டுக்கு உரிய மெயின்டனன்ஸ் காஸ்ட்டை விட கூடுத லாக செலவு செய்து விடுகிற காரணத்தால் 2 ஆண்டு காலத்திற்கு வருகின்ற அந்த மெயின்டனன்ஸ் செலவு ஒரு ஆண்டிலேயே வேலை செய்து விடுவதாக சொல்லி தொடர்ந்து அந்தப் பணத்தை எடுத்து விடுகிற முறை பொதுப்பணித் துறையில் இருப்பதாகவும், அதன் காரணமாக 2, 3 ஆண்டுகளுக்கு மெயின் டெனன்ஸ் வேலை செய்ய முடியாத அளவுக்கு ஒரு ஆண்டிலேயே வேலையை முடித்து விடுவதாக எஸ்ட்டிமேட் ஒப்புதல் பெற்று பணத்தை எடுக்கிற காரணத்தால் இது போன்ற சங்கடங்கள் பொதுப்பணித் துறையில் இருப்பதாக நான் அறிகிறேன். எனவே அப்படிப்பட்ட நிலை நீடிக்கப்படும் என்று சொன்னால் 3 ஆண்டுக் காலம் பொதுப்பணித் துறை பாதுகாப்பு அற்ற நிலை ஆகிவிடும். எனவே, அரசு மறு பரிசீலனை செய்து அந்த அந்த ஆண்டுக்கு உரிய மெயின்டெனன்ஸ் செலவைத் தான்செய்ய வேண்டும் என்ற உத்திரவை அரசு பிறப்பிக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு** திரு. கே. கே. **எஸ். எஸ். ஆர்.** இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் சொல்லியது போல் செயல்பட முடியவில்லை. காரணம் அவசியம் என்று வருகிற நேரத்தில் மெயின்டெனன்ஸ் நாம் உடனடியாக எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. அதற்குக் கூடுதலாக அரசு நிதி ஒதுக்கீடு செய்ய முடியுமா என்று மட்டும் ஆய்ந்து பார்க்கப்படும்.

**மாண்புமிகு** பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

*[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

### 2. முன்னாள் பாரதப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுக்குப் பிறந்தநாள் புகழ் அஞ்சலி

***திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, தேசப் பிதா காந்தி அடிகளால் தன்னுடைய அரசியல் வாரிசு என்று அறிவிக்கப்பட்டவரும், உலகப்புகழ் மிக்க வரலாற்று நூல் ஆசிரியராகவும், நாட்டின் சுதந்திரத்திற் காக பன்னெடுங்காலம் சிறை இருந்த செம்மலாகவும், இந்திய திருநாட்டின் முதல் பிரதமராகவும், ஐந்தாண்டு திட்டங்களின்

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1986 நவம்பர் 14

மூலவர் ஆகவும், பஞ்சசீலக் கொள்கையை உருவாக்கியவராக வும் ஜனநாயக சோசியலிசத்தின் சிற்பியாகவும், நடுநிலைக் கொள்கையின் நாயகர் ஆகவும், நாட்டு மக்களால் ரோஜாவின் ராஜா என அன்போடு அழைக்கப்பட்டவரும் ஆகிய ஆசிய ஜோதி பண்டித ஜவஹர்லால் நேருவினுடைய 97-வது பிறந்த தினம் ஆகிய இன்றைய தினம் குழந்தைகள் தினமாகவும், தேசிய ஒருமைப்பாடு அணிவகுப்பு தினமாகவும் கொண்டாடப்படுகின்ற இந்த நேரத்தில் ஆசிய ஜோதியை நினைவு கூர்கின்ற விதத்தில் இந்த மன்றமும் புகழ் அஞ்சலி செலுத்துவது பொருத்தமாக இருக்கும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள் கிறேன்.

(முற்பகல் 10—10)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நவம்பர் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் எடுத்துத் தெரிவித்ததற்கு இணங்க மக்கள் மாணிக்கம் என்றும், என்னுடைய அரசியல் வாரிசு என்றும் அண்ணல் காந்தி அடிகளால் சிறப்பித்துச் சொல் லப்பட்ட பண்டித ஜவஹர்லால் நேருவின் பிறந்த நாள் ஆகும்.

இந்த நல்ல நாளில் அவருடைய சிறந்த கொள்கைகளையும், அவருடைய உயர்ந்த குறிக்கோள்களையும் நினைவு கூர்வது இன்றியமையாத சிறப்புடையதாகும். இந்தியா விடுதலை பெறுவதற்கு அவர் அரும் பெரும் பாடு பட்டிருக்கிறார். அவ ருடைய அறிவுத் திறனையும், ஆற்றலையும் எந்தெந்த வகை யிலே பயன்படுத்தி வந்தார்கள் என்பதையும் இந்த நல்ல நாளில் நினைவு கூர்வது மிக மிகப் பொருத்தமாகும்.

அவர் குழந்தைகளிடத்திலே அளவு கடந்த பற்றும் பாசமும் கொண்டு, குழந்தைகளிடத்திலே நெருங்கிப் பழகி வந்தார் என்பது மட்டுமல்ல, குழந்தைகளிடத்திலே மிகுந்த நம்பிக்கை வைத்து, அவர்களுடைய எதிர்காலம் மிகச் சிறப்பாக அமைய வேண்டுமென்பதிலே நீங்காப் பற்றும், ஆர்வமும் கொண்டிருந் தார். குழந்தைகளுடைய அறிவியல், அறிவுத் திறன் வளர வேண்டுமென்றும் அவர்களுடைய தொழில் நுட்ப ஆற்றல் திறன் எல்லா வகையிலும் வளர்ந்தோங்கியிருக்க வேண்டுமென்றும் விரும்பினார். ஆகவே எங்கு பார்த்தாலும் சிறந்த முறையில் புதிய இந்தியாவை உருவாக்க வேண்டுமென்பதிலேயும் நல்ல பல கனவுகளையெல்லாம் கண்டு, புதிய இந்தியாவிற்கு அடி கோலியவர் பண்டித ஜவஹர்லால் நேரு ஆவார். இந்தியா வையே சமதர்ம ஜனநாயகக் குடியரசாக ஆக்குவதற்குப் பெரும் பாடுபட்டு அதனை அடிப்படையாக அமைத்து, அதனை நிலை நாட்டிய பெருமையும் பண்டித ஜவஹர்லால் நேருவிற்கு உண்டு.



1986 நவம்பர் 14] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அப்படி அமைக்கப்பட்ட குடியரசை நடத்திச் செல்வது என்பது எளிதான ஒரு செயல் தான். ஆனால் வெள்ளைக்காரர்கள் காலத்தில் அடிமைப்பட்டிருந்த இந்தியாவை ஒரு குடியரசு நாடாக ஆக்குவதிலும், அதை ஆக்குவதற்கு ஆன அடிப்படை முயற்சிகளை முதலிலே மேற் கொள்வதிலும், அதனை நடை முறைப்படுத்துவதற்கு முனைப்பு உள்ளத்தோடு முன்னோடித் திட்டங்களை எல்லாம் எடுத்துக் கொள்வதிலும் அதிக சிரமங் கள் இருக்க முடியும். அந்த நிலையில் இந்திய மக்கள் அத்தனை பேருடைய அரவணைப்பையும், அன்பையும் பெற்று, சிறந்த முறையில் இந்தியாவிற்கு மிகக்குறுகிய காலத்திலே உலகப் புகழை வாங்கித் தந்த பெருமையும் பண்டித ஜவஹர்லால் நேருவுக்கு உண்டு.

கூட்டு சேரா நாட்டுக் கொள்கையை உருவாக்கி இந்த அள விற்குக் காப்பாற்றி, அதனால் நல்ல பல பலன்களை உருவாக்கிய வரும் பண்டித ஜவஹர்லால் நேருவே ஆவார். ஐந்தாண்டுத் திட்டங்களை உருவாக்கி, அதற்கு வித்திட்டு, அதன் மூலம் இந்தியா பல வகைகளிலேயும் வளர வேண்டும், பல நிலைகளி லும் வளர வேண்டும், பல துறைகளிலும் செழிக்க வேண்டும் என்பதற்காகத் திட்டங்களையெல்லாம் தீட்டி, அந்த அடிப் படையிலே படிப்படியாக வளர்வதற்கு வழி கோலியவர் அவரே ஆவார். பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் ஜனநாயகத்திற்கு மிக்க மதிப்பு அளித்தார் என்பதையும், ஜனநாயக கோட்பாடு களுக்கு மதிப்பு அளித்தார் என்பதையும் மாற்றுக் கருத்துக் களுக்கும், மாற்றார்களுக்கும் மிகச் சிறந்த மதிப்பு அளித்தும், கருத்து வேறுபாடுகளுக்கு மதிப்பு அளித்தும், மனிதனுக்கு மனிதன் காட்ட வேண்டிய மதிப்பையும் அளித்தார் என்பதையும் நாம் மிக நன்றாக அறிவோம். அப்படிச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்கிய ஜவஹர்லால் நேருவினுடைய 97-வது பிறந்த நாளில் நாம் அனைவரும் அஞ்சலி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம்.

அவருடைய நினைவு என்றென்றும் தங்க வேண்டுமென்பதற் காகத்தான், பரங்கிமலைத் தொகுதியில் அவருடைய பெரிய உருவச் சிலையை நிலை நாட்ட வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் முயன்று, பெரும் சிலைக்கு ஏற்பாடு செய்து, அந்தச் சிலையும் நிலைநாட்டத் தக்க அளவிற்கு ஆயத்த நிலையிலிருக்கிறது. இந்த ஆண்டு இந்தப் பிறந்த நாள் விழாவில் பண்டித நேரு வினுடைய திருவுருவச் சிலையை நம்முடைய பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் திறந்து வைக்கவேண்டுமென்று, சென்ற திங்களிலே திரு. ராஜீவ் காந்தி அவர்களை நேரிலே கண்டபோது மாண்புமிகு முதல்வர் அவர்கள் அவருக்கு வேண்டுகோள் விடுத்து

*[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]* *[1986 நவம்பர் 14*

ற்கு முடிந்தால் அங்குவ ருகிறேன்என்று சொன்னார்கள்; இல்லா விட்டால் சில பல நாட்கள் கழித்து கட்டாயம் வருகிறேன் என்று திரு. ராஜீவ் காந்தி அவர்களும் வாக்குறுதி தந்திருக்கிறார்கள். விரைவிலே அவர்கள் வருவார்கள் என்று நாம் எதிர்பார்க்கி றோம். அவர்கள் வந்து பண்டித ஜவஹர்லால் நேருவினுடைய திருவுருவச் சிலையை திறந்து வைக்க வேண்டுமென்பது தான் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய பெரும் விருப்பமும் ஆகும். அந்தச் சிறப்புக்கு உரிய நிகழ்ச்சி இன்றே நடந்திருக்குமேயா னால், மிக மிக பொருத்தமாக இருந்திருக்கும் என்று தான் முதல்வர் அவர்களும் விரும்பினார்கள். என்றாலும் இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக அந்தச் சிறப்புக்குரிய நிகழ்ச்சி நடை பெறுவது நமக்கெல்லாம் பெருமிதத்தை அளிக்கின்ற ஒன்றாக அமையும் என்று சொல்லி, இந்த அவையின் சார்பாக, இந்த அவையில் இருக்கின்ற அத்தனைக் கட்சிகளின் தலைவர்கள் சார்பாக, அத்தனைக் கட்சி உறுப்பினர்கள் சார்பாக, பொது வாக தமிழக மக்களின் சார்பாக, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சார்பாக, பண்டித ஜவஹர்லால் நேருவுக்கு அஞ்சலி செலுத்துவதோடு, அவருடைய புகழும், பெருமையும் என் றென்றும் நிலையாக நின்று நமக்கு வழிகாட்டியாக அமைய வேண்டுமென கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அவை முன்ன வர் அவர்கள் தெரிவித்த கருத்துக்களோடும், உறுப்பினர் அவர் கள் தெரிவித்த கருத்துக்களோடும் என்னுடைய அஞ்சலியையும் அவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கி றேன். (குறுக்கீடுகள்)

** ** **

### 3. உரிமைப் பிரச்சினை

#### மின் வாரியத் தலைவர் மீது

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினை. மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. சிந்தன் அவர்கள் தமிழ்நாடு மின் வாரியம் தனது ஊழியர்களுக்கு அனுப்பிய ஒரு சுற்றறிக்கையில், மின் வாரிய ஊழியர்கள் அவர் கள் குறைகள் குறித்து சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர் கள் மூலம் பாராளுமன்றத்திலோ அல்லது பேரவையிலோ வினாக்கள் மூலமாகவோ அல்லது விவாதம் மூலமாகவோ தங்க

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



*1986 நவம்பர் 14]* *[பேரவைத் தலைவர்]*

ளுடைய பிரச்சினைகளை அல்லது குறைகளை எழுப்பக் கூடாது என்றும் அவ்விதம் எழுப்பினால் அது மின் வாரியத்தின் ஆணைக் குப் புறம்பானது என்றும் தெரிவித்துள்ளதால் அவ்வாறு அனுப்பப் பட்டுள்ள சுற்றறிக்கை பேரவை உறுப்பினர்களுடைய உரிமை யையும், கௌரவத்தையும் பாதிப்பதாக உள்ளது என்று ஒரு அவை உரிமைப் பிரச்சினை குறித்து அறிவிப்பு கொடுத்துள்ளார். இது எவ்விதம் அவை உரிமை மீறிய பிரச்சினைகளில் அடங்கும் என்பது குறித்து உறுப்பினர் அவர்கள் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

*(முற்பகல் 10.20)*

** ** ** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** என்னுடைய அனுமதி பெறாமல் பேசிய அத்தனையும் அவைக் குறிப்பில் இருக்காது. மாண்புமிகு திரு. என். எஸ். வி. சித்தன் தெரிவித்த அஞ்சலியும் மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேசிய அந்தக் கருத்துக் களும் அதையொட்டிய என்னுடைய கருத்துக்களும்தான் அவைக் குறிப்பில் இருக்கும். வேறு யார் பேசியதும் இருக்காது. நான் அனுமதி வழங்கவில்லை. (குறுக்கீடு) நீங்கள் அமருங்கள்.

**திரு. வி. பி. சிந்தன்: :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான ஒரு பிரச்சினையை நான் உங்கள் முன்னால் எழுப்பியிருக்கிறேன், தமிழ்நாடு மின் வாரியத் தலைவர் 20—9—1986 அன்று ஊழியர்களுக்கு என வெளியிட் டிருக்கக் கூடிய ஒரு சுற்றறிக்கையில்

"When M.L.As., M.L.Cs., M.Ps. and other non-officials make representations on behalf of individual employees to Ministers ...."

எம்.எல்.ஏ க்கள். எம்.பி க்கள் அல்லது எம்.எல்.சி க்கள் அதிகாரி களிடமோ அல்லது மற்றவர்களிடமோ, தொழிலாளிகளின், ஊழி யர்களின் சார்பாக, சில முறையீடுகளை வைக்கும்போது, என்று குறிப்பிட்டு, அதற்குப் பிறகு,

"an interpellation in Parliament or in the State Legislature shall be deemed to have contravened the above order ...."

அவ்வாறு அமைச்சர்களிடம் நேரில் பேசும்போதும், நேரில் முறையிடும்போதும் அதே முறையில் ஏதேனும் பாராளுமன்றத் திலோ, சட்டமன்றத்திலோ ஒரு கேள்வி எழுப்பப்படுமேயானால் அந்தக் கேள்விக்கு அந்தக் குறிப்பிட்ட நபர் உதவி செய்தால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்த உத்தர விலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

அந்த உத்தரவை எல்லா அதிகாரிகளும் நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டுமென்றும்,

" .... Violation of the above orders by the employees will be viewed seriously and disciplinary action shall be initiated against such employees "

அந்த ஊழியர்களுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கைஎடுக்கப்பட
வேண்டும் என்றும் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது.
இந்த மன்றத்தினுடைய உரிமையைப் பற்றி அதிகமாக நான்
விளக்கத் தேவையில்லை. ஜனநாயக நாடுகளில் பாராளுமன்றத்
திற்கும், சட்டமன்றத்திற்கும் உள்ள உரிமைகள் தாங்கள்
அறிந்ததே. அந்த வகையில், உறுப்பினர்களுக்குச் சில பொறுப்பு
கள் உண்டு. அரசியல் சட்டத்திலும் வழங்கப்பட்டிருக்கிற
பொறுப்புக்களைத்தான் நான் குறிப்பிடுகிறேன். அவ்வப்போது
குடிமக்களுடைய குறைகளை அமைச்சர் பெருமக்களுடைய
கவனத்திற்குக் கொண்டு வருவதற்கும், அதே முறையில், சட்ட
மன்றத்திலே ஒத்தி வைப்பு தீர்மானம் மூலமாகவோ அல்லது
கவன ஈர்ப்புத் தீர்மானம் மூலமாகவோ அல்லது மற்ற முறை
களிலோ கொண்டு வருவதற்குமான உரிமை சட்டமன்ற உறுப்
பினர்களுக்கு உண்டு. அவ்வாறு ஒரு உரிமையை சட்டமன்றத்
திலே பயன் படுத்துவதுதான் ஜனநாயகத்தைப் பாதுகாப்
பதற்குள்ள சிறந்த முறை என்று நாங்கள் கருதுகிறோம்.

இந்த முறையில் பாதிக்கப்பட்ட ஒரு ஊழியரின் பிரச்
சினையில் ஒரு சட்டமன்ற உறுப்பினர் அமைச்சரைச்
சந்திப்பதையே அந்தப் பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கு
எதிரான குற்றச்சாட்டாக்கி வஞ்சம் தீர்க்கவே இந்த
உத்தரவு வழி வகுக்கும். ஆகவே இது ஜனநாயகத்திற்குப் பாதக
மானது ; சட்டமன்றத்தை மதிக்காதது ; சட்டமன்ற உறுப்
பினர்களுடைய உரிமையைப் பறிப்பது என்ற முறையிலேதான்
நான் இந்தப் பிரச்சினையை இங்கே எழுப்புகிறேன்.

இதனால் இந்தச் சட்டமன்றத்திலே எங்களுடைய கடமை
களை நாங்கள் செய்ய முடியாத நிலையும் ஏற்படக்கூடும். மின்
சார ஊழியர்களும் இந்த நாட்டினுடைய குடிமக்கள்தான்.
என்னுடைய தொகுதியைச் சேர்ந்த ஒரு மின்சார ஊழியர்
குறிப்பிட்ட ஒரு பிரச்சினையை என்னிடம் கொண்டு வந்தால்
மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரைப் பார்த்து அது சம்பந்த
மாகப் பேசுவதற்குள்ள உரிமை என்னுடைய அடிப்படை
யான உரிமை. அதை அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்ள
லாம் அல்லது நிராகரிக்கலாம் ... நான் சொல்லியது ஆதார
மற்றது என்று கூடச் சொல்லலாம். அப்படி அந்த அமைச்ச





ரிடம் முறையிடுவதற்குரிய இந்த உரிமையைக் கூட மின் வாரி
யத் தலைவர் பறிக்க முயற்சிக்கிறார். அது மட்டுமல்ல;
கேள்விகளை எழுப்புகிற நேரத்தில், மின் வாரிய ஊழியர்கள்
சம்பந்தமாக நான் கேள்விகளை எழுப்பியது உண்டு. அவைத்
தலைவர் அவர்களுக்கும் தெரியும் என்று நினைக்கிறேன்.

** ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சம்பந்தப்பட்ட சர்க்குலர் பற்றி மட்டும் பேசுங்கள்.

திரு. வி. பி. சிந்தன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது வேண்டாம். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி ஆணையிடுகிறேன்.

இப்பிரச்சினை குறித்து மின் வாரியத் தலைவரிடமிருந்து விளக்கம் பெற்ற பின்பு நான் என்னுடைய தீர்ப்பை அளிக்க இருக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4, அறிவிப்புகள்.

### (அ) முதல் துணை மதிப்பீடுகள், 1986-87, அளித்தல் (ஆ. செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

1986—87 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள் அறிக்கையைப் பேரவைக்கு அளிப்பதற்கு ஆளுநர் அவர்கள் 1986 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 17 ஆம் நாள் திங்கட்கிழமையைக் குறித்திருக்கிறார்கள்.

### (ஆ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1980-81, அளித்தல் (ஆ. செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1980—81ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவைக்கு அளிப்பதற்கு ஆளுநர் அவர்கள் 1986 ஆம்ஆண்டு நவம்பர் திங்கள் 17 ஆம் நாள் திங்கட்கிழமையைக் குறித்துள்ளார்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1986 நவம்பர் 14

### (இ) கோவை பாரதியார் பல்கலைக்கழக ஆட்சிக் குழு உறுப்பினர்கள் தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கோவை பாரதியார்
பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவிற்கு (Senate) எட்
டாவது சட்டமன்றப் பேரவையின் சார்பில் தேர்ந்தெடுக்கப்
பெற்ற திருவாளர்கள் மா. சின்னராசு, கே. கல்லன் ஆகி
யோரது பதவிக்காலம் 20–11–1986 அன்று முடிவடைவ
தால் 21–11–1986 முதல் அப் பல்கலைக் கழகம் தனது
ஆட்சிக் குழுவின் (Senate) 20–11–1989 வரை பணி
யாற்ற இப்பேரவை உறுப்பினர்களிலிருந்து இருவரைத்
தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு கோரியுள்ளது. இரு
உறுப்பினர்களைத் தீர்மானம் முன்மொழிவதன் மூலம் தேர்ந்
தெடுக்கப்பெற வேண்டும்.

இதற்கான தீர்மானங்கள் 17–11–1986 முற்பகல் 11–00 மணிக்குள் செயலாளரிடம் கொடுக்கப் பெற வேண்டும்.

### (ஈ) திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக் கழக ஆட்சிக்குழு உறுப்பினர்கள் தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருச்சிராப்பள்ளி பாரதிதாசன்
பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் குழு விற்கு (Senate) ஏழாவது
சட்டமன்றப் பேரவையின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பெற்ற
திருவாளர்கள் பி. முசிறிபுத்தன், ஜே. எஸ். இராசு ஆகி
யோரது பதவிக்காலம் முடிவடைந்துள்ளதால், அப் பல்கலைக்
கழகம் தனது ஆட்சிக் குழுவிற்கு (Senate) மூன்றாண்டுக்
காலம் பணியாற்ற இப்பேரவை உறுப்பினர்களிடமிருந்து
இருவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு கோரி
யுள்ளது. இரு உறுப்பினர்களைத் தீர்மானம் முன்மொழி
வதன் மூலம் தேர்ந்தெடுக்கப் பெறவேண்டும்.

இதற்கான தீர்மானங்கள் 17–11–1986 முற்பகல் 11–00 மணிக்குள் செயலாளரிடம் கொடுக்கப் பெற வேண்டும்.

### (உ) காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழக ஆட்சிக்குழு உறுப்பினர் தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** காரைக்குடி அழகப்பா
பல்கலைக் கழகம் அப்பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு
(Senate) எட்டாவது சட்டமன்றப் பேரவையின் சார்பில்
பணியாற்ற இப்பேரவை உறுப்பினர்களிலிருந்து ஒருவரைத்
தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு கோரியுள்ளது. ஒரு
உறுப்பினர் தீர்மானம் முன்மொழிவதன் மூலம் தேர்ந்
தெடுக்கப் பெற வேண்டும்.

இதற்கான தீர்மானம் 17–11–1986 முற்பகல் 11–00 மணிக்குள் செயலாளரிடம் கொடுக்கப்பட வேண்டும்.



1986 நவம்பர் 14]

## 5. கவன ஈர்ப்பு.

### குவாரிகள் ஏலம் விடப்படும் தொகையை ஊராட்சிகளுக்கு அளித்தல்

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, " மாநிலம் முழுவதும் குவாரிகள்
ஏலம் விடப்படும் தொகையில் ஊராட்சிகளுக்கு வழங்கப்பட
வேண்டிய பங்கு நிதி, கனிம வளத்துறை ஆணையில்லாத
காரணத்தால், கடந்த சுமார் 15 ஆண்டுகளாக ஊராட்சி
நிதியில் சேர்க்காததால் ஊராட்சிகளுக்கு ஏற்பட்டுள்ள
நிலைமை குறித்த " அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த
நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின்
கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட
அறிக்கை ஒன்றை வைக்கிறேன்—

### அறிக்கை.

குவாரிகள் ஏலம் விடப்படும் தொகை 5–10–1963
நாளிட்ட தொழில், தொழிலாளர் நலன் மற்றும் கூட்டுறவுத்
துறை ஆணை எண் 4817-ன் படி குவாரி எந்த ஊராட்சியில்
உள்ளதோ அவ்வூராட்சிக்கு 50 விழுக்காடும், அவ்வூராட்சி
சேர்ந்துள்ள ஊராட்சி ஒன்றியத்திற்கு 50 விழுக்காடும்
பகிர்வு செய்யப்படும். அதன்பின், 1974–75 ஆம் ஆண்டு
மதிப்பீட்டுக் குழு தனது பரிந்துரை 11-ல், குவாரிகளின் மூலம்
வரும் வருவாய் அனைத்தும் ஒன்றாகச் சேர்த்து மாநில
பொது நிதியில் முதலில் சேர்க்கவும், அதன் பின் ஊராட்சி/
ஊராட்சி ஒன்றியத்தின் பரப்பளவு, மக்கட் தொகை, சமூக
மற்றும் பொருளாதார நிலை அடிப்படையில் அனைத்து
ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்திற்கும் மறு பகிர்வு
செய்திடல் வேண்டும் என்ற பரிந்துரைக்கிணங்க அரசு
அவ்வாறே 11–7–1980-ஆம் நாளிட்ட ஊரக வளர்ச்சி மற்றும்
உள்ளாட்சித் துறை அரசாணை எண் (நிலை) 1054-ன் மூலம்
ஆணையிட்டது.

தற்போது தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி/ஊராட்சி ஒன்றி
யத் தலைவர்கள் பதவி ஏற்றபின் குவாரி மூலம் வரும்
வருவாயை முன்பிருந்தது போல 50 விழுக்காடு குவாரி
எந்த ஊராட்சியில் உள்ளதோ அவ்வூராட்சிக்கும், அவ்வூ
ராட்சி சேர்ந்துள்ள ஊராட்சி ஒன்றியத்திற்கு 50 விழுக்

(திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி) [1986 நவம்பர் 14

காடும் பகிர்ந்தளிக்கும் முறையை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வருமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளனர். இச் செயற்குறிப்பு அரசின் தீவிர ஆய்வில் உள்ளது.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) :** பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் குவாரி எந்த ஊராட்சியில் உள்ளதோ அவ்வூராட்சிக்கு 50 விழுக்காடும், அவ்வூராட்சி சேர்ந்துள்ள ஊராட்சி ஒன்றியத்திற்கு 50 விழுக்காடும் அந்தக் குவாரியினால் வரும் வருவாய் பகிர்ந்தளிக்கப்படும் என்று ஆணையிடப்பட்டிருக்கிறது என்று விவரம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் கடந்த 10, 15 ஆண்டுகளாகவே எந்த ஊராட்சிக்கும், ஊராட்சி ஒன்றியத்திற்கும் அது வரவு வைக்கப்படாத சூழ்நிலை இருந்து வருகிறது. அவ்வாறு எவ்வளவு ரூபாய் ஊராட்சிகளுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் வரவில் வைக்கப்படாமல் இருக்கிறது என்ற விவரம் இருந்தால் தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே அதுபற்றிய விவரம் தற்போது என்னிடம் இல்லை. என்றாலும் இது குறித்து துரிதமான நடவடிக்கையை அரசு மேற்கொள்ள இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்ரமணியன் பேரவைத் துணைத் தலைவர் :** பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது என்ற விவரங்கள் விவர அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால் சாதாரணமாக நடைமுறையில் கிராமங்களில் உள்ள குவாரிகளைப் பொறுத்த வரையில் வருவாய்த் துறை அதிகாரிகள்தான் அவற்றை ஏலம் விடுகிறார்கள். இதன் காரணமாக அந்தத் தொகை முதலில் வருவாய் துறையில் செலுத்தப்படுகிறது. வருவாய்த் துறையிலிருந்து ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங் களுக்கும் தொகையைப் பிரித்துக் கொடுக்கப்பட வேணாடு மென்றால் அந்தப் பணம் தற்போது கனிம வளத் துறையில் டெப்பாசிட் செய்யப்படுவதால் அதற்கான ஆணை கனிம வளத் துறையின் ஆணையிருந்தால்தான் முடியும். எனவே உள்ளாட்சித் துறையும் கனிம வளத்துறையும் சேர்ந்து இதற்குரிய ஆணையை விரைவில் வெளியிடுவதற்குக் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

(முற்பகல் 10–30.)

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



1986 நவம்பர் 14]

## 6. அரசினர் சட்ட முன்வடிவுகள்

### (அ) சென்னை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு 1986

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1986 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

**திரு. அ. ரகுமான்கான் :** பேரவைத் தலைவர் அவர்களே, I have given disapproval notice. Therefore the Chair mav please permit me.

பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சிக்கான தேர்தலை மீண்டும் ஒத்தி வைத்து தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீட்டிக்க இந்தச் சட்டமுன்வடிவு கொண்டு வரப்படுகிறது. நான் சார்ந்துள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இதைக் கடுமையாக எதிர்க்கிறேன். காரணம், இது மக்களுக்கு விரோதமானது, ஜனநாயகத்திற்கு விரோதமானது. மக்களுடைய அடிப்படை வசதிகள், குடிநீர் வசதிகள், சாலை வசதிகள், கழிப்பிட வசதிகள் ஆகியவற்றை நிறைவேற்ற, தேர்தல் நடைபெற்று மக்கள் பிரதிநிதிகள் இருந்தால்தான் செய்ய முடியும். தனி அதிகாரியின் பதவிக் காலத்தை நீட்டிப்பதால் இந்தக் குறைபாடுகளைப் போக்க முடியவில்லை. நிர்வாகச் சீர்கேடுகள் களையப்பட்டால்தான் இவற்றைச் செய்ய முடியும். அதிகாரிகளின் கால நீட்டிப்பிற்கு அரசு பல்வேறு காரணங்களைச் சொல்கிறது. இருந்தாலும் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னுமொன்றையும் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இப்போது கொண்டுவரப்பட்டுள்ள இந்தச் சட்டம், தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீட்டிப்பதற்காக, மாநகராட்சித் தேர்தலை ஒத்தி வைக்க அவர்கள் கூறியுள்ள காரணங்கள் குறித்து நான் அமைச்சரிடம் உங்கள் மூலமாக ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். இப்போது சொல்லப்பட்டிருக்கக் கூடிய காரணம், மற்ற மாநிலங்களில் உள்ள மாநகராட்சி சட்டங்களையும் பரிசீலித்து சென்னை, கோவை, மதுரை ஆகிய மாநகராட்சிகள் அனைத்திற்கும் ஒரு பொதுச் சட்டம் கொண்டு வந்து, அதன்கீழ் இந்தத் தேர்தலை நடத்த வேண்டி

யிருக்கிறது. ஆகவே அதற்கு அவகாசம் வேண்டியிருக்கிறது என்பதாகும். இதிலேயுள்ள ஒரு சட்டச் சிக்கலை உங்கள் மூலமாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஏற்கனவே பன்னிரெண்டரை ஆண்டுக் காலமாக இந்த மாநகராட்சித் தேர்தல் நடத்தப்படாமல் இருக்கிறது. மதுரை மாநகராட்சித் தேர்தல் மூன்று வருடங்களாகவும், கோவை மாநகராட்சித் தேர்தல் 6 வருடங்களாகவும் நடத்தப்படாமல் இருக்கின்றது. இந்த 9 வருட காலமாக இந்தத் தேர்தல்களை ஒத்தி வைக்க இந்தச் சட்டமன்றத்திலே சொல்லப்பட்ட காரணங்கள் பல்வேறு இருக்கின்றன. சென்ற கூட்டத் தொடரில் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், பஞ்சாயத்து, நக ராட்சி ஆகியவைகளின் தேர்தல்கள் முடிந்தவுடன் மாநகராட்சி களின் தேர்தல்களை நடத்துவோம் என்று ''ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீசன்ஸ்''-இல் போட்டிருந்தார்கள். இப்போது அதை விட்டு விட்டார்கள். அதைப் போலவே திருட்டு ஓட்டுக்களைக் களை வதற்காக.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது இன்ட்ரொடக்ஷன் தான். ஃபார்மலாக அப்போஸ் பண்ணலாம். அவ்வளவுதான். கன்சிடரேஷனுக்கு வரும்போது டீட்டெயிலாகப் பேசலாம்.

திரு. அ. ரகுமான்கான்: நான் டீட்டெயிலாகப் பேசவில்லை. லீகல் பொசிஷனை, டெக்னிக்கலாக உள்ள நிலைமையைக் கேட்கிறேன். டீட்டெயிலுக்குள் போகவில்லை. திருட்டு ஓட்டுக் கள் போடுவதைத் தவிர்க்க, புகைப்படத்துடன் கூடிய அடை யாள அட்டை வழங்கப்படும் என்று ஏற்கெனவே தெரிவிக்கப் பட்டிருந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கே கொண்டுவரப் பட்டுள்ள சட்டமுன்வடிவைப் பற்றிப் பேச வேண்டும். கேள்வி கேட்கக் கூடாது.

திரு. அ. ரகுமான்கான் : கேள்வி கேட்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி கேட்டால் அமைச்சர் அதற்குப் பதில் சொல்ல முடியாது. சொல்லப் போவதுமில்லை. ஏனென்றால் இது இன்ட்ரொடக்ஷன் ஸ்டேஜ் டெக்னிக்கல் அப்ஜெக்ஷன் இருந்தால் சொல்லலாம், சுருக்க மாக.

திரு. அ. ரகுமான்கான் : நான் டெக்னிக்கல் அப்ஜெக்ஷன் தான் தெரிவிக்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சொல்லுவது ஃபாக்ட்ஸ் (குறுக்கீடு) கான்ஸ்டிட்யூஷனல் வாலிடிட்டி பற்றிச் சொல்லலாம்.

திரு. அ. ரகுமான்கான் : ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீசன்ஸில் சொல்லப்பட்டிருக்கிற காரணம்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கான்ஸ்டிட்யூஷனல் வாலிடிட்டி பற்றி சொல்லி, அப்ஜெக்ஷனை ரிக்கார்ட் பண்ணி விட்டு முடித்துவிட வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் : ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீசன்ஸ் பற்றி நான் 'கிரிடிசிஸம்' பண்ணுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கிரிடிசிஸம் இப்போது தேவையில்லை. 'ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீசன்ஸ்'-ஐ எதிர்க் கிறேன் என்று சொல்லி முடித்துவிடுங்கள். ஏற்கெனவே ரொம்பச் சொல்லிவிட்டீர்கள்.

திரு. அ. ரகுமான்கான் : அந்த பாயின்டை கம்ப்ளீட் பண்ண வேண்டும். தலைவர் அவர்களே, அந்த ரீசன்சை சொல்லி நான் கம்ப்ளீட் பண்ணுகிறேன். ஏற்கெனவே சொன்ன ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீசன்ஸ்ஸிலிருந்து இப்போது சொல்லப் படுகிற ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீசன்ஸ் மாறுபடுகிறது. ஏற் கெனவே சொன்ன காரண நோக்கங்கள் இப்போது அழிந்து விட்டனவா அல்லது நிறைவேறி விட்டனவா ? அல்லது அந்தக் காரண நோக்கங்கள் தவறு என்று அரசு முடிவு செய்துவிட்டதா ? இப்போது புதிதாக வந்திருப்பது ஏன் ? பஞ்சாயத்து, நகராட்சி தேர்தல்கள் நடந்து முடிந்த பிறகு பல மாநகராட்சிகளின் சட்டங்களைப் பரிசீலிக்கவில்லை.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது பதில் சொல்ல முடியாது.

திரு. அ. ரகுமான்கான் : அமைச்சர் அவர்கள் பேசும் போது பதில் சொல்லலாம். இதை எதிர்ப்பதன் நோக்கம் இந்த இன்ட்ரட்யூஸ் பண்ணக்கூடாது என்பதுதான். ஏன் இன்ட்ரடியூஸ் பண்ணக்கூடாது என்றால், ஏற்கெனவே உள்ள objects and reasons—லிருந்து இது வேறுபட்டிருக்கிறது, அது என்னவாயிற்று ?

Mr. SPEAKER : Introduction is with the leave of the Governor or with the leave of the House.

திரு. அ. ரகுமான்கான் : ஏற்கெனவே சொல்லப்பட்ட objects and reasons இருக்கிறது. 9 வருடங்களா இருந்த objects and reasons வேறு. இப்போதும் ஏன் அது மாறுபட்டிருக்கிறது ? இதனுடைய part and parcel ஆ அதைக் கருதுவதா அல்லது அது அழிந்துவிட்டதா ? நீங்கள்தான் ரூலிங் கொடுக்க வேண்டும்.

lr. SPEAKER : The Bill is constitutionally valid and can be introduced. It is not *ultra vires*. I cannot pull up the Government.

திரு. அ. ரகுமான்கான்' நீங்கள் ரூலிங் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கு ரூலிங் தேவையில்லை. ஸ்பீக்கர் பொறுப்பு, அவர்கள் கொண்டு வரும் 'பில்', If it is *ultra vires*, Fundamental Rights— க்கு எதிராகப் போனால், இசைவைக்கூட மறுக்கலாம். அப்படியல்ல இது.

திரு. அ. ரகுமான்கான் : அந்த ஆப்ஜக்ட்ஸ் அன்ட் ரீசன்ஸ்-ஐ சேர்த்துக்கொள்ளலாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் எப்படிச் சொல்வது?

திரு. அ, ரகுமான்கான் : அமைச்சரைச் சொல்லச் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது சொல்ல முடியாது.

திரு. என். எஸ். வி. சித்தன் : அவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள 1986 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (இரண்டாம் திருத்தச்) சட்ட முன்வடிவை இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே அறிமுக நிலையிலேயே நான் எதிர்க்கிறேன். நீண்ட பல ஆண்டுகளாக எதிர்பார்த்திருந்த ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் நடைபெற்ற பின்னாலே, தமிழகத்திலே அதிகமான மக்கள் வாழும் சென்னை மாநகராட்சித் தேர்தலை நடத்துவதிலே அரசுக்குத் தயக்கம் இருப்பதாக நான் கருதவில்லை. ஜனநாயகத்தின் நாற்றங்காலாக விளங்கும் இந்த மாநகராட்சித் தேர்தலை





உடனடியாக நடத்துவதன் மூலம் பல பிரச்சினைகள் தீர வழியிருப்பதால், உடனடியாகத் தேர்தலை நடத்த அறிவிப்பு செய்ய வேண்டும்.

காரண காரிய விளக்கத்திலே இந்தியாவின் மற்ற மாநக ராட்சிகளில் உள்ள நிர்வாக அமைப்பு, அதிகாரங்கள் போன்ற வற்றைக் கருத்திற் கொண்டு, இந்த மாநிலத்தில் உள்ள அனைத்து மாநகராட்சிகளுக்கும் பொதுவான சட்டம் இயற்ற அரசின் தீவிர பரிசீலனையில் இருக்கிறது என்ற 'Term' போட்டிருக் கிறார்கள். அது எவ்வளவு காலத்திற்குள்ளாக அல்லது மாதங் கள், ஆண்டுகளுக்குள்ளாக என்பது (indefinite term) ஆக இருக்கிறது. அது விளக்கப்படவில்லை. மூன்றாவது பாரா விலே பொதுச் சட்டம் இயற்றி, அதன்கீழ் சென்னை மாநகராட்சி தேர்தலை நடத்த மேலும் சில காலமாகும் என்று போட்டிருக் கிறார்கள். இது சர்ச்சைக்குரிய, விவாதத்திற்குரிய சொற் களாக இருப்பதால், உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்வது, உடனடியாக ஒரு தேதியை நிர்ணயம் செய்து, நீண்ட காலமாக நடக்காமல் உள்ள இந்தத் தேர்தலை நடத்த வேண்டுமென்று சொல்லி, இதை அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் சென்னை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்திருக்கிறார்கள். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் ஆரம்பத்திலேயே அதை எதிர்க்க விரும்புகிறேன். அமைச் சர்கள் மாறி மாறி வருகிறார்கள். அப்படி மாறி வரும்போது, ஒவ்வொரு விளக்கம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இத னால் சென்னை மாநகராட்சியில் மிகவும் சுகாதாரக் கேடு விளைந்திருக்கிறது. பன்றிப் பண்ணை வைத்து, பன்றிகள் வளர்ப் பதால் நகரில் சுகாதாரக் கேடுகள் ஏற்பட்டிருக்கின்றன. புதிய சட்டத்தில் சிக்கல் வந்ததால் பழைய சட்டப்படி எப்படி உள் ளாட்சித் துறைக்குத் தேர்தலை நடத்தினோமோ, அந்த அடிப் படையில் 9 ஆண்டுக்காலமாக தேர்தல் இல்லாமல் இருக்கும் மாநகராட்சியில் இப்போது பழைய சட்டப்படி தேர்தலை நடத்திவிட்டு, புதிய சட்டப்படி வருங்காலத்தில் தேர்தலை நடத்த அமைச்சரவர்களும், அரசும் சிந்திக்க வேண்டும். அந்த அடிப்படையில் அறிமுக நிலையிலேயே இந்தச் சட்ட முன்வடிவை நான் எதிர்க்கிறேன்.

*திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : பேரவைத் தலைவரவர் களே, சென்னை மாநகராட்சி சட்டத் திருத்தத்தை ஆரம்ப நிலையிலேயே நான் எதிர்க்கிறேன். 1974-லிலே சென்னை மாநக ராட்சி கலைக்கப்பட்ட பிறகு இன்னும் தேர்தல் நடக்கவில்லை. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் கலைத்த மாநக ராட்சிக்குத் தேர்தலை நடத்த இன்னும் மனம் வரவில்லை.

[திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்][1986 நவம்பர் 14

1978-ல் மதுரை மாநகராட்சிக்குத் தேர்தலை நடத்தியிருக்கிறார்கள். அதற்கும் இப்பொழுது தேர்தல் நடத்த மனம் வரவில்லை. கோவை மாநகராட்சி ஆரம்பித்து 6 ஆண்டுகளாகப் போகிறது. இன்னும் தேர்தல் வரவில்லை. அங்கே மக்கள் பிரதிநிதிகள் வரவில்லை. இதிலே என்ன சிரமம் இருக்கின்றது என்று எனக்குத் தெரியவில்லை. மாண்புமிகு அமைச்சர்கள் பேசும்போது உள்ளாட்சித் தேர்தலில் முதல்வர் அவர்கள் கலந்து கொள்ளாததால் தோல்வியுற்றோம் என்று சொல்லியிருக்கிறார்கள். முதல்வர் அவர்களே முன்நின்று தேர்தலை நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

*திரு. வி. பி. சிந்தன் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, மீண்டும் மாநகராட்சித் தேர்தல்களை ஒத்தி வைக்கவேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கின்றார்கள். நான் சார்ந்திருக்கின்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் அதை வன்மையாக ஆட்சேபிக்கிறேன். தேர்தலைப் பற்றி குறிப்பிட்டுச் சொல்லும்போது சென்னை மாநகராட்சித் தேர்தலை நடத்த ஆளுங்கட்சிக்குத் தயக்கம் இருக்கின்றது என்று நான் கருதுகிறேன். தேர்தலை தள்ளி வைப்பது சரியல்ல, முறையல்ல. அது ஜனநாயகத்திற்குப் பாதுகாப்பு அளிக்கின்ற நடவடிக்கையாக அமையாது. விரைவிலே தேர்தலை நடத்த வேண்டும். ஒத்தி வைப்பது சரி என்பதற்குக் கூறுகின்ற காரணம் எந்த விதத்திலும் நியாயமானதல்ல. அதை நியாயப்படுத்துவது சரியல்ல. நகரியங்களுக்கான தேர்தல்களை நடத்த முடியாது என்று முன்னாள் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அங்கே தொழிலாளர்கள் அதிகம். ஆகவே, தேர்தல் நடத்த முடியாது என்றார். அது முறையாக அமையாது என்றும் குறிப்பிட்டிருக்கின்றார். அவர் அப்படிக் கருதுவது ஜனநாயக பண்புகளுக்கு மாறானது. ஆகவேதான் இந்த அறிமுகக் கட்டத்திலேயே, முன்வடிவை நான் வன்மையாக ஆட்சேபிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : ''1986 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.



1986 நவம்பர் 14]

(ஆ.) கோயம்புத்தூர் மாநகராட்சி இரண்டாம் திருத்த சட்டமுன்வடிவு, 1986)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''1986 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

+திரு. ரு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்ட்ரடொக்ஷனிலேயே இச்சட்டத்தை நாங்கள் எதிர்க்கிறோம் என்று சொல்வதை ஒரு ஸ்டீரியோவாகச் சொல்வதாகக் கருதக்கூடாது. இந்தச் சட்டத்தை இன்ட்ரட்யூஸ் பண்ணக் கூடாது, இதை வாபஸ் வாங்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை. அதற்கான பாயின்ட்டை மட்டும்தான் நான் சொல்ல விரும்புகிறேன். வேறு எந்த சட்டத்திற்குள்ளேயும் நான் போகவில்லை. கோயம்புத்தூர் மாநகராட்சி ஏற்பட்டு இதுவரைக்கும் தேர்தல் நடத்தவில்லை. 3 ஆண்டு காலத்திற்குள் தேர்தலுக்கு பிரிப்பேர் பண்ணுவதற்கு என்று ஸ்பெஷல் அதிகாரி போட்டிருக்கின்றார்கள். அவரும் பிரிப்பரேஷன் பண்ணிவிட்டார். வோட்டர் லிஸ்ட்டும் பிரிப்பேர் பண்ணி விட்டார். ஆனால் தேர்தலுக்கு அரசு நாள் நிர்ணயிக்கவில்லை. கோயம்புத்தூர் முனிசிபாலிட்டி கார்ப்பரேஷன் ஏற்பட்டும், அதற்கு முன்னாலும், 5, 6 ஆண்டுகளாகத் தேர்தல் நடக்கவில்லை. தேர்தல் ஏன் நடத்தவில்லை. தொடர்ந்து ஒத்திப் போடுவதற்கு இதையெல்லாம் ஒரு டேக்டிஸ் ஆக வைத்திருக்கிறார்கள் என்று தான் அதைப் பார்க்கிறோம். அரசிடத்திலே சந்தேகம் இல்லாமல் சொல்கிறோம். இப்படி செய்யக்கூடாது. இதற்கு அவசியம் இல்லை. அதனாலேதான் இது தேவையில்லை என்று சொல்லக் கூடிய நிலை இருக்கிறது. இந்த நிலைமையில் இதற்கு ஒரு காரணம் காட்டி ஒத்திப் போடுவது சரியல்ல. டிசம்பர் 15, 16 தேதி வரையில், இப்போது உள்ள சட்டப்படி உயிர் இருக்கிறது. மேற்கொண்டு தள்ளி வைப்பது என்பது பற்றி நான் சொல்லிக் கொள்கிறேன், கோயம்புத்தூரில் ஏற்கனவே மாநகராட்சி தேர்தல் நடத்த ஏற்பாடு இருந்தும் நடக்காத சூழ்நிலை இருக்கின்றது. மற்ற இடத்தில் தேர்தல் நடந்து கவுன்சில் அமைக்கப்பட்டு அதற்குப் பிறகும் கவுன்சில் இல்லாத சூழ்நிலை இருக்கின்றது. மற்ற இடத்திற்கும் இந்த இடத்திற்கும் ஒரே மாதிரியாக ஒப்பிடுவது சரியல்ல. There are differences. அப்படி வெளி மாநிலங்களில் இருக்கும்படியான நிலைகளையெல்லாம் ஒப்பு நோக்கிப்பார்த்து ஒரு காம்ப்ரெஹென்சிவ் லெஜிஸ்லேஷன் கொண்டு வருவதற்கு அரசுக்கு உரிமை இருக்கின்றது. அந்தச் சட்டம்

[திரு. கு. ரமணி] [1986 நவம்பர் 14

ஒரு அபிவிருத்தியான சட்டமாக இருந்தால் நாங்களும் வரவேற்போம். இன்றைக்கு அதற்கு இச்சட்டம் வரவில்லை. மாண்புமிகு திரு. ரகுமான்கான் அவர்கள் குறிப்பிட்ட மாதிரி காரண நோக்கங்களிலே இது புதிதாக வந்திருக்கிறதா ? இது புழையதனுடைய 'பார்ட் அண்டு பார்சலா' என்று கேட்பதற்கு காரணம் இருக்கிறது. The illegality is committed from the Government side. அதுதான் எங்களுடைய கேள்வி. ஆகவே அது சரியல்ல. இது கான்ஸ்டிட்யூசனலி கரெக்டாக இருக்கிறது. சரியாகப் பண்ணியிருக்கிறார்கள் என்று சொல்லலாம். ஆனால்

It is only a mechanical application of the Constitution. What about the spirit of the Constitution?

அது உண்மையான நிலையல்ல. அதை ஜனநாயக மரபுக்கு ஒத்ததாகக் கொள்ள முடியாது. ஆகவே, இச்சட்ட முன்வடிவை பிரேரேபிக்கிறபோதே எதிர்க்கிறேன். அங்கே எப்போது தேர்தல் நடத்தப்படும் என்று இப்போதே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தால் மிகவும் சந்தோஷத்தோடு வரவேற்பேன் என்று சொல்லி, இன்ட்ரொடக்சன் ஸ்டேஜிலேயே இதை எதிர்க்கிறேன் என்று கூறி அமைகிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : கொயம்புத்தூர் மாநகராட்சி இரண்டாம் திருத்தச் சட்ட முன் வடிவை ஆரம்ப நிலையிலேயே நான் சார்ந்துள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எதிர்க்கிறேன். இதனைக் கொண்டு வருவதற்கு பல்வேறு காரணங்கள் இருந்தாலும் முக்கியமாக ஏற்கெனவே போட்ட ஆர்டினன்ஸை ரீப்ளேஸ் பண்ணி பர்தராக 6 மாதம் கேட்டு இதனைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆக, ஒரு வருடம் கேட்கப்பட்டுள்ளது. மற்றொரு முக்கியமான காரணத்தையும் நான் சொல்லக்கடமைப்பட்டிருக்கிறேன். சென்னை மாநகராட்சியைவிட முக்கியமான, பலமான காரணம் ஒன்று கோயம்புத்தூர் மாநகராட்சியைப் பொறுத்தவரையில், இன்றைக்கு உருவாகிக் கொண்டிருக்கிறது. மதுரையிலே பிடித்த காலரா நோய் இன்றைக்குக் கோயம்புத்தூர் வரையில் வந்திருக்கிறது. சென்னையைப் பொறுத்தவரையில் ஸ்பெஷல் ஆபிசர் உண்டு. ஆனால் கோயம்புத்தூரில் ஸ்பெஷல் ஆபிசர் இல்லை. முதலிலே மதுரையிலேயே கிடையாது. கடந்த ஜூன் மாதத்திலிருந்து கோயம்புத்தூர் மாநகராட்சியிலும் ஸ்பெஷல் ஆபிசர் கிடையாது. ஏற்கனவே பாரமாக இருக்கும் நிலையில் இரண்டு பாரத்தை. ஒரு நபர் மீதே திணிக்கின்ற நிலைமை சரியல்ல. இப்படியே போய்க் கொண்டிருந்தால் கலெக்டரிடம் இப்பணியை ஒப்படைப்பார்கள் என்று நான் கருதுகிறேன். ஸ்பெஷல் ஆபிசர் இருக்கும்போதே நாற்றமாக இருக்கிறது. இப்போது அதோடுகூட சுகாதார கேட்டால் மூளை நோய் வேறு வந்திருக்கிறது.



1986 நவம்பர் 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கன்சிடரேஷனுக்கு வரும்போது பில்லில் விவரமாக பேசலாம். இப்போது அதனுடைய டெக்னிக்காலிட்டீசைப் பற்றி மட்டும் பேச வேண்டும்.

திரு. ப. பொன்னுரங்கம் : இருக்கிற b rdens பற்றி மட்டும் சொல்கிறேன். அண்மையில் நான் கோயம்புத்தூர் சென்றபோது கோயம்புத்தூர் மாநகராட்சியிலுள்ள ஸ்கூல்களை பைஃபர்கேசன் பண்ணியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலை வரும்போது அங்கே பணியாற்றுகிறவர்களுக்கு யார் சம்பளம் கொடுப்பது ? அதற்காகத்தான் 'எலெக்டட் பாடி' இருக்கவேண்டும். அவர்கள் இருந்தால்தான் தெளிவான திட்டவட்டமான, பலனளிக்கும் திட்டங்களை வகுக்க ஏதுவாக இருக்கும். ஆகவே, உடனடியாக கோயம்புத்தூர் கார்ப்பரேசனுக்குத் தேர்தலை நடத்த வேண்டும். தேர்தலை ஏன் நடத்தவில்லை என்பதற்கான நொண்டிச் சாக்கு தேவையில்லை. அங்கே தேர்தலை நடத்துவதற்கான தேவையான நிலையைக் கருதி, உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டும். இவ்வாறு இல்லாத நிலையில் இம்மசோதா கொண்டு வரப்பட்டிருப்பதால் இதனை எதிர்க்கிறேன் என்று சொல்லி, அமைகிறேன்.

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் : கோயம்புத்தூர் மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை நான் ஆரம்பத்திலேயே எதிர்க்கிறேன். கிராமங்களிலே பஞ்சாயத்துத் தேர்தலை நடத்தி விட்டோம். அதுபோல நகரங்களில் இருக்கிற முனிசிபாலிட்டிக்கான தேர்தலையும் நடத்தி விட்டோம். ஜனநாயக உரிமை தொடர்ந்து கோவை நகர மக்களுக்கு மறுக்கப்பட்டு வருகிறது. இன்னும் சொல்லப் போனால் அங்கே இருக்கின்ற ஸ்பெசல் ஆபிசர் மற்றும் உள்ள அதிகாரிகள் எல்லாம் தான்தோன்றித்தனமான போக்கில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மக்களுக்குக் கிடைக்க வேண்டிய சுகாதாரம், இன்னும் சலுகைகள் அவர்களுக்குக் கிடைக்கவில்லை, ஆகவே கண்டிப்பாக எப்போது தேர்தலை நடத்துகிறோம் என்கிற அளவில் தேதியை நிர்ணயித்து இச்சட்ட முன்வடிவைக்கொண்டு வர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

திரு. பொ. உக்கிரபதி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களாலே கொண்டு வரப்பட்டிருக்கின்ற 1986ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு மக்கள் மீதும், ஜனநாயகத்தின் மீதும் மக்கள் நம்பிக்கைக் கொள்ளும் வகையில் உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டும். மக்கள்மீது நம்பிக்கை வைத்து தேர்தலை நடத்தாமல் தனி அதிகாரிகளுடைய தனி ராஜ்யமாக கோயம்புத்தூர் நகராட்சியிருக்க வழி வகை வகுத்திருப்பது மக்களுக்குச் செய்கிற துரோகம். மக்களுக்கு முறையாக கிடைக்க

[திரு. பொ. உத்திராபதி] [1986 நவம்பர் 14

வேண்டிய சலுகைகள் கிடைக்காமல் இருப்பதைக் கணக்கில் எடுத்து, இச்சட்ட முன்வடிவை அறிமுகம் ஆகும் நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவையில் இருப்பதால் இந்த மசோதாவை திரும்பப் பெற்றுக் கொண்டு தேர்தலை இந்தத் தேதியில் நடத்துவோம் என்று அறிவிக்க வேண்டுமென்று கேட்டு மசோதாவை எதிர்க்கிறேன் என்று சொல்லி அமைகிறேன்.

(முற்பகல் 10-50)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"1986 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ) மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1986 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ".

திரு. எ. தெய்வநாயகம் : அவைத் தலைவர் அவர்களே, இன்று உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் அறிமுகம் செய்யப்படுகிற தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை நீட்டிக்கும் சட்ட முன்வடிவை நான் சார்ந்துள்ள இந்திய தேசிய காங்கிரசின் சார்பாக எதிர்க்கிறேன். இன்றைய மதுரை மாநகராட்சி சுகாதாரக் கேடாக விளங்கிக் கொண்டிருக்கிறது. அது மட்டுமல்ல, ரோடு வசதிகள் சீர்குலைந்து நிற்கின்றன. அங்கே இந்தக் குறைகளை எடுத்துச்சொல்ல மக்கள் பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால், அங்கே அதிகாரிகளை அணுகி அவ்வப்



1986 நவபர் 14] [திரு. எ. தெய்வநாயகம்]

போது கூறுவதற்கு மக்கள் சக்தி ஒன்று திரண்டு பல உண்ணா விரதப் போராட்டங்கள், பஸ் மறியல் இப்படி நடந்துகொண்டே இருக்கின்றன. மக்கள் பிரதிநிதிகள் அங்கே அங்கம் வகித்து குறைகளை நிவர்த்திக்க ஒரு வாய்ப்பினைத் தேர்தல் மூலமாக அளிக்க வேண்டுமென்று கேட்டு இந்தச் சட்ட முன்வடிவை நான் மறுக்கிறேன்.

திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஆரம்ப நிலையிலே எதிர்க்கிறேன். அதற் கான காரணம் ஏற்கனவே 3 ஆண்டுகளாக இதற்குத் தனி அதிகாரிகள் காலக்கெடு நீட்டிக்கப்பட்டிருக்கிறது. இந்த 3 ஆண்டு காலக் கெடு இறுதி வடிவம் பெறுமா என்பது ஐயப் பாட்டிற்கு உரிய ஒன்றாக இருக்கிறது. அதற்குக் காரணம், சென்னை 12 ஆண்டுகளை நெருங்கிக் கொண்டிருக்கிறது ; இந்தக் கோவை 6 ஆண்டுகளை நெருங்கிக் கொண்டிருக்கிறது ; இந்தக் காலக் கட்டத்தில் மதுரை 3-வது ஆண்டை எட்டிப் பிடித்துக் கொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் அமைச்சரிடமிருந்து எதிர்பார்ப்பது எல்லாம் இதுதான் இறுதியான கால ஒத்தி வைப்பு என்கின்ற கட்டத்திலே இருக்குமானால் குறைந்தபட்ச ஜனநாயகக் கடமையாவது இந்த அரசு ஆற்ற முன்வந்திருக்கிறது என்பதை நாம் ஏற்றுக் கொள்ள முடியும். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் காலக் கெடுதான் இறுதியான காலக் கெடு என்று அறிவித்து தேர்தலை நடத்துவதற்கான முறையான ஜனநாயக நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டு, ஆரம்ப நிலையில் இந்தச் சட்ட முன்வடிவை எதிர்த்து, அமர் கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர் களே, ஏற்கனவே இந்தச் சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்து வதை எதிர்த்து மாண்புமிகு உறுப்பினர்கள் இன்று ரோடு வசதி இல்லாதது குறித்து, சுகாதார வசதி இல்லாதது குறித்து எல் லாம் ஒரு சில விவரங்களை எடுத்துச் சொன்னார்கள். அந்த விவரங்களுக்கு இடையில் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற 'ஸ்டேட்மென்ட் ஆஃப் ஆப்ஜக்ட்ஸ் அன்ட் ரீசன்ஸ்ஸைப்' படித் துப் பார்த்தால், இப்பொழுது கேட்கக்கூடிய 29-1-1987-லே யிருந்து 6 மாதத்திற்குள் இந்தத் தேர்தலை நடத்த முடியாது என்று நான் நினைக்கிறேன். ஏனென்றால், இங்கே சொல்லப் பட்டிருக்கிறது, இந்தியாவிலேயே மற்ற பகுதிகளிலுள்ள முனிசி பல் கார்ப்பரேஷன்களிலே உருவாக்கப்பட்டிருக்கிற நிலைமை களையும், சட்டங்களையும், அதிகாரங்களையும், ஆட்சி முறை களையும் எல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டு அரசு ஒரு பொதுவான கருத்தை உருவாக்குவதற்காகப் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது ; நடவடிக்கை இல்லை,

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1986 நவம்பர் 14

It is only under the active consideration of the Government and there
are no active steps. இன்னும் நடைமுறைப்படுத்தப்படுகிற
நடவடிக்கைக்கு வரவில்லை ; இன்னும் ஆழ்ந்த பரிசீல
னையில்தான் இருக்கின்றது என்று தெரிகிறது. பரிசீலனை
முடிந்து, அது சம்பந்தமாக நடவடிக்கைகளை எடுத்து, சட்டங்
களை உருவாக்கக்கூடிய நேரத்திலேகூட இப்படி அகில
இந்தியாவிலேயே உருவாக்கப்படுகிற சட்டத்தை இந்த
அரசு இயற்றுவதா, அல்லது மத்திய அரசு இயற்றுவதா என்ற
பிரச்சினை எழும்புகிறது. ஆகவே, இப்படிப்பட்ட ஒரு 'கன்பி
யூசிங் ஸ்டேட்மென்ட்'டாக, 'ஸ்டேட்மென்ட் ஆஃப் ஆப்ஜக்டஸ்'
இருக்கிறது.

அது மட்டுமல்ல, இப்படியான Contradictory ஆன
'ஸ்டேட்மென்ட் ஆஃப் ஆப்ஜக்ட்ஸை' வைத்துக் கொண்டு
இந்த நீடிப்பு வழங்குகிற இந்த 6 மாதத்திற்குள் இந்தத் தேர்
தலை நடத்தி விட முடியும் என்று சொல்வது எந்த அளவுக்குச்
சரியாக இருக்கும் என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.
ஆகவே, அரசு 6 மாதத்திற்குள்ளாக இப்படிப்பட்ட நடவடிக்
கையை எடுத்து முடிக்க முடியுமா என்ற திட்டவட்டமான உறுதி
இந்த அமைச்சரிடமிருந்து இந்த அவைக்குத் தேவைப்படுகிறது.
இல்லையென்றால், இந்த 6 மாத காலம் நீட்டித்ததற்குப் பிறகும்
மீண்டும் இதே மாதிரி சட்டத்தைக் கொண்டு வந்து மீண்டும்
கேட்கக் கூடிய ஒரு நிலைமை ஏற்படுவதற்கு அமைச்சர் அவர்
களும் அரசும் இடம் கொடுக்கக் கூடாது. ஆகவே, அதற்கேற்ற
முறையில் ஒரு சட்டத்தை விரைவில் நிறைவேற்றி இந்த
தேர்தலை விரைவில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட
வேண்டும். ஆக்டிவ் கன்சிடரேஷனிலிருந்து ஆக்டிவ் நடை
முறை ஏற்பாடுகளுக்கு வர வேண்டுமென்று வலியுறுத்தி, இதை
அறிமுகப்படுத்துவதை நான் ஆட்சேபிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள
கேள்வி :

''1986 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (இரண்டாம்
திருத்த) சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய
அனுமதி அளிக்க வேண்டும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை
வேற்றப்பெற்று அனுமதி வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** இச்சட்ட முன்
வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு
அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.



1986 நவம்பர் 14]

**(ஈ) நகராண்மைச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986**

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை
மொழிகிறேன் :

''1986ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராண்மைச் சட்டங்கள்
(இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவை பேரவை முன்
அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

**திரு. ப. பொன்னுரங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை நான் எதிர்க்கக் கூடாது
என்று தான் இருந்தேன். ஆனால் 'ஆப்ஜக்ட்ஸ் அன்ட்
ரீசன்ஸை'ப் பார்க்கும்போது இதை எதிர்க்க வேண்டிய அவசியம்
ஏற்படுகிறது. ஏற்கனவே அமைச்சர் அவர்கள் உள்ளாட்சித்
துறையைச் சேர்ந்த அனைத்து ஆசிரியர்களும் அரசு ஊழியர்
களாக ஆக்கப்படுவார்கள் என்று வாக்குறுதி தந்தார்கள். ஆனால்
இந்தச் சட்ட முன் வடிவில் பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்
களைப் பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை ; விடப்பட்டிருக்
கிறது. அவர்கள் என்ன பாவம் செய்தார்கள் ? ஏன் பஞ்சா
யத்து யூனியன் ஆசிரியர்கள் விடப்பட்டிருக்கிறார்கள் ? அவர்
களையும் இதிலே சேர்த்திருந்தால் நான் இந்தச் சட்ட முன்
வடிவை வரவேற்றிருப்பேன். பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்கள்
இடம் பெறாததால் நான் இந்தச் சட்ட முன் வடிவை
அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள
கேள்வி :

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராண்மைச் சட்டங்கள்
(இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவை முன்
அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை
வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** இச்சட்ட முன்
வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச்சட்ட முன் வடிவு
அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(உ) இந்து சமய அறநிலையக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ''.

திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் அவர்களால் அவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோரப்பட்டிருக்கும் 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவை இந்து முன்னணியின் சார்பில் அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

7. அமைச்சரின் அறிக்கை.

கரும்பு விலை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை விதி 111-ன் கீழ் மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அவைக்கு ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலைகள் மற்றும் கரும்பு உற்பத்தியாளர்களின் கோரிக்கைகளைப் பரிசீலித்து 8.5 சதம்



அல்லது அதற்குக் கீழ் சர்க்கரை கட்டுமானமுள்ள கரும்புக்கு 1986–87 ஆம் ஆண்டுக்குக் குறைந்த பட்ச விலை டன் ஒன்றுக்கு ரூ. 200 (ரூபாய் இரு நூறு மட்டும்) என்று கொடுக்க சர்க்கரை ஆலைகளுக்குத் தமிழக அரசு அறிவுறுத்தியுள்ளது.

8.5 சதம் சர்க்கரை கட்டுமானத்திற்கு மேல், கூடுதலாக கிடைக்கும் சர்க்கரை கட்டுமானம் ஒவ்வொரு 0.1 சதத்திற்கும் 1986–87 ஆம் ஆண்டிற்கு குவிண்டாலுக்கு 23.5294 பைசா வீதம் பிரிமியமாக வழங்கப்படும்.

மேற்படி ஆணையின்படியும், தமிழகத்தில் கரும்பு உற்பத்திப் பெருகி இருப்பதாலும், சராசரி 9.5 சதத்திற்கு மேலாக சர்க்கரை கட்டுமானம் இருப்பதாலும், கரும்பு விவசாயிகள் சராசரியாக டன்னுக்கு ரூ. 230க்கும் மேலாகவே பெறுவார்கள் என்பதை இப்பேரவைக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

8. தனியார் அலுவல்கள்.

தனித் தீர்மானம்.

சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டிய அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திரு. செ. செம்மலை அவர்கள் 10–5–1986 அன்று மொழிந்த சேதுசமுத்திரத் திட்டத்தை அமுல்படுத்த வேண்டிய அவசியம் குறித்த தனித் தீர்மானத்தின்மீது விவாதம் தொடரும். முதலில் திருமதி பா. வளர்மதி அவர்கள் பேசுவார்கள்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் ; தலைவரவர்களே, ஒரு விளக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; விளக்கம் வேண்டாம். உட்காருங்கள். (குறுக்கீடு) இப்படி ஒவ்வொன்றிலும் உறுப்பினர் அவர்கள் குறுக்கிடுவது சரியல்ல. முறையும் அல்ல. ஏற்கனவே தீர்மானம் மொழியப்பெற்று, விவாதம் நடைபெற்றிருக்கிறது. அதன்மீது தொடர்ந்து இன்றும் விவாதம் நடைபெறவிருக்கிறது. இதிலே என்ன விளக்கம் சொல்ல வேண்டியிருக்கிறது ? தயவுசெய்து என்னோடு ஒத்துழையுங்கள்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : ஒரு கருத்தைச் சொல்வதில் தவறு இல்லை. நான் சொன்ன பிறகு, சரியில்லை என்றால் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுங்கள். இந்தத்

[திரு. டி. ஆர். வேங்கடரமணன்] [1986 நவம்பர் 14

தீர்மானம் மொழியப்பெற்று, அவையிலே இந்தத் தீர்மானத்தை
நிறைவேற்ற வேண்டுமென்று பலரும் கருத்துத் தெரிவித்தி
ருக்கிறார்கள். இன்றைக்கே இந்தத் தீர்மானத்தை நிறை
வேற்றி மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கட்சித் தலைவர்கள்
எல்லாம் பேசி முடித்ததற்குப் பிறகு ஏதாவது விளக்கம்
சொல்ல வேண்டுமென்றால் என் அனுமதி பெற்று சொல்ல
லாம். (குறுக்கீடு) இந்த நேரத்தில் ஆலோசனை வேண்
டாம். ஏதாவது முக்கியமான ஆலோசனை கூற வேண்டு
மென்றால் அதற்கு அலுவல் ஆய்வுக் குழு இருக்கிறது.

(முற்பகல் 11–00)

***திருமதி. பா. வளர்மதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, 1986 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆம் தேதி
சட்டப் பேரவை உறுப்பினர் திரு. செம்மலை அவர்களால்
கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின் மீது பேசுகிறபோது
அப்போது நேரம் இல்லாத காரணத்தால் தொடர்ந்து பேச
இயலவில்லை. ஆகவே அன்றையதினம் விட்ட சில கருத்துக்
களை இன்று தொடர்ந்து எடுத்து வைக்க விரும்புகிறேன்.

சேது சமுத்திரத் திட்டம் ஏன் இதுவரையில் நிறைவேற்றப்
பட்டவில்லை என்பதற்கான காரணங்களையும், இதுவரையில்
இந்த மன்றத்தில் பேசியிருக்கிற பல்வேறு அரசியல் கட்சி
யினுடைய உறுப்பினர்கள் இந்தத் திட்டம் தொடர்ந்து நிறை
வேற்றப்பட வேண்டும் என்கிற ஆழமான கருத்துக்களையும்
எடுத்து வைத்திருக்கிறார்கள். பிரிட்டிஷ் காலத்தில்
போடப்பட்ட 9 கமிட்டிகளும் அதற்குப் பின்னால் போடப்
பட்ட 3 கமிட்டிகளும் ஆக 12 கமிட்டிகள் இந்த சேது சமுத்திரக்
கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று
பரிந்துரை செய்தும் கூட, மத்திய அரசு இந்த சேது சமுத்
திரக் கால்வாய்த் திட்டத்தை அப்படியே கிடப்பில் போட்டு
வைத்து இருக்கிறார்கள்.

1981 ஆம் ஆண்டு மத்திய நிதியமைச்சராக இருந்த மாண்பு
மிகு திரு. ஆர். வி. அவர்கள் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட
வேண்டும் என்பதை வலியுறுத்தியிருக்கிறார்கள். 1920-ல்
அன்றைய சென்னை துறைமுகத்தினுடைய பொறியாளராக
இருந்த ஜான் ப்ரிஸ்டோ அவர்கள் இந்தத் திட்டத்திற்கு
ஆகிற செலவு மொத்தம் 60 இலட்சம் தான் என்று கணக்
குக் கூட தந்திருக்கிறார்கள். ஆனால் இதே திட்டத்திற்கு
ஆகிற செலவு 110 கோடி ரூபாய்கள் ஆகும், என்று மத்திய
நிதியமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. ஆர். வி. அவர்கள்



1936 நவம்பர் 14] [திருமதி பா. வளர்மதி]

கணக்கு கொடுத்து இருக்கிறார்கள். ஆக நிதியமைச்சராக இருந்த
திரு. ஆர். வி. அவர்களும் 1920-லே திரு. ஜான் ப்ரிஸ்டோ அவர்
களும் இதன் செலவு பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இவ்வாறு
அவர்கள் கூறியபடி 60 இலட்சம் ரூபாய் குறைந்த செலவில்
இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தக்கூடிய சூழ்நிலை அன்று
இருந்தும் கூட இந்தத் திட்டம் ஏன் இது வரையில் நிறைவேற்றப்
படவில்லை என்கிற ஐயம் நமக்குள்ளே வருவதற்குக் காரணம்
பொதுவாக ஒரு குற்றச்சாட்டு இன்றைக்குப் பரவலாக பேசப்
படுவதுதான்.

அதாவது மரியாதைக்குரிய இலங்கையினுடைய பிரதமராக
விளங்கிய திருமதி பண்டார நாயகா அவர்கள் கொழும்புத்
துறைமுகத்தினுடைய முக்கியத்துவம் போய்விடும் என்று
கேட்டுக்கொண்டதன் காரணமாகத்தான் இந்தத் திட்டம்
நிறைவேற்றப்படவில்லை என்கிற குற்றச்சாட்டை இன்றைக்
குப் பரவலாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால்
இந்தக் குற்றச்சாட்டுக்கு இடம் தராத அளவுக்கு இந்தத்
திட்டம் வெகு விரைவில் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதை
நான் இந்த அவையின் வாயிலாக மத்திய அரசுக்கு வலியுறுத்தக்
கடமைப்பட்டு இருக்கிறேன்.

மத்திய அரசு எத்தனையோ பல நல்ல காரியங்களுக்காக
பணங்களைச் செலவழிக்கிறார்கள். அதிலும் நாட்டிலே
இருக்கக்கூடிய மக்களின் நலனைக் கருதி கோடிக்கணக்கான
ரூபாய் செலவழிக்கப்படுகிறது. குறிப்பாக எடுத்துக்
கொண்டால் ஆசிய விளையாட்டுப் போட்டியை நடத்து
வதற்குக் கூட 500 கோடி ரூபாய் என்று கணக்கிட்டு கடைசி
யில் 620 கோடி ரூபாய் செலவானதாகச் சொன்னார்கள்.
இவ்வாறு ஆசிய விளையாட்டுப் போட்டியை நடத்துவதற்கு
620 கோடி ரூபாய் செலவிட்டிருக்கிற மத்திய அரசு நாட்டி
னுடைய பாதுகாப்புக்காக, இலங்கையிலே வாழ்ந்துகொண்டி
ருக்கிற தமிழனை இன்னலுக்கு ஆளாக்கிக் கொண்டிருக்கிற
இலங்கை அரசின் முதுகெலும்பை முறியடிக்கக்கூடிய விதத்தில்
இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு மத்திய அரசு
ஏன் தயக்கம் காட்டுகிறது என்கிற அச்சம்தான் அடிக்கொரு
தடவை எழ ஆரம்பிக்கிறது.

இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் நம்முடைய நாட்
டிலே இராமநாதபுரம் மாவட்டத்திலே வறட்சியால் பாதிக்
கப்பட்டு இருக்கிற எத்தனையோ ஏழைக் குடும்பங்களின்
வேலையில்லாத் திண்டாட்டம் போய்விடும்; அந்த அள
விற்கு இந்தத் திட்டம் இருக்கும் என்பதைக் கூட பலமுறை
பல கட்சித் தலைவர்கள் நாடாளுமன்றத்தில் பேசி இருக்கிறார்
கள்; சட்டமன்றத்திலும் பேசி இருக்கிறார்கள். இப்படிப்
பல தடவை பேசியும் கூட இந்தத் திட்டம் இதுவரையில்

[திருமதி பா. வளர்மதி] [1986 நவம்பர் 14

நிறைவேற்றப்படவில்லை. தமிழ்நாட்டு மக்களின் மீது அக்கறை வைத்திருக்கிற மத்திய அரசு இந்தத் திட்டத்தை வெகு விரைவில் நிறைவேற்றித் தரவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு அதிகபட்சம் 150 கோடி ரூபாய்தான் செலவாகும் என்று பொறியியல் வல்லுநர்கள் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசுக்கு 150 கோடி ரூபாய் என்பது மிகவும் அதிகமான தொகை அல்ல. இந்தச் சாதாரண 150 கோடி ரூபாயை இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்து இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு முன்வரவேண்டும் என்று நான் இந்த மன்றத்தின் மூலமாக, தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அமெரிக்க ஆதிக்கம் இன்றைக்கு திரிகோண மலையிலே கால் ஊன்றுவதற்கு வசதியாக அவர்களுக்கு நிலப் பரப்பைக் கூட ஒதுக்கித் தந்து, ஒப்பந்தப் பத்திரத்திலே கையெழுத்திட்டிருக்கிறார்கள். அதன் மூலம், அமெரிக்க ஆதிக்கத்தின் மூலம் நம்முடைய நாட்டிற்கு எந்த நேரத்திலும் எந்த விதத்திலும் ஆபத்து வரக்கூடிய ஒரு அபாய நிலை இருக்கிறது. அத்தகைய ஒரு அபாய நிலை தகர்க்கப்பட வேண்டும் என்றால், இந்தத் திட்டம் வெகு விரைவிலே நிறைவேற்றப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ராமன் காலத்திலே தான் சேதுவின் குறுக்கே அணையைக் கட்டினான். அது அரசியல் காரணம். பாரதி சேதுவின் குறுக்கே வீதி அமைக்கக் கனவு கண்டான். அது சமுதாயக் காரணம். நம்முடைய ராமச்சந்திரமூர்த்தி, எங்களின் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களின் காலத்திலே, சேதுவினை ஆழப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த மன்றத்தின் மூலமாக வேண்டுகிறேன். மேலும் தாமதப்படுத்தாமல் மிக விரைவிலே இந்தச் சேது சமுத்திரக் கால்வாய் திட்டத்தை எடுப்பதற்கு, எடுத்து நிறைவேற்றுவதற்கு முன்வரவேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தி, வற்புறுத்தி இந்தத் தீர்மானத்தை வரவேற்று அமர்கிறேன். வணக்கம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**திரு. க. பாரமலை :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள் சென்ற ஆண்டு கொண்டு வந்து அறிமுகப்படுத்திய



1986 நவம்பர் 14] [திரு. க. பாரமலை]

இந்தத் தனி நபர் தீர்மானத்தின் மீது காங்கிரஸ் கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஏற்கனவே பேசிய உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப் போல ஏறக்குறைய 120 ஆண்டுக் காலமாக பேசப்பட்டு வந்திருக்கிற இந்தத் திட்டம், இன்னும் நிறைவேற்றப்படவில்லையே என்ற ஆதங்கம் எல்லோருக்கும் இருக்கிறது. ஏற்கனவே இது குறித்து சென்ற ஆண்டும் விவாதம் நடைபெற்றது, அத்தோடு 1982 ஆம் ஆண்டிலேயே......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சென்ற ஆண்டு அல்ல. கடந்த கூட்டத் தொடர் என்று சொல்லுங்கள்.

**திரு. க. பாரமலை :** அத்தோடு 1982 ஆம் ஆண்டிலேயும் 'ஒரு மணி நேர விவாதம்' என்ற பெயராலே இது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டிருக்கிறது. ஆக, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் வேங்கடரமணன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, இந்த விவாதத்திலேயே அதிக காலத்தைச் செலவழிக்காமல், இந்தத் தீர்மானத்தை விரைவாக நிறைவேற்றி இந்தச் சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று நான் அரசை வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இது பொருளாதார ரீதியில் கூட கட்டுப்படியாகக்கூடிய திட்டம் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது. பாதுகாப்பு ரீதியிலேயும் இது ஒரு மிக முக்கியமான திட்டம் என்று எல்லோராலும் உணரப்பட்டிருக்கிற காரணத்தாலும், இந்தத் திட்டத்தை விரைவாக நிறைவேற்றுவது எல்லா வகையிலும் பொருத்தமானது என்றுதான் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

ஏற்கெனவே பேசிய உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப் போல 1860ஆவது வருடம் முதன் முதலாக இதனுடைய தேவை உணரப்பட்டு, இது குறித்து வெளி உலகத்திற்கு எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து பல்வேறு காலக் கட்டங்களில் பல்வேறு நிபுணர்கள் இது குறித்து கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். 1860 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அறிக்கையில் இந்தத் திட்டத்தின் மதிப்பீடு ரூ. 50 லட்சம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் 1882 ஆம் ஆண்டில் தெரிவிக்கப்பட்டிருக்கிற கருத்தில் ரூ. 1 1/2 கோடியாக இந்தத் திட்ட மதிப்பீடு உயர்ந்திருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அத்தோடு 1921 ஆம் ஆண்டிலே, தமிழ்நாடு அரசாங்கம், அதாவது அன்றைய வெள்ளையர் அரசாங்கம் இந்தத் திட்டத்தை அமல் நடத்த வேண்டும் என்று முன்வந்த போதிலும் கூட அன்றைய மைய பிரிட்டிஷ் அரசாங்கம் அதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய மறுத்ததன் காரணமாக, அந்தத் திட்டம் அன்றையிலிருந்து கிடப்பிலே போடப்பட்டிருக்கிறது.

[திரு. க. பாரமலை] [1986 நவம்பர் 14

அதற்கு அடுத்து 1955 ஆம் ஆண்டிலே மத்திய அரசு டாக்டர் ஏ. ராமசாமி முதலியார் தலைமையிலே ஒரு கமிட்டியை இந்தத் திட்டத்தினுடைய சாத்தியக் கூறுகளை ஆராயவும், மேற்குக் கடற்கரையிலிருந்து, கிழக்குக் கடற்கரை வரையில் கடல் கப்பல் போக்குவரத்து பாதுகாப்பிற்காகவும், இந்தத் திட்டத்தை செயற் படுத்தினால் அது விரும்பத் தக்கதுதானா என்பதைப் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காகவும், அமைத்திருந்தார் கள். அந்தக் கமிட்டி தனது அறிக்கையைக் கொடுத்தபோது, இந்தத் திட்டம் மிகவும் லாபகரமானது, உற்பத்தித்திறன் கொண்டது என்ற அடிப்படையிலே அறிக்கை கொடுத்திருந் தார்கள்.

அது மட்டும் அல்லாமல், இந்தச் சேது சமுத்திரத் திட்டத் தோடு தூத்துக்குடி துறைமுகத் திட்டத்தையும் சேர்த்து ஆய் விற்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கூட ஒரு அறிக்கை கொடுக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு திட்டங்களையும் சேர்த்து அன்றைய மதிப்பீடு, அதாவது 1955 ஆம் ஆண்டிலேயே மதிப்பீடு ஏறக்குறைய 10 கோடி ரூபாய், அதாவது சரியாக 998 லட்சம் ரூபாய்.

[முற்பகல் 11-10]

அதற்குப் பின்னால் மத்திய அரசு அதனுடைய எமர்ஜென்சி கமிட்டி கூட்டத்தில் 1963-ம் ஆண்டு இந்தத் திட்டத்தை நான் காவது திட்டத்தில் சேர்ப்பதற்கு முன்னுரிமை வழங்க வேண்டு மென்று முடிவெடுத்து, அதற்காக ஒரு உயர் கமிட்டியையும், ஒரு துணைக் கமிட்டியையும் அமைத்து முனைப்பான நடவடிக்கை களையெடுக்குமாறு கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த சேதுசமுத்திரத் திட்டம் அரபிக் கடலையும், வங்காள விரிகுடா வையும் இணைக்கிற புதிய கடல் போக்குவரத்திற்குப் பாதை யாக அமைகிறது என்பது எல்லோருக்கும் தெரியும். அந்த வகையிலே இந்தப் புதிய திட்டம் ஆரம்பிக்கப்படுமானால் மேற்கு கடற்கரையிலிருந்து கிழக்கு கடற்கரையில் இருக்கிற சென்னை, கல்கத்தா போன்ற பெரிய நகரங்களுக்குச் செல்கிற கப்பல்கள் ஏறக்குறைய 340 மைல்கள் குறைவான பயணம் செய்யக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், செல்கிற காலத்திலும் அதில் ஏறக்குறைய ஒரு நாள் அல்லது ஒன்றரை நாள் சேமிப்பு ஏற்படக்கூடிய அளவிற்குப் பொருளாதார சிக்கனமும் இருக்கிறது என்பதை நாம் நன்றாக அறிந்திருக்கிறோம். இந்தத் திட்டம் எல்லாவகையிலும் ஒரு சிறப்பான திட்டம் என்பது எல்லோரும் ஒப்புக்கொண்ட ஒன்று. இதைப்பற்றித் தான் மாண்புமிகு உறுப் பினர் திருமதி வளர்மதி அவர்கள் சொல்கிற போது குறிப்பிட் டார்கள். நம்முடைய மத்திய நிதியமைச்சராக அப்போது இருந்த மாண்புமிகு திரு. வெங்கட்ராமன் அவர்கள் 1982-ம ஆண்டில் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்றும்,



1986 நவம்பர் 14] [திரு. க. பாரமலை]

அதற்கு ஏறக்குறைய 110 கோடி ரூபாய் செலவாகுமென்றும் தெரிவித்து, திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசு எல்லா முயற்சிகளையும் எடுக்குமென்று வாக்குறுதியும் தந்திருக்கிறார் கள். அந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமானால் பல்வேறு நன்மை கள் ஏற்படக் கூடும்.

ஒன்று பயணத்தினுடைய தூரம் குறைவாக இருக்கிறது. இரண்டு பயணத்தினுடைய நேரமும் குறைகிறது. எரிபொருள் உபயோகத்தில் ஒரு சிக்கனமான நிலைமை ஏற்படக்கூடும். எரி பொருள் சிக்கனத்தாலும், பயணத்தின் தூரமும், நேரமும் குறை கிற காரணத்தாலும் பொருள்களின் விலையில் கூட கணிசமான மாற்றம் ஏற்படக்கூடிய வாய்ப்பிருக்கிறது. தூரம் குறைவாக இருக்கிற காரணத்தால் கப்பல் போக்குவரத்தில் கப்பல்களின் தடங்கள் அதாவது ட்ரிப்ஸ் மிக அதிகமாக இருப்பதால் அதனால் இலாபகரமாக தொழில் நடத்தக்கூடிய வாய்ப்பும் இருக்கிறது என்ற உண்மையும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. இப்போது வருவதைப் போல இலங்கையைச் சுற்றி வருமானால் இதற்கு நேர்மாறான பலன் ஏற்படும் என்பது மட்டுமல்லாமல் அந்தக் கடல் பகுதி அடிக்கடி புயல் பாதிக்கிற பகுதியாக இருக்கிற காரணத்தால் கப்பல் போக்குவரத்திற்கு ஒரு அபாயகரமான சூழ்நிலை இருக்கிறது. ஆனால் சேதுசமுத்திரத் திட்டப்பகுதி அமைதியான கடல் பகுதியாக இருப்பதால் பாதுகாப்பான கப்பல் பயணத்திற்கு அது ஏற்றது என்று கருதப்பட்டு, இந்தத் திட்டம் எல்லா ரீதியிலும் அவசியமான ஒன்று என்று உணரப்பட்டிருக் கிறது.

இந்த சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூல மாக வெளிநாட்டுக் கப்பல்களும் அதிகமாக வந்து போகிற வாய்ப்பு இருக்கிற காரணத்தினால் அன்னியச் செலாவணியும் பெருமளவில் ஈட்டுவதற்கு வசதியாக இருக்கும் என்கிற கருத்தும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதோடு Hinter land என்று சொல்கிற, திட்டத்திற்குப் பக்கத்தில் இருக்கிற இராமநாதபுரம், பசும்பொன், காமராசர், மதுரை, திருநெல்வேலி, வ.உ.சி. மாவட்டங்களில் இருக்கிற மக்களுடைய வாழ்வில் ஒரு மறு மலர்ச்சி ஏற்படுத்தக்கூடிய திட்டமாக அது அமையும் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எங்களுடைய பகுதி உங்களுக்குத் தெரியும். குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத் தில் தென்மேற்கு பருவக்காற்றினால் ஏற்படுகிற மழையின் போதும் எங்களுக்குச் சரியான மழை கிடைப்பதில்லை. அதைப் போல வடகிழக்கு பருவக்காற்றினால் ஏற்படுகிற மழையின் போதும் எங்களுக்குப் போதுமான மழை கிடைப்பதில்லை. இரண்டு பக்கங்களிலும் மலை மறைவுப் பகுதி Mountain Hidden Part என்று சொல்கிறார்களே, அந்தப் பகுதியாக எங்கள் பகுதி இருக்கிறது. வடகிழக்குப் பருவ மழை வருகிற காலங்களில் திரிகோண மலைப்பகுதியில் இருக்கிற மலைகள் காரணமாக எங்களுக்கு மழை குறைகிறது.

[திரு. க. பாரமலை] [1986 நவம்பர் 14

அதைப் போலவே தென் மேற்குப் பருவ மழை இருக்கின்ற
காலங்களில், மேற்குப் தொடர்ச்சி மலை இருக்கின்ற காரணத்
தால் எங்கள் பகுதிக்கு மழை குறைகிறது. ஆகவே எங்களுடைய
பகுதி எப்போதும் மழையில் பற்றாக்குறைப் பகுதியாக இருந்து
வருகிறது என்பதை எல்லோரும் அறிவார்கள்.

இந்த நேரத்திலே நான் ஒன்றைக் குறிப்பிடுவது மிகவும்
அவசியம் என்று கருதுகிறேன். சில காலத்திற்கு முன்பாக,
ராமநாதபுரத்தினுடைய கிழக்குப் பகுதி ஒரு பாலைவனமாக
மாறக் கூடிய அபாயம் இருக்கிறது என்று ஒரு கட்டுரை வெளி
வந்தது. அங்கே மழை அதிகமாக இல்லாத காரணத்தாலும்,
மணற் பரப்புகள் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்துக் கொண்டு,
இருக்கின்ற நிலங்களை ஆக்கிரமித்துக் கொண்டு வருவதாலும்
அது ஒரு பாலைவனமாக மாறக் கூடிய அபாயம் இருக்கிறது.
அதை இப்போது கூட நாம் பார்க்கலாம். எனவே அப்படிப்
பாலைவனமாக மாறக்கூடிய இராமநாதபுரம் மாவட்டத்திற்கு
வளர்ச்சியை உண்டர்க்கித் தர வேண்டும் என்றால், இந்தத்
திட்டத்தை மிக வேகமாக நிறைவேற்றித் தருவதற்கு முனைப்
பான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

ஏற்கனவே நம்முடைய ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில்,
106 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்தத் திட்டத்தைச் சேர்க்க
வேண்டும் என்று தமிழ் நாடு அரசு பரிந்துரை செய்திருக்கிறது.
இருந்தாலும் இது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு
இருக்கிறது என்பதைப் பற்றி இது வரையிலும் தெரிவிக்கவில்லை.
நான் பணிவோடு ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம்
முடைய முதலமைச்சர் அவர்கள் தற்போது டெல்லிக்கு அடிக்கடி
செல்லுகிறார்கள். நம்முடைய பிரதமர் அவர்களைச் சந்தித்து
பல்வேறு திட்டங்கள் குறித்துப் பேசுகிறார்கள். ஈழத் தமிழர்
கள் பிரச்சினையானாலும், அல்லது காவிரி நீர்ப் பிரச்சினையா
னாலும் அல்லது மற்ற திட்டங்கள் சம்பந்தமானாலும் அடிக்
கடி டெல்லிக்குச் சென்று நம்முடைய பிரதமரைப் பார்த்துக்
கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்திலே நான் ஒன்றைக் குறிப்
பிட விரும்புகிறேன். நம்முடைய மரியாதைக்குரிய பிரதமர்
அவர்கள் சமீபத்திலே கல்கத்தாவிற்குச் சென்றிருந்தார்கள்.
சென்ற இடத்திலே அங்கே இருக்கின்ற முதலமைச்சரையும், சம்
பந்தப்பட்ட அமைச்சர்களையும் அழைத்து அந்த மாநிலம்
வைத்திருக்கின்ற திட்டங்களை எல்லாம் நேரடியாகப் பரி
சீலனை செய்து, on the spot decision என்று சொல்கிறார்
களே, அந்த அளவிலே, அந்த இடத்திலேயே சில திட்டங்களுக்கு
அனுமதி வழங்கியிருக்கிறார்கள். அந்த அளவிற்குப் பரந்த
மனப்பான்மை கொண்ட நம்முடைய பிரதமர் அவர்களிடம்
நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் வைத்திருக்கின்ற செல்
வாக்கைப் பயன்படுத்தி, இந்தத் திட்டத்திற்காக ஒரு முறை



1986 நவம்பர் 14] [திரு. ச. பாரமலை]

டெல்லிக்குச் சென்று, இந்தத் திட்டத்தினுடைய முக்கியத்
துவத்தை எடுத்துச் சொல்லி, இந்தத் திட்டத்தைப் பெறு
வதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பெரு முயற்சி
எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்
கிறேன்.

இந்த முயற்சியில் தமிழகத்தில் இருக்கின்ற பாராளுமன்ற
உறுப்பினர்களும் துணை நிற்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு
இருக்கிறது. காரணம் இரண்டு தினங்களுக்கு முன்னாலே
பத்திரிக்கையிலே பார்த்தால், தமிழகத்தில் இருக்கின்ற
காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்று கூடி, தமிழகத்தை
எதிர்நோக்கிக் கொண்டு இருக்கின்ற காவிரி நீர்ப் பிரச்சினை
யை டிரிபியூனலுக்கு விட வேண்டும் என்ற தீர்மானத்தை
நிறைவேற்றி இது சம்பந்தமாக பிரதமரையும், மற்றவர்
களையும் பார்த்திருக்கிறார்கள்.

அதோடு மட்டுமல்லாமல், தமிழ் நாட்டைச் சார்ந்திருக்கின்ற
பல்வேறு பொதுப் பிரச்சினைகளிலும் மத்திய அரசினுடைய
கவனத்தை ஈர்ப்பதற்கு அவர்கள் முறையான நடவடிக்கையை
எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல, சென்ற
ஆண்டு நம்முடைய திட்டங்களுக்காக அதிக நிதி ஒதுக்கீட்டைப்
பெறுவதிலே தமிழ்நாடு சட்டமன்ற காங்கிரஸ் கட்சி உறுப்பினர்
களும், பாராளுமன்ற காங்கிரஸ் உறுப்பினர்களும் ஒன்று
சேர்ந்து அதிக நிதி ஒதுக்கீட்டை தமிழகத்திற்குப் பெற்றுத்
தர வேண்டும் என்று பிரதமரைப் பார்த்து, அதற்கு ஏற்ப,
ஆயிரம் கோடி ரூபாயை அதிகமாக, உங்களோடு நின்று பெற்றுத்
தந்த வரலாற்றை நாம் மறந்து விட முடியாது. ஆகவே
இப்படிப்பட்ட நல்ல முயற்சியிலே காங்கிரஸ் கட்சி உங்க
ளோடு துணை நிற்கும் என்ற உறுதியை நான் உங்களுக்குத்
தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்தத் திட்டம் மிக நல்ல திட்டம், வேலையில்லாத் திண்
டாட்டத்தாலே பாதிக்கப்பட்டு இருக்கிற எங்களுடைய பகுதி
மக்களுக்கு வாழ்வு அளிக்கின்ற நல்ல திட்டம். அதைப் போலவே
இந்தத் திட்டத்தின் மூலமாக நமது பகுதிக்கு மட்டுமல்லாமல்
இந்த நாட்டுக்கும் அன்னியச் செலாவணியைத் தேடிக் கொடுக்
கின்ற நல்ல திட்டம். ஆகவே இப்படிப்பட்ட நல்ல திட்டத்தை
நிறைவேற்றுவதற்கு நீங்கள் முனைப்பான நடவடிக்கைகளை எடுக்க
வேண்டும் என்று சொல்லி, நாங்கள் உங்களுடைய முயற்சியிலே
துணை நிற்போம் என்ற உறுதியைச் சொல்லி, இந்தத் தீர்மா
னத்தை ஆதரித்து அமர்கிறேன், வணக்கம்.

[1986 நவம்பர் 14

திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள், சேது சமுத்திரத் திட்டம் பற்றி கொண்டு வந்து விவாதிக்கப்பட்டுக் கொண்டு இருக்கின்ற தீர்மானத்தை மையமாக வைத்து சில கருத்துக்களைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த சேது சமுத்திரத் திட்டம் அல்லது சேதுக் கால்வாய்த் திட்டம் என்பது, சாதாரண மக்கள் விளங்கிக் கொள்ளக் கூடிய அளவிலே, நடையிலே சொல்ல வேண்டுமானால் இந்தியக் கிழக்குக் கடற்கரை ஓரமாக உள்ள மன்னார் வளைகுடாவையும், பாக் ஜலசந்தியையும் இணைக்கக் கூடிய அடிப்படையில் 'ஆடம் பிரிட்ஜ்' என்ற இடத்தில் கடலை ஆழப்படுத்தி, கப்பல் போக்கு வரத்தை ஏற்படுத்துவதுதான் என்று சொல்லலாம்.

(முற்பகல் 11–20)

இந்தத் திட்டத்தைப் பற்றி எண்ணிப் பார்க்கிற நேரத்தில் இந்திய நாடு விடுதலை பெறுவதற்கு முன்னால் ஒரு கட்டம். இந்திய நாடு விடுதலைப் பெற்றதற்குப் பின்னால் இரண்டாவது கட்டம். இந்திய நாடு விடுதலை பெறுவதற்கு முன்னால் பலரும் எடுத்துக் காட்டியதைப் போல 1860 ஆம் ஆண்டி லிருந்து 1922 ஆம் ஆண்டு முடிய ஏறத்தாழ 9 ஆய்வுகள் நடத்தப் பட்டு இருக்கின்றன. இந்த 9 ஆய்வுகளும் நடத்தப்பட்டத னுடைய அடிப்படை நோக்கம் அன்றைய தினம் வெள்ளைக் காரன் ஆட்சி, அன்னியர் ஆட்சி இருந்த காரணத்தாலே லாப நோக்கோடு இந்த ஆய்வுகள் நடத்தப்பட்டன. பொருளாதார அடிப்படையில் லாபகரமான திட்டமா என்ற கருத்தை மைய மாக வைத்து அந்நியர் ஆட்சியில் இந்த ஆய்வுகள் நடத்தப் பட்டன.

அதற்குப் பின்னால், 1947 ஆம் ஆண்டுக்குப் பின்னால், 1954 ஆம் ஆண்டு இந்தத் திட்டத்தினுடைய முக்கியத்துவம் கருதி பொருளாதார மேதை திரு. இராமசாமி முதலியார் அவர் களுடைய தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டது. இந்தக் குழு ஆய்வு செய்து சேது சமுத்திரத் திட்டத்தாலே என்ன லாபம்? அது லாபகரமான ஒன்றா என்பதை எல்லாம் பல்வேறு கோணங்களிலிருந்து ஆய்வு செய்து அறிக்கையை சமர்ப்பித்து இருக்கிறது.

இந்தத் திட்டத்தைப் பொறுத்த மட்டில் இது தமிழ்நாட் டுக்கு மட்டும் பயன் உள்ள ஒரு திட்டம் என்று அருள் கூர்ந்து யாரும் எண்ணிடத் தேவையில்லை. தமிழகமும் இதில் பயன் பெறும். ஆனால் அகில இந்திய அளவில் இது பயன் தரத்தக்க நல்ல ஒரு திட்டம் என்பதைத்தான் இந்த மன்றத்தின் வாயிலாக



1986 நவம்பர் 14] [திரு. பொன். முத்துராமலிங்கம்]

மத்திய அரசுக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன். அகில இந்திய அளவில் லாபகரமான ஒரு திட்டமாக இருந்தாலும் கூட அது தமிழகத்தின் மூலமாக வருகின்ற காரணத்தால் மத்திய அரசு அதைத் தட்டிக் கழிக்கிறதோ என்ற ஐயம் கூட எனக்கு இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்தத் திட்டத்தினால் என்ன பயன், என்ன பலன் என் பதை எல்லாம் அந்தக் குழுவிலே அங்கம் பெற்ற தலைவராக இருந்த திரு. இராமசாமி முதலியார் அவர்கள் தெளிவாக எடுத்துத் தெரிவித்து இருக்கிறார்கள்.

தூத்துக்குடியிலிருந்து சென்னைக்கு இலங்கையைச் சுற்றிக் கொண்டு சென்றால் 750 மைல் செல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆனால் சேதுக் கால்வாய்த் திட்டம் நிறைவேற்றப் படுமானால் தூத்துக்குடியிலிருந்து சென்னையை 314 மைலில் சென்று அடைய முடியும். மிச்சப்படுகின்ற தூரம் 436 மைல்கள் ஆகும். 58 விழுக்காடு பயண தூரத்தை மிச்சப் படுத்தக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. பின்னர் தூத்துக்குடியிலிருந்து கல்கத்தாவிற்குச் செல்வதற்கு 26 சதவிகித பயண தூரத்தை மிச்சப்படுத்தக் கூடிய வாய்ப்பு இந்த சேதுக் கால்வாய்த் திட்டம் நிறைவேற்றப்படுமானால் ஏற்படும் என்று அந்த அறிக்கை தெரி விக்கிறது. மேற்குக் கடற்கரையிலுள்ள பம்பாய் நகரத்தி லிருந்து கிழக்குக் கடற்கரையிலுள்ள கல்கத்தா துறைமுகத்திற்குச் செல்வதற்கு 16 சதவிகித பயண தூரம் மிச்சப்படுகிறது.

அது மட்டும் அல்ல, இலங்கையைச் சுற்றிச் செல்லாமல்—சேதுக் கால்வாய்த் திட்டம் நிறைவேற்றப்பட்டால்—சேதுக் கால் வாய்த் திட்டத்தின் வழியாக கப்பல்கள் செல்லுமானால் 1½ நாள் பயண நாளில் மிச்சப்படுகிற வாய்ப்பும் இருக்கிறது. இதைப் பொறுத்தவரையில் இன்னும் ஒரு அருமையான யோசனையை திரு. முதலியார் அவர்கள் தன்னுடைய அறிக்கையில் தெரிவித்து இருக்கிறார்கள்.

இந்த சேதுக் கால்வாய்த் திட்டமும், தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகத் திட்டமும் ஒன்றாக இணைந்து செயல்பட்டால் 'எக்கனாமிக்கலி வயபிள்'—பொருளாதார அடிப்படையில் சாத்தியமான ஒன்று என்பதையும் அன்றையதினம் அந்த அறிக்கையில் தெரிவித்து இருக்கிறார்கள்.

அதற்குப் பின்னால் 1963 ஆம் ஆண்டு மத்திய அமைச் சரவை கூடி இந்தத் திட்டத்திற்கு அனுமதி வழங்கியிருக்கிறது. அனுமதி வழங்கியதற்குப் பின்னால் 1965 ஆம் ஆண்டு நாகேந்திர சிங் என்கின்ற ஒரு உயர் அதிகாரியின் தலைமையில் உயர்மட்டக் குழு ஒன்று மத்திய அரசால் நியமிக்கப்

பட்டு அந்தக் குழு ஆய்வு நடத்தியது. நாகேந்திர சிங் அவர் களுடைய தலைமையில் உள்ள அந்த உயர் மட்டக் குழு ஆய்வு நடத்தி 1968 ஆம் ஆண்டு முழுமையான திட்டச் செலவோடு பல்வேறு அம்சங்களை உள்ளடக்கி தன்னுடைய அறிக்கையை மத்திய அரசுக்குச் சமர்ப்பித்து இருக்கிறது. திரு. முதலி யார் அவர்களுடைய அறிக்கையில் 8.18 கோடி ரூபாய் இந்தத் திட்டத்திற்குச் செலவாகும் என்று தெரிவித்து இருக்கி றார்கள்.

நாகேந்திர சிங் அவர்களுடைய அறிக்கை ரூ. 37.46 கோடி இந்தத் திட்டத்திற்கு செலவாகும் என்று தெரிவித்திருக்கிறது. ஆனால் இன்றைக்கு அது ரூ. 100 கோடியை தாண்டக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. இப்படி எல்லோராலும், பொருளாதார வல்லுநர்களால் பல துறைகளிலே வல்லுநர்களாக இருந்தவர்களால் எல்லாம் இந்தத் திட்டம் பொருளாதார அடிப்படையில் சாத்தியம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தாலும்கூட, ஏன் இந்தத் திட்டம் இதுவரை காலதாமதம் செய்யப்படுகிறது என்பதுதான் இன்றைக்கு எழுந்துள்ள பிரச்சினையாகும்.

1980 ஆம் ஆண்டு மத்திய அரசினுடைய செய்திக் குறிப்பின் படி இந்தத் திட்டம், பொருளாதாரத்தை மையமாக வைத்துப் பார்த்தால், சாத்தியமில்லை என்று சொல்லி, இந்தத் திட்டத்தை நிராகரித்திருக்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரி வித்துக்கொள்ள விரும்புவதெல்லாம் இந்தத் திட்டம் பொருளா தார அடிப்படையிலே சாத்தியம் என்று முதலியார் அவர் களுடைய தலைமையிலான குழு தெரிவித்திருக்கிறது. அதற்குப் பிறகு நாகேந்திர சிங் அவர்களுடைய தலைமையிலான குழு தெரிவித்திருக்கிறது. இன்னும் சில காரணங்களையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைக்கு இலங்கையைச் சுற்றிக் கப்பல்கள் செல்லமுடியாத சூழ்நிலையில் கூட, சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்படுமேயானால், வட கிழக்குப் பருவக் காற்றானாலும் சரி, தென் மேற்குப் பருவக் காற்றானாலும் சரி, இந்தக் கால்வாய் மூலம் தொடர்ந்து கப்பல் போக்குவரத்து நடைபெறுவதற்கு வாய்ப் பிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல் யுத்த காலங்களில், கப்பல்கள் சேது சமுத்திரக் கால்வாய் மூலமாகச் செல்லுமேயானால், நிச்சய மாக பாதுகாப்பாக இருக்குமென்று ராணுவ வல்லுநர்கள் எல்லாம் கருத்துச் சொல்லியிருக்கிறார்கள், எனவே இவ்வளவு காரணங்கள் எல்லாம் இருந்தும்கூட, பொருளாதார அடிப் படையிலே சாத்தியம் என்ற சூழ்நிலை இருந்தாலும்கூட, இந்தத் திட்டம் கிடப்பிலே போடப்படுவதற்கான காரணம், வெறும் அரசியல் காரணமே தவிர—அதாவது பொலிடிகல் ரீசன்ஸ்—வேறு எந்தக் காரணமும் நிச்சயமாக இருக்கமுடியாது.



எனவே இன்றைக்கு இந்த மன்றத்தின் மூலமாகத் தெரிவிப்ப தெல்லாம், இன்னொரு திட்டத்தையும்— தூத்துக்குடி-திண்டுக்கல் வழியாக கரூர் அகல ரயில்பாதைத் திட்டத்தையும் சேர்த்து எடுத்துக்கொள்ள வேண்டும். நீங்கள் இப்போது கரூர் அகல ரயில்பாதைத் திட்டத்தைப் போய்ப் பார்ப்பீர்களே யானால், ஏதோ அகழ்வாராய்ச்சி நடந்து, சிதைந்த நகரத்தி னுடைய பாகங்களைப் பார்ப்பதுபோன்று, பாலங்கள், தூண்கள் மட்டும் கட்டப்பட்ட நிலையில், ரயில்வே தண்ட வாளங்கள் போடப்பட்ட நிலையில், சில இடங்களில் சரளை ஜல்லிக் கற்கள் போடப்பட்ட நிலையில் அகழ்வாராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்ட சிதறுண்ட பாலங்கள் போன்று காட்சி யளிக்கிறதே தவிர, இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவது போன்று இல்லை. இந்தத் திட்டத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் மத்திய அரசு எவ்வளவு தொகை ஒதுக்குகிறது? ரூ. 3 கோடி, 4 கோடி என்று தான் ஒதுக்கியிருக்கிறார்கள். அப்படி ஒதுக்கப்படுகின்ற தொகை நிர்வாகச் செலவிற்கே போதுமானதாக இருக்கிறதே தவிர இந்தத் திட்டத்தை நிறைவேற்றும் சூழ்நிலையில் மத்திய அரசு ஒதுக்கவில்லை என்று தெரிகிறது.

இந்த சேது சமுத்திரத் திட்டத்தைப் பொறுத்தவரையில், இவ்வளவு வாய்ப்புகள் இருந்தாலும்கூட, மத்திய அரசு இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தயாராக இல்லை. ஆனால் நம்முடைய மாண்புமிகு மரியாதைக்குரிய பிரதம அமைச்சர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் இன்றைக்குப் புனித மான கங்கையைத் தூய்மைப்படுத்த வேண்டுமென்று, அந்தக் காலக் கட்டத்திற்கு வந்திருக்கிறார்கள். கங்கையைத் தூய்மைப் படுத்துவது என்பது தேவையில்லை என்று நான் சொல்லத் தயாராக இல்லை. புனிதமான கங்கையைத் தூய்மைப்படுத்த வேண்டுமென்பதில் பொருளாதார காரணங்கள் அதிகமாக இருக்கமுடியாது. எனவே புனிதமான கங்கையைத் தூய்மைப் படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கின்ற நம்முடைய மாண்புமிகு பிரதம அமைச்சரவர்கள் பொருளாதார அடிப்படை யிலே சாத்தியமான ஒன்று என்று அறிவிக்கப்பட்ட இந்த சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றாமல் இருப்பது, ஏதோ தமிழகம் இன்றைக்குப் புறக்கணிக்கப்படுகிறதோ என்ற எண்ணத்தை தமிழக மக்களுக்கு உருவாக்கிக் கொண்டி ருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எனவே பொருளாதார வாய்ப்பு உள்ளதும், நிறைவேற்றப்பட வேண்டியதுமான இந்தத் திட்டம், தமிழ கத்தைப் பொறுத்த மட்டில், ஆங்காங்குள்ள வறட்சி நிறைந்த மாவட்டங்களை வளம் ஆக்குவதற்கு நிறைவேற் றப்பட வேண்டியது அவசியம் என்பதையும், தேவையான ஒன்றாகும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்து, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள்

[திரு. பொன். முத்துராமலிங்கம்] [1986 நவம்பர் 14

மொழிந்த தீர்மானத்தை வழி மொழிவதோடு, இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதோடு மட்டும் நின்றுவிடாமல் மாநில அரசும் அக்கறை எடுத்துக்கொண்டு, இந்த சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று, கேட்டு, அமைகிறேன்.

(முற்பகல் 11–30)

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள் கொண்டு வந்த தனித் தீர்மானமான சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்தை நான் ஆதரித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன். சேது சமுத்திரத் திட்டம் என்பது நமது நாட்டில் தென் மாநிலங்களுடைய முக்கியமான திட்டமாகும். ஆனால் நாம் சுதந்திரம் பெறுவதற்கு முன்னால் வெள்ளையன் ஆட்சிக் காலத்தில் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டு நிறைவேற்றப்படாது— இலாபத்தை குறிக்கோளாகக் கொண்ட வெள்ளையன் ஆட்சி இதைக் கைவிட்டிருந்தார்கள். ஆனால் நமது நாடு சுதந்திரம் பெற்று 39 ஆண்டுகள் முடிந்தும் தென் மாநிலங்களுக்கு முக்கியமான பாதுகாப்பு, பொருளாதார வளர்ச்சி இப்படி பல்வேறு திட்டங்கள் வளர்ச்சி பெறக் கூடிய இந்த சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றாமல் மத்திய அரசு—கமிட்டிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. கமிட்டிகளில் கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. வல்லுநர்கள் கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வளவும் தெரிவித்த பிறகும்—காலம் கடத்தி வருவது என்பது உண்மையிலேயே தமிழகத்தைப் புறக்கணிக்கிறார்களோ என்று தமிழ்நாட்டு மக்கள் சந்தேகப்படக்கூடிய அளவிற்குத் தொடர்ந்து ஒரு தவறான பாதையைக் கடைப்பிடித்து வருகிறது என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லாமல் இருக்க முடியாது.

இந்தத் திட்டம் உருவாகி நிறைவேறக்கூடிய ஒரு காலத்தில் அன்று இருந்த இலங்கை முன்னாள் பிரதம அமைச்சர் ஸ்ரீமதி பண்டார நாயகா அம்மையார் அவர்கள் நமது மறைந்த பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களிடம், இந்தத் திட்டம் நிறைவேறினால், இலங்கையினுடைய துறைமுகத்தினுடைய வருவாய் மிகவும் குறைந்துவிடும். அதனால், இலங்கையினுடைய பொருளாதார நெருக்கடி முற்றிவிடும். இலங்கை மக்கள் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழக்கூடிய ஒரு அபாய நிலை உருவாகிவிடும். எனவே, இந்திய அரசு இந்த சேது சமுத்திரத் திட்டத்தை நிறுத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டதாகவும் அதை இந்திய அரசு பரிசீலனை செய்து, அதனால் காலம் கடத்தி நிறுத்தி வைத்ததாகவும்



1986 நவம்பர் 14] [திரு. பொ. உத்திராபதி]

சொல்லப்படுகிறது. அப்படி நம் நாட்டிற்கு அருகாமை
யில் இருக்கக்கூடிய இலங்கை நாடு பாதிக்கப்பட வேண்டும்
அல்லது அந்த நாட்டு மக்கள் பாதிக்கப்பட வேண்டும்
என்று நமது நாடு விரும்ப வேண்டிய அவசியம் கிடையாது.
காரணம் நமது இந்திய நாட்டைச் சுற்றி இருக்கக்கூடிய நாடு
கள் உறுதியாகவும், ஒருமைப்பாடாகவும் இருந்தால்தான்,
நமது இந்திய நாட்டிற்கும் அது ஒரு பாதுகாப்பாக இருக்கும்.
இந்த சேது சமுத்திரத் திட்டத்திற்கு 1982 ஆம் ஆண்டில்
ரூ. 110 கோடி செலவாகும் என்று சொல்லப்பட்டது. ஆனால்
1986-ல், இன்றைய காலகட்டத்தில் பார்ப்போமானால்
ரூ. 200 கோடிக்கு மேல் அந்தத் திட்டத்திற்குச் செலவாகி
விடாது. ஆனால் ஒரு ஆண்டிற்கு சுமார் 50,000 கோடி
ரூபாய் செலவு செய்யக்கூடிய நமது மத்திய அரசு இந்தத் தென்
மாநிலங்களுடைய வளர்ச்சிக்காக, குறிப்பாக தமிழகத்தினு
டைய வளர்ச்சிக்காக, இந்த சேது சமுத்திரத் திட்டத்திற்கு
200 கோடி ரூபாய் ஒதுக்கி, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவ
தால், மத்திய அரசினுடைய நிதி எந்தக் காரணத்தைக்
கொண்டும் பாதித்துவிடாது. அந்த அடிப்படையில்தான்
இன்றைக்கு நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை
அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய தீர்மானத்தை ஆதரித்து
நாம் அனைவரும் பேசிக்கொண்டிருக்கிறோம்.

இன்றைக்கு நமது நாட்டில் ஒரு பக்கம் வெள்ளம்.
ஒரு பக்கம் வறட்சி. இப்படி பாதிப்பு மாறி மாறி வருகிறது.
கங்கை-காவேரி திட்டம் என்பது ஒரு பெரிய திட்டம். இப்
படிப்பட்ட பெரிய திட்டத்தை கூட நிறைவேற்றுவதில்
மத்திய அரசு பாராமுகமாக இருப்பதால், நமது நாடு இன்
றைக்கு பெரும் பிரச்சனைக்கு உள்ளாக்கப்பட்டு வருகிறது.
அதேபோல் இந்தத் திட்டத்தையும் திட்டச் செலவு அதிகம்
என்று மத்திய அரசு எக்காரணத்தைக்கொண்டும் இனிமேல்
கிடப்பில் போட்டுவிடக்கூடாது என்று நான் சொல்ல விரும்பு
கிறோம். ஏனெனில் இலங்கையைச் சுற்றி கப்பல்கள்
வருவதால் எரிபொருள் நமது நாட்டிற்கு அதிகமாக செல
வாகிக் கொண்டிருக்கிறது. கையில் அள்ளி நேராக சாப்
பிடக்கூடிய நாம் தலையைச் சுற்றிச் சாப்பிடுவது போல
இன்றைக்கு இந்தத் திட்டம் காலதாமதமாகிக் கொண்டிருக்
கிறது.

அது மட்டுமல்ல, தென் எல்லைப் பாதுகாப்பு—வங்காள விரி
குடாக் கடலில் அமெரிக்காவினுடைய ராணுவ தளம், நமது
தமிழகத்தில் இருக்கக்கூடிய வேதாரண்யத்திற்கு 18 மைலுக்கு
அப்பால் திரிகோணமலையில் ராணுவத்தினுடைய உல்லாசப்
பயணம் என்ற அடிப்படையில் இன்றைக்கு தமிழர்கள் வாழ
முடியாத ஒரு அபாய நிலை இருக்கிறது. அதே போல்,

[திரு. பொ. உத்திராபதி] [1986 நவம்பர் 14

இன்றைக்கு இந்தியா முழுவதும் சுற்றி, இந்தியாவுக்குப் பாது
காப்பு இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. தமிழகத்தினுடைய
பொருளாதார வளர்ச்சி மிக முக்கியமானது அந்த
முக்கியமான வளர்ச்சி இன்றைக்கு வேகமாக தடைப்பட்டு
வருகிறது, இந்தத் திட்டம் இல்லாததன் காரணமாக.

அதுபோல், தமிழ் நாட்டில் தென் மாவட்டங்களில் ஏற்பட்ட
பிற்பட்ட நிலைமைகளை மாற்றி அமைக்கும் தன்மையுள்ள
திட்டம் இந்த சேது சமுத்திரத் திட்டம். இந்த சேது சமுத்திரத்
திட்டத்தை இனியும் காலதாமதம் இல்லாமல் உடனடியாக அமல்
படுத்த மத்திய அரசு முன் வரவேண்டும்.

இப்படி ஒரு நல்ல திட்டம் நீண்ட காலமாக மத்திய அரசால்
கிடப்பில் போடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டை மத்திய அரசு
புறக்கணித்து விடுமோ என்ற ஒரு அச்சம் மேலும், மேலும்
வலுப் பெற்று வருகிறது.

அதுவும், இந்த நேரத்தில் சேது சமுத்திரத் திட்டம் நிறை
வேறினால், இன்றைக்குத் தமிழகத்திற்கு வரக் கூடிய பொருளா
தார வளர்ச்சி, அதன் மூலமாக இன்றைக்குத் தமிழகத்தில்
ஏற்படக்கூடிய பல்வேறு காரியங்களை நிறைவேற்றுவதற்கான
வகையில் இந்தத் திட்டத்தை மத்திய அரசு இந்த மாநில
சட்டமன்றத்தில் எல்லாக் கட்சியினராலும் எடுத்துச் சொல்லப்
படக்கூடிய இந்தக் கருத்துக்களுக்கிணங்க, எதிர்காலத்தில்—இனி
மேலும், மேலும், மேலும் கருத்துக்கள் சொல்லி, கமிட்டிகள்
போடப்படுகின்றன. கருத்துக்கள் சொல்லிச் சொல்லி கமிஷன்கள்
போடப்படுகின்றன. ஆனால் கமிட்டிகளும், வல்லுநர்களும்
சொல்லக்கூடிய அந்தக் கருத்துக்களை, முடிவுகளை மத்திய அரசு
காது கேட்கா செவிடு போல் இருப்பது மாநிலத்தை, தமிழகத்
தைப் புறக்கணிக்கக்கூடிய சூழ்நிலையாக இருக்கிறது.

இன்றைக்குக் கூட, நமது காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் பேசு
கிறபோது காவிரி நடுவர் பிரச்சினை பற்றிக் கூட காங்கிரஸ்
கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரதம அமைச்சரிடத்தில்
சொன்னதாகச் சொன்னார்கள். நமது மாநில அரசு, தமிழகத்தில்
குறிப்பாக, தஞ்சை மாவட்டத்தில் காவிரி நதிநீர் பிரச்சினையில்
ஏற்பட்ட விவசாய பாதிப்பு கண்டு, உடனடியாக காவிரி நீர்ப்
பிரச்சினையை நடுவர் தீர்ப்புக்கு விடவேண்டும் என்று மத்திய
அரசுக்கு சிபாரிசு செய்திருக்கிறது.

அந்த சிபாரிசை செய்த காங்கிரஸ் கட்சி பாராளுமன்ற
உறுப்பினர்கள் பிரதம அமைச்சரைச் சந்தித்து, உடனடியாக
இதற்குத் தீர்வு காண வேண்டும் என்று கேட்டுக்கொண்டதாக
இன்றைக்குச் சொன்னர்கள். அதை வரவேற்பதோடு, காங்கிரஸ்



1986 நவம்பர் 14] [திரு, பொ. உத்திராபதி]

கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள், தமிழகத்தினுடைய
நலனைக் கருதி, சேது சமுத்திரத் திட்டத்தினுடைய நல்ல
பலனைக் கருதி, அவர்களும், இந்த அவையில் பிரதான எதிர்க்
கட்சியாக இருக்கக்கூடிய காங்கிரஸ் கட்சி தலைமையில் உள்ளவர்
களும், டெல்லியிலிருக்கின்ற காங்கிரஸ் கட்சி பாராளுமன்ற
உறுப்பினர்களும், தமிழகத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்
பினர்களையும், இணைத்து, பிரதம அமைச்சரிடத்தில் சேது
சமுத்திரத் திட்டத்தை, இந்த முக்கியமான திட்டத்தை வலி
யுறுத்தி எதிர்காலத்தில் மத்திய அரசு 200 கோடி ரூபாய் செலவு
செய்தாலும், அது ஒரு பெரிய தொகை கிடையாது; அந்த
அடிப்படையில் இந்த சேது சமுத்திரத் திட்டத்தை—இந்த
1986ஆம் ஆண்டிற்குள் மத்திய அரசு வாக்குறுதிஅளித்திடக்கூடிய
அளவுக்கு இந்த அவையினுடைய ஒருமித்த கருத்துக்களை மத்திய
அரசு நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்று இந்தியக் கம்யூ
னிஸ்டு கட்சியின் சார்பாக இந்தத் திட்டத்தை மேலும்
வற்புறுத்தி அமர்கிறேன்.

*திரு. மா. சின்னராசு : மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்களால்
கொண்டு வரப்பட்டிருக்கிற சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்
தின் அவசியத்தைக் குறித்த தீர்மானத்தை வழிமொழிந்து
நானும் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். அந்தக்
கருத்துக்கள் இன்று பேசப்பட்ட, பேசியிருக்கிற அனைத்து உறுப்
பினர்களுடைய கருத்துக்களோடு ஒட்டியிருக்கின்றன என்பதை
நான் முதலில் சொல்ல விரும்புகிறேன்.

சேது கால்வாய்த் திட்டத்தைப் பற்றி இந்த மன்றத்தில்
இனி பேசுவதற்கு எந்தக் கருத்தும் இல்லை என்கிற அளவுக்கு
இந்தத் திட்டம் பற்றி இராமாயண காலத்தில் தொடங்கி இந்த
நாள் வரை, எடுக்கப்பட்டிருக்கிற எல்லா நடவடிக்கைகளையும்,
கமிட்டி அறிக்கைகளையும், வல்லுநர்களுடைய கருத்துக்களை
யும் இந்த மாமன்ற உறுப்பினர்கள் மிகத் தெளிவாக எடுத்துச்
சொல்லியிருக்கிறார்கள்.

[முற்பகல் 11-40]

கிராமத்தில் இராமாயணம் படிப்பதை ஒரு பொழுதுபோக்
காகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். தினந்தோறும் மாலை
7 மணிக்கு மேல் பெரியவர்கள் ஒன்றாக உட்கார்ந்துகொண்டிருப்
பார்கள். ஒருவர் இராமாயணத்தைப் படிப்பார். பத்து இருபது
பேர் உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருப்பார்கள். இப்படித்
தொடர்ந்து பல நாட்களுக்கு இராமாயணக் கதை நடந்து
கொண்டிருக்கும். முடிவே இல்லாமல் இது நடந்து கொண்டிருக்
கும். இறுதியில் ஒரு நாள் ''பட்டாபிஷேகம்'' என்று
சொல்லி, அன்றைக்கு அதிகக் கூட்டம் வரும். அதற்குக்

[திரு. மா. சின்னராசு] [1986 நவம்பர் 14

காரணம் அன்றைக்குச் சுண்டல் வழங்குவார்கள். அப்படி
கிராமத்தில் நடக்கிற இராமாயணக் கதையைப் போல் சேது
சமுத்திரக் கால்வாய்த் திட்டம் சரித்திர காலம்தொட்டு பேசப்
பட்டு, சில நாட்களில் அதற்கான சில எழுச்சிமிக்க முழக்கங்கள்
கேட்பதும், சில நேரங்களில் பட்டாபிஷேகம் நடப்பதைப் போல்
இதற்காக தீர்மானம் நிறைவேற்றப்படும் முயற்சியில் நாம்
ஈடுபடுவதும், மத்திய அரசிலும், பாராளுமன்றத்திலும் மற்ற
இடங்களிலும் இதை வலியுறுத்துவதுமாகத் தொடர்ந்து நிகழ்ந்
திக் கொண்டிருக்கிறோம். இதுவும் ஒரு இராமாயணக் கதைபோல்
இல்லாமல் இது ஒரு அத்தியாவசியமான திட்டம் என்று மத்திய
அரசு கருதி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று நான்
இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதுதான்
இந்தத் தீர்மானத்தின் நோக்கம். அந்த வகையில் இரண்டு
முக்கியமான கருத்துக்களை மத்திய அரசின் கவனத்திற்குக்
கொண்டு வரப்பட வேண்டியவை என்ற அடிப்படையில் நான்
இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஒன்று இந்திய ஒருமைப்
பாட்டைக் காப்பதற்கும் மற்றொன்று இந்தியாவினுடைய
சுதந்திரத்தைக் காப்பதற்கும் இந்தத் திட்டம் மிக முக்கியமான
திட்டமாகும். இந்த மிகப் பெரிய இரண்டு நோக்கங்களைக்
கொண்டுதான் இந்தத் திட்டத்தின் அவசியத்தையும் அவசரத்தை
யும் மத்திய அரசு உணர வேண்டும். இது நாம் காலங்காலமாகப்
பேசிவரும் காவிரி—கங்கை இணைப்புத் திட்டம் போல்
அல்லாமல் கார் லேண்ட் கெனால் ஸ்கீம், பெனின்சுலர் ரிவர் ஸ்கீம்,
(கோதாவரி—கிருஷ்ணா—காவேரி இணைப்புத் திட்டம்) போல்
அல்லாமல் அல்லது நாம் அடிக்கடி சொல்லி வருகிற கரூர்—
தூத்துக்குடி அகல ரயில் பாதைத் திட்டம் போல் "நாம்
கேட்டுக் கொண்டிருக்கிறோம்", மத்திய அரசும் "நாங்கள்
பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம்" என்று சொல்கிற திட்ட
மாக இல்லாமல் இந்தியாவின் ஒருமைப் பாட்டிற்கும் இந்தியாவின்
பாதுகாப்புக்கும் சோதனையாக, சவாலாக இருக்கிற ஒன்றைச்
சமாளிப்பதற்கான ஒரு திட்டம் இந்தத் திட்டம் என்று உணர
வேண்டும் என்பகற்காகத்தான் இந்த நேரத்தில் நான் சில
கருத்துக்களை இங்கே வைக்க விரும்புகிறேன்.

இந்தியாவின் ஒருமைப்பாடு எப்படி பாதிக்கப்படும் என்றால்
தற்போது தொடர்ந்து நம் நாட்டின் பல்வேறு மாநிலங்களில்
எழுந்து வருகிற உணர்வுகளை, எழுந்து வருகிற பிரிவினை
வாதங்களை நாம் முதலில் எண்ணிப் பார்க்க வேண்டும். அந்த
மாநில மக்கள் எல்லாம் சுதந்திர இந்தியாவின் வளத்திற்காகப்
பாடுபடுவோம் என்று சபதம் எடுத்துக் கொண்டவர்கள்தான்,
இந்தியாவின் விடுதலைக்காக வீரர்களை உருவாக்கிய மாநிலங்
கள் இன்றையதினம் பிரிந்து போயாவது தங்களுடைய உரிமை
களைக் காத்துக் கொள்ள வேண்டும் என்ற உணர்வுக்குத் தள்ளப்
பட்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட



1986 நவம்பர் 14] [திரு. மா. சின்னராசு]

விரும்புகிறேன். மாநில மக்களுடைய ஏகோபித்த உணர்வுகள்
கட்சி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு நின்று நாட்டின் தேவை
என்பதன் அடிப்படையில் வலியுறுத்தப்படும் திட்டங்கள்
மத்திய அரசால் நிறைவேற்றப்படாமல் இருக்கும்போது "நம்
முடைய கோரிக்கைகளை மத்திய அரசு நிறைவேற்றவில்லை:
அல்லது நிறைவேற்றுவதற்கான முயற்சிகளைக்கூட மேற்கொள்ள
வில்லை" என்ற உணர்வின் அடிப்படையில் இப்படிப்பட்ட
நிலைமை உருவாகிறது. இதுபோன்ற உணர்வுகள், பாதிக்கப்
படுகிற நிலை, இந்திய யூனியனால் ஏற்பட்டு விட்டதோ என்ற
ஏக்கம் எந்த மாநிலப் பகுதியைச் சார்ந்த மக்களுக்காவது
ஏற்பட்டுவிட்டால் அது இறுதியில் பெரிய போராட்டமாக
வெடித்து விடுகிறது என்பதை அண்மைக்கால சரித்திர நிகழ்ச்சி
யாகப் பார்த்து வருகிறோம். அப்படிப்பட்ட உணர்வை
வளர்க்கக் கூடாது என்பதற்காகத்தான் நான் இதைச் சொல்லு
கிறேன். இத்திட்டத்தை மத்திய அரசு இதுவரை நிறைவேற்ற
வில்லை என்பதற்காக மத்திய அரசு நமக்குச் செய்திருக்கிற
பல்வேறு திட்டங்களை நாம் மறந்துவிடுவதற்கில்லை. ஆனால்
இது மிக மிக அத்தியாவசியமான ஒன்று என்றுதான் வலியுறுத்த
விரும்புகிறேன். மத்திய அரசு இந்தப் பிரச்சினைக்குத் தேவை
யான முன்னுரிமையைக் கொடுக்கவில்லை என்றுதான் நான்
குறிப்பிட விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை).

எனவே தமிழக மக்களுடைய எண்ணம் மட்டும் அல்ல இந்திய
நாட்டினுடைய பாதுகாப்புக்கும் தேவையான ஒன்று என்ற
அடிப்படையில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றியாக வேண்டும்.
இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் மத்திய அரசிற்கு எது
தடையாக இருக்கிறது என்று பார்க்க வேண்டும். இந்தத்
திட்டம் எகனாமிகலி வயபிள் என்று மத்திய அரசே நியமித்த
நடராஜன் கமிட்டி அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது.
இந்தத் திட்டத்திற்கு டெக்னிகல் பீசிபிலிடி இருக்கிறது என்பதும்
தெளிவாக்கப்பட்டிருக்கிறது. அதற்கும் மேலாக இந்தத் திட்டம்
செக்யூரிட்டி ரீசன்ஸ் என்ற அடிப்படையில் பார்த்தாலும் ஒரு
நெசசிட்டி என்ற முடிவுக்கு வந்த பிறகும் இதற்கான நிதியை
ஒதுக்கித் திட்டத்தை நிறைவேற்றாததற்கு என்ன காரணம்
என்று புரியவில்லை. இதற்கு ரூ. 200 அல்லது 250 கோடிதான்
செலவாகும். 1986-87 ஆம் ஆண்டிற்கு மத்திய அரசு செலவிட
இருக்கிற மொத்தத் தொகை ரூ. 52,862 கோடியாகும். எனவே
நிதியில்லை என்ற காரணத்தால் இந்தத் திட்டத்தைப் பரிசீலிக்க
வில்லை என்றும் மத்திய அரசு சொல்ல முடியாது. ரூ.52,862
கோடி ஓராண்டிற்கு மட்டும் செலவிட இருக்கும் மத்திய அரசுக்கு
இந்த ரூ. 250 கோடி என்பது பெரிய தொகை அல்ல. அதுவும்
ஒரே ஆண்டிற்கு இவ்வளவு தொகை தேவையில்லை. 5 ஆண்டுத்
திட்டத்தில் நாம் இதை இணைத்துக் கொண்டால் [illegible]
5 அல்லது 10 ஆண்டுகள் கூட ஆகலாம்.



136496
சென்னை-600 008.

[திரு. மா. சின்னராசு] [1986 நவம்பர் 14

ஆக ஆண்டுக்காண்டு ஒரு சில கோடி ஒதுக்கி நிறைவே வேண்டிய திட்டங்கள் எல்லா வகையிலும் ஒப்புக் கொள்ளப் பட்டு நிறைவேற்ற வேண்டியது அவசியம் என்ற திட்டங்களை ஒத்திப் போடுவதற்குக் காரணங்கள் இருக்க முடியாது என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். அப்படித் தேவை யில்லாமல் ஒத்திப் போடுவதால்தான் தமிழக மக்களுடைய உணர்வுகள் பாதிக்கப்படுகிற நிகழ்வாக இது இருக்கின்றன.

நேற்று மொழியுரிமை குறித்த தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியிருக்கிறோம். நாட்டிலே மொழி உணர்வால் சோதனைக்கு உட்படுத்தப்படும்போது நம்முடைய ஐக்கியம், ஒருமைப்பாடு பாதிக்கும் சூழ்நிலை ஏற்படும். இரண்டாவதாக பொருளாதார வளர்ச்சிக்கு நாம் அமைத்துக் கொண்டுள்ள குடி யாட்சி முறைக்கு தடையாக இருக்கிறது என்ற உணர்வு ஏற்படாமல் இந்தியாவில் ஒருமைப்பாடு காக்கப்பட வேண்டும். இந்தியாவின் கூட்டுத் தன்மை (Fed ral set u ) அடிப் படையில் ஐக்கியப்படுத்தப்பட்டுள்ள நாடு என்பதையும் மறைத்து விட முடியாது. சாதாரணமான மக்களாக இருந்தாலும், அவர் கள் பஞ்சாபிலிருந்தாலும், தமிழகத்திலேயிருந்தாலும், அசாமில் இருந்தாலும், அவர்களுடைய உணர்வுகளை காலத்திலே மதிக்க வேண்டும். இந்தியாவினுடைய ஒருமைப்பாட்டுக்கு அவசியம் என்ற அந்த உணர்வோடு இது போன்ற அத்தியாவசியமான திட்டங்களை பரிசீலிக்கும்போது மக்களுடைய எண்ணங்களை மத்திய அரசாங்கம் மதிக்க வேண்டும் என்று நான் இந்த நேரத் திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அந்த வகையிலே இந்தத் திட்டம் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் திட்டமாக இருக் கிறது.

பல்வேறு நாடுகளில் இது போன்ற கனால் திட்டங்கள் அவர் களின் பொருளாதார வளர்ச்சிக்குக் காரணமாக இருந்திருக் கின்றன என்ற வரலாறு இருக்கிறது. பெல்ஜியம் நாட்டிலே இருக்கின்ற ஆல்பெர்ட் கெனாலும்; இரீல் நாட்டிலே அமைந் திருக்கின்ற கேனரிநாத் கெனாலும், கெனடா நாட்டிலே அமைந் திருக்கின்ற செயின்ட் லாரன்ஸ் சீவே என்று சொல்லப்படுகிற கால்வாயும், எகிப்தில் உள்ள சூயெஸ் கால்வாயும், பனாமாவில் உள்ள பனாமா கால்வாயும், ருஷ்யாவில் உள்ள மிகப் பெரிய ஓல்கா பால்டிக் என்ற கால்வாயும் அந்தந்த நாடுகளின் பொரு ளாதார வளர்ச்சிக்கு எவ்வளவு தூரம் உதவியிருக்கின்றன என்பதை எண்ணிப் பார்த்து, இந்தத் திட்டம் தமிழகத்திற்கு மட்டுமல்லாமல் இந்தியாவின் பொருளாதார உயர்விற்கு உத வும் என்ற வகையிலும், என்பது சதவீதம் அந்நியச் செலா வணியை ஈட்டித் தருகிற மிகப் பெரிய திட்டம் என்பதையும் உணர வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் சுட்டிக் காட்ட



1986 நவம்பர் 14] [திரு. மா. சின்னராசு]

விரும்புகிறேன். இந்தத் திட்டதை நிறைவேற்றுகிற நேரத் தில், பல உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியதை போல, இது வெறும் கால்வாய்த் திட்டமாக மட்டும் இல்லாமல், பொருளா தார வளர்ச்சிக்கு மட்டுமல்லாமல் அருகில் உள்ள தூத்துக்குடி துறைமுகத்திற்குக் கூடுதலான வளர்ச்சியைத் தரும் என்பதை யும் நாம் உணர வேண்டும்.

இந்த திட்டத்தைப் பற்றி பேசுகின்றபோது பல்வேறு அரி சியல் வரலாற்றைச் சுட்டிக் காட்டிப் பேசினோம். பேரறிஞர் அண்ணா அவர்கள் தூத்துக்குடி துறைமுகத்தை விரிவு படுத்த வேண்டும்—என்று அதை வெறும் பிஷிங் ஹார்பாராக இருப்பதை— வாணிபத் துறைமுகமாக மாற்ற வேண்டுமென்ற எண்ணத்தோடு 'தூத்துக்குடி எழுச்சி நாளை'க் கொண்டாடினார்கள். ஆகவே தேவைப்படுகிற திட்டங்களையெல்லாம், தமிழகத்தினுடைய, இந்திய பொருளாதார வளர்ச்சிக்குத் தேவைப்படுகிற திட்டங் களை எல்லாம் நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக நம் முடைய உரிமைகளை எழுச்சி உணர்வோடு சொல்லி இந்தத் திட்டங்களை இந்தக் காலக் கெடுவுக்குள் மத்திய அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் என்ற வரையறையை வைத்து மத்திய அரசை நாம் வலியுறுத்த வேண்டும் என்பது என்னுடைய தாழ் மையான எண்ணம்.

மத்திய அரசாங்கம் அவசியம் என்று ஒத்துக் கொண்ட திட்டங் கள் பல இருக்கின்றன. அவற்றைக் காலம் தாழ்த்துவதால் கூடுதல் நிதிச் சுமை ஏற்படுகிறது என்பதை மத்திய அரசாங் கத்தின் பாராளுமன்ற எஸ்டிமேட்ஸ் கமிட்டி சுட்டிக் காட்டி யிருக்கிறது. காலம் கடத்தப்படுவது, இது போன்ற முக்கிய மான 183 திட்டங்களுக்குக் கூடுதல் செலவு ஆனதற்குக் காரண மாக அமைந்திருக்கிறது என்பதைப் பார்க்கும்போது இத்திட் டத்தை நிறைவேற்றுவதில் காலதாமதம் ஆவதால் நம்முடைய நாட்டினுடைய பொருளாதாரத்திற்கு மேலும் பாதிப்பு ஏற் படும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ரூபாய் 21 ஆயிரம் கோடி அளவிற்கு 183 திட்டங்கள் காலத்திலே நிறை வேற்றப்படாததால் ரூபாய் நாற்பதாயிரம் கோடி கூடுதல் செலவுக்குக் காரணமாக இருந்தது என்பதை பாராளுமன்ற மதிப் பீட்டுக் குழு சுட்டிக் காட்டியிருக்கிறது. இந்த அனுபவங்களைக் கருத்திலே கொண்டு இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட வேண் டும். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான எல்லா வழிமுறைகளையும் நடராஜன் கமிட்டி தந்திருக்கிறது. அதிலே இன்னுமொன்றைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். நிறைவேற் றப்படுகிற இந்தச் சேது சமுத்திரத் திட்டத்தை, சேது சமுத்திர டெவலப்மென்ட் அத்தாரிட்டி என்று சொல்லக் கூடிய மத்திய மாநில அரசுகளுடைய கூட்டு அத்தாரிட்டியிடம் விட்டுவிட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

[திரு. மா. சின்னராசு] [1986 நவம்பர் 14

(முற்பகல் 11.50)

இந்த நேரத்திலே மத்திய அரசு காலந்தாழ்த்துவதைத்
தவிர்க்கும் முறையில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றக் கூட,
'ஜாயின்ட் வென்சர்' என்ற முறையில் தமிழகத்தில் தென்
மாவட்டங்களுடைய வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு, மத்திய
அரசு நிதிப் பற்றாக்குறை அல்லது நிதி ஒதுக்கீட்டிலுள்ள தடை
களைச் சுட்டிக் காட்டினால், மாநில அரசே கூட இந்தத்
திட்டத்திற்கான மூலதனத்தில் பங்கு கொள்கிறோமென்று
சொன்னால், இன்னும் 25 ஆண்டுகளில் இந்தத் திட்டத்திற்
கான முழுச் செலவையும் லாபகரமாகப் பெற்றுவிட முடியும்
என்ற நிலை இருக்கிறது. மாநில அரசே இதைக் கூட்டுத்
திட்டமாக மத்திய அரசின் ஒத்துழைப்போடு எடுத்துக்கொள்ள
முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன். இன்று நாம் பேசி வருகிற இது போன்ற தமிழகத்தின்
ஜீவாதார பொருளாதார உரிமைகளை அமுல் படுத்த கங்கை-
காவிரித் திட்டமானாலும், கார்லென்ட கெனால் ஸ்கீம் ஆனா
லும் மத்திய அரசின் எண்ணமும், உணர்வுகளும் தமிழகத்தின்
சாதாரண மக்களின் எண்ணங்களைப் பிரதிபலிப்பதாக இருக்க
வேண்டும். அப்போதுதான் கூட்டாட்சித் தத்துவத்திலும்,
ஒருமைப் பாட்டிலும் இந்தப் பகுதி மக்களும். முழு நம்பிக்கையை
வளர்த்துக் கொள்வார்கள் என்ற உணர்வோடு இந்தத் திட்டத்
தின் அவசியங்களைப் பரிசீலிக்கும்போது மத்திய அரசு கருத்தில்
கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நடராஜன் கமிட்டியில் இந்தத் திட்டத்தின் 'பீசிபிலிட்டி'
பற்றி சொல்லிவிட்டு, திட்டத்தை நடை முறைப்படுத்த வேண்டு
மென்று சொல்லி முடிக்கும்போது, கூறப்பட்டுள்ள கருத்து
நாம் நினைவு கூற வேண்டிய கருத்து என்று இங்கே சொல்லக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

When it is a question of stimulation of underdeveloped economics,
transport is one of the two great na'ion-building influences, the other
is education ;

என்று சொல்லியிருக்கிறார்கள். ஆக பொருளாதார வளர்ச்
சிக்கு கல்விக்கு அடுத்து அல்லது கல்வியோடு போக்குவரத்துத்
தான் அடிப்படைத் தேவை என்பதை அவர்கள் சுட்டிக் காட்டி
யிருக்கிறார்கள். பல கோடி ரூபாய்களை ஐந்தாண்டு திட்டங்
களிலே செலவிடுகிற மத்திய அரசு, இந்தத் திட்டத்திற்குச்
செலவிடுகிற பணத்தை நிச்சயமாக மிகப் பெரிய தொகையாகக்
கருத வேண்டியதில்லை என்று சொல்லிக் கொள்கிறேன். நட
ராஜன் கமிட்டியிலே மேலும் ஒன்றைச் சுட்டிக் காட்டியிருக்
கிறார்கள்.



1986 நவம்பர் 14] [திரு. மா. சின்னராசு]

To look ahead is always a hazardous business. Yet, there is no
reason in itself for not doing so. Unless we think in terms of the
future and its huge range of revolutionary possibilities, we shall be
unprepared for the changes as they occur. It is the duty of the
Government, the industry —— why, the individuals too —— to try
to look ahead and plan according to predictions.

நம்முடைய எதிர்கால வரலாற்று நிலைமைகளை உணர்ந்து,
இத்திட்டம் பார்ப்பதற்கு அல்லது செயல்படுத்துவதற்கு ஏதோ
ஒரு அச்சம் தரக்கூடிய திட்டமாக இருந்தாலும், அப்படி கருதத்
தேவையில்லை என்ற உணர்வுகளை எடுத்துச் சொன்ன பின்
னால், நாட்டின் நிலைமையை, நாட்டின் எதிர்கால வளர்ச்சியைக்
கருத்தில் கொண்டு நிறைவேற்றப்பட வேண்டுமென்ற நம்
முடைய கோரிக்கை யாவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒன்று
என்று சொல்லி, இந்தத் திட்டத்தை எடுத்து முடிக்க ஒரு காலக்
கெடுவை நிர்ணயிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.
இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திலேயே இதை எடுத்துக்
கொள்ள வேண்டுமென்று சொல்லியும், தொடர்ந்து காலங்
கடத்தாமல் நிறைவேற்ற வேண்டுமென்று மத்திய அரசுக்கு மாநில
அரசு எடுத்துச் சொல்ல வேண்டுமென்று சொல்லி, வாய்ப்புக்கு
நன்றி கூறி, அமைகிறேன்.

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு மாற்றுத் தலை
வர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்
கள் 10—5—1986 ஆம் தேதி அன்று மொழிந்த தீர்மானத்தின்
மீது காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் சார்பில் சில கருத்துக்
களை நான் சொல்ல விரும்புகிறேன். சேது சமுத்திர
கால்வாய்த் திட்டம் பொதுவாக தென்மாநிலங்களுக்கு, குறிப்பாக
தமிழ்நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு நல்ல திட்ட
மாகும். ஆனால் அந்தத் திட்டம் பல ஆண்டுகளாகப் பேசப்
பட்டு கிடப்பிலே தள்ளப்பட்டிருக்கிறது. தவிர அந்தத் திட்டத்
தைக் கொண்டுவர அரசு எந்த நடவடிக்கையையும் எடுத்ததாகத்
தெரியவில்லை. நம்முடைய மாநில அரசு, மத்திய அரசை
வலியுறுத்தி, இந்தத் திட்டத்தை உடனடியாகச் செயலுக்குக்
கொண்டு வர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்
கிறேன். கடந்த காலங்களில் 9 கமிட்டிகள், தமிழகம் சார்பில்
3 கமிட்டிகள் அதிகப்படுத்தப்பட்டு 12 கமிட்டிகள் போடப்
பட்டு இருக்கின்றன. இந்தத் திட்டம் வலியுறுத்தப்பட்டிருக்
கின்றது. நம் அவை 1982 ஆம் வருடம் இதற்காக ஒரு மணி
நேரம் ஒதுக்கி விவாதித்து மாண்புமிகு அமைச்சர்
திரு. முத்துசாமி அவர்களும் நல்ல பதிலை எல்லாம் தந்தார்கள்.
ஆனால் அவர் சொல்லும்போது, இந்தத் திட்டம் ரூ. 50
இலட்சத்திலே ஆரம்பிக்கப்பட்டு, இன்றைக்கு 110 கோடி

ரூபாய் செலவிலே வந்து கொண்டிருக்கின்றது என்று அப்போது
சொன்னார்கள். இன்னும் போகப் போக இதற்குத் திட்டச்
செலவு அதிகமாகும். அதற்குத் தகுந்தாற்போல், மத்திய
அரசுக்குத் தாக்கீதுகள் தந்திருக்கின்றார்கள். அதற்கு விளக்
கங்கள் தந்திருக்கின்றார்கள். இந்தத் திட்டம் ஆறு ஆண்டுகள்
ஆகியும் இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

வட மாநிலங்களிலிருந்து தென் மாநிலங்களுக்கு பொருள்
களை ஏற்றிக் கொண்டு வரக்கூடிய கப்பல்கள் ஸ்ரீலங்கா வழி
யாக வந்து கொண்டிருக்கின்றன. அப்படி இல்லாமல் சுமார்
60 மைல்கள் மிச்சமாகக் கூடிய அளவுக்கு இந்தச் சேது சமுத்
திரக் கால்வாய் திட்டம் அமைந்தால், இந்தக் கப்பல் போக்கு
வரத்தால் ஏற்படும் செலவு குறையும் என்று ஏற்கனவே
நாம் பேசியிருக்கிறோம். இது போன்று இந்தச் சேது சமுத்திரக்
கால்வாய் திட்டத்தின் மூலம் கப்பல் வழியை இணைத்தால்
கிட்டத்தட்ட 47 மணி நேரம் மிச்சமாகும் என்றுகூட
ஏற்கெனவே இந்த மன்றத்திலேயும் சொல்லப்பட்டிருக்கின்றது.
வளர்ந்து வரும் எண்ணெய்ப் பற்றாக் குறையை
நோக்குவோமானால் தேசிய பொருளாதார
கண்ணோட்டத்தில் சேது சமுத்திர கால்வாய்த் திட்டம் மிகவும்
முக்கியமான ஒன்றாகும். இந்து மகா சமுத்திரத்தில் வல்லரசுகள்
தளம் அமைத்துக் கொண்டிருக்கின்றார்கள். இந்த நேரத்தில்
தேசிய பாதுகாப்பிற்கும் இந்தத் திட்டம் முக்கியமான திட்ட
மாக அமையும். இந்தத் திட்டத்தினால் தூத்துக்குடி துறை
முகம் மிகச் சிறந்த வளர்ச்சி பெறும். உலகத்தில் மிகச் சிறந்த
துறைமுகங்களிலே ஒன்றாகும். தமிழகத்தின் வேலையில்லா
திண்டாட்டத்தை குறைக்க வழிவகுக்கும். தூத்துக்குடி சுற்றி
யுள்ள தொழிற்சாலைகளுக்கு ஒரு உயர்ந்த திட்டமாக அமையும்.
அதுபோன்று அனல் மின் நிலையம் இயங்கவும் நிலக்கரி கொண்டு
வருவதற்கும் இந்தத் திட்டத்தினால் சுமார் 660 மைல் மிச்ச
மாகக்கூடிய நிலை ஏற்படும். எனினும், இந்தத் திட்டத்தை நம்
காலத்திற்குள்ளாகவே கொண்டுவந்துவிடுவோமா என்ற ஐயம்
ஏற்படுகிறது. மாநில அரசு மத்திய அரசுக்கு இந்தத் திட்டம்
முன்னேற ஆக்கபூர்வமான அறிவுரைகளைக் கொடுத்து உடனடி
யாக இந்தத் திட்டத்தை மத்திய அரசு கொண்டுவர வேண்டும்
என்று சொல்வதோடு, மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை
அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை ஆதரித்து அமைகிறேன்.
வணக்கம்,

திரு. வை. பாலச்சந்திரன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, இந்த ஆண்டில் தொடக்கத்தில் நடைபெற்ற சட்ட
மன்ற கூட்டுக் கூட்டத்தில் மேதகு ஆளுநர் அவர்கள் உவந்து
அளித்த உரையில் சேது சமுத்திர கால்வாய் திட்டத்தைப் பற்றி
எதுவும் குறிப்பிடவில்லை என்று பல மாண்புமிகு உறுப்பினர்கள்
சுட்டிக் காட்டினார்கள். பேரவை உறுப்பினர்களுக்கு ஏற்பட்ட





அளப்பரிய வேதனைக்கு மாமருந்தாக சேது சமுத்திரக் கால்வாய்
திட்டத்தை அமுலாக்க அரசு வலியுறுத்தும் தீர்மானமாக இந்தத்
தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கின்றது. இந்தத் தீர்மானத்தை
மனமுவந்து கொண்டுவந்திருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்
திரு. செம்மலை அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதலைத்
தெரிவித்துக் கொள்கிறேன். நான் சார்ந்துள்ள இந்து முன்னணி
பேரியக்கத்தின் சார்பில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கும், தமிழ்நாடு
உள்ளிட்ட அகில இந்தியாவினுடைய பாதுகாப்பு முன்னேற்றத்
திற்கும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தவேண்டியது
அவசியம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவரு
டைய தீர்மானத்திலே மிக அழகாகச் சுட்டிக் காட்டியிருக்கின்
றார்கள். அதை என்னுடைய இயக்கம் முழுமையாக ஏற்றுக்
கொள்கிறது. ஆட்சியில் அமைந்துள்ள கட்சியைச் சார்ந்த
மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் இந்தத் தீர்மானத்தைக்
கொண்டு வந்திருக்கின்ற காரணத்தினாலே இந்தத் தீர்மானம்
நிறைவேற்றப்பட்டுவிடும் என்ற நம்பிக்கை நமக்கு இருந்தாலும்,
இந்தத் தீர்மானம் இங்கே நிறைவேற்றப்பட்ட பிறகு அது
மத்திய அரசினுடைய செவிகளில் ஓங்கி ஒலிக்கப்பட வேண்டும்.
அதற்கான முயற்சிகளை தமிழ்நாடு அரசு மேற்கொள்ளவேண்டும்
என்ற வேண்டுகோளை வலியுறுத்தி கூறிக்கொள்ளக் கடமைப்
பட்டிருக்கின்றேன்.

நாட்டினுடைய பாதுகாப்பு என்பது மைய அரசினுடைய
அடிப்படை கடமைகளில் முக்கியமான கடமையாக இருக்க
வேண்டும். ஆகவே, இன்றைக்கு நாட்டிற்கு வருகின்ற ஆபத்துக்
களைத் தடுக்கின்ற நிலையில் நாம் எப்போதும் தயாராக இருக்க
வேண்டும். இந்தியாமீது மீண்டும் ஒரு முறை படை எடுப்பு
அல்லது அன்னிய ஆக்கிரமிப்பு என்று வந்தால், பாதுகாப்பு
நடவடிக்கை வேண்டும் என்ற நிலை ஏற்பட்டால், படையெடுப்
பால் பாதிக்கப்படுகின்ற பகுதி வட இந்தியாவாக இருக்காது.
அது தென் இந்தியப் பகுதியாகத்தான் இருக்கும். அப்படி தென்
இந்தியா பாதிக்கப்படுகின்றபோது, தரை வழியாக அன்னியர்
ஆதிக்கம் வர வழியில்லை. ஆனால் கடல் வழியாக
வருகின்ற வாய்ப்புத்தான் அதிகமாக இருக்கிறது என்று இன்
றைக்குச் சொல்லப்படுகிறது. ஆகவே சேது சமுத்திரக் கால்வாய்
திட்டம் என்பது நாட்டினுடைய பாதுகாப்பைப் பேணுவதற்கு
உரிய ஒரு இன்றியமையாத திட்டமாக இருக்கின்றது. அந்தத்
திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தமிழக அரசு முயலவேண்டும்
என்று நான் சார்ந்த இந்து முன்னணி பேரியக்கத்தின் சார்பில்
கேட்டுக் கொண்டு அமைகிறேன். நன்றி.

[1986 நவம்பர் 14

[நண்பகல் 12-00].

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாற்றுத் தலைவர் அவர்
களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள் முன்
மொழிந்துள்ள சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்தின் அவசி
யத்தை வலியுறுத்தி ஜனதா கட்சியின் சார்பாக நானும் இந்தத்
தீர்மானத்தை வழிமொழிகின்றேன். இந்தியாவின் பாதுகாப்புக்
காக ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய்களை
செலவழிக்கும் மத்திய அரசு தேசிய பாதுகாப்பின் தேவையை
கருதி உடனடியாக இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த
வேண்டும். தூத்துக்குடியிலிருந்து சென்னைக்கு வரும் கப்பல்கள்
இலங்கையைச் சுற்றித்தான் வர வேண்டியதாக இருக்கிறது
என்று நான் அறிகிறேன். தூத்துக்குடியிலிருந்து சென்னைக்கு
நேரடியாக கப்பல் வர வேண்டுமென்றால், 300 மைல் தூரம்
தான் இருக்கிறது. அதே சமயத்தில் இலங்கையைச் சுற்றி இன்
றைக்கு 700 மைல் தூர அளவுக்குச் சுற்றி வரும் நிலைமை
அவசியம்தானா என்று நான் அறிய விரும்புகிறேன். இது
சம்பந்தமாக இலங்கையுடன் நமக்கு ஏதாவது ஒப்பந்தம் இருக்
கிறதா என்றும் நான் அறிய விரும்புகிறேன்.

சில மாதங்களுக்கு முன்பு தமிழக சட்டமன்ற மதிப்பீட்டுக்
குழுவின் சார்பாக தூத்துக்குடி துறைமுகத்துக்கு சென்றிரு
தோம். அப்போது அங்கேயுள்ள போர்ட் டிரஸ்டின் தலைவர்
திரு. சுந்தரம் அவர்கள் தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து
இன்னின்ன நாடுகளுக்கு கப்பல்கள் செல்ல வேண்டுமானால் தற்
போது இலங்கையைச் சுற்றித்தான் செல்ல வேண்டியிருக்கிறது
என்றும் அவ்வாறு சுற்றிச் சென்றால் இவ்வளவு மைல் ஆகிறது
என்றும், சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம் நிறைவேற்றப்
பட்டால் அந்தக் கால்வாய் வழியாகச் சென்றால் இவ்வளவு மைல்
தான் ஆகிறது என்றும் சொன்னதுடன் அது சம்பந்தமாக அங்கே
ஒரு போர்டையும் எழுதி வைத்திருக்கிறார்கள். அதிலுள்ள
விவரங்களை எல்லாம் அவர்கள் மிகவும் விரிவாக எங்களுக்கு
எடுத்துச் சொன்னார்கள். இதையெல்லாம் பார்க்கும்போது
சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்தை மிக விரைவிலே மத்திய
அரசு நிறைவேற்றியாக வேண்டிய, ஒப்புதல் தர வேண்டிய, சீர்
படுத்த வேண்டிய நிலைமை இருக்கிறது என்பதை நான் தெரி
வித்துக் கொள்கிறேன். உத்திரப்பிரதேசத்திலுள்ள பிரதமர்
அவர்களுடைய தொகுதிக்கென்று மட்டும் சென்ற ஆண்டு 1,300
கோடி ரூபாய் செலவழித்திருக்கும் மத்திய அரசு தமிழக மக்களின்
முன்னேற்றத்திற்காக 200 கோடி ரூபாய் செலவழித்து இத்
திட்டத்தை நிறைவேற்ற ஏன் தயங்குகிறது என்று எனக்குப்
புரியவில்லை. ஆகவே, இத் தீர்மானத்தை இங்கே நிறைவேற்றி
மத்திய அரசுக்கு அனுப்பி, சேது சமுத்திர கால்வாய்த்
திட்டத்தை நிறைவேற்றுவதற்காகத் தமிழக அரசு எடுக்கின்ற
அனைத்து முயற்சிகளுக்கும் ஜனதா கட்சியின் சார்பாக நாங்கள்



ஆதரவு தெரிவித்து, அதற்கு உறுதுணையாக இருப்போம் என்று
கூறி, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். நன்றி.
வணக்கம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் கே. சமரசம்)
பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று
திங்கட்கிழமை(17—11—1986) காலை 9-00 மணிக்குப் பேரவை
மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 12-03 மணிக்கு ஒத்திவைக்கப்
பெற்றது.

## 9. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

135. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு சட்டமன்ற (உறுப்பி
னர்கள் ஊதியங்கள் மற்றும் மருத்துவச் செலவு ஈட்டுத் தொகை)
விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பொது (பணியாள
ரமைப்பு-1) துறையின் 1—8—1986 ஆம் நாளிட்ட 1481 ஆம்
எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு
1951 ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு
சட்டம் 20/1951) 16 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்
பெற்றது).

136. சட்டத்தின் 18 ஆம் பிரிவின்கீழ் குறிப்பிட்ட நாளை
குறிப்பிடுதல் குறித்து தொழில் (எம். ஐ. டி.-1) துறையின்
29—8—1986 ஆம் நாளிட்ட 934 ஆம் எண் அரசாணையில்
வெளியிடப்பட்ட அறிவிக்கை (1984 ஆம் ஆண்டு மதுரை
சர்க்கரை நிறுவன (நிர்வாகப் பணியை எடுத்துக் கொள்ளுதலும்,
மாற்றுதலும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 18/1984) 33 (4)
பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

137. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி
விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள்-
சமய அறக்கட்டளைகள் துறையின் 18—7—1986 ஆம் நாளிட்ட
707 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை
(தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின்
(தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன்
வைக்கப் பெற்றது).

138. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கள் மற்றும் சாராய
கடைகள் (ஏலத்தில் தீர்வு செய்தல்) விதிகளில் சில திருத்தங்கள்
செய்வது குறித்து மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறையின்
6—5—1986 ஆம் நாளிட்ட 544-ஆம் எண் அரசாணையில் வெளி

[1986 நவம்பர் 14

யிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மது விலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

139. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தினரால் விற்கப் படும் சாராய இருப்பிற்கு கூடுதல் விற்பனை கட்டணம் செலுத்து வது குறித்து மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறையின் 24-3-1986ம் நாளிட்ட 332 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத் தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை.



1986 நவம்பர் 14]

உடுக்குறியிட்ட வினா எண் 12-க்

[144-ஆம் பக்கத்திலுள்ள
கான விடையைக் காண்க.

பொதுவாகக் கருவேல் மரங்களைச் சமூகக் காடுகள் திட்டத்
தில் ஏரி குளங்களில் நடவு செய்யப்படுகிறது. ஏரி குளங்களில்
ஆழமான பகுதிகள் (Deeper portion ) தவிர, மற்ற பகுதிகள்
நில அளவை செய்யப்பட்டு எல்லை வரையறுக்கப்படுகிறது.
பிறகு, 2.5 மீட்டருக்கு ஒரு வரிசையென அமைத்து 30 செ.மீ.
கனசதுரக் குழிகள் தோண்டி ஆறப் போடப்படுகிறது. ஆடிப்
பட்டத்தில் ஓரிரண்டு மழைகளுக்குப் பின்னர், நன்றாக வளரும்
பாலித்தீன் பைக் கன்றுகளைத் தேர்ந்தெடுத்து மேல் பாகம்
( Upper reaches ) நடவு செய்யப்படுகிறது. நீர் பிடிப்
புள்ள கீழ் பாகங்களில் ( Lower reaches ) தண்ணீர்
வடிய வடிய கணுக்கால் அளவு தண்ணீருடன் நடவுசெய்யப்படு
கிறது. நட்ட பின் தேவைக்கேற்ப களை நீக்கி மண் கொத்தி
விடும் பணியும் மரத்தின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் பொருட்டு
செய்யப்படுகிறது, சுமார் ஒரு ஆண்டு காலத்தில் மண்ணின்
தரத்தைப் பொறுத்து 1 மீட்டர் முதல் 1.5 மீட்ட உயரம் வரை
மரம் வளர்ச்சியடைகிறது.

## AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 P. Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1 Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A Venkatasubban & Company, Vellore (North Arcot District).
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V.Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-rappalli-4.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore 10
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavillas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagohi & Company, 286, R B. Gandhi Street, Calcutta-11

© Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.

வெளியீடு 16-5-1987    Issued 16-5-87

295

1081/87

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

திங்கட்கிழமை, நவம்பர் 17, 1986-தொகுதி 29-எண் 4

Monday, the 17th November 1986-Volume 29-No. 4

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat Fort St. George, Madras-600 009

[விலை ரூ.3.00 காசுகள்]    [Price Rs-3.00 paise

1081/87

உள்ளடக்கம்

17-11-1986.


| | பக்கங்கள். |
|---|---|
| 1. வினாக்கள் – விடைகள்— | 213—258 |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | |
| 2. தகவல் கோரல் | 258—259 |
| 3. கவன ஈர்ப்பு— | |
| மூளைக் காய்ச்சல் நோய் பரவியிருத்தல். | 259—269 |
| 4 அரசினர் சட்ட முன்வடிவுகள்— | |
| (அ) சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1986. | 270 |
| (ஆ) எதிர்பாராச் செலவு நிதியச் (திருத்த) சட்ட முன்வடிவு, 1986. | 270—271 |
| (இ) மதுவிலக்கு (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986. | 271 |
| (ஈ) சென்னை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1986.— | 276—338 |
| திரு. எஸ். வேணுகோபால் .. | 276—282 |
| *திரு. மா. சின்னராசு .. | 282—287 |
| திரு. பொன் முத்துராமலிங்கம் .. | 287—291 |
| டாக்டர் கே. சௌரிராஜன் .. | 291—266 |
| * திரு. வி. பி. சிந்தன் .. | 296—302 |
| திரு. அ. ரகுமான்கான் .. | 302—309 |
| * திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் .. | 309—312 |
| டாக்டர் கே. சமரசம் .. | 312—316 |
| * திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் .. | 316—320 |
| * திரு. கு. சுப்பராயன் .. | 320—323 |

| | | |
|---|---|---|
| திரு. ஆ. கா. அ. அப்துல்சமத் | .. | 323—329 |
| திரு. கு. ரமணி | .. | 330—338 |
| 5. அறிவிப்புகள்— | | |
| (அ) எதிர்பாராச் செலவு நிதியச் (திருத்த) சட்டமுன்வடிவு, 1986. | | 270 |
| (ஆ) முதல் துணை நிதி நிலை அறிக்கை, 1986-87, வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்தல். | | 276 |
| 6. முதல் துணை நிதி நிலை அறிக்கை, 1986-87, அளித்தல். | | 271—274 |
| 7. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1980-81, அளித்தல். | | 274—275 |
| 8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள். | .. | 338—339 |


## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**1986, நவம்பர் 17, திங்கட்கிழமை**

**கார்த்திகை 2, அட்சய, திருவள்ளுவர் ஆண்டு 2017.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து"

வேறொரு சொல் அந்தச் சொல்லை வெல்லுஞ் சொல்லாக இல்லாதிருத்தலை அறிந்த பிறகே சொல்லக் கருதியதைச் சொல்ல வேண்டும்.

### 1. வினாக்கள்— விடைகள்

**உடுக்குறியிட்ட வினாக்கள்.**

**கிராம நிர்வாக அலுவலர்கள்.**

21 —(*வினா எண் 5704) திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தமிழ்நாட்டில் தற்பொழுது எத்தனை கிராம நிர்வாக அலுவலர்கள் (V.A.O.) பதவிகள் காலியாக உள்ளன? மாவட்டவாரியாக?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்த விவர அறிக்கை ஒன்று @ பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை எக்ஸ்.வி.ஏ.ஓ. க்களுக்கு வேலை அளிக்கப்பட்டு இருக்கிறது? காலியாக உள்ள இடங்களில் முன்னாள் கிராம நிர்வாக அலுவலர்களின் வாரிசுகளின் வயது, கல்வி போன்றவைகளில் உள்ள விதிகளைத் தளர்த்தி அவர்களை நியமிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய நான் விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்த பணியிடங்கள் கிராம நிர்வாக அதிகாரிகளைப்பொறுத்து 12,498. அதிலே முன்னாள் கிராம அதிகாரிகளாக இருந்து கிராம நிர்வாக அலுவலராக நியமனம் செய்யக் கூடிய தகுதி, திறமை வாய்ந்தவர்களைத் தேர்ந்தெடுத்து அந்தப் பணிகளில் அமர்த்திய வகையில் 5,027 பேர் அப்படி அமர்த்தப்

@ 228 ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

பட்டிருக்கிறார்கள். தேர்வாணைக் குழுவினால் நியமிக்கப்பட்டு
பணியாற்றி வருகிறவர்கள் 7,147 பேர். ஆக, 12,174 பேர்கள்
இப்பொழுது இந்தவகையிலே நியமிக்கப்பட்டு இருக்கின்றார்கள்.
இப்பொழுது இடையிலே ஏற்பட்ட வகையிலேயும், வேறு பல
வகைகளிலேயும் ஏற்பட்ட காலியிடங்கள் 195 இடங்கள் இருக்
கின்றன. தேவைக்கு மேல் ஒரு 15 சதவீதம் கூடுதலாகவே
தேர்வாணைக் குழுவின் மூலம் தேர்ந்தெடுத்து வைக்கின்ற
முறையையும் நாம் கையாண்டு வருவதன் காரணமாக மேற்
கொண்டு தேர்ந்தெடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் 382 பேர்
களுக்குத் தக்க பயிற்சி அளிப்பதற்கான செயற்குறிப்பை நாம்
கேட்டிருக்கிறோம். அந்தப் பயிற்சி அளித்து வந்ததற்குப் பிறகு
இந்த 195 இடங்கள்—இப்பொழுது காலியாக இருக்கின்றன—
விரைவிலே நிரப்பப்படும்.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தகுதியுள்ள கிராம நிர்வாக அலுவலர்களுக்கு
வருவாய்த் துறை ஆய்வாளர்களாகப் பதவி உயர்வு அளிப்பது
குறித்து அரசு ஏதேனும் முடிவு எடுத்துள்ளதா என நான் அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, வருவாய்த்துறை கிராம நிர்வாக அதிகாரி
கள், வருவாய்த்துறை அதிகாரிகளாகப் பதவி உயர்வு பெறுவதற்கு
விதிமுறைகள் எல்லாம் இருக்கின்றன. அதற்குரிய தகுதி பெற்ற
வர்கள் அதற்கானகாலியிடங்கள் ஏற்படுகின்றபொழுது சீனி
யாரிட்டியினுடைய அடிப்படையிலே தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் ; மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிக்க நிதியமைச்சர் அவர்கள்
சொல்லுகின்ற நேரத்திலே, மொத்தம் உள்ள பணியிடங்கள்
12,498-இலே பணி நீக்கம் செய்யப்பட்டவர்களிலே 5,027 பேர்
மட்டும் மீண்டும் பணியிலே சேர்த்துக் கொள்ளப்பட்டதாகக்
கூறினார்கள். இந்த வழக்கு உச்ச நீதிமன்றத்திற்குச் சென்ற
நேரத்திலே அந்தப் பணி நீக்கம் செய்யப்பட்ட கிராம அதிகாரி
களினுடைய நிலையினை மனிதாபிமான அடிப்படையிலே அணுக
வேண்டுமென்று சொன்னதற்கிணங்க—இப்படி 7,400—க்கு அதிக
மானவர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டிருக்கின்ற காரணத்தினாலே
அவர்களுடைய நிலையை உணர்ந்து அவர்களுக்கு ஏதாவது நிதி
உதவி வழங்குவதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறதா? அவர்
களுடைய வாரிசுகளுக்கு தகுதியின் அடிப்படையிலே வேலை
கொடுப்பதிலே முன்னுரிமை ஏதேனும் வழங்கப்படுமா என அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கின்ற
ஐந்தரை கோடி மக்களிடத்திலேயும் நாம் மனிதாபிமானம்
காட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்தக் கிராம





அதிகாரிகளாக வேலை பார்ப்பவர்களுக்கு மட்டும் அல்ல.
அவர்களுக்கு வேலை இல்லாமலேயே மூன்றாண்டுகளுக்கு சம்பளம்
நிரம்ப கொடுத்துக் கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே, அவர்
களுடைய வழக்குகள் கடைசி வரையிலேயும் சென்று உச்ச
நீதிமன்றத்திலே அவர்களுடைய வழக்குகள் தள்ளுபடி
செய்யப்பட்டன. ஆனால் உச்ச நீதிமன்றம் ஒரு குறிப்பு
தந்தது. அவர்களில் யார் யார் தகுதி படைத்தவர்களோ,
வயதும் இருந்து, தகுதியும் இருந்து, அவர்களுக்கு படிப்பும்
இருந்தால் அவர்களுக்கு மட்டும் வேலை தாருங்கள் என்று
சொன்னதன் பேரில் அவர்களுக்கு மட்டும் 5,027 பேர்களுக்கு
வேலை தரப்பட்டிருக்கிறது. மற்ற வகையில் தகுதி குறைவான
வர்களுக்கு விதிகளைத் தளர்த்தவோ, அப்படிப்பட்டவர்களுக்கு
மாற்று வேலை தர வேண்டிய அவசியமோ இல்லை. வேலை
வாய்ப்பகத்திலே அவர்கள் பதிவு செய்துகொண்டு, உரிய முறை
களில் விண்ணப்பிப்பார்களானால் அந்த வகையில் தருவோம்.
முன்னுரிமை தருவது என்ற பேச்சுக்கு இதில் இடமே இல்லை.
விதிகளைத் தளர்த்துவதாகவும் இல்லை.

திரு. இரா. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே,
முன்னாள் வி. ஏ. ஓ.-க்கள் எஸ். எஸ். எல். சி.யில் தவறிய
பாடத்தை மீண்டும் எழுதி தகுதிக்குரிய மார்க்குகள் வாங்கி
யிருந்தால் அவர்களை மீண்டும் அப்பணியில் அமர்த்த அரசுக்கு
உத்தேசம் உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தினுடைய
தீர்ப்புக்கு முன்னால் அவர்கள் அந்தத் தகுதியைப் பெற்றிருப்பார்
களானால் அவர்களுக்குத் தந்திருக்கலாம். ஆனால் அதன் பிறகு
தேர்வாணைக் குழுவின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்
களுடைய பட்டியல் வரிசையாக இருக்கும்போது அவர்களை
விட்டுவிட்டு—அதற்குப் பிறகு இவர்கள் தேர்வு பெற்றார்கள்.
ஆகவே இவர்களை நியமிப்பது என்று வருகின்றபொழுது,
தேர்வாணைக் குழுவினுடைய பட்டியலில் வரிசையாக இருப்பவர்
களைப் புறக்கணிப்பது என்ற நிலைமை ஏற்படும். ஆகவேதான்
அதற்குப் பிறகு அவர்கள் தகுதிக்குரியவர்களாக ஆக்கி
கொண்டாலும் தேர்வாணைக் குழுப் பட்டியலில் உள்ளவர்களைத்
தேர்ந்தெடுத்ததற்குப் பிறகுதான் இவர்களை கவனிக்க வேண்டி
யிருக்கும். இப்பொழுது 382 பேர்கள் தேர்வாணைக் குழு
வினுடைய பட்டியலில் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்
களுக்குத்தான் பயிற்சி அளிக்க இப்பொழுது திட்டம் வகுக்கப்
பட்டிருக்கிறது.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, கிராம நல அலுவலர்களுக்கென்று தனியாக
அலுவலகம் கிடையாது. அவர்களோடு தொடர்பு கொள்வ
தென்றால் சிரமமாக இருக்கிறது. அதே நேரத்தில் அவர்களது
அலுவலக கோப்புகளை வைத்துக்கொள்ள பாதுகாப்பான இடம்

இல்லாத நிலைமை இருக்கிறது. எனவே இதைக் கவனத்தில் கொண்டு தனி அலுவலகம் அமைக்கப்படுமா அல்லது மாற்று ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களுக்கே நீண்டகாலமாக தனி வீடு இல்லை: தனி அலுவலகம் இல்லை; இப்பொழுது 4 ஆண்டுக்காலமாகத்தான் அவர்களுக்குத் தனி அலுவலகத்தோடு சேர்ந்த ஒரு வீடு கட்டிக் கொடுக்கின்ற ஏற்பாடு செய்து, கிட்டத்தட்ட 900-க்கு மேற்பட்ட வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, இன்னும் ஓரிரண்டு ஆண்டுக் காலத்திற்குள்ளாக எல்லோருக்கும் வீடு கொடுக்கின்ற முயற்சி வெற்றிகரமாக நடைபெற்றுவிடும். அதற்குப் பிறகு இதுபற்றிய யோசனையிலே நாம் ஈடுபட வேண்டியவர்களாக இருப்போம். இப்போது அதுபற்றிய திட்டம் இல்லை.

திரு. டி. என். முருகானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணி நீக்கம் செய்யப்பட்டவர்களில் 12,174 பேர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொண்டதாக நிதி அமைச்சர் அவர்கள் இங்கே பதில் சொன்னார்கள். (குறுக்கீடு) மேற்சொன்ன நிலையிலிருந்து முற்றிலும் நிராகரிக்கப்பட்டு எந்தப் பயனும் பெறமுடியாத கிராம உத்தியோகஸ்தர்களுக்கு அவர்களுடைய கடந்த காலப்பணியை நினைவில் நிறுத்தி, மாதந்தோறும் ஓய்வூதியம் வழங்கும் எண்ணம் அரசிடம் உள்ளதா என மாண்புமிகு நிதி அமைச்சரின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் மறுபடியும் தங்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் ஓய்வூதியம் தர வேண்டுமென்றும் வசதி வாய்ப்புகள் கொடுக்க வேண்டுமென்றும் கருணை காட்ட வேண்டுமென்றும் ஈவு காட்ட வேண்டுமென்றும் இரக்கம் காட்ட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டுதானிருக்கிறார்கள். இவையெல்லாம் காட்டுகின்ற நிலையிலே இல்லை.

திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது புதிதாக நியமனம் செய்யப்பட்ட கிராம நல அலுவலர்களில் எத்தனை பேர்கள் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். அவர்கள் 18 சதவீதம் உள்ளனரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12,174 பேர்களில் பிற்பட்ட வகுப்பினர் மட்டும் 7,623 பேர்கள் இருக்கிறார்கள்; தாழ்த்தப்பட்ட வகுப்பினர் 2,066 பேர்கள் இருக்கிறார்கள்; ஏனையோர் 2,485 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களில் பெண்கள் மட்டும் 192 பேர்கள் இருக்கிறார்கள். ஆகவே, அந்தச் சதவிகிதத்திற்குக் குறையாமல்தான் நியமனம் செய்யப்பட்டிருக்கிறது.



டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது நியமிக்கப்பட்டுள்ள கிராமநல ஊழியர்கள் அவரவர் களுடைய சொந்தப் பகுதியிலே, வட்டத்திலே இருக்கக்கூடாது என்ற நியந்தனை இருப்பதாக அறிகிறேன். அப்படி நிபந்தனை இருப்பதற்குக் காரணம் என்ன? அந்தப் பகுதியிலேயே இருப் பவர்களாக இருந்தால், கேட்கக்கூடிய எந்தக் குறிப்பை வேண்டு மானாலும் உடனடியாக பெறக்கூடிய வல்லமை பெற்றவர்களாக இருப்பார்கள். அப்படிப்பட்ட நிலைமை இருக்குமானால் மேலும் அரசுக்கு உதவியாக இருக்காதா, பொது மக்களுக்கு உதவியாக இருக்காதா? இப்பொழுது இருக்கக்கூடிய பிரச்னைகள்பற்றி ஏதாவது கேட்டால் 8 நாள், 10 நாள் ஆனால் கூட உறுதியாகக் கொடுக்க முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதை அரசு மறுபரிசீலனை செய்து தகுதி பெற்றவர்கள் அந்தப் பகுதியிலேயே பணி செய்யும் வாய்ப்பினை உருவாக்கித் தர முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, வெள்ளைக்காரர்கள் இந்த நாட்டை ஆண்ட காலத்தில் இந்தக் கிராம அதிகாரிகள் பணிகளை அந்தந்தக் கிராமத்தைச் சேர்ந்த நாட்டாண்மைக்காரர்கள், பெரியதனக்காரர்கள் நிர்வகித்து வந்தார்கள். அவர்கள் கிராம மக்களை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தார்கள், செல்வாக்குப் படைத்தவர்களாக அவர்கள் இருந்தார்கள். அப்படிப்பட்டவர்களிடத்திலே தான் கிராமங்களை நிர்வகிக்கும் பொறுப்பை வெள்ளைக்காரர்கள் ஒப்படைத்திருந் தார்கள். அப்போது 'பிரிட்டிஷ் மானுவலிலே' கூட இதுபற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த வில்லேஜ் முன்சீப்கள் வருகிற போது கலெக்டர் அவர்களுக்கு சேர் கொடுத்து உட்கார வைக்க வேண்டும் என்று இருக்கிறது. ரெவின்யு இன்ஸ்பெக்டர், தாசில்தார், டெபுடி கலெக்டர் போன்றவர்கள் எல்லாம் வருகிற போது, அவர்கள் எல்லாம் நின்றுகொண்டிருக்கும்போது இந்த வில்லேஜ் முன்சீப்களுக்கு நாற்காலி கொடுத்து உட்கார வைக்க வேண்டுமென்று சொல்வதற்குக் காரணம் ஜமீன்தார்களாக இருந்தவர்கள் கூட அப்போது வில்லேஜ் முன்சீப்களாக இருந்திருக் கிறார்கள். அப்படிப்பட்டவர்களிடம் அப்போது அந்த ஊர்களைப் பற்றிய விவரங்களைக் கேட்டால் அவர்களுக்கு முழுமையான விவரம் தெரியும், அந்த ஊர்களும் அவர்களுடைய கட்டுக்கு அடங்கும்; அவர்களுடைய செல்வாக்குக்கு கீழே ஊர்கள் இருக்கும். அவர்கள் எந்த ஊதியத்தையும் எதிர்பார்க்க மாட்டார்கள். அவர்கள் தன்னுடைய கையிலேயிருந்து கூட செலவிடும் நிலைமையில் இருந்தார்கள். பின்னால் அந்த நிலைமை மாறி, வசதி வாய்ப்பு இல்லை என்றாலும் ஊரைக்

காப்பாற்றுவார்கள் என்ற நிலைமை போய் படிப்படியாக அப்படிப்பட்ட நிலைமைகள் போய், என்ன என்ன எடுக்கலாம், எப்படி எப்படி எடுக்கலாம், எப்படிப்பட்ட வசதிகளை எட்டிப் பிடிக்கலாம் என்ற நிலைமை வந்துவிட்டது. அது மட்டுமில்லாமல் ஊரிலே மாச்சரியங்கள் வந்து, வேணடியவர்கள், வேண்டாதவர்கள் என்ற நிலைமைகளும் வருகின்ற காரணத்தால் அவர்களை மற்ற மற்ற ஊர்களுக்கு மாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. எப்படி மற்ற, மற்றத் துறைகளிலே பணியாற்றுகின்ற பல்வேறு ஊழியர்கள் அவர்களுடைய சொந்த ஊரிலே இருந்தால் வேண்டியவர்களுக்குச் சலுகை காட்டுவார்கள், உற்றார் உறவினர்களுக்குச் சலுகை காட்டுவார்கள், சொந்தக்காரர்களுக்கு சலுகை காட்டுவார்கள் என்று கருதி மற்ற, மற்ற ஊர்களுக்கு மாற்றப் படுகின்ற விதிமுறைகள் இருக்கின்றனவோ அந்த அடிப்படையிலே இந்த கிராம அதிகாரிகளுக்கும் வைத்திருக்கிறோம். இப்படிப் பட்ட காரணங்களுக்காகத்தான் சொந்த ஊரை விட்டு, மற்ற ஊர்களில் அவர்கள் பணியாற்றுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறதே தவிர வேறல்ல. மற்ற மற்றத் துறைகளிலே இருப்பவர்கள் எப்படி அவர்களுடைய கடமையையும் பொறுப்பையும் உணர்ந்து விரைவிலே தேவையான விவரங்களைத் தெரிந்துகொள்கிறார்களோ, புரிந்துகொண்டு பணியாற்றுகிறார்களோ அதைப்போன்று இவர்களும் தெரிந்துகொண்டு, புரிந்துகொண்டு பணிகளைச் செய்ய வேண்டும்.

**அரசு நிலங்களிலுள்ள தனியார் பனைமரங்களுக்குத் தீர்வை.**

22—(*வினா எண் 8310) திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு நிலங்களில் உள்ள தனியார் பனை மரங்களுக்கு (2C பட்டா மரங்களுக்கு) விதிக்கப்படும் தீர்வை ரூபாய் ஒன்றாக உயர்த்தப்பட்டுள்ளதால் ஏழைகள் பாதிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) எந்த அடிப்படையில் தற்போது விதிக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) ஏழைகள் பாதிக்கப்பட்டிருப்பதாக அரசு கருதும் வாய்ப்பு ஏதும் எழவில்லை.

(ஆ) தேங்காய், மா, புளி ஆகிய பொருள்களின் சந்தை விலை வெகுவாக உயர்ந்திருப்பதன் காரணமாக அம்மரங்களின் 2சி மரத்தீர்வையை உயர்த்துவதன் மூலம் அரசுக்கு கூடுதல்



வருவாயும், அதன் மூலம் ஊராட்சி ஒன்றியத்துக்கு பொருளாதார முன்னேற்றம் ஏற்படவும் வாய்ப்புள்ளது என்று தமிழ்நாடு மாநில கணக்காயர் கருத்துத் தெரிவித்ததன் பேரில் பலதரப்பட்ட மரங்களுக்கு மரவரி இரட்டிப்பாக்கி நிர்ணயிக்கப்பட்டது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : தலைவரவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது தென்னை, மா, புளி போன்ற மரங்களுக்கு வருமானம் அதிகரித்திருக்கிறது. ஆகையால் வரியை உயர்த்தியிருக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் பனை மரத்தின் வருமானம் அந்த அளவுக்கு உயரவில்லை. பனைகளிலே ஆண் பனை என்றும் பெண் பனை என்றும் உண்டு. பெண் பனைகளிலிருந்து ஓலை, நுங்கு, இதரப்பொருள்கள் கிடைப்பதால் வருமானம் சற்று கூடுதலாக கிடைத்தாலும் ஆண் பனைகளிலிருந்து அந்த அளவுக்கு வருமானம் கிடைப்பதில்லை. ஆண்டுக்கு ஒன்றரை ரூபாய்க்குமேல் ஒரு பனைமரத்திலிருந்து வருமானம் வருவதில்லை. ஒரு தடவை ஒரு பனை மரத்தில் ஏறுவதற்கு மட்டும் எட்டு அணா கூலி வாங்குகிறார்கள். மொத்தத்தில் ஒரு ரூபாய்க்கும் குறைவாகவே ஒரு பனை மரத்திலிருந்து வருவாய் வருவதால், இன்றைக்கு 2-சி பட்டா வைத்திருப்பவர்கள் இந்த வரி உயர்வினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே ஆறு பைசாவாக இருந்த வரியை இன்றைக்கு திடீரென்று ஒரு ரூபாயாக உயர்த்தியிருப்பது சரியல்ல, இதைக் குறைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பனை ஒன்றுக்கு ஆண்டு ஒன்றுக்கு 50 காசு வரி இருந்தது. இப்போது அது ஒரு ரூபாயாக ஆக்கப்பட்டிருக்கிறது. பனை மட்டைகளை விசிறி பண்ணி விற்றாலே அதிகமான வருமானம் வரும். பனை மரத்தைப் பார்த்தால் அநேகமாக எல்லா மட்டைகளையும் சீவிவிட்டு, சிண்டு வைத்த மாதிரி இரண்டே இரண்டு மட்டைகளைத்தான் விட்டுவைத்திருப்பார்கள். அவர்களுக்கு கட்டுப்படி ஆகவில்லை என்றால் விட்டுவிடலாம்; மற்றவர்களுக்கு தர அரசு தயாராக இருக்கிறது.

திரு. டி ஆர். வேங்கடரமணன்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பனை ஓலை மூலமே வருமானம் அதிகமாக வரும் என்று சொல்கிறார்கள். ஆனால் கிராமப்புறங்களில் ஒரு பனை ஓலையை பத்து காசுக்குத்தான் வாங்குகிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடியாக விசாரித்துப் பார்த்தால் கூட இந்த உண்மை தெரியும். ஒரு பனை மரத்திலிருந்து ஆண்டுக்கு சுமார் பத்து ஓலைகள்தான் வெட்டுகிறார்கள். அதனால் ஒரு பனை மரத்திலிருந்து ஒரு ரூபாயும் அதற்குக் குறைவாகவுந்தான் வருமானம் கிடைக்கும். அந்த ஓலையை விசிறியாகச் செய்து விற்றால் நல்ல வருமானம்

வரும் என்று சொன்னார்கள், அதை நானும் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் அந்த வருமானம் இடையிலே இருக்கின்ற இடைத்தரகர்களுக்குத்தான்போகிறதே தவிர 2-சி பட்டா வாங்கியவர்களுக்குக் கிடைக்கவில்லை. ஏற்கெனவே மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் 6 பைசாவாக இருந்த வரி, 50 பைசாவாக உயர்த்தப்பட்டு, இப்போது, ஒரு ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. வருமானமே ஒரு ரூபாய்தான் வருகிறது என்ற காரணத்தால் இந்த வரியைக் குறைக்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நெடுங்காலமாக 50 காசாக இருந்தது இப்போது கடந்த பத்தாண்டு காலத்திற்குள்ளாகப் பார்த்தால் 4 மடங்காக எல்லாப் பொருள்களின் விலைகளும் ஏறியிருக்கின்றன. ஒரு ஆண்டிற்கு 365 நாட்கள், 12 மாதங்கள். அதிலே ஒரு பனை மரத்திலிருந்து 1 ரூபாய் தான் வருமானம் வருகிறது. அதை நம்பித்தான் ஒரு ஏழை வாழ்கிறான் என்று சொல்வதை ஏற்றுக் கொள்வதற்கில்லை. அவர்களால் வாழ முடியாவிட்டால், அந்தப் பனை மரத்தை விட்டு விடுவது நல்லது. அதை மற்றவர்களுக்குக் கொடுக்கலாம் இல்லாவிட்டால் காதி வில்லேஜ் இன்டஸ்ட்ரீஸ் இலாகா அந்த மரங்களை எல்லாம் எடுத்துக் கொள்ள ஆயத்தமாக இருக்கிறது.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்)** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 2—சி பட்டாவிற்கான வரி ஒரு மடங்குதான் உயர்ந்திருக்கிறது என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மாநிலத்தில் பல மடங்கு பலன் தருகிற புளிய மரங்களும், தென்னை மரங்களும் தற்போது இன்னும் கூடுதலாக பலன் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. குறைந்தபட்சம் புளிய மரம் ஒன்று ஆண்டுக்கு 200 ரூ. வருமானம் கொடுக்கிறது. அதேபோல தென்னை மரம் எவ்வளவுதான் மோசமான பலன் தருகிற மரமாக இருந்தாலும் கூட ஆண்டுக்கு 75 ரூபாயாவது கொடுக்கிறது, அரசின் வருவாயைப் பெருக்க வேண்டும் என்பதற்கான வழிமுறைகளைப் பார்க்கும்போது இந்த வருவாயை உத்தேசித்தாவது இன்னும் கூடுதலான வரியை இது போன்ற மரங்களுக்கு விதிப்பதற்கு அரசு மேலும் பரிசீலிக்குமா? அதே போல யாரும் பாதுகாக்கத் தேவையில்லாத புளியமரம் போன்றவைகளை சில தனிப்பட்டவர்கள், 500 மரங்கள் ஆயிரம் மரங்கள் என்று எடுத்து 2-சி பட்டா வாங்கி வைத்திருக்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட 2-சி பட்டா கொடுப்பதற்கும் ஒரு உச்சவரம்பு ஏற்படுத்த அரசு யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்கள் சொல்லிய யோசனை மிக சீரிய யோசனை. நல்ல யோசனை. இதன் மூலம் வருவாய் அரசுக்கு அல்ல, பெரும் தொகை ஊராட்சி ஒன்றியங்களுக்குப் போகிறது. இப்போது ஊராட்சி ஒன்றியங்கள் எல்லாம் நிதி வசதி இல்லை என்று தவித்துக் கொண்டிருக்கிற நிலையில் இப்படி வருமானத்தைப் பெருக்குவதற்கு வாய்ப்பு வசதிகள் கிடைப்பது நல்லது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் சொல்லியதைப் போல இப்போது புளிய மரங்களுக்கு 6 ரூபாய் தான் விதிக்கிறோம். மாமரத்திற்கும் 6 ரூபாய். பலா மரத்திற்கு 6 ரூ. தென்னை மரத்திற்கு 8 ரூபாய் விதிக்கிறோம். அவர்கள் சொல்லியது மாதிரி உற்பத்தி அதிகமாகி இருக்கிறது. இரண்டு தேங்காய்களின் விலையே 8 ரூபாய்க்கு வருகிறது. இதையெல்லாம் பார்க்கிறபோது, இந்த வரிகளைக் கூடுதலாக ஆக்குவது, அரசுக்கு கூட அல்ல, நிதித் துறைக்கு, நிதியமைச்சருக்கு கூட அல்ல, ஊராட்சிகளுக்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதிக பலன், வருவாய் கிடைக்கும். ஆகவே, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் கூறிய யோசனையை மனத்திலே வைத்துக் கொண்டு இதற்கு என்ன செய்யலாம் என்பதை அரசு யோசிக்கும்.

### நத்தம் தொகுதி சானரார்பட்டி ஒன்றியத்திலுள்ள எமக்கலாபுரம் கிராம விவசாயிகள் கட்டும் தண்டத்தீர்வை.

23 (*வினா எண் 6922) **திரு. மெ. ஆண்டிஅம்பலம்** : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) நத்தம் தொகுதி, சானார்பட்டி ஒன்றியம், எமக்கலாபுரம் கிராமத்தின் அயன் சர்வே நெ. 594—ல் ஏக்கர் 104—ம் சென்ட் 99—ம் கொண்ட அரசு தரிசு நிலத்தில் நிலமற்ற ஏழை விவசாய மக்கள் தலா 2 ஏக்கர் வீதம் விவசாயம் செய்து, தண்டத்தீர்வையைப் பல வருடங்களாகக் கட்டி வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அவர்களுக்கு பட்டா வழங்கப்பெறும்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் வட்டம், எமக்கலாபுரம் கிராமம் புல எண் 594 இல் உள்ள 104.99 ஏக்கர் நிலங்கள் தலா 2 ஏக்கர் வீதம் விவசாயிகளின் தொடர்ச்சியான ஆக்கிரமிப்பில் இல்லை. அந்நிலங்கள் விவசாயத்திற்கு லாயக்கற்ற நிலங்களாக இருப்பதால் ஒப்படை செய்வதில் யாருக்கும் பயனிருக்காது.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் 2 ஏக்கர் 3 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். அதிலே புஞ்சை நிலமும் உள்ளது; புஞ்சை விவசாயம் செய்து வருகிறார்கள். ஆகவே புளிய மரங்களுடைய கன்றுகளை நட்டு, அவற்றை 2–சி பட்டாவாகக் கொடுப்பதற்கு, கனம் அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புலத்திலே ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட விவரங்களைப் பற்றி, அவர்கள் சொல்லுகிறபடி, 1391 ஆம் பசலியில் திரு. பழனிச்சாமி அம்பலம் என்பவர் 3 சென்ட் நிலத்தில் மா, புளிய மரங்களை நட்டு ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள். அந்தப் பசலியில் அதைத் தவிர வேறு ஆக்கிரமிப்புகள் இல்லை. 1392 ஆம் பசலியில் திரு. பழனிச்சாமி அம்பலம் என்பவருடைய மரம் நடப்பட்ட பகுதி 3 சென்டும் முள் செடிகள் வெட்டி காலி செய்யப்பட்டு, முள் வேலி போடப்பட்ட 4.14 ஏக்கர் நிலத்திற்கும் பி.மெமோ வழங்கப் பட்டிருக்கிறது. அந்தப் பசலியிலும் அதைத் தவிர வேறு ஆக்கிரமிப்பு இல்லை.

(முற்பகல் 9–20)

1393 ஆம் பசலியில் திரு. பழனிச்சாமி அம்பலம் என்பவரால் செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்புடன் 8 நபர்கள் தலா 2 ஏக்கர் வீதம் சோளம், தினை போன்ற புஞ்சைப் பயிர்களை விதைத்து ஆக்கிரமிப்பு செய்து உள்ளனர். ஆனால் அதில் பலன் இல்லை என்று தெரிகிறது. அதனால் அடுத்த பசலியில் அவர்கள் ஆக்கிரமிப்பு செய்யவில்லை. 1394 ஆம் பசலியில் திரு. பழனிச்சாமி அம்பலம் என்பவருடைய மரங்கள் நடப்பட்ட பகுதியில், அதாவது 3 சென்ட் நிலத்தில் மட்டும் ஆக்கிரமிப்பு இருந்தது. அந்தப் பசலியில் வனத்துறையினர், அந்த இடத்தில் சீத்தை கன்றுகள் நட்டனர். எனவே ஆக்கிரமிப்புகள் இல்லை. 1395 ஆம் பசலியில் திரு. பழனிச்சாமி அம்பலம் என்பவர் மரங்கள் நட்டு ஆக்கிரமிப்பு செய்த 3 சென்ட் நிலம் மட்டும் ஆக்கிரமிப்பாக உள்ளது. மேலும் இதைப் பார்வையிட்டதில் இவர் ஏற்கனவே இருந்த முட்களை அகற்றி முள்வேலி அமைத்திருக்கிறார். மறுபடியும் முளைத்த முட்புதர்களை அகற்றி முள்வேலி அமைத்து உள்ளார். இது சமீபத்தில் செய்த சீர்திருத்தமாகும். இதைப் போல 20 நபர்கள் இந்த நிலத்தில் புதர்களை ஆங்காங்கு அகற்றி அவர்கள் குறிப்பிட்ட அளவிற்கு வேலி போல் முட்களை அமைத்துள்ளார்கள். ஆகவே இந்த நிலம் மலைச்சரிவான கல்லாகவும், சரளையாகவும் இருப்பதால் விவசாயத்திற்குப் பயன்படாது என்றும், வனத்துறையால் சமூக காடுகள் அமைக்கப் பயன்படுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால்





திரு. பழனிச்சாமி அம்பலம் 3 சென்ட் நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்து மரங்கள் நட்ட இடத்தில் புளி 4, மா 1, முருங்கை 3, உலவு 2, பனை சிறியது 13 உள்ளன. இதிலே புளி, மா மரங்கள் தற்போது பலனுக்கு வரத் தொடங்கியுள்ளன, இது வரையில் அடமானம் கோரி மனு எதுவும் செய்யப்படவில்லை. இந்த மரங்களுக்கு 2–சி பட்டா மனுவைப் பெற்று மரப்பட்டா வழங்க திண்டுக்கல் வட்டாட்சியருக்கு அறிவுரைகள் தரப்பட்டிருகின்றன. 2–சி பட்டா வேண்டுமென்றால் தரலாமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் சொல்கிறபடி இவைகள் விவசாயத்திற்கு, நஞ்சை விவசாயத்திற்கும், மற்ற விவசாயத்திற்கும் பயன்படவில்லையென்றும், 2–சி பட்டா வழங்கலாம் என்றால் வழங்கலாம் என்றும் வட்டாட்சியருக்கு அறிவுரை தரப்பட்டிருக்கிறது.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : தலைவர் அவர்களே, விவசாயிகள் ஆக்கிரமிப்பு செய்திருக்கிற இடங்களை காட்டு இலாக்கா மூலமாக அகற்ற வேண்டுமென்ற ஒரு நோக்கத்தோடு அவர்கள் தங்கள் மரங்களை நடுகிறார்கள். ஏழை விவசாயிகள் 2 ஏக்கர், 3 ஏக்கர் என்ற அளவில் தான் விவசாயம் செய்கிறார்கள். அவர்கள் சோளம், கம்பு, கேழ்வரகு போன்றவைகளை விவசாயம் செய்கிறார்கள். அந்த விவசாயத்தையே நம்பி வாழக்கூடிய ஏழை விவசாயிகள் என்ற அடிப்படையில் கனம் அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியில் விவசாயம் செய்கிற ஆயிரக்கணக்கான ஏழை விவசாயிகளுக்கு 2 அல்லது 3 ஏக்கர் வீதம் பட்டா செய்து வழங்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலில் சொன்னேன். 20 நபர்கள் முயன்றார்கள். ஒரு ஆண்டு சோளம் மற்றவைகள் போட்டார்கள் பலன் இல்லையென்று பின்னால் விட்டு விட்டார்கள். அடுத்த பசலியிலிருந்து செய்யவில்லை. ஒருவர் மட்டும் தான் பழனிச்சாமி அம்பலம் என்பவர் பயிர் செய்திருக்கிறார். மரங்களை நட்டிருக்கிறார். அதை அவர் முயன்று செய்திருக்கிறார். அதற்கு 2–சி பட்டா வழங்கலாமென்று வட்டாட்சியருக்கு அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. மற்ற பல இடங்களில் அதை காடுகளாக வளர்ப்பதற்கு வனத்துறையினர் முயன்று கொண்டு வருகிறார்கள். இதிலே ஆக்கிரமிப்பு எதுவும் செய்யப்படவில்லை.

### சிவகாசி நகர் மத்திய கூட்டுறவு வங்கிக் கட்டிடம்

24–(* வினா எண். 7777) திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி நகரில் மத்திய கூட்டுறவு வங்கியின் கிளை வங்கி வாடகைக் கட்டிடத்தில் இயங்குவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், கட்டிடம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பொருத்தமான காலிமனை கிடைக்குமானால், கட்டிடம் கட்ட இராமநாதபுரம் மத்திய கூட்டுறவு வங்கி தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளும்.

**திரு. வி. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, தற்போதுள்ள கிளை வங்கியின் மேலாளருக்கு அந்தக்கட்டடத்தின் உரிமையாளர் கட்டிடத்தை காலி செய்ய வேண்டுமென்று வக்கீல் நோட்டீஸ் அனுப்பியுள்ளதாக அறிகிறேன். இதை முன்னிட்டாவது விரைவில் அதற்கு கட்டிடம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மத்திய கூட்டுறவு வங்கியினுடைய சிவகாசி கிளை தற்போது டி. ஆறுமுகசாமி என்பவருடைய கட்டிடத்தில் 550 ரூபாய் வாடகையில் இருந்து வருகிறது. மேற்படி கிளைக்கு சொந்தமான கட்டடம் கட்ட வேண்டுமென்று ஒரு பொது காலி மனையை திருமதி அமிர்தவல்லி, ஜானகி அம்மாள் ஆகியவர்களிடமிருந்து வங்கி கிரயம் பெற நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிற நிலையில் அதை வேறொருவர் வாங்க முயற்சி செய்து, வங்கிக்கு தருவதற்குப் பதிலாக வேறு ஒருவருக்கு தந்து விட்டார்கள். ஆனால் அவர்களே வேறொரு இடத்தை காண்பித்து அந்த இடத்தை வேண்டுமென்றால் தரலாமென்று சொன்னபோது, வங்கியினர் சென்று அதைப் பார்வையிட்டபோது அந்த காலி மனை வங்கிக்கு கட்டடம் கட்ட ஏற்றதாக இல்லையென்ற நிலையில், சிவகாசி நகரில் வேறு இடம் பெறுவதைப்பற்றி வங்கியினர் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் முயன்று ஏதேனும் பொருத்தமான இடத்தைத் தேர்ந்தெடுத்துத் தருவார்களானால் அதுமட்டுமல்லாமல் பரிந்துரை செய்வார்களானால், அங்கே இருப்பவர்களிடத்தில் சொல்லி வாங்கித் தருவார்களானால், அப்படி வாங்கும்போது வேறு யாரும் வந்து குறுக்கிட்டு பேரம் பேசி வாங்காமல் தடுத்து நிறுத்துவார்களானால்' அந்த வங்கிக்கு கட்டடம் கட்டுவதற்கு வசதி ஏற்படும் இந்தப் பெரும் உதவியை மாண்புமிகு உறுப்பினர் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி இடம் கிடைக்குமானால் உடனடியாக கட்டடம் கட்டுவதற்கான எல்லா முயற்சிகளையும் சிவகாசி நகரைப் பொறுத்தவரையிலும் மேற்கொள்ளலாம்.

**குடியாத்தம் நகரசபையில் பணிபுரியும் ஊழியர்கள் ஆசிரியர்கள் சம்பளம்.**

25—(*வினா எண் 576) **திரு. ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) குடியாத்தம் நகரசபையில் பணிபுரியும் ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் சம்பளம் சரியாக அளிக்கப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மாதாமாதம் சம்பளம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) நகரசபையில் பணிபுரியும் எல்லா பணியாளர்களுக்கும் சம்பளம் வழங்குவது அந்தந்த நகரமன்றத்தின் பொறுப்பாகும், சம்பளம் வழங்க, நிதி பற்றாக் குறையை தவிர்க்க நகராட்சிகள் வழிவகை முன்பணம் கோரும் பொழுது, அந்நகராட்சி மன்றங்களுக்கு வழிவகை முன்பணம் அரசால் வழங்கப்படுகிறது. 1985—86-ம் ஆண்டில், குடியாத்தம் நகராட்சிக்கு ரூ. 7.50 இலட்சம் வழிவகை முன்பணத் தலைப்பில் வழங்கப்பட்டுள்ளது. 3—3—86-ல் அரசு ஐந்தாண்டுக்கொரு முறை சொத்து வரி சீராய்வின் மேல் விதிக்கப்பட்ட தடை நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

அதனால் பொது மக்களுக்கு போதுமான சேவையை அளிப்பதற்கோ அல்லது நகராட்சிகளை அன்றாடம் நடத்தி செல்வதற்கோ ஏற்படும் நிதி நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டிய நிலைமை இல்லாமல், எல்லா நகராட்சி மன்றங்களும் போதிய வருவாயை அதற்கேற்றவாறு உயர்த்திக் கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் நகரசபையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு 3, 4 மாதங்கள் சம்பளம் கொடுக்க முடியாத சூழ்நிலை இருந்தது, முன்னாள் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்திலே எடுத்துச்சொல்லி, இரண்டு முறைகள் 5, 5 இலட்சம் ரூபாய் கொடுத்தும்கூட, இரவிலே போராட்டம். பகலிலே உண்ணாவிரதம் என்றிருக்கும் சூழ்நிலை அந்த நகரத்தில் இருக்கிறது. அது மட்டுமல்ல, அங்கே பள்ளியைப் பெருக்கும் பெண்ணுக்கு மாதம் 20 ரூபாய், 30 ரூபாய்கூட சம்பளம் கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலை இருப்பதை அரசு அறியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு இந்தத் தகவல் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடத்தில் விவரங்கள் இருந்தால் தெரிவிக்கவும்.

**திரு. ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளியைப் பெருக்கக்கூடிய பெண்ணுக்கு ரூ. 30 சம்பளம் கொடுக்க முடியாத சூழ்நிலை அங்கே இருக்கிறது. அது மட்டுமல்ல, ஆசிரியர்களிடத்திலே லைப் இன்சூரன்சுக்காக

பெறக்கூடிய பணத்தை பூராவும் எடுத்து செலவழிக்கக்கூடிய சூழ்நிலை அங்கே இருக்கிறது. அதேபோல் ஒரு ஆசிரியர் இறந்தால், அவருக்குச் சேரவேண்டிய பிராவிடண்ட்பண்டு கொடுக்க முடியாத சூழ்நிலை அங்கே இருக்கிறது. இதற்கு அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆவன செய்யும்.

வேளாச்சேரி பகுதியில் குப்பைகளால் சுகாதாரக்கேடு

26 (*வினா எண்.2730—திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி வேளச்சேரி பகுதியில் குப்பைகளை கொட்டுவதால் சுகாதாரக் கேடு ஏற்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) வேளச்சேரி பகுதியில் துர்நாற்றம், மற்றும் ஈ, கொசு போன்ற பூச்சிகள் வராவண்ணம், சுத்தமான மண் தூவி பூச்சி மருந்து தெளிக்கப்பட்டுள்ளது, மேலும் இப்பகுதியில் குப்பை கொட்டுவதை மாநகராட்சி தற்போது நிறுத்தி விட்டது.

திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளச்சேரி பகுதியில் குப்பை கொட்டுவதை நிறுத்தியிருக்கிறார்கள். நன்றி. அதே நேரத்தில், 149 வது வட்டம் ஐ.ஐ.டி.க்கு எதிரில் என்னுடைய தொகுதியில் மறுபடியும் குப்பை கொட்டிக் கொண்டு வருகிறார்கள் என்று அந்த இடத்திலுள்ள மக்கள் எல்லாம் என்னிடத்திலும், நகரசபையிடத்திலும் பல புகார்களைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த இடத்திலிருந்து அந்த அப்புறப்படுத்துவதோடு, அந்த இடத்திலே வீசுகின்ற துர்நாற்றத்தை உடனடியாகத் தடுப்பதற்கு ஏதேனும் மருந்துகளைத் தெளிக்க தகுந்த நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. ஏ: கிருஷ்ணசாமி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும்.

திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து வருகின்ற குப்பைகளை எல்லாம் பயன்படுத்தி ஒரு உரத் தொழிற்சாலை ஆரம்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருப்பதாக சென்ற ஆண்டு இதே அவையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த உரத் தொழிற்



சாலையை உடனடியாக ஏற்படுத்தினால், இதுபோன்ற நிலைமைகளை சரி செய்வதற்கு ஏதுவாக இருக்கும். இப்படிப்பட்ட உரத்தொழிற்சாலையை உடனடியாகத் துவக்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்த தகவல் என்னிடத்தில் இல்லை. தனிக்கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 9—30)

திரு. எஸ். வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் கொட்டப்படுகிற குப்பைகள் மொத்தமாகச் சேருகின்றபோது அவற்றை எரிப்பது என்று ஆலோசனை செய்யப்பட்டதே அது நடைமுறைக்கு வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக்கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கடலாடித் தொகுதியில் சாயல்குடியில் பேருந்து நிலையம்

27—(*வினா எண்.4303) திரு. அ. பிரணவநாதன்: மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் கடலாடித் தொகுதி சாயல்குடியில் 1983-ல் பேருந்து நிலையத்திற்கு அடிக்கல் நாட்டப்படும் இதுவரை வேலையே துவங்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ). மற்றும் (ஆ.) அடிக்கல் நாட்டப்பட்ட போது, சாயல்குடி, ஊராட்சியாக இருந்தது. 1984ம் ஆண்டு அக்டோபர் திங்களில் இது பேரூராட்சி நிலைக்கு உயர்த்தப்பட்டது. பேரூராட்சி புதிதாக துவக்கப்பட்டதாலும், நிதி ஆதாரமின்மையாலும், வரி உயர்த்த அரசு தடை இருந்ததாலும், பேருந்து நிலையம் கட்டும் பணியை இதுகாறும் எடுத்துச்செய்ய இயலாமல் போய்விட்டது.

திரு. அ. பிரணவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சியானதற்குப் பிறகு எப்போது அந்த வேலை தொடங்கப்படும்? அல்லது அடிக்கல் நாட்டப்பட்ட அந்தப் பேருந்து நிலையத்தில் எப்போதுமே வேலை தொடங்கப்படாதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பேரூராட்சியினுடைய ஆண்டு வருமானம் 2 லட்சத்து 90 ஆயிரம் ரூபாயாக இருக்க, அதனுடைய ஆண்டு செலவினம் 2 லட்சத்து 10 ஆயிரம் ரூபாயாக இருப்பதால் இந்த நிலையிலே அந்தப் பேருந்து நிலையத்தைத் தொடர்ந்து எப்படிக் கட்டுவது என்பதை மீண்டும் அரசு ஆராயும்.

திரு. அ. பிரணவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதாவது அரசு நிதி மூலமாக அல்லது கடனாகவாவது வழங்கி அந்தப் பேருந்து நிலையத்தைக் கட்ட வேலை தொடங்க வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதாவது சாத்தியக் கூறு இருக்கிறதா என்று அரசு ஆராயும்.

## தருமபுரி மாவட்டம் பென்னாகரம் பேரூராட்சி இடத்தில் ஆக்கிரமிப்பு.

28—(* வினா எண் 5548) திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம் பென்னாகரம் பேரூராட்சிக்குச் சொந்தமான இடங்களை சிலர் ஆக்கிரமிப்பு செய்திருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், ஆக்கிரமிப்பாளர்களை அப்புறப்படுத்த அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) பென்னாகரம் பேரூராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலையத்தைச் சுற்றியுள்ள ஆக்கிரமிப்புகளை கண்டறிய சர்வே செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆக்கிரமிப்புகள் கண்டறியப்பட்டவுடன் அவற்றை அகற்ற மேல் நடவடிக்கை துரிதமாக எடுக்கப்படுகிறது.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் துரிதமாக நடவடிக்கை எடுப்பதாகக் கூறியதற்காக பென்னாகரம் தொகுதிவாழ் மக்களின் சார்பாக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். 5, 6, ஆண்டுக்காலமாகவே நடவடிக்கை எடுக்கப்படுவதாகச்சொல்லியும் அந்த ஆக்கிரமிப்புகள் அகற்றப்படவில்லை. கடந்த 4, 5 மாதங்களுக்கு முன்னதாகவே அங்கே வேலை செய்வதற்காக ஐ.யு.டி. பேங்க் மூலமாக 25 லட்ச ரூபாய் சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் வேலை தொடங்கப்படாமல் இருக்கிறது. வசதி படைத்தவர்கள்தான் அந்த இடத்திலே ஆக்கிரமிப்புகளைச் செய்திருக்கிறார்கள். அந்தப் பேரூராட்சிக்கு வேறு எந்தவித வருமானமும் இல்லாமல் இருக்கிறது. போதிய வருமானத்தை ஈட்டித்தர அரசு முன்வருமா ?



மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல் நடவடிக்கை துரிதப் படுத்தப்படும்.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலேயும் நேரிலே எடுத்துக் கூறியிருக்கிறேன். நெடுஞ் சாலைத் துறை அதிகாரிகளிடத்திலும் எடுத்துக் கூறியிருக்கிறேன். வலது கம்யூனிஸ்ட் கட்சி ஆபீஸ் அங்கே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால்தான் தடைபட்டிருக்கிறது. அதை அகற்றினாலே மீதியுள்ளவர்களும் அகற்றுவதற்குத்தயாராக இருப்பார்கள் எனவே அதை அகற்றுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா ஆக்கிரமிப்புகளும் அகற்றப்படும்.

திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பென்னாகரத்தில் மட்டுமல்ல தமிழ்நாட்டின் பல்வேறு நகரங்களிலும் பேரூராட்சிகளிலும் அரசுக்குச் சொந்தமான இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புக்களை அப்புறப்படுத்துவதிலே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மகிழ்ச்சி கொள்கிறது. ஆகவே துரிதமாக ஆக்கிரமிப்புக்களை அகற்றுவதற்கு மாநில அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கொள்ளும்.

திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சிகளிலே, நகராட்சிகளிலே உள்ள ஆக்கிரமிப்புகளை குறிப்பாக குடிசைகளை காலிசெய்யக்கூடாது என்று உச்சநீதிமன்றம் பொது தடை விதித்திருக்கிறதே, அந்தத் தடையை மாற்றுவதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது குறித்துத் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆக்கிரமிப்பு என்பது குடியிருப்பு மனைகளைவிட கிராமபுறங்களிலே ஊராட்சி மன்றங்கள், ஒன்றியங்கள் ஆகியவற்றிற்குச் சொந்தமான சாலைகளை அதிகமாக ஆக்கிரமித்து வயல்களாக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அமைச்சர் அவர்கள் பொது உத்திரவொன்று போட்டு அந்தச் சாலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது குறித்து அரசு பரிசீலனை செய்யும்.

**இந்திய மருத்துவக் கழகத்தால் நடத்தப்படும் குடும்ப நல நிலையம்.**

29—(* வினா எண் 4847) **திரு. கு. ரமணி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் இந்திய மருத்துவக் கழகம் நடத்தி வந்த குடும்பநல நிலையம் 1-4-85 முதல் மூடப்பட்டுவிட்டது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் காரணமென்ன ?

(இ) அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இந்திய மருத்துவக் கழகத்தின் நிதிப் பற்றாக்குறையினால் மூடப்பட்டதாகத் தெரிகிறது.

(இ) சென்னையில் குடும்பநலப் பிரிவுகள் மாநகராட்சியால் நடத்தப்படுவதால் இந்திய மருத்துவக் கழகத்தால் நடத்தப்பட்ட குடும்பநல நிலையத்தையும் சென்னை மாநகராட்சியே எடுத்து நடத்த இயலுமா என்பது குறித்து, அரசு ஆராய்ந்து வருகிறது.

**திரு. கு. ரமணி :** தலைவர் அவர்களே, முதலிலே தங்களுக்கு வணக்கமான ஒரு சப்மிஷன். 1-4-85 லே கொடுத்த கேள்வி இது. 1½ வருஷத்திற்குப் பிறகு வந்திருக்கிறது. இப்படி பல கேள்விகள் வருடக்கணக்காகித்தான் வந்து கொண்டு இருக்கின்றன என்பதைத் தலைவர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, நிதி நெருக்கடியினால் இந்திய மருத்துவக் கழகம் அதை மூடிவிட்டது, ஆனால் மாநகராட்சி அதை எடுத்துக் கொண்டுள்ளது என்று கூறுகிறார்கள். இப்போது அந்த குடும்பநல நிலையத்திற்குள் இருக்கும் படியான வசதிகள் என்ன ? எவ்வளவு பேர்களை அங்கே அட்மிட் பண்ணி, அவர்களுக்கு சிகிச்சை அளிக்க முடியும், மற்ற உதவிகள் செய்ய முடியும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி எடுத்துக் கொண்டுவிட்டதாக நான் சொல்லவில்லை. மாநகராட்சி எடுத்து நடத்த இயலுமா என்று அரசு கேட்டிருக்கிறது என்றுதான் நான் சொன்னேன். மற்ற விவரங்கள் என்னிடத்திலே இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் இந்தக் கேள்வியை கேட்டது 20-8-85 அன்று. பதில் வந்தது 12-5-1986 அன்று. இந்தத் துறையில் எந்தக் காலதாமதமும் கிடையாது.

**மூலிகை உற்பத்திக்கு ஆண்டுதோறும் ஒதுக்கும் தொகை.**

30 —(* வினா எண் 7149) **திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மூலிகை உற்பத்திக்காக அரசு ஆண்டுதோறும் ஒதுக்கும் தொகை எவ்வளவு ?

(ஆ) தொகையின் அளவு உயர்த்தப்படுமா ?

(இ) ஆம் எனில், எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவர் அவர்களே, மூலிகைப்பண்ணைகள் மூலம் அரசுக்கு ஆண்டுக்கு வரும் மூலிகையின் அளவு என்ன ? இதனால் கிடைக்கும் வருவாய் என்ன ? அந்தப் பண்ணைகள் உண்மையிலேயே மூலிகை உற்பத்திக்காகத்தான் பயன்படுகிறதா என்று கண்காணிக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றித் தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தருகிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவர் அவர்களே, மூலிகை உற்பத்திக்காக அரசு ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீடு செய்வதாகச் சொல்லப்படுகிறது. என்னுடைய தொகுதியான திருவில்லிப்புத்தூரிலே உள்ள செண்பகத் தோப்பில் உள்ள ஆண்டாள் கோயில் நிலத்தை, அதாவது 33 ஏக்கரை லீசுக்கு அதாவது மூலிகை பயிரிடுவதற்காக லீசுக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. ஆண்டுதோறும் இதற்கு ரூபாய் ஒதுக்கப்படுகிறது ஆனால்? அங்கே மூலிகை பயிரிடுவது கிடையாது. அப்பேர்ப்பட்ட அந்த விஷமிகளை எல்லாம் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். மூலிகை உற்பத்திக்காக அரசு ஆண்டுதோறும் ஒதுக்கும் தொகை எவ்வளவு என்று கேட்டிருந்தார்கள். அப்படி பணத்தை மூலிகை உற்பத்திக்காக ஒதுக்கவில்லை என்றுதான் பதில் சொல்லி இருக்கிறேன்.

**மதுக்கரை ஒன்றியத்தில் சிமிண்ட் ஆலை புகையால் நிலங்கள் பாதிப்பு.**

31 —(*வினா எண். 7833) **திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் மதுக்கரை ஒன்றியம் மாவுத்தம்பதி கிராமத்தின் அருகில் கேரள எல்லையில் உள்ள சிமிண்ட் ஆலை புகையால் விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை சீர்செய்ய எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இதுபற்றி கேரள அரசுடன் தொடர்பு கொள்ளப்பட்டது. கேரளா மாசு கட்டுப்பாடு வாரியம் தகுந்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த $1\frac{3}{4}$ ஆண்டுக் காலமாக அந்த நிறுவனத்தில் இருக்கக்கூடிய இ.எஸ்.பி. என்ற அந்த இயந்திரத்தை இதுவரை பயன்படுத்தாமல் இருந்து வருகிறது. அதற்கு கேரள அரசாங்கம் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, மீண்டும் அரசாங்கம் அதற்கான உரிய நடவடிக்கையை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, இதுகுறித்து மீண்டும் கேரள அரசோடு தொடர்புகொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு ஈ.வே.கி.ச. இளங்கோவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சிமெண்ட் தொழிற்சாலையால்தான் ஏறத்தாழ பத்து கிராமங்கள் பாதிக்கப்பட்டு, அங்கே விவசாயமே இல்லை என்ற நிலைமை இருக்கிறது அதோடு அங்கே வாழும் ஆயிரக்கணக்கான மக்களுடைய வாழ்க்கையும் பாதிக்கப்பட்டு, அவர்கள் மிக ஏழ்மையான நிலையில் இருக்கிறார்கள். இந்த சிமெண்ட் தொழிற்சாலையை நடத்துகின்ற அந்த ஏ. சி. சி. நிர்வாகம் நாடு முழுவதும் 18-க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளை நடத்திக்கொண்டு இருக்கிறது. ஆகவே, இந்தத் தொழிற்சாலையை மூடி. விடுவதால் மட்டும் அவர்களுக்கு பெரிய நஷ்டம் வந்துவிடாது என்ற காரணத்தால் அதை மூடுவதற்கு அரசு ஆவன செய்யுமா? அதோடு ஈரோடுக்கு அருகில் உள்ள சேஷசாயி பேப்பர் மில்லால், அங்கே சுகாதாரம் கெட்டு, சுற்றுப்புற சூழ்நிலைகள் எல்லாம் கெடுகிறது. எனவே, இந்த சேஷசாயி பேப்பர் மில்லையும் மூடுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகளில் இருந்து வெளிவரும் கழிவு நீராலும் அல்லது வெளியேற்றப்படுகின்ற புகையினாலும், நாட்டின் பல பகுதிகளில், சுகாதாரம் பாதிக்கப்படுவது, விவசாயம் பாதிக்கப்படுவது, கோடிக்கணக்கான மக்கள் பாதிக்கப்படுவது போன்ற நிலைமைகள் இருக்கின்றன. அதற்காகத் தொழிற்சாலைகளை மூடுவதை விட அதிலிருந்து வருகின்ற தண்ணீரை எப்படி சுத்தப்படுத்தி மீண்டும் அதை உபயோகிக்கலாம் என்பதைப் பார்க்க வேண்டும். அந்தப் புகையை எப்படி தடுக்க முடியும் என்பதை ஆராயவேண்டும். அதற்கான இயந்திரங்கள் எல்லாம் இருக்கின்றன. இதைப் பற்றி அரசு தீவிரமாக நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சிமெண்ட் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில் எலக்ட்ரோஸ்டாடிக் ப்ரசிபிடேட்டர் இயங்கவில்லை என்று தெரிகிறது. மீண்டும் அதை இயக்குவதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசு எடுக்கும்.

(முற்பகல் 9-40)

**திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு இளங்கோவன் அவர்கள் சொன்ன தொழிற்சாலை ஏ.சி.சி. தொழிற்சாலை. அது மதுக்கரையில் இருக்கிறது. நான் சொல்லும் தொழிற்சாலை கேரள எல்லையில் இருக்கிற காரணத்தால் நம்முடைய அரசு உரிய நடவடிக்கையை விரைவாக எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நடராசன் அவர்கள் குறிப்பிட்ட தொழிற்சாலை கேரளாவில் இருக்கிறது என்பது தெரியும். அப்படித் தெரிந்து தான் கேரள அரசுக்கு எழுதவேண்டும் என்று முன்பே சொன்னேன்.

**கும்பகோணம் தாலுக்கா மருத்துவமனையை விரிவுபடுத்தல்.**

32—(*வினா எண் 8289) **திரு கி. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கும்பகோணத்திலுள்ள தாலுக்கா மருத்துவமனையை விரிவுபடுத்தும் கருத்துரு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. (அ) மற்றும் (ஆ) ஆம். பத்து படுக்கைகள் கொண்ட அவசர சிகிச்சைப் பிரிவு 1986—87 ஆம் ஆண்டு பகுதி இரண்டு திட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

[1986 நவம்பர் 17

திரு. இ. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடந்தை தாலுக்கா மருத்துவமனை என்பது கும்பகோணம் தாலுக்காவிற்கு மட்டும் அல்ல, திருவிடை மருதூர், பாபநாசம், வலங்கைமான் போன்ற தாலுக்காக் களுக்கும், திருச்சி மாவட்டம் அரியலூர் தாலுக்காவிற்கும் பயன்படுகிற ஒரு பெரிய மருத்துவமனையாக இருக்கிறது. கிட்டத்தட்ட 2 ஆயிரம் பேர் இதன் ஓ.பி.யில் கவனிக்கப்படு கிறார்கள். 250 படுக்கைகள் இருக்கின்றன. 600 பேர் அட்மிஷனாகி கீழே படுத்து இருக்கிறார்கள். அந்த அளவுக்கு ஒரு பெரிய மருத்துவமனையாக உள்ள இது மிகவும் சீர்கெட்டு இருக்கிறது, பழைய கட்டிடமாக 100 ஆண்டுகளுக்கு பட்ட கட்டிடமாக இருந்து கொண்டிருக்கிறது.

எதிர்காலத்தில் தஞ்சை மாவட்டம் பிரிக்கப்பட்டால் குடந்தை தாலுக்கா மருத்துவமனை மாவட்ட மருத்துவமனை யாக ஆகக் கூடிய அளவுக்கு உள்ள மருத்துவமனை ஆகும். ஆகவே இப்போதிருந்தே அதை சீர் செய்து முன்னேற்றத்திற்கு வேண்டிய காரியங்களை அரசு செய்யத் துவங்கினால்தான் எதிர் காலத்தில் வசதியாக இருக்கும். 5.6 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. லேபர் வார்டு கூட சரியானபடி இல்லை குழந்தைகள் வார்டு இருப்பது இடிந்து விழும் நிலையில் இருக் கிறது. ஸ்பெஷல் வார்டு என்ற பெயரில் உள்ளதும் அதே போல் இடிந்து விழும் நிலையில் தான் இருக்கிறது. இவற்றை எல்லாம் சீர் செய்ய வேண்டும். அதோடு மருத்துவமனையில் லைட் மற்றும் ஃபேன் வசதி கூட இல்லை. தாலுக்கா மருத்துவமனையாக இருப்பதால்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மருத்துவ மானியம் வரும் போது முழுமையாகப் பேசலாம். தற்போது கேள்வியாகக் கேளுங்கள்.

திரு கி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியாகவே கேட்கிறேன். இரவு நேரத்தில் மருத்துவமனையில் சமூக விரோதிகள் நடவடிக்கை மிகவும் மோசமாக இருப்பதால் அரசு கவனித்து இந்த மருத்துவ மனையை எந்த விதத்திலாவது முன்னுக்கு கொண்டுவந்து நல்ல முறையில் மக்கள் பயன்படுத்தும் அளவுக்கு மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, மூலக் கேள்வி கும்பகோணம் தாலுக்கா மருத்துவ மனை விரிவுபடுத்தப்படுமா என்பதுதான். அது விரிவுபடுத்தப் படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. தவிர மற்ற விவரங்கள் என்னிடத்தில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட தைப் போல் அவர்கள் எழுதி அனுப்பினால் அரசு அதைப் பற்றி பரிசீலிக்கும்.



1986 நவம்பர் 17]

திரு க. நரசிம்மபல்லவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் அனைத்து தாலுக்காக்களிலும் அரசு, தாலுக்கா மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்டுள்ளதா? அப்படி என்றால் அவிநாசி, உத்திரமேரூர் போன்ற இடங்களில் இது வரை துவக்கப்படவில்லை. அங்கே துவக்கும் திட்டம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

திரு. இ. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கும், தமிழக முதலமைச்சருக்கும், அப்போது இருந்த சுகாதார அமைச்சருக்கும் பல கடிதங்கள் எழுதியுள்ளேன். அது மட்டும் அல்ல, இந்த கேள்வியிலேயே ஒரு துணைக் கேள்வியாகக் கேட்கிறேன். சென்ற மாதம் சத்துணவு ஊழியர், ஒரு பெண்மணி—பாம்பு கடிக்கு மருந்து இல்லாமையால் கும்ப கோணத்தில் உள்ள மருத்துவமனையில் இறந்து போனார். அதேபோல் அங்கே மிகவும் தேவையான உயிர் காக்கும் மருந்துகள் கூட இல்லை. இதே நேரத்தில் இந்த மருத்துவ மனையை விரிவுபடுத்துவது என்றாலும் தற்போதுள்ள பிரச்சினை பாம்பு கடிக்கு மருந்து இல்லாததால் ஒரு உயிர் போய்விட்டது. அந்த அளவுக்கு தாலுக்கா மருத்துவமனை இருக்கிறது என்பதை அரசின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். அதை நிவர்த்திக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது பத்திரிகையில் வந்து நானும் பார்த்தேன். அதைப்பற்றி அரசு நடவடிக்கை எடுத்து இருக்கிறது. தாலுக்கா மருத்துவமனைகளில் இது போன்ற பாம்பு கடிக்கு எல்லாம் மருந்து இருக்க வேண்டும் என்பதை ஒத்துக் கொள்கிறேன். அதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டு வருகின்றன.

திரு பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிற போது தாலுக்கா மருத்துவமனை விரிவுபடுத்தப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி என்றால் இந்த ஆண்டு விரிவு படுத்துவதற்கான நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறதா? அதற்கான மதிப்பீடு தயார் செய்யப்பட்டு இருக்கிறதா? வேலை எப்போது துவங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் கும்பகோணம் தாலுக்கா மருத்துவமனை பற்றிதான் கேள்வி. அதை 1986—87 ஆம் ஆண்டு 2-வது பிரிவில் எடுத்துக்கொள்ள ஒத்துக் கொணடு இருக்கிறார்கள் அதற்கான மதிப்பீடு தயார் செய்து கொண்டு வந்து அதை அனுமதிப்பதாக அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது.

[1986 நவம்பர் 17

## மதுரை பெரியார் பேருந்து நிலைய மேம்பாலத்தில் பிரிவுப் பாதை அமைக்கும் திட்டம்.

33—(*வினா எண் 5048) திரு. மு. மாரிமுத்து: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகரில் ''பெரியார் பேருந்து நிலையத்திற்கு மேல்புறமுள்ள ரெயில்வே மேம்பாலம் சீர்படுத்தப்பட்டு, எல்லிஸ் நகருக்கு நேராகச் செல்கின்ற வகையில் மேம்பாலத்தில் புதிதாக மற்றொருப் பிரிவுப் பாதை அமைத்திடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்ட மதிப்பீடு எவ்வளவு?

(இ) பணிகள் எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக் கேள்விகளுக்குஇடமில்லை.

திரு. மு. மாரிமுத்து : தலைவர் அவர்களே, பெரியார் பஸ் நிலையத்திலிருந்து மேற்குப் புறமாக இருக்கின்ற இந்த ரயில்வே மேம்பாலத்தை, மேற்குப்புறமாக இன்னும் சிறிது விரிவுபடுத்தி, நேரடியாக எல்லிஸ் நகரம் வழியாக அதை தேசிய நெடுஞ்சாலை யோடு இணைக்கின்ற செயலைச் செய்தால், அதன்மூலம் மதுரை பெரியார் பஸ் நிலையத்திலிருந்து தேசிய நெடுஞ்சாலையை மிகக் குறைந்த அளவிலான தூரத்தில் அடைவதற்கும் மதுரையிலிருந்து வெளியே செல்வதற்கும் ஒரு வாய்ப்பான சாலையாக அமையும்.

அது மட்டுமல்ல, இந்தப் பாலம் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டது. மிகவும குறுகலாக இருக்கின்றது. அதனால் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கிறது. இந்தச் சாலைப் பாலத்தின் வழியாகத்தான் பாண்டியன் போக்குவ த்துக் கழக பஸ்கள் அத்தனையும், ஏறத்தாழ 400-க்கும் மேற்பட்ட பஸ்கள் தினமும் சுமார் 6 கிலோ மீட்டர் தூரம் சுற்றி பைபாஸ் ரோட்டிலுள்ள மையப் பணி மனையை அடைய வேண்டிய நிலை இருக்கிறது. மேற்குப்புற சாலையை விரிவுபடுத்திக் கொடுத்தால் சுமார் 1 கிலோ மீட்டர் தூரத்தில், மையப் பணிமனையை, இந்த பாண்டியன் போக்குவரத்துக் கழக பஸ்கள், 400, 500 பஸ்கள் விரைவில் வந்தடையும். அதன்மூலம் டீசலும் மிச்சப் படுகின்ற வாய்ப்பு இருப்பதையும் கவனத்தில் கொண்டு, எதிர் காலத்திலாவது இந்தப் பணியை விரைவில் தொடங்குவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு.முத்துசாமி: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு ரூ. 220 இலட்சம் ஆகும் என்று கணக்கிடப் படுகிறது. ரயில்வே சம்பந்தப்பட்டிருக்கின்ற வேலையாக இருந்தாலும்கூட, ரயில்வே அனுமதிக்காக மட்டும்தான்



1986 நவம்பர் 17]

அவர்களிடத்திலே செல்ல வேண்டியிருக்கிறது, பணத்திற்காக அல்ல. காரணம், அதற்குப் பணம் ஒதுக்க முடியாது என்று அவர்கள் மறுத்துவிட்டார்கள். எனவே மதுரை மாநகராட்சியும், அரசும்தான் சேர்ந்து இந்தப் பணிகளை மொத்தமாக செய்ய வேண்டியிருக்கிறது. எதிர்காலத்தில் இதை ஆய்வு செய்யலாம்.

திரு. மு. மாரிமுத்து: தலைவர் அவர்களே, தற்போது இந்தப் பாலத்தில் இருக்கக்கூடிய தடுப்புச் சுவர்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. தடுப்புச் சுவர்களே இல்லையென்று சொல்லக்கூடிய அளவிற்கு இருக்கின்றன. மேலும் விளக்கு வசதியில்லாமல் இருக்கிறது. இவற்றையெல்லாம் கவனத்திற்கொண்டு, தடுப்புச் சுவர் வசதிகள், விளக்கு வசதிகள் இவைகளை உடனடியாக ஏற்படுத்தித்தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, தடுப்புச் சுவர்களைப் பொறுத்தவரையில், நெடுஞ்சாலைத் துறை சில நடவடிக்கைகளை எடுக்க ஏற்பாடு செய்யலாம். ஆனால் விளக்கு வசதிகளைப் பொறுத்தவரையில், மாநகராட்சி தான் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திரு. எ. தெய்வநாயகம்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது இந்தத் திட்டத்திற்காக செலவழிக்கக் கூடிய வாய்ப்பு இல்லை என்று சொன்னார்கள். ஆனால் உலக வங்கி நிதியின் மூலம் வேலையைத் துரிதமாகச் செய்ய முடியும். உலகவங்கியின் மூலமாவது இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, உலக வங்கியின் திட்டத்திலே இது சேரவில்லை. மாநகராட்சியும் அரசும் சேர்ந்துதான் இந்தத் திட்டத்திற்கு ஆகும் பணத்தை செலவழிக்க வேண்டியிருக்கிறது. எனவே நம்முடைய நிதி நிலைமைக்கேற்ப எதிர்காலத்தில் இதைப் பரிசீலிக்கலாம்.

திரு. க. பாரமலை: தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் கூறும்போது, இதனுடைய மதிப்பீடு ரூ. 220 இலட்சம் என்று குறிப்பிட்டார்கள். திரு. மாரிமுத்து அவர்கள் குறிப்பிட்டதுபோல், எல்லீஸ் நகரம் மிகப் பெரிய நகரமாக வளர்ந்து கொண்டு வருகிறது. அப்படி வளர்ந்து வருகின்றபோது நகரத்தின் தேவைகளை அனுசரித்து, ரயில்வே மேம்பாலம் குறுகிய நிலையில் இருப்பதால், பல மணி நேரம் இதனால் போக்குவரத்து தடைபடுவது அன்றாட நிகழ்ச்சியாக இருக்கிறது. இந்த இரண்டு கருத்துக்களையும் அடிப்படையாக வைத்து, இந்தத் திட்டத்தை விரிவான முறையில் நிறைவேற்றுவதற்கு முனைப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1986 நவம்பர் 17

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எவ்வளவு முக்கியமானது என்பதில் எனக்கு எந்த விதமான ஐயப்பாடும் இல்லை. நான் இதை முழுமையாக ஏற்றுக்கொள்கிறேன். நமக்கு இருக்கின்ற பணப் பிரச்னையின் காரணமாகத்தான் காலதாமதம் ஏற்படுகிறது என்று சொன்னேனேயொழிய, இது தேவையற்றது என்றோ, அவசியமில்லை என்றோ நான் சொல்லவில்லை. நிதிநிலைமை எப்போது சரியாகின்றதோ, அப்போது நிச்சயமாக இந்த வேலை துவக்கப்படும்.

குமரி மாவட்டத்தில் புதிய பணிமனை

34—(*வினா எண் 8622) டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் புதிதாக பணிமனை ஆரம்பிக்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, (அ) ஆம்.

(ஆ) குமரி மாவட்டத்தில் நாகர்கோவிலில் இரண்டும், தொடுவட்டியில் ஒன்றும், ஆக மூன்று பணிமனைகளை ஆரம்பிக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. தகுதியான நிலம் கையகப்படுத்தப்பட்டபின் பணிமனை கட்டப்படும். இது கேள்வி கேட்ட நேரத்திலே இருந்த நிலை.

இப்போது இன்னொரு பணிமனை கூடுதலாக அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. திங்கள் சந்தையில் ஒன்றும், தொடுவட்டியில் ஒன்றும், நாகர்கோவிலில் இரண்டும், ஆக மொத்தம் 4 பணிமனைகள் அமைக்கப்பட இருக்கின்றன.

அபிராமம்—முதுகுளத்தூர் சாலையில் பரளையாற்றின் குறுக்கே பாலம்

35—(*வினா எண் 8930) திரு. கே. முத்துவேல்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அபிராமம்—முதுகுளத்தூர் சாலையில் பரளையாற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.



1986 நவம்பர் 17]

திரு. கே. முத்துவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அபிராமம்—முதுகுளத்தூர் சாலை மண் சாலையாக இருக்கிறது. ஆனால் 15 கிலோமீட்டர் தூரம் உள்ள அந்தச் சாலை வழியாகத்தான் தாலுக்காவினுடைய மையமாகிய முதுகுளத்தூருக்கு அபிராமத்திலிருந்து சுற்றுப்புற மக்கள் எல்லாம் செல்லவேண்டும். மழைக் காலங்களில் தண்ணீர் போய், போக்குவரத்திற்கு இடையூறாக கமுதியைச் சுற்றி 15 கிலோ மிட்டர் அதிகதூரம் செல்ல வேண்டிய காரணத்தை முன்னிட்டாவது, அந்த இடத்தில் பாலம் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9–50)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, எனக்குக் கொடுத்துள்ள குறிப்பின்படி வருடத்தில் 15 நாட்கள் தண்ணீர் ஓடுவதாகக் கொடுத்திருக்கிறார்கள். மற்ற நாட்களில் ஓடுவதில்லை. இதற்கு மொத்த செலவு 40 இலட்சம் ஆகும் என்றும் கணக்கு கொடுத்து இருக்கிறார்கள். ஏற்கனவே நான் முதல் கேள்விக்கு சொன்ன பதிலேதான் இதற்கும். நமக்கு இருக்கின்ற நிதிப்பிரச்சனை காரணமாக இப்படி ஒவ்வொன்றும் தள்ளிச்செல்கிறது. எனவே, நிதி நிலைமை சீராக இருக்கும்போது இதைப்பற்றி ஆலோசிக்கலாம்.

சென்ற ஆண்டில் வீணாகிய மின் உற்பத்தி.

36—(*வினா எண் 3050) திரு குமரி அனந்தன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்ற ஆண்டில் மின் உற்பத்தியில் வீணாகியது எவ்வளவு?

(ஆ) அதனைத் தடுக்க மேற்கொள்ளப்பட்டிருக்கும் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) 1984–85 ஆம் ஆண்டில் மின் உற்பத்தியில் வீணாகியது 18.36 சதவீதம்.

(ஆ) புதிய துணை மின்நிலையங்கள், கப்பாசிட்டர்கள், ஜெனரேட்டர், முதலியவைகளை அமைத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு மின் இழப்பை குறைக்க மின் வாரியம் முயற்சித்து வருகிறது.

[1986 நவம்பர் 17

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, தமிழ்நாட்டில் வீணாகின்ற மின்சாரத்தை மற்ற மாநிலங்களிலே வீணாகிக்கொண்டிருக்கின்ற மின்சாரத்தோடு ஒப்பு நோக்கி நாம் அதிகமாக வீணாக்கிக்கொண்டிருக்கிறோமா என்கின்ற தகவலை நமது அமைச்சர் அவர்கள் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, 1980-81 ஆம் ஆண்டிலிருந்து மின்சாரம் வீணாகுவதனுடைய சதவிகிதம் 18.93 ஆக இருந்தது. 1985—86-ல் 18.70 ஆக குறைந்திருக்கிறது. மற்ற மாநிலங்களில் மின்சாரம் வீணாகுவதனுடைய சதவிகிதம் 19.5-லிருந்து 21.0 ஆகும்.

திரு. தி. அன்ப❓கன் ; தலைவர் அவர்களே, கள்ளத்தனமாக மின்சாரம் எடுப்பதும், நீண்ட நெடுந்தொலைவிலிருந்து மின்சாரத்தைக் கொண்டுவருவதும் லைன் லாசுக்கு காரணங்களாக அமைகின்றன. இவைகளைத் தடுக்கின்ற வகையில் சென்ற ஆண்டு ஏதாவது மின் திருட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டனவா? எத்தனை கண்டுபிடிக்கப்பட்டன? அவற்றின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறு❓பினர் அவர்கள் தனியாக வினா கேட்டால் அதற்குப் பதில் ❓சொல்லத் தயாராக இருக்கிறேன்.

திரு. ரு. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அதிகமான லைன் லாசாகிறது என்று சொல்லப்படுகிறது. எனவே, அந்த லைன் லாசை குறைப்பதற்கான ஒரு நிபுணர் குழுவை அமைத்து குறுகிய காலத்திற்குள் அதுபற்றிய விவரங்களைக் கண்டறிந்து, அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க மாநில அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, மற்ற மாநிலங்களைவிட நான் ஏற்கனவே சொன்னது போல் தமிழகத்தின் மின்சாரம் வீணாகுவதனுடைய சதவிகிதம் குறைந்த சதவிகிதம்தான். இருந்தாலும் புரட்சித் தலைவர் அரசு மின்சாரம் வீணாகின்றதை 15 முதல் 16 சதவிகிதம் குறைப்பதற்கு சகல நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

திரு. வி. பி. சிந்தன் : தலைவர் அவர்களே, அனைத்திந்திய ❓ன்சார அமைப்பின் சார்பில் ஒரு நிபுணர் குழு அமைக்கப்பட்டு லைன் லாஸை குறைப்பதற்கு, தடுப்பதற்குள்ள பல ஆலோசனைகளும் சொல்லப்பட்டன. தமிழக மின் வாரியம் அந்த ஆலோசனைகளைப் பரிசீலித்தது உண்டா அல்லது பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



1986 நவம்பர் 17]

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மின்சாரம் சம்பந்தமான பட்ஜெட் வரும்போது இது பற்றிய விவரத்தைத் தருகிறேன்.

அமராவதியில் எரிசாராய ஆலை ஏற்படுத்தும் திட்டம்.

37—(*வினா எண். 9552) திரு. சு. திருமலைச்சாமிக் கவுண்டர்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கழிவுப் பாகை பயன்படுத்தி ''எரிசாராய ஆலை'' ஒன்று ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையாளரிடம் விண்ணப்பம் ஏதும் செய்யப்பட வில்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

திரு. சு. திருமலைச்சாமிக் கவுண்டர் : சபாநாயகர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை ஒன்று இயங்கிக்கொண்டு வருகிறது. இதுவரை 6 கோடி ரூபாய் நஷ்டத்தில் ஓடியது. இப்போது லாபத்தில் ஓடக்கூடிய ஒரு நிலையில் இருப்பதால் இனிமேலாவது அந்தக் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ஒரு எரிசாராய ஆலையை அதனை ஒட்டி ஆரம்பித்து அதில் வரும் லாபத்தை விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டுமாய் நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்;

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் மூன்று, பெரியார் மாவட்டத்தில் இரண்டு, திருச்சி மாவட்டத்தில் ஒன்று, செங்கற்பட்டு மாவட்டத்தில் ஒன்று, தருமபுரி மாவட்டத்தில் ஒன்று என்று எட்டு வடிசாராயம் காய்ச்சும் தொழிற்சாலைகள் இருக்கின்றன. இத்தகைய வடி சாராயம் காய்ச்சும் தொழிற் சாலையை அமைக்க வேண்டுமென்றால் தனியாக மனு செய்ய வேண்டும். அதன்மீது மதுவிலக்கு ஆணையர் அவர்கள் முடிவு செய்கிறார்கள். இது குறித்து மதுவிலக்கு ஆணையரைக் கேட்ட போது வடி சாராய ஆலைகள் தொடங்குவதற்காக யாரும் மனு கொடுக்கவில்லை என்ற தகவலைத் தந்திருக்கிறார்கள்.

திரு. பெ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலேயே மிகவும் லாபம் வருகிற தொழிற் சாலை எரிசாராயம் வடிக்கும் தொழிற்சாலை. இந்தத் தொழிற் சாலைகள் முழுவதும் தனியார் துறையில்தான் தற்போது இருக்கின்றன. ஒன்றுகூட கூட்டுறவுத் துறையிலோ அல்லது பொதுத்துறையிலோ இல்லை. தமிழகத்தில் 13 சர்க்கரை ஆலைகள்

கூட்டுறவுத் துறையில் செயல்படுகின்றன. அதைப்போலவே பல பொதுத்துறையிலும் செயல்படுகின்றன. கூட்டுறவுத் துறையில் செயல்படும் சேலத்தை அடுத்த மோகனூர் சர்க்கரை ஆலையும் மற்றும் பொதுத்துறையில் பெரம்பலூர் சர்க்கரை தொழிற் சாலையும் இத்தகைய ''எரி சாராயத் தொழிற்சாலையை'' அமைக்க இரண்டு விண்ணப்பங்களைப் போட்டு மத்திய அரசின் ''லெட்டர் ஆப் இன்டென்ட்'' கூட வந்துவிட்டும் தமிழக அரசின் அனுமதி கிடைக்காமல் காலதாமதமாவது அரசுக்குத் தெரியுமா? காலதாமதத்தைத் தவிர்த்து இரண்டு ஆலைகளையும் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு அத்தகைய கோரிக்கைபற்றி மனு எதுவும் வந்து அது அனுமதிக்கப்படுவதில் கால தாமதம் எதுவும் ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் அரசே இத்தகைய எரி சாராய வடி சாலையைத் துவக்குகிற நோக்கம் இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்,

### 1985-86-ல் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் இலாபம்

38—(*வினா எண். 10304) **திரு மா. மணிமாறன் :** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் 1985–86-ல் பெற்ற இலாபம் என்ன ?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தணிக்கை முடிக்கப்படாத கணக்குகளின் படி, தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் 1985-86-இல் சுமார் எழுபத்தைந்து லட்சம் ரூபாய் நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

**திரு. மா. மணிமாறன்** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984-85 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசாங்கம் சாராயக் கடைகளை ஏலம் விட்டதில் கிடைத்த லாபம் எவ்வளவு? 1985–86 ஆம் ஆண்டில் தமிழக அரசே சாராயக் கடைகளை நடத்தியதால் ஏற்பட்ட லாபம் எவ்வளவு? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது இரண்டுக்கும் ஏற்பட்ட வித்தியாசம் தானா அது? அப்படியென்றால் 1984–85 ஆம் ஆண்டில் எவ்வளவு லாபம் கிடைத்தது, 1985–86 ஆம் ஆண்டில் எவ்வளவு லாபம் கிடைத்தது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கு வார்களா ?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984-85 ஆம் ஆண்டில் லாபம் இல்லை. ஆனால் 1985-86 ஆம் ஆண்டில் இந்த நிறுவனத்தின் மூலமாகச் சம்பாதிக்கப்பட்ட லாபத்தில் சாராயத்தின் மீது கூடுதல் விற்பனை



வரி என்பதன் பேரால் ரூ. 8½ கோடியும், மது வகை மீது கூடுதல் விற்பனை வரி என்பதன் பேரால் ரூ. 9 கோடியும் அரசுக்குச் சேர்ந்திருக்கிறது. இது போக ரூ. 75 லட்சம் 1985-86 ஆம் ஆண்டில் லாபம் கிடைத்திருக்கிறது.

**திரு. மா. மணிமாறன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984-85 ஆம் ஆண்டில் தனியார்கள் ஏலம் எடுத்து விட்டு அவர்கள் அதற்குரிய பணத்தை அரசுக்குச் செலுத்தாமல் சால்ஜாப்பு செய்து அரசாங்கத்தை ஏமாற்றி, சாராயத்தை விற்றுக் கொண்டிருந்தார்கள். அதனால் அரசாங்கத்திற்கு குறைந்த வருவாய் கிடைத்திருக்கிறது. இந்த ஆண்டு கடைகளை ஏலம் எடுக்காமல் தவறான முறைகளைப் பயன்படுத்தி தனியார் சாராயம் விற்பனை செய்து லாபம் அடைகிறார்கள். எனவே அரசாங்கம் தீவிரமாகப் பரிசீலனை செய்து அதைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளச் சாராய விற்பனை நடத்துவதைத் தடுப்பதன் மூலம் கடந்த மாதம்–முந்தைய மாதத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது–அரசாங்கத்திற்கு ஒரு கோடி ரூபாய் லாபம் கிடைத்திருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

### அரசுத் துறையில் பட்டாசுத் தொழில்.

39—(*வினா எண். 4870) **திரு. ஆ. பிரேம்குமார் :** மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டாசுத் தொழிலை அரசே ஆரம்பித்து அதனை ஏற்றுமதி செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

**திரு. ஆ. பிரேம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டாசு வெடிப்பதைப் போல் பதில் வரும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அது புஸ்வாணம் போல் இருந்து விட்டது. இருப்பினும் நம்பிக்கை ஒளியை எதிர்பார்க்கிற வகையில் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். தமிழகத்தில் உற்பத்தியாகும் பட்டாசுகள் இந்தியாவில் மட்டுமல்லாமல், அமெரிக்கா, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளிலும் நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கின்றன. சாத்தூர், சிவகாசி, கோயில் பட்டி போன்ற பகுதிகளில் உள்ளவர்கள் பெரும்பாலும் பட்டாசு தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். எனவே இந்த மக்களையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து கூட்டுறவு சங்கங்கள் அமைத்து அதன் மூலமாக பட்டாசுத் தொழிலை ஊக்குவிக்கும் நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1986 நவம்பர் 17

(முற்பகல் 10-00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசியிலும் மற்றப் பகுதிகளிலும் பட்டாசுத்தொழில் இன்றைக்கும் சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது. ஏறத்தாழ 261 பட்டாசுத் தொழிற்கூடங்களை தனியார் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். தனியார் நடத்துகிற தொழிற்கூடங்களில் மிகக் கடுமையான போட்டி இன்றைக்கு நிலவி வருகிறது. இந்த நிலைமையில் மேலும் கூட்டுவு சங்கங்கள் மூலமாக அவர்களை ஒன்றுபடுத்தி அதன் மூலம் பட்டாசுத் தொழிலை நடத்தலாம் என்று அரசு ஏற்கவில்லை.

**திரு. ஆ. பிரேம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது வெடிகுண்டு புரளிகள் அதிகமாக இருக்கின்றன. எங்கு வெடிகுண்டு வெடித்தாலும் அவற்றை கண்காணிக்கவும் அவற்றை ஆராய்வதற்கும் தனியார் துறையிலுள்ள வல்லுநர்களைத்தான் அழைத்து வந்து அரசு ஆவன செய்து கொண்டிருக்கிறது. இந்த நிலையைக் கருதி அந்த வல்லுநர்களை வைத்து நல்ல முறையில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக பட்டாசுத் தொழிலை நடத்த அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஆங்காங்கே அதிகமான அளவில் வெடி விபத்துக்கள் ஏற்படுவதுபற்றிக் குறிப்பிட்டார். அந்த வெடிகள் எல்லாம் சிவகாசியில் உற்பத்தியாவதாக மாண்புமிகு உறுப்பினர் கருதக்கூடாது. அங்கு உற்பத்தி செய்யப்படுகிறவைகள் விழாக்களுக்காக வெடிக்கப்படுகின்ற மத்தாப்பு வெடிகள் போன்றவை. அதற்காக தனியாக அரசே நடத்த வேண்டுமென்று விரும்புவது சரியாக இருக்காது. ஏறக்குறைய ரூபாய் 20 கோடி அளவில் இருபத்தைந்தாயிரம் டன் அளவிற்கு பலதரப்பட்ட பட்டாசுகள் உற்பத்தி செய்யப்பட்டு தமிழ்நாட்டிலும் மற்ற மாநிலங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகின்றன.

**திரு. ஜி. கே. ஜெ. பாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டாசு-வெடி செவிப்பறைகளைக் கிழிக்கக் கூடிய அளவிற்கு வெடிக்கின்றன. ஆகவே அதன் தரத்தைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா? மேலும் பட்டாசுத் தொழிலில் சிறுவர்கள் வேலை செய்வதால் அவர்கள் பள்ளிக்குச் செல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே குறிப்பிட்ட வயதுள்ளவர்கள் தான் அந்தத் தொழிலைச் செய்ய வேண்டுமென்ற வரையறையை அரசு விதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



1986 நவம்பர் 17]

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்:** அரசாங்கம் இப்போதே பல கட்டுப்பாடுகளை விதித்திருக்கிறது. அந்தக் கட்டுப்பாட்டுக்குள்தான் இப்போது உற்பத்தி செய்யப்படுகிறது. இத்தொழிலில் குழந்தைகள் வேலைக்கு அமர்த்தப்படுவதில்லை.

**திரு. குமரி அனந்தன்:** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, 261 தனியார் நிறுவனங்களில் செய்யப்படுகிற இந்த பட்டாசுகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. மலேசியா, சிங்கப்பூர், ஹாங்காங், தாய்லாந்து, தைவான், ஜப்பான் போன்ற நாடுகளில் உற்பத்தி செய்கிறவர்களுக்கு எக்சைஸ் வரி மிகக் குறைவாக அல்லது வரியே இல்லாத அளவிற்கு இருப்பதால் நாம் வழக்கமாக விற்றுக் கொண்டிருக்கிற நாடுகளிலேகூட முன்பு போல இப்போது விற்க முடியவில்லை என்று தொழிற்சாலைகளை நடத்துகிறவர்கள் கூறுகிறார்கள். எனவே இந்த எக்சைஸ் வரியைக் குறைக்க மாநில அரசு வேண்டிய பரிந்துரையை மத்திய அரசுக்குச் செய்து நடவடிக்கை எடுத்து நம்முடைய தொழிலை வளர்க்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எக்சைஸ் டியூட்டி பற்றிக் கேட்டார்கள். பட்டாசுத் தொழிலுக்கு எக்ஸைஸ் டியூட்டி கிடையாது அதைப் பற்றி தனிக் கேள்வி போட்டால் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் விரிவாக விளக்கம் சொல்லுவார்கள்.

**திரு. டி. என். முருகானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பட்டாசுத் தொழிலில் ஏறக்குறைய 80 சதவீதம் 'சைல்ட் லேபர்' என்று சொல்லக்கூடிய சிறுகுழந்தைகளைப் பயன்படுத்துகிறார்கள். இதைக் கட்டுப்படுத்த அரசு பல்வேறு சட்டங்களை ஏற்படுத்தினாலும் அந்தப் பகுதியில் உள்ள மக்கள் தங்கள் குடும்பச் சூழ்நிலையின் காரணமாக பொருளாதார சூழ்நிலையின் காரணமாக தவிர்க்க முடியாமல் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்தக் குழந்தைகளைக் கட்டாயக் கல்வித் திட்டத்தின்கீழ் கொண்டு வந்து அந்தக் குழந்தைகளை அரசுத் தேர்வுக்குத் தயார் செய்து அதிலே குறிப்பிட்ட சதவீத குழந்தைகள் தேர்வு பெறக்கூடிய சூழ்நிலையை உருவாக்கினால் தவிர அக்குழந்தைகளுக்கு கல்வி பாதுகாப்புக் கிடைக்காது என்பதை அரசு உணர்கிறதா என்றும், அதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீப்பெட்டித் தொழிலில் குழந்தைகள் வேலைக்கு அமர்த்தப்படுவதை அரசு உணர்ந்திருக்கிறது. தகுதியான, தேவையான, முறைப்பாடான கட்டுப்பாடுகளை அரசு விதிக்கும்.

**வால்பாறையில் தொழில் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை ஆரம்பித்தல்.**

40—(*வினா எண் 6990) **திரு. வி. தங்கவேலு:** மாண்புமிகு ஊரகத்தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் தொழில் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை ஆரம்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை,

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**ஈக்காடு தாங்கல் லேபர் காலனிக்கு அருகில் தொழிற்கூடம் அமைத்தல்.**

41—(*வினா எண் 8915) **திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஈக்காடு தாங்கல், லேபர் காலனி எதிர்ப்புறமுள்ள ''சிட்கோவிற்கு'' சொந்தமான காலியான இடத்தில் தொழிற்கூடங்கள் நிறுவ அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்கூடங்கள் நிறுவும் திட்டம் அரசின் ஆய்வில் இல்லை. ஆனால் இந்த நிலத்தை மேம்பாடு செய்து சிறுமனைகளாகப் பிரித்து தொழில் முனைவோர்க்கு வழங்கும் செயற்குறிப்பு சிட்கோவின் ஆய்வில் உள்ளது.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சிறு சிறு இடங்களாக வழங்குவதற்கு என்ன அடிப்படைத் தகுதிகள் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன். பொறியியல் துறையிலும், தொழில் நுட்பக் கல்வியிலும் படித்து, பட்டம் பெற்று, வேலையில்லாமல் இருக்கின்ற மாணவர்களுக்கு அந்த இடங்களை வழங்குவதில் முன்னுரிமை வழங்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏறக்குறைய 6 ஏக்கர் 87 சென்ட் அளவுள்ள நிலப்பரப்புதான் இப்போது மிச்சமாக கிண்டி திரு.வி.க. தொழிற்பேட்டை வளாகத்தில் இருக்கிறது. மிகக் குறைந்த அளவு இடம்தான் அங்கே இருக்கிறது. மிகக் மேடு பள்ளமாக இருக்கிறது. எனவே அதனை சிறுசிறு பிரிவுகளாகப் பிரித்து வழங்கலாம் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்





கிறது. அதற்காக ஏராளமான பேர்கள் மனுச் செய்திருக்கிறார்கள். அவர்கள் உடனடியாகத் தொழில் செய்ய ஆர்வத்தோடு இருப்பதால், அங்கே தொழிற் கூடங்களைக் கட்டித் தரலாமென்ற உத்தேசமும் இருக்கிறது. அதற்கான மனுக்களைப் பெற்று, முறைப்படி யார் யாருக்கு முன்னுரிமை வழங்க வேண்டுமோ அப்படித் தர இயலும்.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிற இளைஞர்களுக்கு, அதிலும் குறிப்பாக பி.ஈ., படித்த, பாலிடெக்னிக்கில் படித்த மாணவர்கள் மனுச் செய்தால் அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமா? கிண்டி திரு.வி.க. தொழிற்பேட்டையில் ஏற்கெனவே நில ஒதுக்கீடு செய்து, சிறு தொழில் செய்பவர்களுக்கு இன்னும் 'அசைன்மென்ட்' வழங்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அப்படியானால் 'அசைன்மென்ட்களை' வழங்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்:** உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்களுடைய பதிலில் தொழிற் கூடங்கள் கட்டிக் கொடுக்கும் வாய்ப்பு இல்லை என்று சொன்னார்கள். ஆனால் பழநி போன்ற முனிசிபல் நகரங்களில் 400, 500 பேர்கள் தொழில் செய்வதற்கு லைசன்ஸ் பெற்றிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை ஊக்குவிக்க வேண்டும். இப்போது அவர்கள் தொழில் நடத்த இடமில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே அவர்கள் தொழில் நடத்த வாய்ப்பு அளிக்கும் வகையில் தொழிற் கூடங்களை கட்டிக் கொடுக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் வழிவகை செய்வார்களா?

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்:** பேரவைத் தலைவரவர்களே, மூலக் கேள்வி கிண்டியில் உள்ள திரு.வி.க. தொழிற்பேட்டை சம்பந்தப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய சொந்தத் தொகுதியான பழநியில் இப்படிப்பட்ட தொழிற் பேட்டைகளை உருவாக்க வேண்டுமென்று கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களோடு நானும் அந்தப் பகுதிக்குச் சென்று சுற்றிப் பார்த்தேன். குறைந்தபட்சம் 10 பேர் விண்ணப்பித்தால் உடனடியாகத் தொழிற் பேட்டைகளைக் கட்டித்தர ஏற்பாடு செய்யப்படும்.

**பசும்பொன் முத்துராமலிங்கம், இராமநாதபுரம் மற்றும் காமராஜர் மாவட்டங்களில் தனி மாவட்ட தொழிற் கூடங்கள்.**

42—(*வினா எண். 9498) **திரு. க. பாரமலை:** மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1986 நவம்பர் 17

(அ) பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம், இராம
நாதபுரம் மாவட்டம், காமராஜர் மாவட்டம் ஆகிய மாவட்டங்
களில் தனித்தனியாக மாவட்டத் தொழில் மையங்கள் துவங்க
அரசு நடவடிக்கைகள் எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்:** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இராமநாத
புரம் மாவட்டத்தில் ஏற்கனவே மாவட்டத் தொழில் மையம்
இயங்கி வருகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தை மூன்று
மாவட்டங்களாகப் பிரித்த காரணத்தால் ஏற்பட்ட புதிய மாவட்
டங்களான பசும்பொன் முத்துராமலிங்கம் மற்றும் காமராஜர்
மாவட்டங்களில் மாவட்டத் தொழில் மையங்கள் துவங்க
21-4-86-ல் அரசு ஆணை வெளியிடப்பட்டு அங்கு தொழில்
மையங்கள் முறையே 7-5-86, 15-5-86-லிருந்து இயங்கி
வருகின்றன.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர
வர்களே, இராமநாதபுரம் மாவட்டம் பிரிந்த பின்னாலே, விரை
வாகத் தொழில் மையங்கள் புதிய மாவட்டங்களில் அமைய
வேண்டுமென்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டு
மென்றுதான் இந்தக் கேள்வி போடப்பட்டது. ஏற்கெனவே
அங்கே தொழில் மையங்கள் தொடங்கி நடைபெற்றுக் கொண்
டிருக்கின்றன என்று அமைச்சரவர்கள் சொன்னதற்கு
மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** பேரவைத் தலைவரவர்களே,
மாவட்டத் தொழில் மையங்கள் இப்போது இயங்கி வருகின்றன
மாவட்டத் தொழில் மையங்களிலிருந்து ஏழைகளுக்குப் பணம்
கொடுக்க பாங்குகளுக்கு பரிந்துரை செய்த கடிதங்கள் திரும்பி
வருகின்றன. சென்ற முறை அப்படித் திரும்பி வந்த 2
கடிதங்களை அமைச்சரவர்களிடம் கொடுத்திருக்கிறேன். அது
குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை அமைச்
சரவர்கள் விளக்குவார்களா?

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்:** பேரவைத்
தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாவட்டத்
தொழில் மையங்கள் மூலமாக வேலையற்ற இளைஞர்களுக்கு
சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் கொடுக்கும் கடன் பற்றிக்
கேட்கிறார்கள். அவர்கள் கொடுத்த மனுக்களைப் பரிசீலனை
செய்து, கொடுக்கப்பட்ட மனுக்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல.
சரியானவை அல்ல என்று சொல்லி அவர்களுக்குத் தகவல்,
அனுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே மீண்டும் மனு கொடுத்தால்
பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.



1986 நவம்பர் 17]

**இரட்டை மங்களம் ஆதி திராவிட நல நடுநிலைப் பள்ளியை உயர் நிலைப் பள்ளியாக உயர்த்துதல்.**

43—(*வினா எண். 3762) திரு. க. நரசிம்ம **பல்லவன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இரட்டைமங்களம் கிராமத்தில் உள்ள ஆதி திராவிட நல நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

(முற்பகல் 10-10)

**திரு. க. நரசிம்ம பல்லவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரட்டைமங்களம் கிராமத்தில் உள்ள நடுநிலைப் பள்ளியும், அதைச் சுற்றியுள்ள கிராமக் குடியிருப்புகள் அடங்கியுள்ள கிராமங்கள் அனைத்தும் ஆதிதிராவிடர்கள் வசிக்கின்ற பகுதிகளாக இருக்கின்றன. மேலும் அந்த நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கான கருத்துருக்களை எல்லாம் அரசுக்கு அனுப்பியிருப்பதாக அறியப்படுகிறது. அதற்குண்டான அனைத்து வாய்ப்புகளும் இருக்கின்றன. விரைவில் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் பரிசீலனையில் இருக்கின்றது. வருகின்ற ஆண்டிலே பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**தஞ்சை மாவட்டம் கடமங்குடி கிராமத்தில் ''தாட்கோ'' மூலம் வீடுகள்.**

44—(*வினா எண். 7953) திரு. **பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் குத்தாலம் ஒன்றியம், கடமங்குடி என்ற கிராமத்தில் ''தாட்கோ'' நிறுவனம் மூலம் வீடு கட்டித்தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

**திரு. பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். அரசு, ஆதி திராவிடர்கள் கண்ணீர் துடைக்கும் நோக்கத்தோடு, ஆதி திராவிடர்க்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கு

ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று உத்தரவுபோட்டு இருக்கின்றார்கள். ஆனாலும்கூட அந்த ஊராட்சி ஒன்றியங்களிலே, அந்த ஊராட்சி ஒன்றிய பெருந் தலைவர்களும் ஊராட்சித் தலைவர்களும் தங்களைச் சார்ந்துள்ள இயக் கத்திலே சேர்ந்தால்தான் ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்படும் என்ற நிலமைகள் இருப்பதை அரசின் கவனத் திற்குக் கொண்டுவருகிறேன். அதைத்தடுக்க ''தாட்கோ'' மூலமாக கட்டிக் கொடுக்கும் திட்டம் அல்லது கிராமிய கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் மூலமாக வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்பதைப் பற்றி அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 'தாட்கோ' மூலம் கட்டிக் கொடுக்கின்ற திட்டத்தின் வாயிலாகத்தான், என்னுடைய துறையைப் பொறுத் தவரையில், கட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இங்கே மாண்புமிகு உறுப்பினர் சொன்னதற்கு சொல்கிறேன். ஆர். எல். ஈ. ஜி. பி., என். ஆர். ஈ. பி. ஆகிய திட்டங்கள் வாயிலாக உள்ளாட்சித் துறையின் மூலமும்—அதுபோல கூட்டுறவுத் துறையைப் பற்றி உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள்.—அது போலவே வீட்டுவசதித் துறையின் வாயிலாக வீடு கட்டிக் கொடுக்கின்ற திட்டமும் நடந்துகொண்டிருக்கின்றது. இதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, இந்த ஆண்டு தஞ்சை மாவட்டத்திலே தாட்கோ திட்டத்தின் மூலமாக எத்தனை வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது என்று அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வருகின்ற ஆண்டில் இன்னும் எத்தனை வீடுகள் அந்தப் பகுதியிலே கட்டப்படும் என்பதைப் பற்றி முடிவு செய்ய வில்லை என்று சொல்லிக்கொள்கிறேன்

**திரு. ம. ஆபிரகாம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கின்றபோது, எம். ஜி. ஆர். அரசு ஆதி திராவிடர்களுக்கு என்று வீடுகள் கட்டிக்கொடுப்பதும், பள்ளிக் கட்டிடங்கள் கட்டிக்கொடுப்பதும் என்று சொல்லி பல நல்ல திட்டங்களை அறிவித்தார்கள். அது பற்றி என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முன்னாள் தொகுதியான அனகா புத்தூர் பகுதியில் ஒரு உயர்நிலைப் பள்ளி கட்டப்பட்டு அது கவனிப்பாரற்று அப்படியே இருக்கின்றது. அதை உடனடியாகத் திறக்க அரசு முன்வருமா?



**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் எப்போது தேதி கேட்டாலும் கொடுத்து அரசு அந்தப் பள்ளியைத் திறக்கக் கடமைப்பட்டிருக் கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆர். எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது வீடுகள் கட்டிக்கொடுக்கின்ற திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருக் கின்றார்கள். வீடுகள் கட்டிக் கொடுக்கின்ற திட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்தில் இருக்கின்றது. அவர்கள் மூலம் பணத்தை ஒதுக்கி இப்போது வேலைகள் நடந்துவருகின்றன. ஆனால் அரசாங்கமே ஒரு தொகுதிக்கு இவ்வளவு வீடுகள் என்று நேரடியாக ஒதுக்கினால் இந்தக் குறைபாடுகள் இல்லாமல் இருக்குமே, அதைப்பற்றி அரசு பரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

**திரு. கோ. வீரய்யன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ''தாட்கோ'' மூலமும், என்.ஆர்.இ.பி. மூலமும் ஆர்.எல்.இ.ஜி.பி. மூலமும் வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டத்தைப் பொறுத்த வரையில் ஒன்றியங்களுக்கும் இத்திட்டத்தின் மூலம் தீர்மானிக்கும் எண்ணிக்கையை உயர்த்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புவதோடு இப்போது வீடுகள் கட்ட 6 ஆயிரம் ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. இத்தொகையைக் கொண்டு கட்டிடங்கள் கட்ட முடியவில்லையாதலால் இத்தொகை உயர்த் தப்படுமா? மேலும் இத்திட்டத்தை நகரப் பஞ்சாயத்துக் களுக்கும் விஸ்தரிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி நேரத்தின்போது உறுப்பினர்கள் இருக்கைகளில் அமரவேண்டுமென்றும் அமைச் சர்களைத் தொந்தரவு செய்யக் கூடாது என்றும் கேட்டுக்கொள் கிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** தலைவர் அவர்களே, இந்த ஆண்டு என். ஆர். இ. பி. மற்றும் ஆர். எல். இ. ஜி. பி. போன்ற திட்டங்களின் மூலமாக கிட்டத்தட்ட 47 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு ஒன்று இருக்கிறது. ஒவ்வொரு பகுதிக்கும் விஸ்தரித்து நடக்கவிருக்கின்ற திட்டம் இது. அதைப் போலவே தாட்கோ மூலமாக 5 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டமும் இருக்கிறது. உறுப்பினர் இங்கே சொன்னதைப்போல 6 ஆயிரத்தை 10 ஆயிரமாக உயர்த்துகின்ற செயற்குறிப்பு ஒன்றும் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

**1986–87-ல் ''தாட்கோ'' மூலம் வீடுகள்.**

45—(*வினா எண். 8974) திரு. த. பழனி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1986–87-ம் ஆண்டு ''தாட்கோ'' மூலம் கட்டப்படும் வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) கிராமப்புறங்களில் எடுத்துள்ள வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு?

(இ) வடஆற்காடு மாவட்டத்தில் எத்தனை வீடுகள்?

(ஈ) ஆற்காடு வட்டத்தில் எத்தனை வீடுகள் எங்கெங்கு கட்டப்படும்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ): 1986–87 ஆம் ஆண்டிற்கான தாட்கோ மூலம் கட்டப்படும் வீடுகளின் எண்ணிக்கை இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

**திரு. த. பழனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1986-87ஆம் ஆண்டு ''தாட்கோ'' மூலம் கட்டப்படும் வீடுகளின் எண்ணிக்கை விவரம் இல்லையென்று சொன்னார்கள். 1985–86 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை பற்றிய விவரம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1985–86 ஆம் ஆண்டில் தமிழகத்தில் ஒட்டுமொத்தமாக தாட்கோ மூலமாக கட்ட எடுக்கப்பட்ட வீடுகள் 3,222. 1 கோடியே, 93 இலட்சத்து 32 ஆயிரம் ரூபாய் செலவிலே வீடுகள் கட்டுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டு அந்தத் திட்டம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. த. பழனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி எடுக்கப்பட்ட வீடுகளைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு வீட்டுக்கும் 4,500 ரூபாய் என்கிற அடிப்படையில் கிராமப்புறங்களில் வாழ்கிற ஏழையெளிய ஆதிதிராவிடர்களுக்காக நேரடியாக கொடுக்கப்பட்டும்கூட அவர்களாலே வீடுகளைக் கட்டி முடிக்க முடியாத நிலை இருக்கிறது என்பது அரசுக்கு தெரியுமா; அவர்களுக்கு மேலும் 1,500 ரூபாய் கொடுத்து (அதாவது மொத்தத்தில் 6 ஆயிரம் ரூபாய்) அவர்கள் கட்டி முடிக்காமல் இருக்கும் வீடுகளைக் கட்டுவதற்காக அரசு அனுமதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே ஒவ்வொரு வீட்டுக்கும் 4,500 ரூபாய் வீதம்தான் வழங்கப்பட்டு வந்தது. 1984 ஆம் ஆண்டு தான் இத்தொகையை 6,000 ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம். இதை 10,000 ரூபாயாக உயர்த்துகின்ற செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



**திரு. ஆர். தியாகராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் இவர்களே, ''தாட்கோ'' மூலமாக வீடுகள் கட்டிக் கொடுப்பதைப் பொறுத்தவரையிலும், என்.ஆர்.இ.பி. திட்டத்தின் மூலமாக வீடுகள் கட்டிக் கொடுப்பதைப் பொறுத்தவரையிலும் ஒவ்வொரு வீட்டுக்கும் கொடுக்கப்படும் பணத்தைப் பொறுத்த வரையில் ஆயிரம் ரூபாய்க்கு மேல் வித்தியாசம் இருக்கிறது. 4,500 ரூபாயாக இருந்தாலும் சரி அல்லது 6,000 ரூபாயாக இருந்தாலும் சரி எல்லா வீடுகளையும் பச்சைக் கல்லில் தான் கட்டுகிறார்கள். அஸ்திவாரம் கட்ட வேண்டும். உடல் உழைப்பை நல்க வேண்டும் இப்படியெல்லாம் சொல்லும் நிபந்தனைகளை ஏற்பவர்களுக்குத் தான் காண்டிராக்டர்களாகட்டும் அல்லது பெருந்தலைவர்களாகட்டும் வீடுகள் கட்டிக் கொடுக்கிறார்கள். இதனை ஏற்காதவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதில்லை. இப்படிப்பட்ட நிலைமை பரூர், சத்தியவாடி போன்ற இடங்களில் இருக்கிறது. மேலும் பல கிராமங்களில் கட்டிய வீடுகள் இடிந்து கிடக்கின்றன. இதுபற்றிக் கேட்டால் பச்சைக் கல்லில்தானே கட்டச் சொல்லியிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். இதுபற்றியெல்லாம் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10–20)

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆர்.எல்.இ.ஜி.பி., என்.ஆர்.இ.பி., போன்ற திட்டங்களின் வாயிலாக 9,000 ரூபாய் என்று ஒதுக்கப்படுகின்ற அந்தத் தொகையில் 6,000 ரூபாய் வீடு கட்டுவதற்கும், மீதி 3,000 ரூபாய் அந்த ஊரிலே இருக்கின்ற காலனி வசதி, ரோடு வசதிகளுக்கும் ஒதுக்கப்படுகிறது. அதற்கும் 6,000 ரூபாய் தான் இருக்கிறது. இருந்தாலும் இந்த 6,000 ரூபாயிலே நாம் கட்டுகின்றபொழுது அது போதாது என்று தெரிந்துதான், அதிலே பயன்பெறுபவர்களிடம் அந்த 6,000 ரூபாயைக் கையிலே கொடுத்து, அவர்களும் தங்களுடைய சொந்த உழைப்பையும் பணத்தையும் போட்டுக் கட்டிக் கொள்ளுகின்ற அளவில் கட்டு கிறது. அதனாலே அவர்களே கட்டிக் கொள்கிறார்கள். பணம் கொடுத்து விடுகிறோம். அதிலே பிரச்சனைகள் இருந்தாலும் அவரையும் சேர்ந்த பொறுப்பாக இருக்கிறது. அதிலே அரசுக்கு எந்தவிதமான பிரச்னையும் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. த. புஷ்பராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களுக்குக் கட்டப்படுகின்ற வீட்டினுடைய தொகை உயர்த்திக் கொடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். என்னுடைய கேள்வியெல்லாம் அவர்களுக்கு வீடு கட்டுவதற்கு 3,000 ரூபாய் மட்டும் கொடுக்கப்பட்டு,—என்னுடைய தொகுதியிலே—

திருமயத்திலே கிட்டத்தட்ட 300 வீடுகளுக்கு மேல் கூரை மட்டம் வரை கட்டப்பட்டு முடிக்கப்படாமல் எந்தப் பலனும் இல்லாமல் இருக்கிறது. அந்த வீடுகளைக் கட்டுவதற்கு அரசு மேற்கொண்டு அவர்களுக்குக் கடன் வசதியாக உதவி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போடவும்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் முந்தைய கேள்வியிலேகூட ஆர்.எல்.இ.ஜி.பி., என்.ஆர்.இ.பி., என்ற இரண்டு திட்டங்களின் மூலமாக 47,000 வீடுகள் கட்டுவதற்கு முடிவு எடுக்கப்பட்டது என்று சொன்னார்கள். அந்த ஆர்.எல்.இ.ஜி.பி. மூலமாகவும், என்.ஆர்.இ.பி., திட்டத்தின் மூலமாகவும் நம்முடைய அரசாங்கம் ஒதுக்கக்கூடிய பணம் எவ்வளவு? மத்திய அரசு ஒதுக்கக்கூடிய பணம் எவ்வளவு? அதோடு, 32,000 வீடுகள் அண்ணா மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த மாவட்டம் முழுமையும் அந்த 32,000 வீடுகள் கட்டி கொடுக்கப்படும் என்று ஏற்கனவே சொல்லப்பட்டது. அது நடைமுறைப்படுத்தப்படுமா? அது இந்த ஆண்டாவது தாட்கோ மூலமாக எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்.ஆர்.இ.பி. திட்டத்தின் வாயிலாக மத்திய அரசு பகுதி தொகையும், மாநில அரசு பகுதியாகவும் போட்டு இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றன. ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்தின் முழுச் செலவையும் முழு மானியமாகச் செலுத்தி மத்திய அரசு எற்றுக்கொள்கிறது. தாட்கோ மூலமாக 32,000 வீடுகள் அவர்களுடைய பழனி தொகுதியிலே ஒதுக்கப்பட்டிருப்பதாகவும்—(குறுக்கீடு) — சரி, அந்த மாவட்டம் முழுவதும் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் சொன்னார்கள். ஆனால் வருகின்ற ஆண்டில் அந்தப் பகுதியில் எங்கெங்கு பட்டா அதிகமாகக் கொடுக்கப்பட்டு இருக்கிறதோ அந்த இடங்களுக்குப் பார்த்து வீடுகள் ஒதுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஆ. சிவக்குமார்:** மாண்புமிகு பேரவைக் தலைவர் அவர்களே, என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.ஜி.பி., திட்டங்களின் மூலமாக, ஆதி திராவிட மக்களுக்காகக் கட்டிக் கொடுக்கப்படுகின்ற வீடுகளுடைய முழுப் பொறுப்பும் அந்தப் பகுதியில் உள்ள ஊராட்சி மன்றத் தலைவரிடத்திலே ஒப்படைக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினால், முன்கூட்டியே அந்தப் பணத்தை அவர்கள் பெற்றுக் கொள்கின்ற காரணத்தினாலே அந்த வீடுகள் சரிவரக் கட்டி முடிக்கப்படாத நிலையில் அந்தப் பணத்தை அவர்கள் பல வழிகளிலேயும் செலவழித்து வீடுகளைச் சரிவரக் கட்ட முடியாத நிலைமை இருக்கிறது. இது அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா? அதுபற்றி ஏதாவது முடிவு எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையிலேயும் அதுபோன்ற பிரச்சினை அரசினுடைய கவனத்திற்கு வரவில்லை. அப்படி வந்தால், சம்பந்தப்பட்ட துறை அதன்மீது நடவடிக்கை எடுக்கும்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாட்கோ மூலம் கட்டிக் கொடுக்கப்படும் தொகுப்பு வீடுகளுக்கு 20, 25 என்று வரையறை வைத்திருக்கிறார்கள். அதன் காரணமாக கிராமங்களில் ஏழை அரிசனங்களும், பகடைகள், சாம்பன்கள்—இந்தப் பிணத்தை எரிப்பவர்களுக்கு எல்லாம்—அவர்கள் ஊரிலே பத்து பேர், பதினைந்து பேர்தான் இருப்பார்கள். வீட்டுமனைப் பட்டா இலவசமாக வழங்கியும்கூட, தாட்கோ மூலமாக வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு மறுக்கிறார்கள். இதை இந்த அரசு தளர்த்தி, பகடைகளுக்கும், சாம்பன்களுக்கும் 10 பேர், 15 பேர் இருந்தாலும்கூட வீடு கட்டிக் கொடுப்பதற்கு தாட்கோ முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி 20, 30 என்று நியதி வைத்துக் கொடுக்கவில்லை. பட்டா பெற்று இருப்பவர்களுக்கு வீடு ஒதுக்கிக்கொண்டு இருக்கிறோம். அப்படி இருந்தால் அதன்மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. எஸ். சிவராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாட்கோ, ஆர்.எல்.இ.ஜி.பி., என்.ஆர்.இ.பி. போன்ற திட்டங்கள் மூலமாக ஆதி திராவிடர்களுக்கு வீடுகள், மனைகள் ஒதுக்குகிறார்கள், என்றாலும் சில நேரங்களில் தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட ஆதி திராவிட மக்களுக்கு முன்னுரிமை கொடுத்து, இந்தத் திட்டங்களின் மூலமாக வீடுகள் கட்டும் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று ஏற்கனவே ஒரு கருத்து இருந்தது. இந்த முறை அது கடைப்பிடிக்கப்படாத காரணத்தினால் பல ஆதி திராவிடர்களுடைய, தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட வீடுகள் கட்டிக் கொடுக்கப்படாமல் இருக்கின்றன. அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியிலே கடத்தூர் என்ற கிராமம் 4 ஆண்டுக் காலத்திற்கு முன்பாக தீ விபத்தினால் பாதிக்கப்பட்டு, கடன் நிவாரணம் வழங்கப்பட்டும் இதில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதுபோன்று இருப்பவர்களுக்கு, முன்னுரிமை கொடுத்து, தாட்கோ மூலமாகவோ, அல்லது மற்ற திட்டங்களின் மூலமாகவோ, வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீ பிடிப்பதாலும், கலவரத்தாலும் பாதிக்கப்படுகின்ற ஆதி திராவிட மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க வேண்டுமென்ற திட்டத்தின் வாயிலாக உடனடியாக எடுத்துக் கொள்கிறோம். ஆனால் அந்த இடத்திலே இருப்பவர்களுக்கு முதலிலே பட்டா கிடைத்தால்தான் வீடு கட்டிக் கொடுக்க முடியும். பட்டா கொடுப்பதில் தடங்கள் இருந்திருக்கலாம். அவருடைய தொகுதியைப் பற்றி சொன்னார்கள். அங்கே பட்டா கொடுத்திருந்தால், வருகின்ற ஆண்டிலே அந்த இடத்திலே அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சா. ஜெயச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1985—86 ஆம் ஆண்டு தாட்கோ மூலம் 3,000—க்கு மேற்பட்ட வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டதாகக் கூறினார்கள். ஆதி திராவிடர்களுக்குப் பட்டா இருக்கும்போது அவர்களுக்கு ரூ. 6,000 இலவசமாக பணமாக வழங்கப்படுகிறது; அது 3 முறையாக வழங்கப் படுகிறது. அவர்கள் முதலிலே வாங்குகின்ற ரூ. 2,000—ஐ செலவு செய்துவிட்டு அதைக் கட்டாமல் விட்டு விடுகிறார்கள். தற்போது தாட்கோவிலே பொறியாளர்கள் இருக்கின்றார்கள். ஆகவே, தாட்கோ மூலமாக பள்ளிக் கட்டிடங்கள் கட்டிக் கொடுப்பது போலவே, இந்த ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீடுகளையும்—தாட்கோ பொறியாளர்கள் மூலமாக, கான்ட்ராக்டர்கள் மூலமாக, கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அதுபற்றி தனிக் கேள்வி போடவும்.

**திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடு கட்டிக் கொடுக்கின்ற திட்டம் ஒரு நல்ல திட்டம். ஆனால், ரூ. 6,000—க்கு வீடு கட்டக் கூடிய நேரத்தில், இப்பொழுது ஊராட்சி மன்றத் தலைவர்களுடைய கண்காணிப்பில்தான் கட்டுகிறார்கள். இப்பொழுது நன்றாகக் கட்டுகிறார்கள். ஆனால், ரூ. 6,000 ரொக்கம் இல்லாமல், பாதி கோதுமையும் அரிசியும் கொடுக்கிறார்கள். அப்படிக் கொடுக்கிறபொழுது எடை குறைவாகக் கொடுக்கிறார்கள். வேலை செய்கின்ற கொத்தனார்கள் அரிசி, கோதுமை வாங்க மறுக்கிறார்கள்; பணம்தான் கேட்கிறார்கள். அதனால் அதை விற்கின்றபொழுது நஷ்டம் வருகின்றது. அதனால்தான் இன்றைக்கு வீடு கட்டுகிற பிரச்னையில் நல்ல வீடாகக் கட்ட முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, இன்றுள்ள விலைவாசி ஏற்றத்தைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, இந்த ரூ. 6,000 என்பதை ரூ. 10,000—ஆக, ரொக்கமாக வழங்க நல்ல வீடுகள் கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. எ. அருணாசலம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூ. 6,000-ஐ ரூ. 10,000 ஆக உயர்த்தும் செயற்குறிப்பு இருக்கிறது. அதன் மீது நடவடிக்கை எடுக்கப் படும்.

**திரு. கி. ராமன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என். ஆர். இ. பி. மூலமாகவும், ஆர். எல்.இ.ஜி.பி. மூலமாகவும், தாட்கோ மூலமாகவும் கட்டப்படுகின்ற வீடுகள், குறைந்த எண்ணிக்கை 20 இருக்க வேண்டுமென்றுதான் ஏற்கனவே ஒரு முறை இருந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது அந்த மாதிரி குறைந்த வீடுகள் கட்ட வேண்டுமென்ற நிலைமையில்லையென்ற தகவலைச் சொன்னார்கள். அது சரியல்ல என்று நினைக்கிறேன். ஏற்கனவே இது நடைமுறையில் இருப்பது என்னுடைய சக உறுப்பினர்கள் எல்லோருக்கும் தெரியும் என்று நினைக்கிறேன். இந்த மூன்று திட்டங்களின் கீழ் கட்டப்படுகின்ற வீடுகள் குறைந்தது 20 இருக்க வேண்டும். 20-க்குக் குறைந்த அளவு கட்ட நடைமுறையில் சாத்தியம் இல்லை என்று அந்த அந்த மாவட்ட ஆட்சியாளர்கள் மூலமாகவும் தெரிய வருகிறது. இது சம்பந்தமாக டி.டி.சி. மீட்டிங்கில் பேசியிருக்கிறேன். பல கூட்டங்களிலும் பேசியிருக்கிறேன். மாண்புமிகு திரு. ப. உ. ச. அவர்களிடத்திலும் சொல்லியிருக்கிறேன். சக உறுப்பினர் திரு. ஆறுமுகம் சொன்னது போல, குறிப்பாக பகடை, அருந்ததியார் மக்கள் இருக்கிற கிராமங்களில், அவர்கள் 6 குடும்பங்கள், 7 குடும்பங்கள் தான் இருக்கின்றனர். 20 வீடுகளுக்குக் குறையாமல் கட்ட வேண்டுமென்று சொன்னால்தான் இந்தத் திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்படுகிறது. அதனால் நான் பல முறை மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் இது பற்றித் தெரிவித்திருக்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர், இது பற்றி ஒன்றும் செய்ய முடியாமல் இருப்பதாகவும் அரசு உத்தரவை எதிர்நோக்கி இருப்பதாகவும் சொல்கிறார்கள். ஆகையால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுபற்றி சரியான பதிலை அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

*(முற்பகல் 10—30).*

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல அது என். ஆர். இ. பி., ஆர். எல். இ. ஜி. பி. போன்ற திட்டங்களில் இருக்கலாம். ஆனால் 'தாட்கோ' மூலம் கட்டப்படுகின்ற வீடுகள், 10 வீடுகளாக இருந்தாலும் கொடுக்கிறோம்; 5, 6 வீடுகளுக்குக்கூட கொடுத்திருக்கிறோம். குறைந்த அளவு எண்ணிக்கை இருந்தாலும் தாட்கோ மூலம் வீடுகள் கட்டப் படும்.

[1986 நவம்பர் 17

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து கவன ஈர்ப்பு. திருவாளர்கள்..

திரு. பரிதி இளம்வழுதி : சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்ப நான் அனுமதிக்கவில்லை. பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்புவது பற்றி நீங்கள் என்னிடம் தெரிவிக்கவில்லை; என் அறையில் வந்தும் கேட்கவில்லை.

திரு. பரிதி இளம்வழுதி : தலைவரவர்களே, நான் தகுந்த ஆதாரத்துடன்தான் பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்புகிறேன். என்னிடம் போட்டோ, மற்ற தகவல்களை எல்லாம் வைத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் என்னிடம் அதைக் காட்டவும் இல்லை; அனுமதி கேட்கவும் இல்லை.

திரு. பரிதி இளம்வழுதி : தலைவரவர்களே, நான் ஏற்கெனவே தங்களிடம் இது பற்றித் தெரிவித்திருக்கிறேன். இன்றைக்கும் தங்கள் அறையில் வந்து சொன்னேன் ஆகவே நான் சொல்வதைக் கேட்டுவிட்டு நீங்கள் தீர்ப்பளியுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் என்னிடம் தெரிவிக்கவில்லை; என்னுடைய அனுமதியைப் பெறவில்லை. தயவு செய்து நீங்கள் அமருங்கள்.

திரு. செ. ஆறுமுகம் : உங்களுடைய அறையில் வந்து தெரிவிக்காவிட்டாலும் இப்போது அவையில் பாயின்ட் ஆஃப் ஆர்டர் கேட்கலாம். முறையாக இருந்தால் நீங்கள் அனுமதிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதுபற்றி பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்பது எனக்குத் தெரியவேண்டும். (குறுக்கீடு) நான் நடைமுறைகளைப் பற்றிச் சொல்லுகின்றபோது ஒரு உறுப்பினருக்காக மற்றொருவர் பேசுவது முறையல்ல. அவர் எது பற்றி ஒழுங்குப் பிரச்சனை எழுப்புகிறார் என்று என்னிடம் தெரிவிக்கவில்லை; என் அனுமதியையும் பெறவில்லை. ஆகவே. மாண்புமிகு உறுப்பினர் தயவுசெய்து அமர வேண்டும். (குறுக்கீடு).



1986 நவம்பர் 17]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பரிதி இளம் வழுதி அவர்கள் எழுப்புகிற பிரச்சனையை முறைப்படி பேரவைத் தலைவரிடம் தெரிவித்து, அனுமதி பெற்றிருந்தால் அதற்கு உரிய பதிலைப் பெறுவதற்கு வசதியாக இருக்கும். நான் கருதுவது சரியாக இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூற விரும்புகின்ற பிரச்சனையை நானும் பத்திரிகையில் பார்த்தேன். ஆனால் அதற்கான விளக்கத்தை நேரடியாகப் பெற முடியவில்லை. அவர்கள் முன் கூட்டியே தெரிவித்தால், பேரவைத் தலைவர் மூலம் நாங்கள் தெரிந்து கொண்டு, உரிய பதிலைப் பெற்றுத்தர முடியும். ஆகவே, அவர்கள் முறைப்படி எழுத்துமூலமாக அது பற்றித் தெரிவிப்பது நல்லது. எழுத்து மூலம் தெரிவித்தால் அவர்கள் குறிப்பிடுகின்ற இடம் மிலிட்டரி ஏரியாவா நம்முடைய ஏரியாவா, மிலிட்டரிக்கு என்ன உரிமை இருக்கிறது, நமக்கு என்ன உரிமை இருக்கிறது என்கிற விவரங்களை எல்லாம் அறிந்து இந்த அவைக்குச் சரியான தகவலைத் தெரிவிக்க வாய்ப்பு ஏற்படும்.

அது பற்றி பத்திரிகையில்தான் நான் பார்த்தேன். அன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பும் போது கூட அந்தப் பிரச்சனை எனக்குப் புரியாமல்தான் இருந்தது; தெரியாமல் இருந்தது. செய்தித் தாளில் பார்த்த பிறகு அப்படி ஒரு நிலைமை இருக்கிறது என்டதை நானே புரிந்து கொண்டேன். எனவே நாங்களே தெளிவு அடைய வேண்டும், அதற்குப் பயன்படுகிற அளவுக்கு எழுதிக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

## 3. கவன ஈர்ப்பு.

### மூளைக்காய்ச்சல் நோய் பரவியிருத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் செ. செம்மலை, வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன், வி. பி. சிந்தன், சைதை சா. துரைசாமி, எஸ். சிவராமன், சு. சிவராஜ், குமரி அனந்தன், சு. பாலன், இரா. தாமரைக்கனி, கே. எம். தங்கமணி, கு.ரமணி, கோ. வீரய்யன், எம். செல்லமுத்து, மா. சுந்தரதாஸ், டாக்டர் ந. மாசிலாமணி, திரு. கி. வெங்கடாசலம் டாக்டர் க. நல்லமுத்து, திருவாளர்கள் ஜே. முகம்மது கனி, பரிதி இளம் வழுதி, ப. பொன்னுரங்கம் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழகத்தில் மூளைக்காய்ச்சல் நோயினால் பல குழந்தைகள் இறந்துள்ளதால் அந்நோயைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:—

## அறிக்கை.

தமிழ்நாட்டில் ஜப்பானிய என்கெபலைடிஸ் (Japanese B Encephalitis) என்னும் வைரஸ் மூளைக் காய்ச்சல் 9 மாவட்டங்களில் பரவியிருக்கிறது.

2. தமிழ்நாட்டில் இப்போது காணப்படும், இந்நோய் புதிதல்ல. பல ஆண்டுகளாக இருந்து வரும் ஒன்று. 1986-ம் வருட இறுதியில் பருவ மழைக்குப்பின் திடீரென்று இந்நோய் ஆங்காங்கே சில இடங்களில் தென்படுகிறது. தென் ஆற்காடு மாவட்டத்தில்தான் இந்த நோய் அதிகம் பரவியுள்ளது.

3. இவ்வருடம் 10-11-1986 முடிய இந்நோயினால், இம் மாநிலத்தில் 291 பேர்கள் பாதிக்கப்பட்டனர். இறப்பு 122, அக்டோபர், நவம்பர் மாதங்களில் பாதிக்கப்பட்ட மாவட்டங் களில் இந்நோயினால் பாதிக்கப்பட்டோர், இறந்தோர் விவரங்கள் மாவட்ட வாரியாக கீழே வருமாறு:—

| எண். | மாவட்டங்களின் பெயர். | அக்டோபர் | | நவம்பர் (10-11-86 முடிய.) | |
|---|---|---|---|---|---|
| | | பாதிப்புகள். | இறப்புகள். | பாதிப்புகள். | இறப்புகள். |
| 1. | செங்கற்பட்டு | 0 | 0 | 1 | 1 |
| 2. | வட ஆற்காடு | 2 | 1 | 1 | 1 |
| 3. | தென் ஆற்காடு | 66 | 36 | 99 | 28 |
| 4. | திருச்சி | 2 | 1 | 13 | 0 |
| 5. | தஞ்சாவூர் | 1 | 1 | 6 | 1 |
| 6. | இராமநாதபுரம் | 0 | 0 | 1 | 1 |
| | | 71 | 39 | 121 | 32 |



4. இவ்வாறு பாதிக்கப்பட்ட அநேக கிராமங்கள், தண்ணீர்
தேங்கும் பகுதிகளிலுள்ள கொசுக்கள் உற்பத்தியாவதற்கு ஏது
வான இடங்களாகும். மேலும் இப்பாதிப்புகள் சிதறலாக அங்கு
மிங்கும் 262 கிராமங்களில் ஏற்பட்டிருக்கிறது என்றும் தெரிய
வருகிறது.

5. தமிழ்நாட்டில் குறிப்பாக தென்னாற்காடு மாவட்டத்தில்,
இந்நோய் பரவியிருக்கிறது என்ற தகவல் வந்தவுடன், சுகாதாரத்
துறை ஆணையர் மற்றும் செயலர் பொது சுகாதார மற்றும்
தடுப்பு மருந்து இயக்குநர் மற்றும் தென்னாற்காடு மாவட்ட
ஆட்சித் தலைவருடனும் இந்நோயினை கட்டுப்படுத்த மேலும்
எடுக்கப்பட வேண்டிய தடுப்பு நடவடிக்கைகளைப் பற்றி
விவாதித்தார். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை
அமைச்சரின் ஆணைப்படி பொது சுகாதார மற்றும் தடுப்பு
மருந்து இயக்குநர் பாதிக்கப்பட்ட இடங்களை நவம்பர் 3-4,
தேதிகளில் பார்வையிட்டார். தமிழ்நாட்டில், இந்நோய்
மற்றப் பகுதிகளில் பரவாமலிருக்க கீழ்க்கண்ட தடுப்பு நட
வடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.—

(1) இந்நோயினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் இந்
நோயினை கட்டுப்படுத்தும் பணிகள் போர்க்கால அடிப்படையில்
மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்நோய் அண்டை மாவட்டங்களில்
பரவாமலிருக்க விழிப்பாக எல்லை கிராமங்களில் கொசு மருந்து
தூவுவதற்கு அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

(2) சந்தேகப்படுகின்ற மூளைக்காய்ச்சல் பாதிக்கப்பட்ட
நோயாளிகளுக்கு உடனுக்குடன் சிகிச்சை அளித்து மருத்துவ
மனைக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்
கின்றன.

(3) பாதிக்கப்பட்ட இடங்களில், கொசு மருந்து புகை
செலுத்துவதற்கும் மற்றும் கொசு மருந்து தூவுவதற்கும், மருந்து
தெளிப்பு குழுக்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

(4) பெரும்பாலும், மூளைக் காய்ச்சல் நோய் ஏற்படக்
காரணமாக இருக்கும் பன்றிகளை பிடித்து ஒழிப்பதற்கும்,
கொசுப்புழு உற்பத்தியை தடுக்கவும் மேலும் பொது மக்கள் மேற்
கொள்ள வேண்டிய சுற்றுப்புற சுகாதார நடவடிக்கைகள் பற்றி
அறிவிக்கவும் தக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.
இது குறித்து செய்தித்தாள்கள், துண்டுப் பிரசுரங்கள், டாம்
டாம் அடித்தல் மற்றும் திரைப்படங்கள் வாயிலாக பொது
மக்களுக்கு விளக்கப்படுகிறது.

(5) அதிக அளவில் பாதிக்கப்பட்ட தென்னாற்காடு
மாவட்டத்தில் தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் பிரிவு 241-ன்
கீழ் மாவட்ட ஆட்சியர் மாவட்டத்திலுள்ள நகராட்சிப் பகுதிகளில்
பன்றிகளை அழிக்க சட்டத்தைப் பிரகடனப்படுத்தியுள்ளார்.
கிராம நிர்வாக அதிகாரிகளுக்கும் இது குறித்து தக்க

நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவு பிறப்பித்துள்ளார். மேலும் மூளைக் காய்ச்சல் நோய் மாவட்டம் முழுவதிலும் பரவ ஏதுவா கும் என அறிவித்து, அதற்காக எல்லாத் தடுப்பு நடவடிக்கை களையும் மேற்கொள்ள பொது சுகாதாரத் துறையினருக்கு அதி காரம் வழங்கியுள்ளார்.

(6) எல்லா மருத்துவ நிலையங்களின் தலைமை மருத்து வர்கள் சந்தேகத்திற்குரிய மூளைக்காய்ச்சல் நோய் கண்டவர்கள் வைத்தியத்திற்கு வந்தால் தடுப்பு நடவடிக்கை எடுப்பதற்காக பொது சுகாதாரத் துறையினருக்குத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். உடனடி நிவாரணம் அளிக்க வேண்டியும், அதற்காக நிலைப்படுத்தப்பட்ட வைத்திய முறைகள் பற்றியும் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதோடல்லாமல் இதர முறைகளையும் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது. இது குறித்து மேலும் தொழில் நுணுக்க அறிவுரை கள், பொது சுகாதாரம் மற்றும் மருத்துவத்துறையினருக்கு வழங்கப்பட்டுள்ளன.

(7) கொசுக்கள் உற்பத்தியை தடுக்க, வயல்களில் தண்ணீரை தொடர்ச்சியாக தேங்க வைக்காமல் வாரத்திற்கு ஒரு முறை சிலமணி நேரத்திற்கு வடிகட்டி விடும்படி விவசாயி களுக்கு அறிவுரை வழங்குமாறு வேளாண்மைத்துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

(8) போதிய அளவு மருந்துகளும், தெளிப்பு மருந்துகளும் கைவசம் வைக்கப்பட்டுள்ளன. அதிகப்படி தேவைகளைப் பூர்த்தி செய்யவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. நிலைமையைக் கூர்ந்து கவனித்து தக்கமுறையில் நடவடிக்கையை மேற் கொள்ளப் பல கிராமங்களைக் கொண்ட பகுதிகளுக்கு சுகாதார மேற்பார்வையாளர் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன,

(9) சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரைக்கும், முன்னெச்சரிக்கையாக சென்னை மாநகரில் பன்றி வளர்க்கும் இடங்களையும் அதன் சுற்றுப்புறங்களையும் அடையாளம் கண்டு, இவ்விடங்களில் மருந்து தெளிப்புப் பணி மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. மேலும், தெருக்களில் சுற்றித்திரியும் பன்றிகள் பிடித்துக் கொல்லப்படுகின்றன. கடும் கண்காணிப்பு மேலும் தீவிரமாக்கப்பட்டு, தனியார் மருத்துவமனைகள், மற்றும் குழந்தை நல நிபுணர்களுடன் தொடர்பு கொண்டு, சந்தேகிக்கப் பட்ட இம்மூளைக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டவர்களை உடனே தெரிந்து கொண்டு தக்க சிகிச்சை அளிக்கும்படியும், கிதவி சுகாதார அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக் கிறார்கள்.



6. இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் எனக் கருதப் படும் அத்தனை நோயாளிகளும், இறந்தவர்களும் ஆய்வகப் பரிசோதனையின்றி நோயின் அறிகுறிகளை மட்டும் கண் காணித்து அவர்களுக்கு ''வைரஸ்'' மூளைக் காய்ச்சல் நோய் என்று எடுத்துக் கொள்ள வேண்டியுள்ளது. எனவே எல்லாக் காய்ச்சல்களும், இறப்புகளும் வைரஸ் மூளைக்காய்ச்சலால் தான் ஏற்பட்டவை என்று சொல்ல முடியாது. தீர ஆராய்ந்து பார்த்ததில் சில நோயாளிகள் வேறு சில மூளை சம்பந்தப்பட்ட நோய்களாலும் பாதிக்கப்பட்டிருந்தனர் என்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. எனினும் மேற் கூறப்பட்ட வகையான நோய் களையும் கருத்தில் கொண்டு உரிய அனைத்துத் தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அத்துடன் திருத்தம் ஒன்றையும் சேர்த்துத் தருகிறேன். அதாவது கடைசி யாக அரசுக்கு இப்போது கிடைத்திருக்கிற முழு விவரத்தையும் தரவேண்டும் என்பதற்காக இதையும் சேர்த்துத் தருகிறேன்.

இதுவரையில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 386. இறந்த குழந்தைகளின் எண்ணிக்கை 185. பாதிக்கப் பட்டிருக்கிற கிராமங்கள் 277.

*திரு. செ செம்மலை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலே தந்துள்ளபடி அரசு எடுத்துள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை நான் வரவேற்கிறேன். ஆனால் இதுவரையில் அங்கொன்றும், இங்கொன்றுமாக இருந்து வந்த இந்த நோய் இப்போது பரவ லாகப் பரவி வருகிற ஒரு பயங்கரமான நோயாக இன்றைக்கு உருவெடுத்து இருக்கிறது.

ஜப்பானில் இந்த நோய்க்கு ஒரு சக்தி வாய்ந்த தடுப்பு மருந்து அதாவது 'ஆன்டி வேக்ஸின்' கண்டுபிடித்து இருப்பதாகப் பத்திரிகையில் நான் படித்தேன். அது நல்ல பலனளிக்கக்கூடிய மருந்தாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால் எந்தக் காரணத்தாலோ அதனை 'இம்போர்ட்' செய்வதற்கு மத்திய அரசு தடை விதித்து இருப்பதாக நான் அறிகிறேன். எனவே, மத்திய அரசோடு தொடர்பு கொண்டு ஜப்பானில் இருந்து அந்த உயிர்காக்கும் மருந்தை இறக்குமதி செய்து இந்த நோயால் பல உயிர்கள் பலி ஆவதைத் தடுக்க நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா, அதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்வார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜப்பானில் இந்நோயின் எதிர்ப்பு சக்திக் கான ஒரு இன்ஜெக்ஷனைக் கண்டுபிடித்து இருப்பது பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். ஜப்பானில் கண்டு பிடிக்கப்பட்ட அந்த மருந்தைப் பொறுத்தவரையில் வந்த

நோயைத் தடுப்பதற்கானதல்ல அது. நோய் வருவதற்கு முன்பு, அதாவது எப்படி நாம் அம்மை குத்திக் கொள்கிறோமோ, காலரா ஊசி குத்திக்கொள்கிறோமோ அதுபோன்ற இன்ஜெக்ஷன் இது என்று சொல்கிறார்கள். 'அந்த வயல்'-இன் விலை ஏறக்குறைய முப்பது ரூபாய் ஆகிறது. கர்நாடக மாநிலம் என்று கருதுகிறேன், அவர்கள் ஒரு இலட்சம் வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். 20 ஆயிரம்தான் இருக்கிறது இப்போது எங்களிடத்தில் என்றும், மேலும் வேண்டும் என்றால் தயாரித்துத் தான் கொடுக்கமுடியும் என்றும் சொல்லி இருக்கிறார்கள். அதுபற்றிய முழு விவரத்தையும் கேட்டதற்கு அந்த மருந்தைப் போட்டுக்கொண்டால் ஒரு ஆண்டுக்குத்தான் குத்தியவர்களுக்குப் பலன் இருக்கும் என்று சொல்கிறார்கள். எனவே அதனை ஆண்டுதோறும் குத்திக்கொண்டுதான் இருக்கவேண்டும்; வேறு வழி இல்லை. எனவே இந்திய அரசாங்கம், இவ்வளவு விலை உயர்ந்த ஒரு மருந்தை இறக்குமதி செய்வதை விட இதைத் தடுக்கின்ற வழி முறைகளைக் கையாளலாம் என்று கருதி தடை விதித்து இருக்கிறது. இந்திய அரசிடம் அந்தத் தடையை எடுக்கவேண்டும் என்று சொல்லிக் கேட்பதில் ஆச்சரியம் இல்லை. ஆனால் இப்படி போடப்படுகிற இன்ஜெக்ஷனால் ஒரு ஆண்டுக்குத்தான் பலன் கிடைக்கும்; அந்த அளவுக்குத்தான் தடுப்பு சக்தி இருக்கும்; அடுத்த ஆண்டுக்கு அது இருக்காது என்று சொல்லப்படுகிறது.

(முற்பகல் 10-40)

**திரு. கோ. வீரய்யன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரவிக் கொண்டிருக்கிற மூளைக் காய்ச்சல் நோயை தடுப்பதற்கான நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதாக சொல்லப்படுகிறது. ஆனால், இந்த மூளைக் காய்ச்சல் நோய் வேகமாகப் பரவிக் கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. தொடர்ந்து செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. தென்னாற்காடு மாவட்டத்தில் மட்டும் அல்லாமல், தஞ்சை, திருச்சி, மதுரை போன்ற மாவட்டங்களிலும் இது வேகமாக பரவி வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத் திருக்கிற அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கக்கூடிய, விவரப்படி இறந்தவர்களின் எண்ணிக்கை 32 என்று இருக்கிறது. இப்போது இறுதியாக சொல்லக்கூடிய எண்ணிக்கை 185 பேர்கள் என்கிறார்கள். இதுவே எந்த அளவுக்கு அந்த நோய் வேகமாகப் பரவுகிறது என்பதைக் காட்டுகிறது.

இந்தக் காய்ச்சல் நோய் பரவக்கூடிய வேகத்திற்கு, தடுப்பு நடவடிக்கை என்பது வேகம் அமைந்ததாக இல்லை என்று காரணத்தாலே அது பெரும் அளவுக்கு குழந்தைகளை பாதித்து, அவர்கள் இறக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. ஒட்டு மொத்தமாக பன்றிகளை கொன்றுவிட்டால் மட்டும் இதைத் தடுத்துவிட முடியும் என்ற நிலையில் அரசு கருதுவதாக



அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. பன்றிகளை வேறு இடங் களுக்கு ஒதுக்குப்புறமாக அப்புறப்படுத்துவதற்கும், அவைகளை வளர்ப்பவர்களுக்கு இந்தக் காய்ச்சல் பரவாமல் தடுப்பதற்கும், மேலும் இந்தக் காய்ச்சல் எவ்வளவு வேகமாக பரவுகிறதோ, அதே வேகத்தில் இந்த நோயை தடுப்பதற்குமான நடவடிக்கை களை எடுக்க அரசு முன் வருமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நோய்களை எல்லாம் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது என்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். சொல்லப்படுவது என்பது மட்டும் அல்ல. நடவடிக்கையை எடுத்திருக்கிறோம். இன்னும் நடவடிக்கையை எடுத்து வருகிறோம். பன்றிகளையெல்லாம் கொண்டுபோய் ஒரு இடத்திலே சேர்த்து அடைத்து விடுவதனால் மட்டும் இந்த நோயை தடுத்து விட முடியாது. கொசுக்கள் பரவுவதை முதலில் தடுக்க வேண்டும். கொசுக்கள் முதலில் அந்தப் பன்றிகளை கடித்து விட்டு பிறகு மக்களையும் வந்து கடிப்பதனால்தான் இந்த மூளைக் காய்ச்சல் நோயே வருகிறது. அதுமட்டுமல்ல அதனால் இந்நோய் மற்ற கால்நடைகளுக்கும் வரக்கூடும் என்று சொல்லுகிறார்கள். ஆனால் பன்றிகளுக்குத் தான் இந்நோய் அதிகமாக வருகிறது என்கிற காரணத்தால், நோயுற்ற பன்றிகளை உடனுக்குடன் கொன்று விட வேண்டும், அத்தோடு கொன்ற பன்றியை யாரும் சாப்பிடக்கூடாது என்றும் சொல்லியிருக்கிறோம். அத்தோடு பன்றிகளை வளர்க்குமிடங் களில் கொசு மருந்து அடிப்பவர்கள் வந்தால், அவர்களோடு முழு ஒத்துழைப்புத் தர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டி ருக்கிறோம். கொசு மருந்துகளை அதிகமாக தருவித்தும், அதை அடிப்பதற்குத் தேவையான ஆட்களைப் போட்டும் ஆங்காங்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். இப்படிப்பட்ட தடுப்பு நடவடிக்கைகளைத் தவிர வேறு எந்தவித நடவடிக்கையும் இப்போது இந்த நோயைப் பொறுத்தவரையில் நம் நாட்டிலேயே இல்லை என்பதுதான் எனக்குத் தெரிந்த வரையில், விசாரித்த வரையில், தெரிந்து கொண்டிருக்கிறேன். இதற்கு மேல் நடவடிக்கை எடுப்பது என்றால் என்னவென்று புரியவில்லை. எல்லா மருத்துவமனைகளுக்கும் எல்லா தாலுக் காக்களுக்கும் கூட இது பற்றி தேவையான எச்சரிக்கைகள் அனைத்தும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அனைத்து சுகாதார நிலையங்களும் தகுந்த நடவடிக்கை எடுத்து வருகின்றன.

**டாக்டர் ந. மாசிலாமணி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மூளைக் காய்ச்சல் நோய் 9 மாவட் டங்களில் பரவி இருப்பதாக இந்த அறிக்கையில் செய்தி தரப் பட்டிருக்கிறது. ஆனால் இதில் விரிவாக 6 மாவட்டங்கள் குறித்த விவரங்கள் தான் தரப்பட்டிருக்கின்றன. இந்நோய் பல மாவட்டங்களில் பரவியிருந்தாலும் தென்னாற்காடு மாவட் டத்தில் தான் மிகவும் தீவிரமாக இருப்பாகத் தெரிய வருகிறது. தமிழகத்தில் இந்த 9 மாவட்டங்களுக்கும் தீவிர

நோய்க்கட்டுப்பாட்டு முறைகளைக் கையாண்டு இந்த மூளைக் காய்ச்சல் நோயை கட்டுப்படுத்த அரசு மக்களுக்கு உதவி செய்யுமா? அது மட்டும் அல்லாமல் இந்த நோய் பல ஆண்டுகளாக இந்த நாட்டில் இருக்கிறது என்று இந்த அறிக்கையில் விவரம் தரப்பட்டிருக்கிறது. இந்த நோயைப் பொறுத்த மட்டில் இந்த நோய் வந்த பிறகு காய்ச்சலை கட்டுப்படுத்துவதை விட தடுப்பு நடவடிக்கைகளின் மூலம் தான் கட்டுப்படுத்த முடியும் என்று மருத்துவ அறிக்கைகள் பல சொல்லுகின்றன. இந்த நோயை மருந்துகள் மூலம் குணப்படுத்துவது மிகவும் கடினம் என்றும் சொல்லுகிறார்கள். நாட்டிலே மலேரியா, தொழுநோய், நரம்புச் சிலந்தி போன்ற நோய்களை கட்டுப்படுத்துவதற்காக எப்படி சுகாதாரப் பணியாளர்களை நிரந்தரமாக நியமித்திருக்கிறீர்களோ அதுபோல, இந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்காகவும் தனிப்பிரிவு ஏற்படுத்தி நிரந்தரப் பணியாளர்களை அமர்த்தி, மக்களுக்கு மருத்துவ வசதியை அதிகப்படுத்த அரசு முன் வருமா? அத்தோடு,....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வியாக சுருக்கமாகக் கேளுங்கள். பேசிக்கொண்டேயிருக்க வேண்டாம்.

டாக்டர் ந. மாசிலாமணி: அமைச்சர் அவர்கள் 185 குழந்தைகள் இறந்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். எனவே மாவட்ட வாரியாக எத்தனை குழந்தைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா? மேலும் இந்த நோய் பன்றிகள் மூலம்தான் வருகிறது என்பது போல இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. தென்னாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவாதத்திலே பங்கு எடுத்துக் கொண்டு பேசுவது போல தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தால் எப்படி? இந்த கவன ஈர்ப்பிலே நிறைய உறுப்பினர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். கட்சிக்கு ஒரு உறுப்பினர்தான் இந்த நிலையில் அனுமதிக்க இயலும். 4, 5 கேள்விகளை தொடர்ந்து கேட்டால் எப்படி. ஒரே கேள்வியாகக் கேட்டு பதிலை எதிர்பாருங்கள்.

டாக்டர் ந. மாசிலாமணி : முக்கியமான பிரச்னை......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அப்படி மிக முக்கியமான பிரச்னை என்றால் வேறு புரொசிஜரின் கீழ் அவையில் கொண்டு வர வாய்ப்பு இருக்கிறது. 1/2 மணி நேர 1 மணி நேர டிஸ்கஷன் என்று கொண்டு வந்து பேசலாம். கவன ஈர்ப்பில் இப்படி நீண்டதாக கேள்வி கேட்டுக் கொண்டிருந்தால் எப்படி? (கூச்சல், குழப்பம்). ஒரு கேள்வி மட்டும் அனுமதிக்கப்படும், அதற்கு மட்டும் தான் அமைச்சர் இனி பதில் சொல்வார். இனிமேல் அப்படி விதியின்படிதான் நடக்க வேண்டும்.





டாக்டர் ந. மாசிலாமணி : துணைத் தலைவர் அவர்களே, பன்றிகளுடைய பெருக்கத்தைத் தடைப்படுத்துவதற்கும் சில விதிமுறைகளை அரசு வைத்து, சில சான்றிதழ்களை வழங்கி, குறிப்பிட்டவர்கள் தான் இந்தப் பன்றிகளை வளர்க்கலாம் என்று வைத்து, சுகாதார முறையில் அவைகளை வளர்ப்பதற்கு அரசு ஆணை பிறப்பித்து, இதுகுறித்து புதியதாக திட்டம் தீட்ட அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : துணைத் தலைவர் அவர்களே, டாக்டர் மாசிலாமணி அவர்கள் டாக்டராக இருந்தும் என்னிடத்திலிருந்து விவரங்களைத் தெரிந்து கொள்வதகு முயற்சிக்கிறார். நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். தென்னாற்காடு மாவட்டத்தில் நோய் அதிகமாக பரவியிருப்பதால் அதுபற்றிய விவரம் தரப்பட்டிருக்கிறது. மீதியுள்ள மாவட்டங்களில் எவ்வளவு பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற எண்ணிக்கையை கேட்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அதற்கான பட்டியலை வேண்டுமானால் படிக்கிறேன். உறுப்பினர் அவர்கள் வேண்டுமென்றால் அந்த விவரங்களைக்குறித்துக் கொள்ளட்டும். செங்கல்பட்டு மாவட்டத்தில் மொத்தம் பாதிக்கப்பட்டது 2, இறந்தது 1. வடாற்காடு மாவட்டத்தில் பாதிக்கப்பட்டது 16, இறந்தது 12. தென்னாற்காடு மாவட்டத்தில் பாதிக்கப்பட்டது 262, இறந்தது 122. திருச்சி மாவட்டத்தில் பாதிக்கப்பட்டது 32, இறந்தது 13. தஞ்சாவூர் மாவட்டத்தில் பாதிக்கப்பட்டது 16, இறந்தது 15. திருநெல்வேலி மாவட்டத்தில் பாதிக்கப்பட்டது 33, இறந்தது 10. மதுரை மாவட்டத்தில் பாதிக்கப்பட்டது 14, இறந்தது 6. இராமநாதபுரம் மாவட்டத்தில் பாதிக்கப்பட்டது 2, இறந்தது 1. தர்மபுரி மாவட்டத்தில் பாதிக்கப்பட்டது 1, இறந்தது 1. சேலம் மாவட்டத்தில் பாதிக்கப்பட்டது 8, இறந்தது 4. இந்த வியாதிக்கு என்ன தடுப்பு என்று கேட்டார்கள். நான் ஏற்கனவே விவரம் சொன்னேன். காய்ச்சல் வந்தவுடனே காய்ச்சலின் வேகத்தை குறைத்தாலன்றி இந்த வியாதியைப் போக்கமுடியாது. காய்ச்சல் வந்தவுடனே அதற்கான ஆண்டி-பயாடிக் எல்லாம் கொடுத்து, ஐஸ் வைத்து எப்படியாவது காய்ச்சலினுடைய வேகத்தை, டெம்பரேச்சரை அதிகமாகாமல் தடுக்க வேண்டும். இதைத் தடுத்தாலன்றி பாதிக்கப்பட்டவர்களை காப்பாற்ற முடியாது. இறந்தவர்கள் அத்தனை பேரும் இந்த வியாதியால் தான் இறந்தார்களா என்று அறுதியிட்டு சொல்லவும் முடியாது. அதற்குப் பிறகு ரத்த பரிசோதனை செய்து பார்த்த பிறகு தான் அதை உறுதியாகச் சொல்ல முடியும். எல்லாம் சந்தேகத்தின் பேரில் தான் சொல்லப்படுகிறதே தவிர உறுதியாக சொல்ல முடியாது. இருப்பினும் இந்த வியாதியைத் தடுப்பதற்கு இப்போது இருக்கிற முறைகளைத் தவிர வேறு முறைகள் நாட்டில் இருப்பதாகத் தெரியவில்லை. கொசு பரவாமல் தடுக்க வேண்டும். பன்றிகளை வளர்க்கும் இடங்களில் கொசு அதிகமாக இருக்குமானால் கொசு பன்றிகளைக் கடித்து, பிறகு

அங்கேயிருக்கிற குழந்தைகளை கடித்தால் வியாதி வர வாய்ப்பிருக்கிறது. அப்படி ஜுரம் கண்டவுடன் உடனடியாக மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்று, வீட்டிலே இரண்டு மூன்று நாட்கள் வைத்திராமல், உடனடியாக மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று ஜுரத்தின் வேகத்தைக் கட்டுப்படுத்தினால் குழந்தைகளை காப்பாற்ற முடியும். இதுதான் மருத்துவர்கள் சொல்வது. இதனை டாக்டர் மாசிலாமணி அவர்கள் தெரிந்திருப்பார்கள். தெரிந்துதான் கேட்டார்கள் என்று கருதுகிறேன்.

திரு. குமரி அனந்தன்: துணைத் தலைவர் அவர்களே, எங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற விவரத்தை விட அதிகமாக மாவட்டங்களில் இதனால் பாதிக்கப்பட்டிருப்பதும், அதிகமான மக்கள் இறந்திருப்பதும், அமைச்சர் அவர்கள் சொன்ன தகவலிலிருந்து தெரிகிறது. தண்ணீர் தேங்குகிற இடங்களில் உள்ள கொசுக்கள் முதலில் பன்றிகளைக் கடித்து பிறகு அங்கிருப்பவர்களை கடிக்க வியாதி பரவுகிறது என்று வரிசையாக சங்கிலித் தொடராக இது போய் கொண்டிருக்கிறது. நகர்ப்புறங்களில் மட்டுமல்லாமல், கிராமப்புறங்களில்கூட பன்றி வளர்ப்பது இப்போது பரவலாக இருக்கிற காரணத்தால், பன்றிகள் தண்ணீரிலே தான் அதிகமாக போய் அளைந்து விளையாடி வளர்கிற காரணத்தால், எல்லா இடங்களிலும் இது பரவுவதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆகவே எல்லா இடங்களிலும் முதலில் தடுப்பு நடவடிக்கைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா? அடுத்து இந்தக் காய்ச்சல் வந்தவுடனே கடுமையைக் குறைப்பதற்கு ஆண்டி-பயாடிக் கொடுக்க வேண்டும், ஐஸ் வைத்து கட்ட வேண்டுமென்று எல்லாம் சொல்கிறார்கள். கிராமப்புறங்களில் இருக்கிற மருத்துவமனைகளில் அவைகள் அனைத்தும் கொடுக்கப்பட்டுவிட்டனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: துணைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையங்களில், கிளை சுகாதார நிலையங்களில் இதுபோன்ற ஆண்டி-பயாடிக் மருந்துகள் கொடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன. அடுத்து ஐஸ் என்பது பிரிஜ் இருக்கிற இடங்களில் தான் இருக்கும். பிரிஜ் இல்லாத இடங்களில் ஐஸ் வசதி கிடையாது. இருக்க முடியாது. அதைத் தான் சொன்னேன். அடுத்து பன்றி வளர்ப்பதைப் பற்றி சொன்னார்கள். பன்றி வளர்ப்பதற்கு நகராட்சிகளிடமும், ஊராட்சிகளிடமும் அதற்கான உரிமங்களைப் பெற்றுத் தான் வளர்க்க வேண்டும். அப்படி உரிமம் பெற்று வளர்க்கிற இடங்களில் கொசுக்களின் பக்கத்தில் வளர்ப்பார்களானால் பாதகம் ஏற்படுகிறது. பன்றிகள் முழுவதையும் ஒழித்துவிடுவது என்பது முடியாத காரியம், இயலாத காரியம். அதையே தொழிலாக வைத்திருப்பவர்கள் நாட்டிலே இருக்கிறார்கள். அப்படி வளர்ப்பவர்களுக்கு லைசென்ஸ் கொடுப்பதைத் தவிர வேறு வழியில்லை. லைசென்ஸ் இல்லாமல் பன்றி வளர்ப்பார்களானால் அவைகளை கொன்று விடுவதைத் தவிர வேறு வழி கிடையாது.



(முற்பகல் 10-50)

திரு. சு. பாலன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மூளைக் காய்ச்சல் வருவதற்கான காரண காரியங்களை தன்னுடைய குறிப்பிலே கொடுத்திருக்கிறார்கள். அதிலும் முக்கியமாக தென் ஆர்க்காடு மாவட்டத்தில் அதிகமாக பாதிக்கப்பட்டபோது, நடவடிக்கை எடுத்த நேரத்தில், நகராட்சித் தலைவர்கள் நகராட்சி சட்டப் பிரிவு 241-ன் கீழ் பன்றிகளை ஒழிக்க கடும் நடவடிக்கை எடுத்ததாக சொல்லப்பட்டு இருக்கிறது. அதன் மூலம் அந்தப் பகுதியிலே எவ்வளவு பன்றிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

அடுத்ததாக, சென்னை போன்ற நகரங்களில் இன்றையதினம் மூளைக் காய்ச்சல் அதிகமாக பரவி விடுமோ என்று மக்களிடத்திலே பீதி ஏற்பட்டு இருக்கிறது. சென்னையில் உள்ள பல்வேறு குடிசைப் பகுதிகளில் ஏராளமான பேர்கள் தங்களுடைய வருவாய்க்காக பன்றிகளை வளர்க்கிறார்கள். மேலும் சென்னை நகரத்தைச் சுற்றிலும் கழிவு நீர் தேங்கி விடுகிறது. ஆகவே இப்படிப்பட்ட இடங்களில் இருந்து தான் கொசு உற்பத்தியாகி, குழந்தைகளுக்கு அது பரவ வாய்ப்பு இருக்கிறது. எனவே சென்னை மாநகரத்தில் இதைத் தடுப்பதற்கு எத்தகைய நடவடிக்கை எடுக்க, அரசு உத்தரவு பிறப்பித்து இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: துணைத் தலைவர் அவர்களே, நல்ல வேலையாக சென்னையிலே மாண்புமிகு உறுப்பினர் பாலன் சொன்னதைப் போல, இவ்வளவு வசதி வாய்ப்புகள் இருந்தும் வேகமாக பரவவில்லை. அதற்காக நாம் இயற்கைக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதைத் தவிர வேறு வழி கிடையாது. எவ்வளவு பன்றிகள் பிடிக்கப்பட்டு இருக்கிறது, அல்லது கொல்லப்பட்டு இருக்கிறது என்று கேட்டார்கள். செத்துவிட்ட குழந்தைகளைப் பற்றி தான் என்னிடம் எண்ணிக்கை இருக்கிறது. பன்றிகளைப் பற்றிய எண்ணிக்கை என்னிடத்திலே இல்லை.

திரு. எஸ். சிவராமன்: துணைத் தலைவர் அவர்களே......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஐந்துக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தால் பேரவைத் தலைவர் தன் உசிதப்படி யாரேனும் ஐந்து உறுப்பினர்களை கேள்விகள் கேட்க அனுமதிக்கலாம் என்று விதியில் இருக்கிறது.

## 4. அரசினர் சட்ட முன்வடிவுகள்

**(அ) சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986.**

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

## 5. அறிவிப்புகள்.

**(அ) எதிர்பாராச் செலவு நிதியச் (திருத்த) சட்ட முன்வடிவு, 1986.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதியச் (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

## 4. அரசினர் சட்ட முன் வடிவுகள்—தொடர்ச்சி

**(ஆ) எதிர்பாராச் செலவு நிதியச் (திருத்த) சட்ட முன்வடிவு, 1986.**

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதியச் (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

**(இ) மதுவிலக்கு (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986.**

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

## 6. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1986—87 அளித்தல்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1986—87 ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அவைக்கு அளிப்பார்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1986—87 ஆம் ஆண்டிற்குரிய முதல் துணை மதிப்பீடுகளை இம் மாமன்றத்தில் வைக்க முன் வந்துள்ளேன். இத் துணை மதிப்பீடு மொத்தம் ரூ. 56.47 கோடி நிதி ஒதுக்கத்திற்கு வகை செய்கிறது. இப்போது வைக்கப்பட்டுள்ள இந்தத் துணை மதிப்பீடு வருவாய்க் கணக்கின்கீழ் ரூ. 43.39 கோடி நிதி ஒதுக்கத்திற்கும், மூலதன, கடன் கணக்குகளின்கீழ் ரூ. 13.08 கோடி நிதி ஒதுக்கத்திற்கும் வகை செய்கிறது.

1986—87 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை முடிவு செய்கையில், எதிர்பார்க்கப்பட்ட செலவினங்கள் அனைத்துக்கும் போதிய நிதி ஒதுக்கம் செய்வதில் மிகுந்த கவனம் செலுத்தப் பட்டது. எனினும், மிக வேகமாக மாறி வருகின்ற ஒரு

நிலைமையில், அதாவது புதிய வளர்ச்சித் திட்டங்கள் காரணமாக வரவு–செலவுத் திட்டத்திற்கு பிந்தைய அனுமதிகள் சில அவசியமாகின்றன. குறிப்பாக, இவ்வரசின் நல மேம்பாட்டுத் திட்ட அணுகுமுறை காரணமாக, அத்தகைய அனுமதிகள் இன்றியமையாதன ஆகின்றன. அத்தகைய திட்டங்களுக்குரிய அனுமதிகள் அனைத்தும் இத் துணை மதிப்பீட்டில் சேர்க்கப் பட்டுள்ளன. இந்தத் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள சில முக்கியமான செலவினங்களை நான் இங்கு குறிப்பிடுகிறேன்.

பருவமழை பொய்த்ததன் காரணமாகவும், முக்கியமாக தேவைப்பட்ட சமயத்தில் மழை பெய்யாததன் காரணமாகவும், இம் மாநிலத்தில் கடுமையான வறட்சி நிலைமை நிலவியது. பல்வேறு வறட்சி நிவாரண நடவடிக்கைகளைத் தொடங்குவதன் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு உதவ நேரிட்டது. மொத்தம் ரூ. 7,01.28 இலட்சம் செலவில் நீர் வழங்கல் திட்டங்கள் மற்றும் ஏனைய திட்டங்களுக்கு அரசு அனுமதியளித்துள்ளது. முதற்கண் வறட்சி நிவாரணச் செலவினங்களை மேற்கொள்ள எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூ. 6,11.76 இலட்சத்திற்கு முன்பணங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவை வறட்சி நிவாரணப் பணிகளுக்கு பல்வேறு தலைப்புகளின்கீழ் வழக்கமாக வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகைகளுக்குமேல் செய்யப்பட்ட செலவாகும். மத்திய அரசு இப்போது நிர்ணயித்துள்ள உச்சவரம்பிற்கேற்ப, வறட்சி நிவாரணப் பணிகளுக்கு மேலும் செலவு செய்யப்படும்.

முன்னாள் திருநெல்வேலி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, தூத்துக்குடியைத் தலைமையிடமாகக் கொண்டு சிதம்பரனார் மாவட்டத்தை அமைக்க அரசு உத்தரவிட்டுள்ளது. இதன் காரணமாக, பல்வேறு கோரிக்கைகளின்கீழ் புதிய சிதம்பரனார் மாவட்டத்தில் பல்வேறு துறைகளில் புதிய அலுவலகங்களை அமைக்க எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணங்களாக இதுவரை ரூ. 36.74 இலட்சம் அரசால் வழங்கப் பட்டுள்ளது.

நான்காவது சம்பளக் குழுவின் பரிந்துரைகளைச் செயல் படுத்தியதனால் ஏற்பட்ட சில முரண்பாடுகளைக் களையும் நோக்குடன், தனி நபர் குழுவை அரசு நியமித்தது. இந்தத் தனி நபர் குழுவின் பரிந்துரைகளின்மீது ஆணைகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன. முதற்கண் செலவிட, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூ. 2 கோடி முன்பணம் வழங்கப்பட்டுள்ளது.

தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், 'கோ–ஆப் டெக்ஸ்' ஆகியவற்றிற்குத் தள்ளுபடி உதவித் தொகை வழங்கிய வகையில் ஏற்பட்ட செலவைச் சரிக்கட்ட, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாக ரூ. 12.72 கோடி வழங்க அரசு அனுமதித்துள்ளது. இந்த உதவித் தொகை, 1986–87 வரவு–செலவு மதிப்பீட்டில் ஏற்கெனவே வகை செய்யப்பட்டுள்ள ரூ. 10 கோடிக்கும் மேலானதாகும்.



விவசாயிகளின் கடன் சுமையைக் குறைக்கும் நோக்குடன், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவுத் தொடக்க நிலவள வங்கிகள் ஆகியவற்றிற்குச் சேர வேண்டிய கடன் தொகையைப் பொறுத்தவரையில், 31–3–1986 நிலவரப்படி விவசாயக் கடன்கள் மீது வட்டி, அபராத வட்டி, காலங்கடந்த நிலுவைத் தொகைமீது வட்டி, ஆகியவற்றைக் கணக்கிலிருந்து தள்ளுபடி செய்ய அரசு உத்தரவிட்டுள்ளது. துணை மதிப்பீடு களில் சம்பந்தப்பட்ட துணைத் தலைப்பு ஒவ்வொன்றின் கீழும் 'அடையாள' நிதி ஒதுக்கம் ஒன்றிற்கு வகை செய்யப்பட்டுள்ளது. துணை மதிப்பீடுகள் சட்டமன்றத்தில் அனுமதிக்கப்பட்ட பின்னர், செயற்குறிப்புகள் வரப்பெறும்போது மேற்சொன்ன நிறுவனங்களுக்கு நிதி வழங்கப்படும்.

ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு/அகதிகளுக்கு இடவசதி அளிக்க மதுரை விளாங்குடியில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் கட்டிய தயார் நிலை வீடுகள் 792ஐ மொத்தமாக தொகை செலுத்தி வாங்க, ரூ. 1.11 கோடி செலவு ஒன்றும் இந்தத் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்ட மையங்களை, ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுப் பணித் திட்டங்களாக மாற்றியதன்மூலம் 1985–86 ஆம் ஆண்டில் புதுக்கோட்டை மாவட்டத்தில் 13 ஊரகத் திட்டங்களை அரசு தொடங்கி உள்ளது. எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூ. 1,58.36 இலட்சம் முன்பணம் அனுமதிக்கப்பட்டுள்ளது; இத் தொகை இந்தத் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது. 1–5–1985 ஆம் நாள் நிலவரப்படி, பல்வேறு வகைகளின்கீழ் காத்திருப்போர் பட்டியலில் உள்ள அனைவருக்கும் முதியோர் ஓய்வூதியம் வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. முதற்கண் செலவு செய்ய, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூ. 72·02 இலட்சம் முன்பணம் அனுமதிக்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் சத்துணவுத் திட்ட மையங்களின் கட்டடங்களில் பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொள்வது குறித்த ரூ. 25·00 இலட்சம் செலவு இந்தத் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள 30 ஏரிகளுக்கு நீர் வழங்குவதற்காக மதுராந்தகம் ஏரியின் வலது பக்கத்தில் இருந்து ஒரு கால்வாய் வெட்டுவதற்கு ரூ. 430 இலட்சம் செலவிட அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதற்காக, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூ. 14,13,000 முன்பணம் வழங்கப்பட்டுள்ளது: இத் தொகை துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது. இதேபோல, கோயம்புத்தூர் மாவட்டத்தில் சின்னவேடம்பட்டி கிராமத்திற்கு அருகே புதிய ஏரி ஒன்றை அமைப்பது தொடர்பாக, அரசு ரூ. 370 இலட்சம் செலவில் ஒரு திட்டத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூ. 10 இலட்சம் முன்பணம் வழங்கப்பட்டுள்ளது; இத் தொகை இந்தத் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் சூரியூர், இலந்தம்பட்டி, பூலன்குடி கிராமங்களில் 'ஹெவி அலாய் பெனிட்ரேட்டர்' திட்டத்தை அமைக்க பட்டா புன்செய் நிலங்களை கையகப்படுத்த ரூ. 12 இலட்சம் செலவிட அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதற்காக அனுமதிக்கப்பட்டுள்ள ரூ. 10 இலட்சம் முன்பணம், இந்தத் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. இதே போல, செங்கற்பட்டு மாவட்டம், சைதாப்பேட்டை வட்டம், மணலியில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்காக நிலத்தைக் கையகப்படுத்துவது தொடர்பான செலவுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதற்காக எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து அனுமதிக்கப்பட்ட ரூ. 86,62,000 முன்பணம் இந்தத் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்தத் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ள செலவினங்கள் எதிர்பாராத இனங்கள் ஆகும். 1986–87 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ள வளர்ச்சிப் பணிகளுடன் இவற்றுக்கும் அனுமதி வழங்க வேண்டியிருந்தன. இத் திட்டங்களை அரசு சரியான முறையில் செயல்படுத்திட இயலும் வகையில், இந்தத் துணை மதிப்பீடுகளுக்கும், தேவையான நிதி ஒதுக்கீட்டிற்கும் ஒப்புதல் அளிக்குமாறு இப் பேரவையை வேண்டி அமர்கிறேன். வணக்கம்.

(முற்பகல் 11–00)

7. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 1980–81 அளித்தல்:

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் 1980–81 ஆம் ஆண்டுக்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை அளிப்பார்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1980–81 ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளில் இறுதியாக அனுமதிக்கப் பட்ட நிதியொதுக்கத்தை விட மிகையாகச் செலவாகியுள்ள சில இனங்களுக்கான மானியக் கோரிக்கைகளை இம் மன்றத்தில் வைக்க முன்வந்துள்ளேன்.

1985–86 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழு 1980–81 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கக் கணக்குகளை ஆய்வு செய்து, சில மானியங்களின்கீழ், அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைவிட அதிகச் செலவாகியிருக்கிற இனங்களைச் சுட்டிக் காட்டியுள்ளது. மிகைச் செலவு ஆனதற்கான காரணங்களை ஆய்வு செய்த பிறகு ஒவ்வொரு மானியத்தின்கீழும் இறுதியாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைவிட மிகையாக ஆகியுள்ள செலவுக்குரிய இந்த மானியக் கோரிக்கைகளைச் சட்டமன்றப் பேரவையில் வைத்து ஒப்புதல் பெறுமாறு பொதுக் கணக்குக் குழு



பரிந்துரை செய்துள்ளது. அதன்படி, 1980–81 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவுக்குரிய இந்த மானியக் கோரிக்கைகள் இப்பொழுது அவையில் வைக்கப்படுகின்றன. 1980–81 ஆம் ஆண்டில் மொத்தத்தில் ஆன மிகைச் செலவு ரூ. 18.41 கோடியாகும். மேற்சொன்ன ஆண்டில் 'கடன் செலவுகள்', 'பாசனம்', 'பொதுப் பணிகள்—கட்டடங்கள்', 'மருத்துவம்' ஆகிய தலைப்புகளின்கீழ் பெருமளவில் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

'கடன் செலவுகள்' என்பதன்கீழ், மத்திய அரசுக்கு 1979–80 ஆம் ஆண்டிற்கு முந்தைய தொகுப்புக் கடன்களுக்கான வட்டி நிலுவைத் தொகைகளைச் செலுத்தவும், வைப்பீடுகள் குறித்த வட்டி நிலுவைத் தொகைகளைச் சரிக்கட்டுவதற்காக அதிக வட்டித் தொகையைச் செலுத்துவதற்கும், பல்வேறு சமூக நல வீட்டு வசதித் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து பெற்ற கடன்களுக்கு வட்டி செலுத்துவதற்கும் நிதி ஒதுக்கம் செய்யப்படாததால் 'கடன் செலவுகள்' என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது.

பாலங்கள், முகாம்/சாலைகள், ஆணைப்பாடி ஆற்றின் உட்புற நீர்வீழ்ச்சி பகுதியின் அடித்தளம், பல்வேறு பகுதிகளில் உள்ள கால்வாய்கள் ஆகியவற்றுக்கு சிறப்புப் பழுது பார்த்தல் பணிகளை மேற்கொள்ள கூடுதல் நிதி ஒதுக்கம் செய்ததாலும், எஞ்சிய வெள்ளப் பழுது பார்த்தல் பணிகளுக்குத் தொகை கொடுத்ததுடன், சில குடியிருப்புகளுக்குக் கூடுதல் வசதிகள் செய்துகொடுத்து மேம்படுத்துவதற்கு நிதி ஒதுக்கங்கள் செய்ததாலும், 'பாசனம்' என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது.

'ஒட்டு மொத்த நிதி ஒதுக்கம்' என்பதன்கீழ் அதிக செலவு ஏற்பட்டதாலும், செய்து முடிக்கப்பட்ட பணிகளுக்கான இறுதிப் பட்டிகளுக்கு தொகைக் கொடுத்ததாலும், பல்வேறு கோட்டங்களில் பொருட்களுக்கு தொகை கொடுத்ததாலும், 'சிறு பணிகள்' என்பதன்கீழ் கூடுதல் நிதி ஒதுக்கியதாலும், 'பொதுப் பணிகள்—கட்டடங்கள்' என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது.

சென்னை அரசு பொது மருத்துவமனையில், சாதனங்கள், மருந்துகள், உலை எண்ணெய், மருத்துவ ஆக்ஸிஜன் எரி வாயு முதலியவற்றை ஒத்திப்போடாத நிலையில் வாங்கியது தொடர்பான சில உடனடிப் பட்டிகளுக்குத் தொகை கொடுத்ததாலும் 'மருத்துவம்' என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது. அரசு மருத்துவமனைகளிலும், மருந்தகங்களிலும் 1980–81 ஆம் ஆண்டில் சிகிச்சை பெற்ற நோயாளிகளின் எண்ணிக்கை அதற்கு முந்தைய ஆண்டுகளில் இருந்ததைவிட மேலும் அதிகரித்துள்ளது. எனவே, மருந்துகள், உணவுச் செலவுகள் முதலிய செலவுகள் கணிசமான அளவுக்கு உயர்ந்தன.

1980-81 ஆம் ஆண்டிற்குரிய மிகைச் செலவிற்கான இம் மானியக் கோரிக்கைகளுக்கு இம்மன்றம் இசைவளிக்க வேண்டுகிறேன்.

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1986-87 வெட்டுத், தீர்மானங்கள் கொடுத்தல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1986—87 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதி நிலை அறிக்கையில் கண்டுள்ள மானியக் கோரிக்கைகளின் மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்க விரும்பும் உறுப்பினர்கள், அவற்றைப் பேரவையின் 216-வது விதிக்கிணங்க 18-1 -1986 செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணிக்குள் பேரவைச் செயலகத்தில் கொடுக்க வேண்டும்.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள் —தொடர்ச்சி.

(ஈ) சென்னை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவசரச் சட்டத்தை நிராகரிக்கும் தீர்மானத்தை திருவாளர்கள் அ. ரகுமான்கான் ப. பொன்னுரங்கம் ஆகியோர் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் தீர்மானத்தை மொழிவார்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''ஆளுநர் அவர்களால் 30—5—1986 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட 1986-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 1/1986) இப்பேரவை நிராகரிக்கிறது.''

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1986—ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு @(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு 61/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் அ. ரகுமான்கான், ப. பொன்னுரங்கம் ஆகியவர்களின் தீர்மானமும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானமும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. விவாதத்திலே கலந்து கொள்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் உள்ளாட்சிகள் குறிகத 3 சட்ட முன் வடிவுகளிலும் தங்கள் கருத்துக்களைத்தெரிவிக்க வேண்டுகிறேன்.

*14—11—1986 தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, கோவை, சென்னை, மதுரை ஆகிய 3 மாநகராட்சிகளுக்கான சட்டங்களை ஒன்றாக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளலாம். அமைச்சர் அவர்களும் ஒன்றாகப் பதில் சொல்லலாம். ஆனால் குறைந்தபட்சம், தொகுதி மக்களுடைய குறைகளை எடுத்துச்சொல்லுகின்ற வாய்ப்பு, மதுரை சட்டமன்ற உறுப்பினர், கோவை சட்டமன்ற உறுப்பினர் அதைப்போலவே சென்னை சட்டமன்ற உறுப்பினர் யாராவது ஒருவருக்கு இருந் தால், அரசாங்கம் நடவடிக்கை எடுக்கிறதோ இல்லையோ— குறைந்தபட்சம் தொகுதி மக்களுக்காக பேசினோம் என்ற உணர் வாவது இருக்கும். எனவே, அதற்குக் குறைந்தது சிறிது நேரத்தை நீங்கள் நிர்ணயிக்கலாம்.. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒவ்வொரு கட்சியிலும் 3 பேர் பேசலாம், அந்தந்த மாநகராட்சியைப் பற்றி.... (குறுக்கீடு)

திரு. அ. ரகுமான்கான் : ஒரு கட்சியில் 3 பேர் எடுத்துக் கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி. டிஸ்-அப்ரூவல் நோட்டீஸ் கொடுத்து இருக்கிறோம். அதையும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

திரு. கு. ரமணி : துணைத் தலைவர் அவர்களே, 3 சட்டங் களையும் ஒன்றாக விவாதத்திற்கு வைக்கிறீர்கள். இது எப்படி என்றால் சென்னை சட்டத்தைப் பற்றி இங்குள்ள மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பி. சி. அவர்கள் பேசவேண்டியிருக்கும். கோவையைப் பற்றி நாம் பேச முடியாத நிலைமை..(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒவ்வொரு கட்சியிலேயும், ஒவ்வொரு மாநகராட்சிக்கும், அந்த அந்தப் பகுதியைச் சேர்ந்த 3 உறுப்பினர்கள் பெயர் கொடுக்கலாம் என்று சொல்லி பெயர் வாங்கியிருக்கிறார்கள். ஒவ்வொரு கட்சியிலேயும் 3 உறுப்பினர்கள் 3 இடத்திலும் பேசலாம். இரண்டே உறுப்பினர்கள் பேச வேண்டி யிருந்தாலும் பேசலாம். அதை ஆரம்பத்திலேயே சொல்லி விட்டேன்.

(முற்பகல் 11-10)

திரு. எஸ். வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சிக்கான தேர்தல்களை மேலும் 6 மாத காலத்திற்குத் தள்ளி வைத்து அங்கே அரசு அதிகாரிகளின் நிர்வாகத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென் பதற்காக ஒரு சட்டத் திருத்தத்தை இங்கே கொண்டு வந்திருக் கிறார்கள்.

சென்னை நகரத்தில் உள்ள மாநகராட்சி மன்றம் கலைக்கப் பட்டு 12½ ஆண்டுகளாகியும்கூட இதுவரை தேர்தல்கள் நடத்தப் படவில்லை என்பதால் இனி சென்னையில் தேர்தல்கள் நடக்குமா என்றே சந்தேகப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த அரசு பொறுப்பேற்ற காலத்திலிருந்து ஏதாவது ஒரு காரணத்தை

ஒவ்வொரு 6 மாதத்திற்கும் ஒரு காரணத்தைச் சொல்லி, தேர்தல்கள் நடத்துவதைத் தள்ளி வைத்துக் கொண்டே வந்திருக்கிறது. ஏன் இப்படித் தேர்தல்களைத் தள்ளி வைத்துக் கொண்டே வருகிறார்கள் என்று எங்களாலே புரிந்து கொள்ள முடியவில்லை. சென்னை மாநகரம் இன்றைக்கு மக்களாட்சி இல்லாத நகரமன்றமாக இருப்பதால் நிர்வாகம் மிக மோசமான நிலையை அடைந்திருக்கிறது என்பது அனைவருக்குமே நன்றாகத் தெரிந்த விஷயமாகும். நிர்வாகத்தில் இருப்பவர்கள் எல்லாம் வேலைக்கு கையெழுத்துப் போடுகிறார்களே தவிர வேலை செய்வதற்காக அல்ல. மாநகராட்சியில் இருக்கும் பெரிய அதிகாரிகள் செய்ய வேண்டும் என்று உத்தரவு போட்டாலும்கூட கீழே இருக்கிற அதிகாரிகள் நாள்தோறும் அங்கே வந்து கையெழுத்து மட்டும் போட்டுவிட்டு வேறு இடங்களில் வேலை செய்கிற கொடுமை காணப்படுகிறது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில் நான் ஒன்றை அடிக்கடி இங்கே குறிப்பிட்டு வந்திருக்கிறேன். அதாவது இங்கே கொசுத் தொல்லை மிகவும் அதிகமாக இருக்கிறது. மின் விளக்குகள் சரியாக எரிவதில்லை. குப்பைகள் கோபுரமாக உயர்ந்திருக்கின்றன. இதையெல்லாம் வாடிக்கையாக, ஒரு உபதேசம் போல், ஒவ்வொரு சட்டப் பேரவை கூட்டத்தின் போதும் நான் சொல்லிக் கொண்டு வந்திருக்கிறேன். ஆனால் நிர்வாகத்தில் இதுவரையில் இதற்காக ஏதாவது காரியங்கள் நடைபெற்றிருக்கின்றனவா என்றால் இல்லை.

சென்னையில் பெரிய பெரிய சாலைகள் இருக்கின்றன. மந்திரிகள் போகிற சாலைகள், பெரும் பெரும் தொழில் அதிபர்கள் போகிற சாலைகள் ஆகியவைதான் சீர்திருத்தம் செய்யப்படுகின்றன. ஆனால் மிகச் சாதாரண ஏழை எளிய, நடுத்தர மக்கள் வசிக்கும் பகுதிகளில் உள்ள சாலைகள் சரியாகச் சீரமைக்கப்படுவதில்லை.

அதைப் போலவே சாலைகள் போடப்படுகிறபோது சரியான முறையில் போடப்படுவதில்லை. தார்ச் சாலைகளைப் பொறுத்தவரையில் சரியாகப் போடுகிறோம் என்று சொல்லுகிறார்களே தவிர, பேப்பர் அளவுக்குத் திக்னெஸ் உள்ள தார்தான் போடுகிறார்கள். அந்த அளவுக்குத் துல்லியமாகக் காண்ட்ராக்டர்கள் சாலைகளைப் போடுகிறார்கள். அதைப்பற்றி நிர்வாகம் எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. போடப்படுகிற சாலைகளில் சிமின்ட், மற்றும் தார்க் கலவைகளை எடுத்து ஆய்விற்கு அனுப்பிப் பார்த்தால் எந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் எந்த அக்ரிமென்ட்டின் அடிப்படையில் இப்படிப் போடுகிறார்கள் என்பது புரியும். சாலைகளுக்குப் போடப்படும் கூட்டுக் கலவை, ஒப்பந்தப்படி இருக்கிறதா என்று ஆய்வு செய்து பார்த்து அதன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டால் காண்ட்ராக்டர்கள் இப்படிப்பட்ட தவறுகளைச் செய்ய மாட்டார்கள் என்று சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.





அடுத்து சென்னையைப் பொறுத்த வரையில் இது கொசுக்களின் தலை நகராக, கொசுக்களின் சாம்ராஜ்யமாக இருக்கிறது. அண்ணா நகரின் தெற்குப் பகுதியிலிருந்து வடக்கு அண்ணா நகர் வரை எந்தப் பகுதியானாலும் சரி, அங்கே உள்ள பங்களாக்களில் உள்ளவர்கள் கூட மிகுந்த கொசுத் தொல்லை இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். கொசு மருந்து அடிக்கப்படுகிறது என்று சொல்லுகிறார்கள். இவ்வாறு கொசு மருந்து அடித்தாலும் கூட கொசுக்கள் இல்லாமல் இல்லை. இதற்காக இருக்கிற இயந்திரங்கள் 60 என்று கணக்குச் சொல்லுகிறார்கள். ஆனால் இவ்வளவு இயந்திரங்கள் இருந்தும் கொசுத் தொல்லை ஒழிந்தபாடில்லை. கொசுத் தொல்லை நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே போகிறது. மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் அண்மையில் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். நகரில் பன்றிகள் அதிகமாக இருப்பதால் அவற்றின் மூலமாகக் கொசு கடித்து மூளைக் காய்ச்சல் நோய் வரும் என்று சொன்னார்கள். சென்னை நகரில் பன்றிகள் தெருக்களில் திரிகின்றன. கொசுக்களும் அதிகமாக இருக்கின்றன.

மேலும் அண்மையில் ஒரு அறிக்கை விட்டிருக்கிறார்கள். தண்ணீரை ஒரு வாரத்திற்கு மேல் தேங்க விடாதீர்கள் என்று அறிக்கை விட்டிருக்கிறார்கள். சென்னை நகரில் இன்றையதினம் ஒரு வாரத்திற்கு மட்டுமல்ல, ஒரு மாதத்திற்கு மேலும் தண்ணீரைத் தேங்க விட்டுக் கொண்டிருக்கிறார்கள். சென்னையில் கூவத்தின் துர்நாற்றம் பெரும் நரகமாக இருந்து கொண்டு இருக்கிறது. ஆட்சியில் உள்ளவர்களின் பாணியில் சொல்ல வேண்டுமென்றால் திராவிடப் பராம்பரியத்தைச் சார்ந்தவர்கள் கூவத்தை மணக்க வைப்போம் என்று சொன்னார்கள். அது இன்றைக்கு மணக்கவில்லை. மக்களுக்குச் சகிக்கமுடியாத அளவுக்குக் கொசுத் தொல்லையை உருவாக்கிக் கொண்டு துர்நாற்றத்தை வீசிக் கொண்டிருக்கிறது. சென்னையில் கொசுக்கள் அதிகம். தெருக்களில் பன்றிகள் இருக்கின்றன, இதன் காரணமாக மூளைக் காய்ச்சல் நோய் சென்னைக்கே வந்து விடுமோ என்று மக்கள் பயந்து கொண்டிருக்கிற நிலைமை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. எனவே இப்படிப்பட்ட கொசுத் தொல்லையைத் தீர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சென்னையில் புதிதாகக் கழிப்பிடங்கள் கட்டப்படுவதில்லை என்பதையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நிர்வாகத் திறமை குறைவு ஏராளமாக இருக்கிறது. புதிதாகக் கட்டப்படுகிற கழிப்பிடங்கள் எல்லாம் பெயருக்குத்தான் கட்டப்படுகின்றன. என்னுடைய தொகுதியில் நேதாஜி நகரில் உள்ள தெருக்களில் இருப்பவர்களுக்குக் கழிப்பிடங்கள் இல்லை. அதைப் போலவே துர்கா நகரில் கூட கழிப்பிடங்கள் இல்லை, இது போல உள்ள குறைகளைப் பெரிய அதிகாரிகளிடம் சொன்னால் அவர்கள் நாங்கள் கீழே உள்ளவர்களிடம் சொல்லிவிட்டோம் என்கிறார்கள், ஆனால் காரியங்கள் மட்டும் நடப்பதில்லை என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

[திரு. எஸ். வேணுகோபால்] [1986 நவம்பர் 17

அதைப் போலவே சென்னை நகரத்தைப் பொறுத்த வரை
மின் விளக்குகள் சரியாக எரிவதில்லை, சென்னை நகரைச் சிங்
காரச் சென்னை என்கிறோம், இங்கே தான் மாண்புமிகு
அமைச்சர்கள் இருக்கிறார்கள். மாண்புமிகு முதல் அமைச்சர்
இருக்கின்றார். நீதித்துறையின் தலைமை நீதிபதி இருக்
கின்றார். இத்தனை பேரும் இருந்தாலும்கூட தெருக்களிலே
சரியாக மின்விளக்குகள் எரிவதில்லை. சில பெரியவர்கள் இருக்கிற
இடங்களை தவிர மற்ற இடங்களில் சரியாக எரிவதில்லை.
சென்னையில் மொத்த மின் விளக்குகள் 44,606 என்று சொல்லு
கிறார்கள், அதிலும் சோடியக் விளக்குகள் 3700, 1986 ஆம்
ஆண்டில் மின் விளக்குகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ.323.78
லட்சம், இவ்வளவு தொகை ஒதுக்கியும் மின் விளக்குகள் எரி
கின்றனவா என்றால் இல்லை. ஒரேயொரு காரணத்தைச் சொல்
வார்கள். அதிகாரியாக இருந்தாலும், அவருக்குக் கீழேயுள்ள
வேலைக்காரனாக இருந்தாலும் 'கேபிள் ஃபால்ட், என்று சர்வ
சாதாரணமாகச் சொல்லுவார்கள். ஏனென்றால் அ தத் தோண்டி
பார்க்க மக்களால் முடியாது என்பதால் இதனால் இரவிலேயும்
மக்கள் தூங்குவதில்லை, கொசு கடிக்கிறது. இதற்கிடையே இதற்
காக செலவாகிற பணம் ரூபாய் 323,78 இல சம், 1986-87 ஆம்
ஆண்டு பட்ஜெட்டில் இந்த பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.
இப்படியிருந்தும் எங்கேயும் புதியதாக கேபிள் போடுவதில்லை
முப்பது ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்டது அப்படியே
இருக்கிறது, அவற்றைப் பழுது பார்க்கவேண்டிய வேலைகள்
ஏராளமாக இருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். ஆனால்
சென்னை மாநகராட்சியில் உள்ள மின்சாரப் பிரிவில் என்ஜினியர்
கள் 306, தொழிலாளர்கள் 599, காவலர்கள் 50, மொத்தம்
955 பேர்கள் இருக்கிறார்கள், இது அரசு கொடுத்த புள்ளி விவரம்
கடந்த ஆண்டு பேசும்போது மாண்புமிகு திரு ப.உ.ச. அவர்கள்
கொடுத்த புள்ளிவிவரத்திலேயிருந்து எடுக்கப்பட்டவை இவை.

மேலும் அதிகமான ஆட்களைப் போட்டு சென்னை நகரத்
தைச் சீராக்க வேண்டுமென்ற எண்ணத்தை சென்ற முறை சட்ட
மன்றம் ஆரம்பித்தவுடனே அறிவித்தார்கள். அதற்காக ஒரு பெரு
நிகழ்ச்சியே நடத்தப்பட்டது. ஏழைகளுக்காக உழைக்கிறேன்
என்று சொல்லிக் கொண்டிருக்கக்கூடிய முதலமைச்சர் அவர்கள்
அதற்காக ஒரு கமிட்டியைக் கூட்டினார்கள். சென்னை நகர
மேம்பாட்டுக் கமிட்டி என்ற அந்தக் குழுவின் கூட்டத்தைக்
கூட்டினார்கள், அதிலே நானும் ஓர் உறுப்பினர், அதன்
இரண்டு கூட்டங்கள் கூட்டப்பட்டன. அந்த இரண்டு கூட்டங்
களின் பலன் என்னவென்றால் இருக்கின்ற கோவில்கள் இடிக்கப்
பட்டன, கட்சிகளின் கொடிக் கம்பங்கள் சாய்க்கப்பட்டன
என்பதைத் தவிர வேறு ஒன்றும் நடைபெறவில்லை. சென்னை
நகரம் சீராக்கப்பட்டதா, அழகுபடுத்தப்பட்டதா என்பது
இன்னும் கேள்விக்குறியாகவே இருக்கிறது. அப்படிப்பட்ட
காரியங்கள் எதுவும் நடைபெறவில்லை என்பதை இந்
மாமன்றத்திலே வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.
ஆகவே எல்லாவற்றையும் செய்கின்ற ஆற்றல் படைத்த
முதலமைச்சர் அவர்கள் இந்த சென்னை நகரத்திலே கவனம்
செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1986 நவம்பர் 17] [திரு. எஸ். வேணுகோபால்]

1986 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16 ஆம் நாள் உள்ளாட்சித்
துறை அமைச்சர் மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் அவர்கள்
இந்த மன்றத்திலே ஒன்றை மிக அழகாக, வெகு நேர்த்தியாகச்
சொன்னார்கள். சென்னை நகரம் சீரழிகிறது, உங்களால்
தேர்தலை நடத்த முடியுமா என்று கேட்டதற்கு, உள்ளாட்சித
தேர்தலை நடத்திவிட்டோம், மாநகராட்சித் தேர்தலையும்
நடத்துவோம் என்றார்கள். உள்ளாட்சித் தேர்தலை நடத்தி
விட்டோம், அதை வரவேற்கிறோம், பாராட்டுகிறோம். ஆனால்
சென்னை மாநகராட்சித் தேர்தலுக்கான அறிகுறியே தெரிய
வில்லை. இன்றுவரை இந்த அரசு தேர்தலை நடத்தவில்லை.
இன்னுமொன்றை நான் சொல்லலாம். 'ஆலோசனைக்குழு'
போடப்படும் என்று அன்றைக்குச் சொன்னார்கள். அதிலே
இங்கேயுள்ள ட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்லாமல்
சென்னையிலே வசிக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்களையும்
சேர்த்து போடப்படும் என்று சொன்னார்கள். மேலும் 15
பேரை நாமினேஷன் செய்து பெரிய சபையாக ஆக்கி அதன்
பணிகளை நடத்தப் போகிறோம் என்று சொன்னார்கள் அந்தக்
குழுவைக் கூட்டி உங்களுடைய ஆலோசனைகளையெல்லாம்
பெறப்போகிறோம் என்றும் சொன்னார்கள். அப்படி செய்தார்
களா என்றால், இல்லை. இதுவரைக்கும் செய்யவில்லை.
மாநகராட்சியிலே உள்ள அதிகாரிகளைக் கேட்டால் இந்த
ஆலோசனையை மந்திரிக்கு அனுப்பிவிட்டோம், கோட்டைக்கு
அனுப்பிவிட்டோம், நாங்கள் என் செய்ய முடியும் என்று
சொல்கிறார்கள். அந்த அம்மையாரைக் கேட்டால் ஆலோசனைக்
குழுவைக் கூட்ட முதலமைச்சர் தேதி கொடுக்கவில்லை, நான்
என்ன செய்யட்டும் என்கிறார் அங்கேயுள்ள கமிஷனர் அம்மை
யார் நன்கு செயல்படுகிறார். புதிதாக அமைச்சர் பொறுப்பை
ஏற்ற திரு. கே.ஏ.கே. அவர்கள் இரண்டு, மூன்று வாரங்களுக்கு
முன்பு சென்னை மாநகராட்சிக்குப் போய், இருக்கின்ற அதிகாரி
களையெல்லாம் பாராட்டினார்கள். மெத்த மகிழ்ச்சி. அதிலே
எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை. அந்த அம்மையார் 7
மணிக்கு நகர் வலம் வருகிறார் மற்றும் உள்ள அதிகாரிகள்
எல்லாம் நகர்வலம் வருகிறார்கள் என்றால் சென்னை நகரம்
சீராகுமா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். அவர்களுக்
கென்ன பதினாறு, இருபத்தெட்டு கைகளா இருக்கின்றன? கீழே
யுள்ள அதிகாரிகள் வேலை செய்கிறார்களா என்று பார்க்க
வேண்டும், அவர்கள் கையெழுத்தை ஓரிடத்திலே போட்டுவிட்டு
வேறு எங்கோ போகிறார்கள். இந்த நிலைமை சென்னை
நகரத்திலே ஒழிக்கப்பட வேண்டுமானால் மக்களாட்சியைக்
கொண்டு வாருங்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.
மாநகராட்சி உறுப்பினர்களைத் தேர்தெடுக்க தேர்தலை
நடத்துங்கள். ஆலோசனைக் கமிட்டியின் கூட்டங்களைக் கூட்டுங்
கள், இருக்கின்ற அதிகாரிகளின் பதவிக் காலத்தை இந்த அரசு
ஏற்றுக்கொண்ட பிறகு தள்ளி தள்ளி வைத்துக் கொண்டிருக்கிறது
என்பதால் நான் ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன் ஒரேயடியாக
ஒரு தீர்மானத்தைப் போட்டு விடுங்கள். இந்த அரசு உள்ளவரை
மாநகராட்சித் தேர்தலை நடத்தமாட்டோம் என்று ஒரு

[திரு. எஸ். வேணுகோபால்] [1986 நவம்பர் 17

தீர்மானத்தைப் போட்டு ஜனநாயகப் படுகொலை செய்யப்
போகிறோம் என்று சொல்லுங்கள். ஏனென்றால் சென்னை
மாநகரத்திலே உள்ள சுபாஷ் சந்திரபோஸ் சாலையில் நடை
பாதையில் நடந்து செல்ல இடமில்லை, எங்கே பார்த்தாலும்
கடைகள்.

(முற்பகல் 11-20)

கட்சிக்காரர்கள் பின்னணியில் அந்தச் சாலையில் கடைகள்
இருக்கின்றன. அவை எடுக்கப்படுமா அதற்குப் பின்னணி அரசியல்
வாதிகள், அதற்குப் பின்னணி அரசியல் சித்தாந்தங்கள் தெரிந்த
வர்கள் அதற்குப் பின்னணி மந்திரிகள் என்று இப்படியெல்லாம்
சொல்லிக்கொண்டு தினவசூல் செய்துகொண்டு, மக்கள் அந்தப்
பாதைகளில் போக முடியாத சூழ்நிலை இருக்கிறது சென்னை
மாநகரிலே விளக்கு எரியவில்லை. குப்பை கோபுரமாகியிருக்கிறது
எங்கே பார்த்தாலும் சாக்கடை நீர். இப்படிப்பட்ட நிலை
சென்னையிலே இருக்க வேண்டுமா? ஆகவே உடனடியாகத்
தேர்தலை நடத்தி மக்களாட்சியைக் கொண்டு வர வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன். மக்கள்மீது நம்பிக்கை உள்ள
ஆட்சி இது. ஆனாலும் இதைச் செய்ய மறுக்கிறார்கள் உறவுக்
காரன் என்பதால், தோழமைக் கட்சியைச் சேர்ந்தவன் என்ற
முறையிலே ஒன்றைச் சொல்கிறேன். உறவுக்கு கைகொடுப்போம்
உரிமைக்குக் குரல் கொடுப்போம் என்ற முறையில் என்னுடைய
உரிமைக்கு இப்போது குரல் கொடுக்கிறேன். தேர்தலை நடத்துங்
கள் ஜனநாயகப் படுகொலை செய்யாமல், நாடு வாழ சென்னை
நகரம் நல்லபடியாக இருக்க அரசு உடனடியாக தேர்தலை
நடத்த வேண்டுமென்று கூறி முடிக்கிறேன். நன்றி.

*திரு.மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலை
வரவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள்
கொண்டு வந்திருக்கிற சென்னை, கோவை மற்றும் மதுரை
மாநகராட்சிகள் திருத்தச் சட்டத்தை வரவேற்று என்னுடைய
சில கருத்துக்களை முன் வைக்க விரும்புகிறேன். மாண்புமிகு
உறுப்பினர் திரு. வேணுகோபால் அவர்கள் பேசும்போது, பல
குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி அவற்றைத் தீர்க்க வேண்டு
மென்று சொல்கிற நேரத்தில், தெருக்கள் சுத்தமில்லாத
காரணத்தாலே ஜனநாயகப் படுகொலை நடந்து விட்டது என்று
சுட்டிக்காட்டினார்கள். இந்தியாவிலுள்ள பல்வேறு மாநில
தலை நகரங்களுக்கும் நகரங்களுக்கும் பல்வேறு
குழுக்களில் பங்கேற்று, சுற்றி வந்த நான் மாண்புமிகு
உறுப்பினர் கூறுவதை ஒப்புக் கொள்ள முடியாது. அகமதாபாத்
கல்கத்தா, இன்னும் பல நகரங்களை வடக்கிலே பார்த்துவிட்டு
சென்னைக்கு ரும்போது, ஏதோ ஒரு சொர்க்க பூமிக்கு வந்து
விட்டோம் என்ற உணர்வுதான் எனக்கு ஏற்பட்டது (பலத்த
மேசையைத் தட்டும் ஒலி) 15 நாட்கள் வட மாநிலங்களில்
சுற்றுப்பயணம் செய்துவிட்டு திரும்பி வந்தபோது, மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் சார்ந்துள்ள கட்சியைச் சேர்ந்த உறுப்
பினர் உட்பட அனைவரும் அந்தக் கருத்தை வெளிப்படுத்தினோம்
என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.



1986 நவம்பர் 17] [திரு. மா. சின்னராசு]

உள்ளாட்சித் துறைக்கு முன்னால் பொறுப்பேற்று இருந்த
அமைச்சரவர்களும், இப்போது பொறுப்பேற்றுள்ள அமைச்ச
ரவர்களும், இதைவிட மக்களுக்கான பணியை நல்ல முறையில்
செய்ய முடியாது என்று சொல்லுமளவுக்குப் பல்வேறு முயற்சி
களை எல்லாக் காலகட்டத்திலும் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்
என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். நான் வசிக்கிற
கோவை மாநகரத்தில் நேற்று உள்ளாட்சித் துறை அமைச்ச
ரவர்கள் காலை 5½ மணியளவில் அந்த மாநகரத்தினுடைய
முக்கியமான கடை வீதிப் பகுதிக்குச் சென்று, சுமார் 2 மணி
நேரம் சுற்றிப் பார்த்து, அங்கே இருக்கிற தூய்மைக் கேடுகளை
அகற்ற வேண்டுமென்று பணித்திருக்கிறார்கள். அந்த அளவுக்கு
மக்களோடு ஒன்றியிருக்கிற இந்த அரசில் ஜனநாயகப் படுகொலை
என்பது நினைக்க முடியாத, நினைக்கக் கூடாத ஒன்று என்று
தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவர்
அவர்கள், மாநகராட்சி வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை
நிறைவேற்றி வருகிறார்கள். மக்கள் மன்றம் இருந்தபோது
நிறைவேற்றத் தவறிய பல்வேறு திட்டங்களைக்கூட இப்போது
நிறைவேற்றி வருகிறார்கள். குறிப்பாக கோவை மாநகராட்சியில்
பல்வேறு வளர்ச்சிப் பணிகளை 100 கோடி ரூபாய் அளவுக்கு
உலக வங்கியிடம் உதவி பெற்று நிறைவேற்றும் திட்டத்தை
முனைப்போடு செயல்படுத்த நம்முடைய மாண்புமிகு முதல்வ
ரவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே நல்ல
வளர்ச்சியைப் பெற்றிருக்கிற கோவை மாநகரின் மக்களுடைய
தேவைகள் இந்தத் திட்டத்தின் மூலமாக மிக விரைவில் நிறை
வேற்றப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்களின் கவனத்
திற்குக் கொண்டு வருகிறேன். அந்தத் திட்டத்தின் இறுதிக்
கட்டத்தை எய்த இருக்கும் இந்த நேரத்தில், அதை விரைவிலே
செயல்படுத்த ஆவன செய்ய வேண்டுமென்ற என்னுடைய
விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, தமிழகத்தில் எந்த நகரத்திலும் இல்லாத அளவுக்கு
சிறப்பான சிறுவாணி குடிநீர் திட்டத்தைக் கோவை மாநக
ராட்சிக்கு நிறைவேற்றி இருக்கிறோம். ஆனால் அந்தத் திட்டம்,
அந்த மாநகராட்சியில் உள்ள 'ஆடட் ஏரியாஸ்', இணைக்கப்
பட்ட பகுதிகளிலே முடிவு பெறாமல் இருக்கிறது. அந்தப்
பகுதிகளில் தமிழ்நாடு வடிகால் வாரியத்தின் மூலமாக அந்தத்
திட்டத்தை நிறைவேற்ற காலதாமதமாகிக் கொண்டிருக்கிறது.
எனவே உள்ளாட்சித் துறையும், குடிநீர் வாரியமும் கூட்டு
நடவடிக்கையை மேற்கொண்டு, ஒரு காலக் கெடுவை நிர்ணயித்து,
அந்தத் திட்டத்தை முடிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்
கொள்கிறேன். அது மட்டும் அல்லாமல், இன்றிருக்கின்ற மக்கட்
தொகைக்கு ஏற்ப மட்டுமல்லாமல், எதிர்காலத்திலே வளர்ந்து
வரும் மக்களுடைய தேவையை, 10 ஆண்டுகளுக்கு, 100 ஆண்டு
களுக்குப் பின்னால் நமக்கு ஏற்படும் தேவையை உணர்ந்து
செயல்படுகின்ற நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் அரசு,
மக்கள் அரசு, கோவை நகரத்திற்காக இரண்டாவது குடிநீர்த்
திட்டத்தை, உலக வங்கித் திட்டம், உலக வங்கியின்

உதவியோடு நிறைவேற்றத் தொடங்கியிருக்கின்றது. ரூபாய் 40 கோடிக்கு மேல் செலவாகும் இந்த உலக வங்கித் திட்டத்தின் மூலம் பவானி ஆற்றில் அத்திகடலிலிருந்து கோவைக்குக் கூடுதலாகக் குடிநீர் கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது. சிறுவாணித் திட்டத்திலே இன்னும் 15 ஆண்டுகளுக்கும் அதற்குப் பிறகும் தேவைப்படுகின்ற குடிநீருக்காகவும் திட்டம் போட்டு செயல்படுத்துகின்றதுதான் இந்த அரசு என்பதை நான் நினைவு படுத்த விரும்புகிறேன். இந்தத் திட்டமும் விரைவுபடுத்தப்பட்டு இன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதை வரவேற்கிறேன். கோவை மாநகரம் வளர்ந்து வருகின்ற மாநகரம். அப்படி வளர்ந்து வருகின்ற நகரத்தின் தேவைக்கு ஏற்ப திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். கோவையில் இருக்கின்ற ஸ்லம்ஸ், குடிசைகள், சென்னையைப் போல கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு வளராமல், தடுக்கக்கூடிய அளவுக்குத்தான் இருக்கிறது. மிக நல்ல முறையிலே பெங்களூரைப் போல வாய்ப்பு வசதிகள் உள்ள நகரமாக கோவை நகரம் இருக்கின்றது. இன்று ஸ்லம் கிளியரன்ஸ் போர்டிலே திட்டப் பணிகளுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. அதை விரைவு படுத்தினால் அங்கேயிருக்கின்ற அத்தனை குடிசைகளையும் அகற்றலாம். இன்னும் ஒன்றிரண்டு ஆண்டுகளில் செய்யமுடியும். கோவையைப் பொறுத்தவரையில் அப்படி ஆக்கிவிட முடியும். ஏற்கெனவே காமராஜபுரம், ஆவாரப்பாளையம், செல்வபுரம், செம்பட்டிக் காலனி ஆகிய பகுதிகளில் குடிசை மாற்று வாரியம் சில நூறு வீடுகளைக் கட்டியிருக்கின்றது சென்னையிலே செய்யப்படுவதுபோல பல கோடி ரூபாய்கள் செலவு செய்ய வேண்டியதில்லை என்றாலும், ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் ஒன்றரை கோடி ரூபாய் அளவுக்கு நிதி ஒதுக்கினால்கூட கோவை மாநகராட்சியில் குடிசையே இல்லை என்ற நிலையை வருகின்ற 3, 4 ஆண்டு காலத்தில் ஏற்படுத்திவிட முடியும்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

குடிசை மாற்று வாரியத்தின் மூலம் ஒதுக்கப்படுகின்ற நிதியின் அளவை, எதிர்காலத்தில் அந்த நகரத்தை மிக அழகான நகரமாக வைத்துக்கொள்ளக் கூடிய அளவுக்குக் கூடுதலாக ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குடிசை மாற்று வாரியத்தாலும், வீட்டு வசதி வாரியத்தாலும் ஏற்கெனவே கட்டி முடிக்கப்பட்ட வீடுகளைக் குடியிருக்க நாம் ஒதுக்கி இருக்கிறோம். ஆனால் அப்படி ஒதுக்கப்பட்ட பகுதியில், மீண்டும் ஸ்லம்ஸ் வளருகின்றன. அதற்கு உதாரணம் சொல்கிறேன். காமராஜபுரம் பகுதி அங்கே கட்டி முடிக்கப்பட்டுள்ள வீடுகள் ஒதுக்கப்பட்ட பின்னால், பழைய வீடுகள் இடிக்கப்பட்ட இடத்தில், காலியாக இருக்கிற அந்த இடத்தில் புதிதாக ஒரு ஸ்லம் வளருகிறது. இன்று அதிகாரிகள் அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்காத காரணத்தி னால் இப்படித் தொடர்ந்து நடக்கிறது. அது தவிர்க்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். குடிசை மாற்று வாரியத்தின் மூலம், இன்று 'ஆடட் ஏரியா' என்று சொல்லப்படுகின்ற இடத்தில், சாதாரணத் தொழிலாளர்கள்,



கூலித் தொழிலாளர்கள், ஏழையெளியவர்கள் வாழக்கூடிய முதலிலே கிராமப்பகுதியாக இருந்த சங்கனூர் பகுதி, இரத்தின புரி, கணபதி போன்ற பகுதிகளில் சிங்காநல்லூர் நகரை, சுற்றியிருக்கின்ற பகுதியில், இருக்கின்ற 'காஸ்ட் ஆப் லிவிங்' அங்கே நிலவுகின்ற விலைவாசி காரணமாக வீட்டு வசதி என்பது இன்று சாதாரண மக்கள் நினைக்க முடியாததாக இருக்கிறது' ஆகவேதான் இந்தத் திட்டத்தை விரைவாக எல்லா பகுதிகளிலும் இருக்கின்ற சாதாரண மக்களும் பயன் பெறுகின்ற அளவுக்கு விரிவுபடுத்த வேண்டும். வீட்டு வசதியை மாநகராட்சி மூலம் இடம் ஒதுக்கப்பட்டு குடிசை மாற்று வாரியத்தின் மூலமும், வீட்டு வசதி வாரியத்தின் மூலமும் மக்கள் வீட்டு வசதி பெறவேண்டும் என்று இந்த நேரத்தில் என் விருப்பத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து நம்முடைய கோவை நகராட்சி வளர்ச்சிக்கு, வருங் கால திட்டத்திற்கு, சென்னையிலே இருப்பதுபோல 'மெட்ரோ பாலிட்டன் டெவலப்மெண்ட் அத்தாரிட்டி' இருக்க வேண்டும், கோவைக்கு இருக்கவேண்டும். கோவையைச் சுற்றிலும் 15,20 கிலோ மீட்டருக்கு மேலும் வீடுகள் வளர்ந்து வருகின்றன.

கோவைக்கும் மேட்டுப்பாளையத்திற்குமிடையே உள்ள பகுதி யில் தொழிற்சாலைகளும் வீடுகளும் பெருகி வருகின்றன. கோவையைச்சுற்றிலும் 'ஆடட் ஏரியா' என்று சொல்லப்படுகின்ற பழைய கிராமப்பகுதிகள், கணபதி, சங்கனூர், சிங்காநல்லூர் பகுதிகளில் இன்று புதிதாக வீட்டு மனைகள் அமைக்கப்பட்டு தொடர்ந்து விரிவாக்கப்பட்டு வருகிறது. ஆக திட்டமிட்ட வளர்ச்சி இல்லை என்றால், வருங்காலத்திலே போக்குவரத்து நெரிசலும் ஏற்படும். வளர்ந்து வருகின்ற நகரத்தினுடைய தேவைகளை நிறைவேற்றமுடியாமல் போய்விடும். ஆகவே மெட்ரோபாலிட்டன் டெவலப்மெண்ட் அத்தாரிட்டி மிகவும் அவசியம் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஏற்கனவே நான் கோரிக்கை வைத்திருக்கிறேன். அதை விரைவிலே பரிசீலித்து நிறைவேற்றுவதன்மூலம் திட்டமிட்ட வளர்ச்சியை இந்த நேரத்திலே ஏற்படுத்த முடியும். வருங்காலத் தில் நகரத்தினுடைய தேவையை நிறைவேற்றுவதற்கும் வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் இன்று டவுன் பிளானிங் துறை மூலம் அப்ரூவ் செய்யப்படுகின்ற ஓட்டல்களிலானாலும், தியேட்டர்களிலானாலும் போதுமான கார் பார்க்கிங், போன்ற வசதிகள் இல்லாமலேயே அனுமதிக்கப்பட்டு வருகின்றது. சில நெரிசலான பகுதிகளில் பல தியேட்டர்கள் வந்திருக்கின்றன. குறிப்பாக காந்திபுரம் பகுதியில், 4, 5 தியேட்டர்கள், மிக நெரிசலான, குறுகலான சாலைகள் இருக்கின்ற பகுதிகளில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் காரணத்தினால் அந்தப் பகுதியில் குடியிருந்து வருகின்ற மக்கள் அவர்களுடைய வீடு களுக்கு சென்று வரக்கூட இடர்ப்பாடு ஏற்பட்டுள்ளது. அவர்

களுடைய வாகனங்களை நிறுத்தி எடுத்துச்செல்ல கூட இடையூறு இருக்கிறது. புதிதாக மாடி ஓட்டல்கள் போன்றவற்றிற்குக் கட்டிடங்கள் கட்டப்படுகின்ற நிலை வரும்போது அங்கேயே போதிய அளவுக்கு கார் பார்க்கிங்குக்கு வசதிகள் செய்ய வேண்டுமென்று டவுன் பிளானிங்கிலே ஏற்பாடு செய்ய வேண்டும்.

(முற்பகல் 11-30)

அதுபோல சிதம்பரம் பூங்கா என்று சொல்லப்படுகிற பகுதி மிகவும் முக்கியமான இடம். விளையாட்டுத் திடலைப் பொறுத்த வரையில் அது ஸ்போர்ட்ஸ் கவுன்சிலின் ஆளுகையில் இருக்கிறது. அதை அவர்கள் பராமரிப்பதா, இல்லை மாநகராட்சி பராமரிப்பதா என்ற கருத்து வேறுபாடு இருக்கிறது. அதன் காரணமாக அதன் வளர்ச்சி தடைப்பட்டுள்ளது. நேரு ஸ்டேடியத்திற்கு அருகில் இருக்கிற பகுதியில் ஒரு இன்டோர் ஸ்டேடியம் கட்ட வேண்டும். அதுபோல குழந்தைகள் தியேட்டர் ஒன்றையும் கட்ட வேண்டும். ஸ்போர்ட்ஸ் கவுன்சில் என்பது அரசு அமைத்துள்ள ஒரு குழுதான். அதனுடைய நிதி வசதியைப் பயன்படுத்தி இன்டோர் ஸ்டேடியம் மற்றும் குழந்தைகள் தியேட்டர் கட்ட ஏற்பாடு செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, கோவையில் இருக்கிற டவுன் பஸ் ஸ்டாண்டைப் பொறுத்த வரையில் மிக நெரிசலாக இருக்கிறது. டவுன் பஸ் ஸ்டாண்டுக்கு அருகில் இருக்கிற காலியிடத்தில் ஒரு ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் கட்ட வேண்டுமென்ற நோக்கம் மாநகராட்சி யிடத்தில் இருக்கிறது. இது மேலும் இட நெருக்கடியை ஏற் படுத்தாவண்ணம் திட்டமிட்டு நல்ல பார்க்கிங் வசதியுடன் அத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்.

அடுத்து, மாநகராட்சிப் பகுதியில் இன்றைக்கு இராம கிருஷ்ணபுரம் என்கிற பகுதியில் இருக்கிற F. C. I. சாலை பிரச்சினைக்குரிய பகுதியாக இருக்கிறது. பல காலம் ஒரு பிரச்சினை குறித்து ஆங்குள்ள மக்கள் ஆட்சேபணை தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கு இருக்கிற எப்.சி.ஐ. கோடவுனுக்குச் செல்ல 2 கிலோ மீட்டர் சாலை இருக்கிறது. அது சாதாரண மக்கள் பயன்படுத்துகிற சாலையாகும். மத்திய அரசு உணவுக் கழகத்திற்குச் செல்கின்ற அந்தச் சாலையைப் பொதுமக்கள் உபயோகப்படுத்துவதற்காக மாநகராட்சியின் பராமரிப்பிற்குக் கொண்டு வர வேண்டுமென்று நானும், கோவை நகர சட்டமன்ற உறுப்பினர்களும் பல காலமாக மாவட்ட ஆட்சித் தலைவரிடத் திலும், எப். சி. ஐ. அதிகாரிகளிடத்திலும் பேசி வருகிறோம். இன்னும் ஒரு நல்ல முடிவு ஏற்படவில்லை. இந்த இரண்டு கிலோ மீட்டர் சாலையை மாநகராட்சி எடுத்துக் கொள்ள வேண்டும் அப்படிச் செய்வதன்மூலம் மாநகராட்சியின் இதர பகுதி வளர்ச் சிக்கும் அது பயன்படும். புதிதாக அங்கு கட்டப்படும் போலீஸ். குவார்ட்டர்ஸுக்கும் அது பயன்படும். அந்தப் பகுதிபொது



மக்களுடைய நன்மையைக் கருதியும், அங்கு வாழ்கின்ற தொழிலாளர்களுடைய சிரமத்தைப் போக்கும் வகையிலும் மாநகராட்சி அந்தச் சாலையை எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்கு F.C.I. கேட்கிற 12லட்சம் ரூபாயைக் கொடுப்பதில்கூட மாநகராட்சிக்குச் சிரமம் ஒன்றுமில்லை. அப்பகுதி வளர்ந்து வரும் பகுதி என்பதால் டெவலெப்மெண்ட் சார்ஜஸ் என்கிற வகையில் மக்கள் பணம் கட்டத் தயாராக இருக்கிறார்கள். அந்த வகையில் எப்.சி.ஐ. கோடவுனுக்காக அமைத்திருக்கிற அந்தச் சாலையை அவசியம் மாநகராட்சி எடுத்துக் கொள்ள வேண்டும். வளர்ந்து வருகிற கோவை மாநகராட்சிக்காக அரசு தீட்டுகின்ற அனைத்துத் திட்டங்களையும் வரவேற்று இச்சட்ட முன்வடிவையும் ஆதரித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. பொன் முத்துராமலிங்கம்: மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் மாநகராட்சித் தேர்தல்களை ஒத்தி வைக்கின்ற அடிப்படையில் கொண்டு வரப்பட்டிருக்கின்ற சட்டத் திருத்தங் களின் மீது சில கருத்துக்களை நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றையதினம் சென்னை, கோவை மற்றும் மதுரை ஆகிய மூன்று மாநகராட்சிகளுக்குத் தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட்டிருக் கின்றன. சென்னை மாநகராட்சிக்கு 12½ ஆண்டுக்காலமாகவும், கோவை மாநகராட்சிக்கு 6 ஆண்டுக் காலமாகவும், மதுரை மாநகராட்சிக்கு 3 அண்டுக் காலமாகவும் தேர்தல்கள் நடத்தப் படாமல் தனி அதிகாரிகளுடைய பொறுப்பில் அந்த மாநக ராட்சிகள் எல்லாம் இருக்கத்தக்க அளவுக்கு காலக்கெடு நீட்டிக்கப்பட்டு வந்து இன்னும் காலக்கெடுவுக்கு இத்திருத்தங்கள் வகை செய்கின்றன.

இந்தச் சந்தர்ப்பத்தில் மதுரை மாநகராட்சியைப் பொறுத்த வரையில் என்னுடைய கருத்துக்கள் என்னவென்றால் அங்கே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகராட்சி மன்றம் இல்லாத காரணத்தினால் அதிகாரிகளின் ஆட்சி நடைபெறுகின்ற காரணத் தால் பல குறைபாடுகள் மாநகரத்திலே மலிந்து கிடக்கின்றன.

குறிப்பாக, மாநகராட்சிப் பகுதிகளில் 'சானிடேஷன்' வசதி யில்லாமல் சுகாதாரக் கேடுகள் எல்லாம் மலிந்து காணப்படு கின்றன. மாநகராட்சியிலே ஏற்படக்கூடிய குறைபாடுகள் என்பவை உடனுக்குடன் மக்களைப் பாதிக்கக்கூடிய குறை பாடுகள் ஆகும். மின்சார விளக்குகள் எரியவில்லை என்றாலும், கழிப்பிடங்கள் தூய்மைப் படுத்தப்படவில்லை என்றாலும், சாக்கடைகள் சுத்தப்படுத்தப்படவில்லை என்றாலும், உடனுக் குடன் மாநகரத்திலே வாழக்கூடிய மக்களை அவை கடுமை யாகப் பாதிக்கக்கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது,

[திரு. பொன் முத்துராமலிங்கம்] [1986 நவம்பர் 17

இன்றைக்கு எங்கு பார்த்தாலும், மதுரை மாநகரத்திலே கழிப்பிடங்கள் ஒழுங்காகப் பராமரிக்கப்படாமலும், கழிவு நீர் எடுத்துச் செல்கின்ற சாக்கடைகள் ஒழுங்காகப் பராமரிக்கப் படாமலும் எங்கு பார்த்தாலும் தண்ணீர்த் தேக்கம் ஏற்பட்டு, கொசுப் பெருக்கம் அடைகின்ற காரணத்தினாலே பல்வேறு வியாதிகள் பரவுவதற்கான வாய்ப்பு அம்மாநகரத்தில் பெருகிக் கொண்டிருக்கிறது.

பல நேரங்களில் அதிகாரிகளிடம் எடுத்துச் சொன்னாலும் கூட, அதிகாரிகள் மக்களுடைய உணர்வுகளைப் புரிந்துகொண்டு, உடனடி நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராக இல்லை. மதுரை மாநகரத்தில் ஒரு காலத்தில் பாசனத்திற்குத் தண்ணீர் எடுத்துச் செல்கின்ற கால்வாய்களாக இருந்த அந்தக் கால்வாய்கள் நகரத்தின் மையப் பகுதியிலே இன்றைக்கும் சென்றுகொண்டிருக் கின்றன. ஆனால், இன்றைக்கு அந்தக் கால்வாய்கள் பாசனமற்ற கால்வாய்களாக இருக்கின்ற காரணத்தால், அவற்றிற்குப் பாசனம் பெற்ற ஆயக்கட்டுகள் எல்லாம் நகர்ப்புறங்களாக மாறிவிட்ட காரணத் தினாலே, அந்தக் கால்வாய்களிலே தண்ணீர்த் தேக்கம் ஏற்பட்டு கொசுக்கள் பெருகுவதற்கான வாய்ப்பு ஏற்படுகிறது.

அதைப் பல முறை அதிகாரிகளிடம் எடுத்துச் சொல்லிய நேரத்தில், அதிகாரிகள் அந்தக் கால்வாய்கள் பொதுப் பணித் துறைக்குத் தொடர்புடைய கால்வாய்கள்; எங்களுக்குத் தொடர்பு இல்லை; நகரத்திற்கு மத்தியிலே வந்தாலும் கூட, அந்தக் கால்வாய்களில் தண்ணீர்த் தேக்கம் ஏற்பட்டு, கொசுப் பெருக்கம் உருவாகி மக்களை பாதித்தாலும் கூட, அந்தக் கால்வாய்களில் தண்ணீரை அப்புறப்படுத்துவது, அந்தக் கால்வாய் களை சுத்தப்படுத்தி, வடிகால் செய்வது போன்ற பணிகளை யெல்லாம் பொதுப்பணித்துறைதான் செய்யவேண்டுமே யல்லாமல், நாங்கள் செய்ய இயலாது என்று கருத்துத் தெரிவிக் கிறார்கள்.

இதன் காரணமாக, பொதுப் பணித் துறை செய்வதா அல்லது மாநகராட்சி அந்தப் பணிகளை மேற்கொள்வதா என்ற விவாதத்திலே ஈடுபட்டு தொடர்ந்து அந்தக் கால்வாய்கள் எல்லாம் பராமரிக்கப்படாமலே இருக்கின்றன. அப்படி இருக்கின்ற காரணத்தினால், மழைக் காலங்களில் தண்ணீர்ப் பெருக்கம் ஏற்பட்டு, கொசுப்பெருக்கம் சொல்ல முடியாத அளவுக்கு ஏற்படுகிறது,

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துத் தெரிவித்ததைப் போல, கொசுப் பெருக்கத்தின் காரணமாக, மூளைக் காய்ச்சல் நோய் பரவுகிறது: ஒரு விதமான கண் நோய் பரவுகிறது. அதோடு மலேரியா பரவுகிறது. இப்படிப்பட்ட தொற்று நோய்கள் எல்லாம் கொசுப் பெருக்கத்தின் மூலமாகப் பரவு கின்றன என்கின்ற யதார்த்தமான உண்மையை அரசு அதிகாரிகள் அறிந்திருந்தாலும் கூட, யார், எந்தத் துறை நிறைவேற்றுவது



1986 நவம்பர் 17] [திரு. பொன் முத்துராமலிங்கம்]

என்பதிலே இருக்கக்கூடிய கருத்து வேறுபாடுகளைக் களைந்துவிட முடியாமல், அந்தக் குறைபாடுகள் எல்லாம் தொடர்ந்து இன்றைக்கு இருந்து கொண்டிருப்பதை மதுரை மாநகராட்சி சந்தித்துக் கொண்டிருக்கிறது.

அந்த மாநகராட்சியில் தேர்தல் நடைபெறாததால் தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றங்கள் முடிவுகளை மேற் கொள்வதிலேயும், அந்த முடிவுகளை அரசுக்குத் தெரிவிப்பதி லேயும், தொடர்புடைய அமைச்சர்களை அணுகிப் பேசுவதி லேயும் உள்ள சூழ்நிலை இப்போது இல்லாமல் இருக்கிறது. அதிகாரிகளிடம் இப்போது நிர்வாகப் பொறுப்பு இருப்பதால், அவர்கள் மக்களுடைய உணர்வுகளைப் புரிந்து கொண்டு, உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க முடியாத சூழ்நிலை இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறது.

உலகத் தமிழ் மாநாட்டின்போது பல்வேறு இடங்களில் கழிப் பிடங்கள் தமிழக அரசினாலே கட்டி வைக்கப்பட்டன. கழிப் பிடங்கள் எங்கு தேவைப்படும். பொதுவாக தொழிலாளர்கள் வாழக்கூடிய பகுதி அல்லது சேரிப் பகுதி போன்ற பகுதிகளிலே தான் பொதுக் கழிப்பிடங்கள் தேவைப்படும். ஆனால் உலகத் தமிழ் மாநாட்டின் போது, தேவைப்படாத இடங்களில், பல்வேறு முன்னேறிய பகுதிகளில் பொதுக் கழிப்பிடங்கள் கட்டி வைக்கப்பட்டு இருக்கிற காரணத்தினாலே, உலகத் தமிழ் மாநாட்டின்போது கட்டிவைக்கப்பட்ட நினைவுச் சின்னங் களாகத்தான் அவை இருக்கின்றனவேயல்லாமல் எந்த நோக்கத் திற்கு கட்டப்பட்டனவோ அந்த நோக்கத்திற்காகக் இந்தக் கழிப்பிடங்கள் பயன்படவில்லை. அதோடு இந்தக் கழிப்பிடங்களெல்லாம் கட்டி வைக்கப்பட்ட நேரத்தில், இந்தக் கழிப்பிடங்களை பராமரிப்பதற்கான முன்னேற்பாடுகளைச் செய்யத் தவறிய காரணத்தினாலே இந்தக் கழிப்பிடங்க ளெல்லாம் அப்படியே இருக்கின்றன. பயன்படுத்தினால், பராமரிப்பு இல்லாத காரணத்தினாலே மீண்டும் மக்கள் பயன் படுத்துவதற்கு வாய்ப்பு இல்லாமல் அதன்மூலம் துர்நாற்றம் ஏற்பட்டு பல்வேறு கொசுப் பெருக்கத்திற்கு வழி வகுக்கிறது என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்திலே நான் மன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

[முற்பகல் 11-40]

இதுபோன்றே சாலைகள். சாலைகளெல்லாம் பராமரிக்கப் படாமல் எங்கு பார்த்தாலும் குண்டும் குழியுமாக வாகனப் போக்குவரத்திற்குப் பயன்படாமல் அப்படியே இன்றைக்கு இருந்து கொண்டிருக்கின்றன. இன்னொரு சங்கடம் என்ன வென்றால், நகரத்தின் நடுவே ஹைவேஸினுடைய சாலைகள் செல்வதாகச் சொல்கிறார்கள். அப்படி ஹைவேஸ் சாலைகள் செல்லுகின்ற காரணத்தினாலே மாநகராட்சி எங்களுக்குத்

தொடர்பு இல்லை. இதை ஹைவேஸ்தான் செய்ய வேண்டு
மென்று சொல்கிறார்கள். ஹைவேஸ் அதை கவனத்திலே
கொள்ளாமல் நகரத்தின் நடுவிலேயே—மதுரை மாநகரத்திலே
கூட. சமீபத்திலே பத்திரிக்கையிலே வந்த செய்தியின் அடிப்
படையிலே சொல்ல வேண்டுமென்றால், இவ்வளவு மோசமாக
சாலை இருக்கிறதே என்பதை எடுத்துக்காட்டுவதற்காக——சிலர்
மரத்தைக் கூட நட்டு வைத்தார்கள். ஹைவேஸ் அந்தப்
பணியினை மேற்கொள்ளாத காரணத்தினாலே மாணவர்களேகூட
அந்தப் பணியினைச் செய்ய முற்பட்டார்கள். இப்படி தேர்ந்
தெடுக்கப்பட்ட மன்றம் இல்லாத காரணத்தினாலே அதிகாரிகள்
மக்களுடைய உணர்வுகளைப் புரிந்து கொண்டு உடனுக்குடன்
செய்ய வேண்டிய பணிகளையெல்லாம் செய்யாமல் அப்படியே
விட்டு விடுகிறார்கள். அதனால் மக்களுக்குப் பெரும் தீங்கு
ஏற்படுகிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் தெளிவு
படுத்த விரும்புகிறேன்.

தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றங்கள் இருந்தால்தான் மக்க
ளுடைய அன்றாடத் தேவைகளைக் கவனித்து அவற்றை நிறைவு
செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும். ஜனநாயகத்திலே தேர்தலை
உள்ளாட்சிகளிலே நடத்தி, தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றத்தை
உருவாக்க வேண்டிய ஒரு அரசே, 12½ ஆண்டு, 6 ஆண்டு, 3 ஆண்டு
என்று காலக்கெடுவை நீட்டிக்கொண்டே செல்வார்களேயானால்
இது நாட்டிலே சொல்கின்ற பழமொழியைப்போல, "வேலியே
பயிரை மேய்ந்த கதை"யாகத்தான் இருக்கிறதே அல்லாமல்
வேறொன்றும் அல்ல.

சமீபத்திலேகூட இந்திய நாட்டினுடைய பிரதம அமைச்சர்
மாண்புமிகு ராஜிவ் காந்தி அவர்கள், நாடாளுமன்ற மேலவை
யிலே கருத்து தெரிவிக்கின்ற நேரத்திலே, உள்ளாட்சி மன்றங்கள்
மக்களுக்கு நேரடியாக அருகிலே இருந்து, அத்தியாவசியப்
பணிகளை ஆற்றிக்கொண்டிருக்கிற உள்ளாட்சி மன்றங்களுக்குத்
தேர்தலை நீட்டிக்கொண்டே செல்வது என்பது சகிக்க முடியாத
ஒன்று. அது மாநிலத்தினுடைய பணியாக இருந்தாலும்கூட
மத்திய அரசு தலையிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுமோ,
அதற்கான சட்டத்திருத்தத்தைச் செய்ய வேண்டுமோ என்று
தான் அச்சப்படுகிறேன் என்ற கருத்துப்பட எடுத்துத் தெரி
வித்திருக்கிறார்கள். எனவே, மாநகராட்சியினுடைய தேர்தல்
நடத்தப்பட வேண்டுமென்ற அத்தியாவசியத்தை இன்றைக்கு
இந்திய மட்டத்திலே அறிந்து கொள்ளுகின்ற அல்லது மாநில
சர்க்காரால் காலதாமதப்படுகிறது என்கின்ற நிலைமையைப்
புரிந்து கொள்ளத்தக்க அளவிற்கு நிலைமைகள் உருவாகி
இருக்கின்ற காரணத்தினாலே, இந்தத் தேர்தல் உடனடியாக
நடத்தப்பட வேண்டுமென்று இந்த மன்றத்தின் வாயிலாகத்
தெரிவிக்க நான் விரும்புகிறேன்.



அதோடு இன்றைக்குச் சொல்லப்படுகின்ற காரணம் வேறு.
என்னைப் பொறுத்தமட்டில் கடந்த முறை இதே காரணத்தைச்
சொல்லவில்லை. இன்றைக்குப் புதிதாக எல்லா மாநகராட்சி
களுக்கும் ஒன்றாகச் சேர்த்து ஒரு பொதுச் சட்டத்தை உருவாக்கி
அந்தச் சட்டத்தினுடைய அடிப்படையிலே நாங்கள் தேர்தலை
நடத்த இருக்கிறோம் என்று அரசு கருத்து தெரிவிக்கிறது.
எனவே, இந்தக் காரணம் ஏற்கனவே தெரிவிக்கப்படாமல், கால
நீட்டிப்பு செய்வதற்காக ஒரு புதிய காரணத்தைச் சொல்ல
வேண்டுமே என்பதற்காக சொல்லப்பட்டிருக்கிறது என்றுதான்
நான் கருதுகிறேன்.

அது மட்டுமல்ல, தேர்தலை முடித்துவிட்டுக்கூட நீங்கள்
புதிய சட்டத்தைக் கொண்டு வரலாம். அதிலே ஏதும் தடை
யிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இங்கே நீங்கள் கால
நீட்டிப்பு செய்ய வேண்டுமென்பதற்காக மட்டும் இந்தக்
காரணத்தைச் சொல்வது என்பது பொருத்தமாக இருக்காது
என்று தெரிவித்துக்கொள்கிறேன். இப்படித் தொடர்ந்து கால
நீட்டிப்பு செய்வதை ஜனநாயகத்திற்கு விடப்பட்ட சவாலாக
நான் கருதுகிறேன். அடித்தளத்திலே உள்ள இந்தத் தேர்ந்
தெடுக்கப்படவேண்டிய மன்றங்களுக்குத் தேர்தலை நிராகரிப்பது
என்பது மக்களுக்குக் கிடைக்கவேண்டியஅடிப்படை உரிமைகளை
நிராகரிப்பதற்கு ஒப்பாகும். எனவே, இறுதியாக இதுதான்கடைசி
முறையாக நாங்கள் கால நீட்டிப்பு செய்கிறோம் என்கின்ற ஒரு
குறைந்தபட்ச வாக்குறுதியை இந்த மன்றத்தின் மூலமாக
மாண்புமிகு அமைச்சரவர்கள் தர வேண்டும் எனக் கேட்டு
முடிக்கிறேன், வணக்கம்.

டாக்டர் கே. சௌரிராஜன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு
திரு. கே. ஏ. கே. அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிற
சென்னை மாநகராட்சியினுடைய சட்ட முன்வடிவைப் பற்றி
ஆய்வு நிலையில் என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு
வாய்ப்பளித்தமைக்கு முதலில் நன்றி தெரிவித்துக்
கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் திரு கே. ஏ. கே. அவர்கள்
அமைச்சர் மட்டுமல்ல. சென்னை மாநகரத்திலே உள்ள
ஆயிரம் விளக்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும் இருக்
கிறார். அது மாத்திரமல்லாமல் ஆயிரம் விளக்குத் தொகுதி
உள்ளடங்கிய கிட்டத்தட்ட பத்து கார்ப்பரேஷன் டிவிஷன்
களின் கவுன்சிலராகவும் இருக்கிறார். அவர்களுக்கு இருக்
கின்ற திறமைக்கும் ஆற்றலுக்கும் ஏற்றவகையில் மிக
நன்றாகப் பணிபுரியக்கூடிய சக்தி அவர்களுக்கு இருக்கிறது.
பத்து டிவிஷன்களுக்கு கவுன்சிலராகவும், ஒரு எம். எல். ஏ.
யாகவும், மாநிலம் தழுவிய ஒரு அமைச்சராகவும் அவர்கள்
இருக்கிறார்கள். எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால்
மற்ற சட்டமன்ற உறுப்பினர்களின் நிலைமை எப்படி இருக்கும்

என்பதை அவர்களால் புரிந்து கொள்ள முடியும். மீதமுள்ள தொகுதி சட்டமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்கள் அல்ல; அதிகாரமும் இல்லை. ஆகவே அவர்கள் எந்த அளவுக்கு வேதனைப்பட்டுக் கொண்டிருப்பார்கள் என்பதை அண்ணன் திரு கே. ஏ. கே. அவர்கள் புரிந்து கொண்டிருப்பார்கள் என்ற அடிப்படையிலே நான் குறிப்பிடுகிறேன் (குறுக்கீடு) அண்ணன் என்றால் வயதிலே என்பதல்ல; அறிவில் அண்ணனாக இருக்கலாம், ஆற்றலில் அண்ணனாக இருக்கலாம், பதவியில் அண்ணனாக இருக்கலாம். அந்த அடிப்படையில் அவர்கள் தன்னுடைய சிந்தனையைச் செலுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை மாநகரைப் பொறுத்த வரையில், மாநகராட்சித் தேர்தலை தள்ளிப் போடுகின்ற நிகழ்ச்சி காலம் காலமாக நடந்து கொண்டிருக்கிறது. இந்தச் சட்டமன்றத்திற்கு நான் வந்த நாளிலிருந்தே பார்த்துக் கொண்டிருக்கிறேன். 1980-லிருந்தே இப்படித் தள்ளிப் போடுகின்ற நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. ஆண்டாண்டுதோறும் இதே பல்லவியைத் தான் நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். என்ன பல்லவி என்றால் 'ஸ்பெஷல் ஆபீசர் பதவிக் காலத்தை நீட்டிக் கிறோம்' என்ற பல்லவி. பதவி நீட்டிப்பு, 'பதவிநீட்டிப்பு, என்று கேட்டு லா டிபார்ட்மெண்டுக்கே போரடித்து விட்டது போலும். அதனால் தான் இரண்டு ஆண்டுகளுக்கு என்று சட்ட முன்வடிவைக் கொண்டு வந்து விட்டார்கள். அதுவும் முடியாமல் மூன்று ஆண்டுகளுக்கு என்று வந்துவிட்டது. இப்படியே 12½ ஆண்டு களாக ஸ்பெஷல் ஆபீசர் பதவி வகிக்கலாம் என்று இந்தச் சட்டத்தைத் திருத்தியிருக்கிறார்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நீங்களும் சட்டம் படித்தவர்கள். உங்களுக்கு சட்டத்தைப் பற்றி நன்றாகத் தெரியும். சட்டத்திலே 'Corpus delicti' என்று ஒரு பகுதி உண்டு. ஒரு மனிதன் இறந்து விட்டான் என்றால் ஒன்றில் அவனுடைய சவத்தைக் கொண்டு வர வேண்டும். பிணம் கிடைக்கவில்லை என்றால் 12 ஆண்டுக் காலத்திற்கு அவன் எந்த இடத்திலும் கிடைக்காமல் இருக்க வேண்டும். யார் கண்ணிலும் படாமல் இருக்க வேண்டும். If so he can be declared as dead, என்பது நம்முடைய சட்டத்தில் இருக்கிற ஒரு பிரிவு.

சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் 14 ஆண்டு களாக கவுன்சிலே இல்லை. ஆகவே, அவர்கள் They all can be declared as dead.

எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால் எத்தனையோ திருத்தங்களைக் கொண்டு வருகிறீர்கள். The Act says that

.There shall be a Council of 100 Members;



There shall be a Mayor;

There shall be a Deputy Mayor;''

You can repeal that also.

ஏனென்றால் காலம் மாறிக் கொண்டிருக்கிறது, சிந்தனை மாற வேண்டியது அவசியம், 1919-ல் வெள்ளைக்காரர்கள் போட்ட சட்டத்தை வைத்துக் கொண்டு தேர்தலை நடத்தவில்லை என்று சொல்லிக் கொண்டிருப்பது விவாதத்திற்கு வேண்டுமென் றால் சரியாக இருக்கலாம்: ஆனால் நடைமுறையில் அது சரியாக இருக்காது.

இன்னொன்றை சொல்ல விரும்புகிறேன். ஏதோ தேர்தலை நடத்தி விட்டால் திடீரென்று சாக்கடை சரியாகிவிடும், நகரம் சுத்தமாகி விடும் என்று நினைத்து விடமுடியாது. அது முடியாது. இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் என்ன வென்றால், இந்த வசதிகளைச் செய்வதற்கு, மாநகராட்சியிடம் காசு இல்லை, ஆகவே, அதனுடைய வருவாயை அதிகரிக்க ஓ மாற்றத்தைக் கொண்டு வந்திருந்தால் நான் சந்தோஷப் பட்டிருப்பேன்.

(முற்பகல் 11-50)

எத்தனையோ சட்டங்களைக் கொண்டு வருகிறீர்கள். ஆனால் மாநகராட்சியினுடைய வருவாயை அதிகரிப்பதற்கு என்ன ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்? எங்கே கொண்டு போய் குப்பையைக் கொட்ட வேண்டும் என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள் மாநகராட்சியிலே. இங்கே சைனா பஜாரில் விழுகின்ற குப்பையைக் கொண்டு போய் 25 கிலோ மீட்டர், 30 கிலோ மீட்டர் தாண்டி, ரெட்ஹில்ஸைத் தாண்டிக் கொண்டு போய் கொட்ட வேண்டி இருக்கிறது. இப்படி குப்பை கொட்டுவதற்குக் கூட இடம் இல்லாமல் எல்லா இடத்திலும் வீடுகளைக் கட்டிவிட்டிருக்கின்ற நிலைமை இருக்கிறது. ரூ. 25 கோடி, 30 கோடி என்று அவர்களுக்கு வருகிற வருவாயை வைத்துக் கொண்டு கஷ்டப்படுகிறார்கள். காலம், காலமாக கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதாவது 1500 காம்ப்ளிமென்ட்ஸ் வேண்டும், ஸ்வீப்பர்ஸ் அதிகமாக வேண்டும், புதிய லாரிகள் 150 வாங்க வேண்டும் என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

இதற்கெல்லாம் நாம் ஒன்றும் செய்யாமல் தேர்தலை நடத்தி விட்டால் நாளைக்கு உடனே சென்னை மாநகரமே மணக்கும் என்று சொல்கிறார்கள். என்னால் அதைப் புரிந்து

கொள்ளவே முடியவில்லை. எனவே இது பற்றி எல்லாம் நீங்கள் ஆழமாகச் சிந்தித்து சென்னை மாநகரத்தினுடைய வருவாயைப் பெருக்குவதற்கு என்ன வழி என்று தேடி அதற்கான சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்தால் உங்களை நான் வெகுவாகப் பாராட்டியிருப்பேன். மாநகராட்சித் தேர்தல்கள் வரும், போகும். இப்போது எங்களுக்கு வருகிற கெட்ட பெயர்கள் எல்லாம் அமைச்சருக்கும் சேர்த்துத்தான் வருகிறது. அந்தக் கெட்ட பெயர்களை 10 கவுன்சிலர்களும் பங்கிட்டுக் கொள்வார்கள். அதைவிட வேறு எதுவும் அதிகமான முன்னேற்றம் ஏற்படும் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

அடுத்தபடியாக இந்த மாநகராட்சி எதற்காகக் கலைக்கப் பட்டது 1973லே- என்று தாங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஏதோ மாநகராட்சி உறுப்பினர்கள் எல்லாம் கொலையோ, கொள்ளையோ செய்து விட்டார்கள் என்பதைப் போல 'மஸ்டர் ரோல்' ஊழல், லாரி பேர ஊழல் என்றெல்லாம் சொல்லி அந்த அப்பாவிக் கவுன்சிலர்களை எல்லாம் நீக்குகின்ற வகையில் அதாவது ஒருவர், இருவர் செய்த தவறுகளுக்காக அந்தக் கவுன்சிலையே ஒழித்து விட்டார்கள். அன்றைக்கு முதல்வராக இருந்த டாக்டர் கலைஞர் அவர்கள். 13 ஆண்டுகாலமாக அரசாங்கத்திலே தான் இந்த நிர்வாகம் இருந்துகொண்டு இருக்கிறது. தைரியமாக அமைச்சரால் சொல்ல முடியுமா? நான் கேட்கிறேன், கார்ப்ப ரேஷனிலே ஊழல் ஒழிக்கப்பட்டு விட்டது என்று சொல்ல முடியுமா? நிச்சயமாக உங்களால் சொல்ல முடியாது. நாங்கள் மாநகராட்சி உறுப்பினர்களாக இருந்தபோது கார்ப்பரேஷ னிலே ஊழல்கிடையாது; ஆனால் பக்ஷிஸ் கேட்பது வழக்கம். மேயரிலே இருந்து கமிஷனர் மற்றும் கீழே உள்ள லிப்ட் மேன் வரையிலும், யார் போனாலும் கார்ப்பரேஷனிலே தலையைச் சொரிவார்கள். ஏதாவது டீ செலவுக்குக் கொடுங்கள் என்று கேட்பார்கள். நாம் கீழே வந்ததற்குப் பிறகு 'ஐயா என்னை மறந்து விட்டீர்களே 'என்று ஒரு குரல் கேட்கும். யார் என்று பார்த்தால்ஒருவரும் இருக்கமாட்டார்கள். கார்ப்பரேஷனுடைய, ரிப்பன் பில்டிங்கினுடைய சுவர் கேட்கும். இவ்வாறு வேடிக்கை யாகச் சொல்வார்கள். ஆனால் இன்றுள்ள நிலைமையைப் பார்த் தால் கார்ப்பரேஷன் ரிப்பன்பில்டிங் மாத்திரம் அல்ல, ஒவ்வொரு டிவிஷன் ஆபிசில் உள்ள சுவர்களும் ரேட்டை பிக்ஸ் செய்து வைத்து இருக்கின்றன. அமைச்சர் அவர்களே சென்று நேரடி யாகப் பார்த்தால் எத்தனையோ நிலைமைகளைத் தெரிந்து கொள்ளலாம். நானே கொடுத்து இருக்கிறேன் லஞ்சம் என்று சொன்னால் அபபுறம் நம்பமாட்டார்கள். ஆக அந்த அளவுக்கு இன்றைக்கு ஊழல் மலிந்து நிர்வாகத்தில் சீர்கேடு ஏற்பட்டு இருக்கிறது. காரணம் அந்த அளவிற்குச் சென்னை மாநகரம் அளவுக்கு மீறி வளர்ந்து விட்டது.

உதாரணமாக நண்பர் அவர்கள் அண்மையிலே ஒரு புள்ளி விவரத்தை எடுத்துச் சொன்னார்கள். அதாவது கிட்டத்தட்ட 70 இலட்சம் மக்கள் சென்னை மாநகரத்தில் மதியம் 12 மணிக்கு இருக்கிறார்கள். 40 இலட்சம் அல்ல.





70 lakhs of people are in Madras City

அதாவது இரயில்வே ஸ்டேஷனில் இருப்பவர்களும் ஓட்டல் களில் தங்கியிருப்பவர்களும்' செக்கரட்டேரியட்டுககு வருகிறவர் களும் எம். எல் ஏ.க்களைப் பார்க்க வருகிறவாகளும் இப்படி எல்லோரையும் சேர்த்து சென்னை மாநகரத்தினுடைய மக்கள் தொகையை மதியம் 12 மணிக்கு கணக்கெடுத்துப் பார்த்தால் 70 இலட்சம் வரும். இந்த 70 இலட்சம் பேர்களுக்கும் கக்கூஸ் வசதி, குழாய் வசதி, விளக்கு வசதி, தண்ணீர் வசதி, சாலை வசதி என்று இவற்றை எல்லாம் செய்து கொடுக்க வேண்டுமென்றால் அது எப்படி சாத்தியம் என்பதை அர சாங்கம சிந்தித்துப் பார்த்ததாகவே தெரியவில்லை.

கடைசியாக எனக்கு ஒரு ஆசை. அன்றைக்கு அமைச்ச ராக இருந்த திரு. டி.டி கே. அவர்கள் இதனை 'A Grade' சிட்டி யாக ஆகக 40 இலட்சம் பேர்கள் இருந்தால்தான் அவ்வாறு 'A Grade City' ஆக்க முடியும் என்று, கத்திப்பாரா வரையிலும் மற்றும் வடசென்னையிலே ஒரு குறிப்பிட்ட இடம் வரையிலும் சென்னை மாநகரத்தை விரிவாக ஆக்கினார்கள். அவ்வாறு அது 'A Grade City' யாக மாறிய பிறகும் இன்றும் நாம் இதை நீட்டிக் கொண்டு போய்க் கொண்டே இருக்கிறோம். அருமைச் சகோதரர் திரு. வி. பி. சி அவர்கள் அடிக்கடி சொல்கிறார் கள். அதாவது உங்களால் குழாய் வசதி கொடுக்க முடியாது, கக்கூஸ் வசதி கொடுக்க முடியாது, சாலை வசதி கொடுக்க முடியாது, பிறகு எதற்காக இந்தப் பகுதியை எடுத்துக் கொண்டீர்கள் என்று சொல்கிறார்கள். வில்லிவாக்கம், அம்பத்தூர், ஆவடி என்று கேட்டுக்கொண்டே இருக்கிறார்கள். ஆனால் பதில் வரவில்லை. ஏன் அளவுக்கு மீறிய சுமையைச் சுமக்கிறீர்க ? மாநகராட்சியையே இரண்டாகப் பிரித்து விட்டால் தேவலையோ என்பதுதான் என்னுடைய தாழ்மை யான கருத்து. (மணியடிக்கப் பெற்றது) ஒரே ஒரு பாயின்ட் சொல்லிவிட்டு முடித்து விடுகிறேன். தமிழகத்தில் உள்ள எல்லா மாவட்டங்களுக்கும் ஒவ்வொரு பெயர் வைத்து வருகிறார் கள் நம்முடைய முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள். அண்ணா மாவட்டம், காமராசர் மாவட்டம், பெரியார் மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் என்று ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு தலைவரின் பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. 40 லட்சம் ஜனத் தொகை கொண்ட பகுதியை மெட்ராஸ் ஈஸ்ட் பகுதியிலே வைத்து மீதம் இருக்கிற பகுதிகளையெல்லாம் சேர்த்து, ஒரு மாவட்டம் அமைத்து அதற்கு ராஜாஜி மாவட்டம் என்று அமைக்க வேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான வேண்டு கோள், ஆசையும் கூட.

கடைசியாக ஒன்றைச் சொல்லுகிறேன். ஆங்கிலத்திலே ஒரு பழமொழி சொல்வார்கள் ''You must see Naples once before you die''. சாவதற்கு முன்பு ஒரு முறை நேப்பிள்ஸ் நகரத்தை

பார்த்து விட வேண்டும் என்று சொல்வார்கள். அதே போன்று
சொல்லுகிறேன். அடுத்த முறை தேர்தலில் நிற்பதற்கான
வசதியும் இல்லை வயதும் இல்லை. திறமையும் இல்லை.
இந்த 5 ஆண்டுகளில் இன்னும் 3 ஆண்டுகள் இருக்கின்றன.
இந்த 3 ஆண்டு காலத்திற்குள்ளாக காலையில் எழுந்த உடனே
விளக்கு எரியவில்லை, குழாயில் தண்ணீர் வரவில்லை, கக்கூஸ்
அடைத்துக் கொண்டு இருக்கிறது போன்ற பிரச்சனைகளையெல்
லாம் சந்திக்கக்கூடிய அளவிற்கு ஆளாக்காமல் நிஜமாகவே ஒரு
சட்டமன்ற உறுப்பினராக செயலாற்ற 6 மாத காலத்திற்காவது
எங்களுக்கு அந்த வாய்ப்பைத் தர வேண்டுமென்று மாண்புமிகு
அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு வாய்ப்பு அளித்த
மைக்காக நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

*திரு. வி. பி. சிந்தன்: மதிப்பிற்குரிய மாற்றுத் தலைவர்
அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இந்தச்
சட்டத் திருத்தத்தை எதிர்ப்பதற்காக நான் இங்கே
நிற்கிறேன். ஏற்கெனவே இவ்வாறு தேர்தலை ஒத்தி வைக்கும்
போது, முன்னாள் உள்ளாட்சித் துறை அமைச்சர் ஒரு காரணத்
தைச் சொன்னார். பஞ்சாயத்துத் தேர்தல்கள் நடக்க இருக்கிற
காரணத்தாலே, இந்தத் தேர்தலை இப்போது நடத்த முடியாது
என்று அவர் சொன்னார். பஞ்சாயத்துத் தேர்தல் முடிந்ததற்குப்
பிறகும் தேர்தலை நடத்தாமல் மற்றொரு காரணத்தை
இப்போது சொல்லுகிறீர்கள். நாட்டின் இதர மாநிலங்
களில் மாநகராட்சியின் தேர்தல்கள் எவ்வாறு நடத்தப்
படுகின்றன, மாநகராட்சிகள் எவ்வாறு நடக்கின்றன, அவற்றி
னுடைய சட்ட விதிகள் என்ன என்பதையெல்லாம் ஆராய்ந்து
ஒரு காம்ப்ரஹென்சிவ் லெஜிஸ்லேஷன் கொண்டு வந்து,
அதனுடைய அடிப்படையிலே தேர்தலை நடத்தலாம் என்று
இப்போது சொல்லுகிறீர்கள். அப்படிப் பார்த்தால், இந்தக்
குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகும், நான் நிச்சயமாக நம்பு
கிறேன், இந்த அமைச்சரோ, அல்லது மற்றொரு அமைச்சரோ,
மீண்டும் ஏதாவது ஒரு காரணத்தைக் காட்டி சென்னை மாநகரத்
தினுடைய தேர்தலை, ஒத்தி வைக்கலாம்; அல்லது கோவை
மாநகரத்தினுடைய தேர்தலை, மதுரை மாநகரத்தினுடைய
தேர்தலை ஒத்தி வைக்க வேண்டுமென்று இந்த மன்றத்திலே
கோருவார்கள் என்பதிலே எனக்குச் சந்தேகம் இல்லை. ஆனால்
அடிப்படையான காரணங்கள் இவை அல்ல.

உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடிய
இந்தக் காரணங்களை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.
உண்மையாக ஏன் தேர்தலை நடத்த முடியவில்லை? நான்
தெளிவாக இதற்குப் பதில் சொல்ல விரும்புகிறேன். எங்களைப்
பொறுத்த வரையில், ஆளும் கட்சிக்கு, சென்னை நகர மக்களை,
மதுரை நகர மக்களை, கோவை நகர மக்களை சந்திக்கின்ற



ஆற்றலும் திறமையும் இல்லை என்பதுதான், இந்தத் தேர்தல்
களை ஒத்தி வைப்பதற்கான காரணங்களே தவிர, உண்மையில்
பஞ்சாயத்துத் தேர்தலும் காரணம் அல்ல, நாடு முழுவதிலும்
உள்ள மாநகராட்சிகளின் முறைகளையெல்லாம் கண்டு அறிந்து
இங்கே மிக நல்ல நிலையில் முறைகளை அமைக்க வேண்டும்
என்பதும் காரணம் அல்ல.

ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள ஒரு ஆட்சி என்றால்
இந்தத் தேர்தல்கள் முறையாக நடத்தப்படவேண்டும். அவசரச்
சட்டத்தைக் கொண்டு வருகிறீர்கள். ஒன்று சட்டமன்றம்
முடிந்தால் அது அவசரச் சட்டமாக வரும். அல்லது அவசரச்
சட்டம் முடிந்தால், சட்டமன்றம் கூடும்போது ஒத்தி வைக்கி
றோம், ஒத்தி வைக்கிறோம் என்று சொல்லி 6 மாதங்களுக்கு,
ஒரு ஆண்டுக் காலத்திற்கு என்று தொடர்ந்து ஒத்தி வைக்கும்
முறை, ஜனநாயகத்திற்கு பாதுகாப்பு ஏற்படுத்தக் கூடியது அல்ல.
ஜனநாயகம் இதனால் பெரும் அளவிற்குப் பாதிக்கப்படும்
என்பதைக் கவலையோடு தமிழக அரசின் கவனத்திற்குக்
கொண்டு வருகிறேன்.

இப்படித்தான் சில நாடுகளிலே நகராட்சி, மாநகராட்சி
தேர்தல்களை ஒத்தி வைக்க ஆரம்பித்து, சட்டமன்றங்களுக்
குள்ள தேர்தல்களையும் ஒத்தி வைக்க ஆரம்பித்து, பிறகு
நாடாளுமன்றங்களுக்குள்ள தேர்தல்களையும் அவசரச்சட்டத்தின்
மூலமாக ஒத்தி வைத்து, சட்டத் திருத்தங்கள் கொண்டு வந்து,
கடைசியில் ராணுவ ஆட்சி அமைந்து, பிறகு அந்த நாட்டு மக்கள்
என்னென்ன அவல நிலைமைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள்
என்பதை நாம் அறிவோம். எனவே இந்தத் தேர்தலை நகராட்சித்
தேர்தல் தானே, மாநகராட்சியினுடைய தேர்தல்தானே என்று
நினைக்க கூடாது. இது ஒரு மாநகராட்சியினுடைய பிரச்சினை
மட்டும் அல்ல, ஜனநாயகத்தினுடைய பிரச்சினை. ஜனநாயக
உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்ற நோக்கத்தோடு
தான் இதைச் சொல்கிறேன்.

(நண்பகல் 12-00.)

வெள்ளைக்காரன் ஆட்சி நடத்திய காலத்திலே சட்ட
மன்றங்களை அமைக்க அனுமதிக்கவில்லை, பாராளுமன்றம்
வேண்டும் என்ற கோரிக்கையையும் ஏற்றுக்கொள்ள
வில்லை. ஆனால் நகராட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடந்தது.
அலகாபாத்தில் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள்
தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். விருதுநகரில் காமராசர் அவர்கள்
தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். சேலம் நகராட்சியில் இராஜாஜி
அவர்கள் நகரசபைத் தந்தையாகப் பணியாற்றினார்கள்.
இப்படி நீண்டகாலமாகப் பணியாற்றி இருக்கிறார்கள்.
உங்களுடைய ஆட்சியிலேதான் இந்தத் தேர்தலை நடத்தாமல்
இருக்கிறீர்கள். இது பெரிய குற்றம் என்பதை நான் மீண்டும்
ஒருமுறை சொல்ல விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல்
இப்போது உங்களுக்குப் புதிய பலம் கிடைத்திருக்கிறது.

உங்களை விட்டுச் சென்றவர்கள் எல்லாம் திரும்ப வந்திருக்கிறார்கள். இன்னும் புதியவர்கள் உங்களோடு இணைப்பு கேட்டிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில்கூட எங்களைச் சந்திப்பதற்கு, எதிர்க்கட்சியினரைச் சந்திப்பதற்கு ஏன் தயங்குகிறீர்கள்? புதிய பலத்தைப் பெற்றிருக்கிறீர்கள். மந்திரி சபையில் புதிய மாற்றத்தை உருவாக்கி இருக்கிறீர்கள். புதிய மெருகு பெற்றிருக்கிறீர்கள். புதிய ஆர்வத்தை அடைந்திருக்கிறீர்கள். இந்த நேரத்திலாவது ஏன் மாநகராட்சி தேர்தல்களை நடத்தக்கூடாது என்பதை மீண்டும் கேட்க ஆசைப்படுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

நகரசபையினுடைய குறைபாடுகளை நான் பட்டியல் போட்டு காட்ட விரும்பவில்லை. எனக்கு முன்னாலே பேசிய டாக்டர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல தேர்தல் வந்த பிறகு இந்தப் பிரச்சனைகள் தீர்ந்து விடுமென்று நான் நம்பவில்லை. நகரசபையினுடைய குறைகளைத் தீர்ப்பதற்கு பல வழிகளை இன்னும் ஆராய வேண்டும். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று கேட்கிறோம். ஆனால் நகர சபைக்கும், அதேமுறையில் நகராட்சி மன்றங்களுக்கும் அதிக அதிகாரம் வேண்டுமென்று சொன்னால் அது உங்களுக்கு வேப்பங்காயாக கசக்கிறது. இது ஏனென்றே புரியவில்லை.

ஓட்டு முறையில் மட்டும் இந்தியாவினுடைய எல்லா பிரச்னைகளும் தீர்ந்து விடுமென்று நான் கருதவில்லை. ஓட்டுப் பெட்டியை இந்த நாட்டிலே அவ்வளவு பலம் வாய்ந்த கருவியாக நான் கருதவில்லை. இருந்தாலும் நம்முடைய பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு, ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கு இதைக் கூட ஏன் அமல் நடத்தக்கூடாது? ஆளும் கட்சியைச் சார்ந்த நம்முடைய மதிப்பிற்குரிய நண்பர் திரு. சின்னராசு அவர்கள் பேசியபோது கல்கத்தா, அலகாபாத், பம்பாய் போன்ற நகரங்களைச் சுற்றிப் பார்த்தேன, அந்த நகரங்களைப் பார்த்து விட்டு இங்கே சென்னைக்குத் திரும்பி வந்தபோது இது சொர்க்க பூமியாகத் தெரிகிறது என்று குறிப்பிட்டார்கள். ஒருவேளை இந்தச் சட்ட மன்றத்தில் இதை சொர்க்க பூமியென்று சொன்னால் இங்கே சிலர் கைதட்டுவார்கள், ஆனால் சென்னை நகரத்தில் யாரும் இதை ஆதரிக்க மாட்டார்கள் என்பது எனக்குத் தெரியும். இதற்கு என்ன பொருள். ஒரு குறிப்பிட்ட நகரம் சுத்தமாக இருக்கிறதென்று வைத்துக் கொள்ளுங்கள். எனவே அங்கே தேர்தல் வேண்டாமென்றால், ஒரு சட்டம் கொண்டு வருவோமே, "எந்த இடத்தில் சுத்தமாக இருக்கிறதோ—அங்கே தேர்தல் வேண்டாம்". நான் இதை வேடிக்கையாகச் சொல்லவில்லை.

சென்ற முறை நான் பேசியபோது நம்முடைய முன்னாள் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் வேடிக்கையாக ஒன்றைச் சொன்னார்கள். பஞ்சாயத்துகள், நகரசபைகளுக்குத் தேர்தல் நடத்துகிற விவாதம் வந்தபோது அம்பத்தூர்





நகரியத்திற்கு ஏன் தேர்தல் நடத்தவில்லையென்று கேட்ட போது அவர்கள் சொன்னார்கள். அங்கே தொழிலாளர்கள் அதிகம், ஆகவே தேர்தல் வேண்டாம் என்று. அப்படியானால் சென்னை நகரத்திலும், கோவை நகரத்திலும், மதுரை நகரத்திலும் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அதனாலேதான் தேர்தல் நடத்தவில்லையென்று சொல்கிறீர்களா? தொழிலாளர்கள் இருக்கிறார்களா, விவசாயிகள் இருக்கிறார்களா என்பதா பிரச்னை? நாடு முழுவதும் தேர்தல் நடத்த வேண்டுமென்று சொல்கிற இந்த நேரத்தில் இந்தப் பகுதிக்கு மட்டும் தேர்தல் நடத்தாமல் இருப்பது என்ன அடிப்படையில் நியாயம் என்று நான் மீண்டும் கேட்க விரும்புகிறேன். எல்லாம் முறையாக நடந்து கொண்டிருக்கிறது அரசினுடைய செயல் மிகப்பெரிய பாராட்டிற்கும், பெருமைக்கும் உரியதாக இருந்துகொண்டிருக்கிறதென்று சொல்லிக்கொள்கிற நேரத்தில் இங்கே மட்டும் தேர்தல் நடத்தாமல் இருப்பது எந்தவிதத்திலும் நியாயமில்லையென்பதை மீண்டும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

நான் இந்தத் தேர்தலை வலியுறுத்துவதற்கு பிரதானமான காரணம், இந்த நகர சபையைப் பொறுத்தவரையில் உள்ள பிரச்னைகளில், கொள்கைப் பிரச்னைகளில் யார் முடிவெடுப்பார்கள்? அது வரியாகட்டும், குடிதண்ணீர் வழங்குகிற பிரச்னையாகட்டும், அதை ஏதோ பெரிய நிர்வாகப்பிரச்னையாக மட்டும் நான் சொல்லவில்லை ஒரு குறிப்பிட்ட நிர்வாகி எவ்வளவு திறமையான நிர்வாகியாக இருந்தாலும் அந்தக் கொள்கையை நிர்ணயிப்பது யார்? நாங்கள் அரசில் நிர்ணயிக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் வாதாடக் கூடும். நான் சொல்வது அது வல்ல. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அந்தக் கொள்கை பற்றி விவாதிப்பதற்கான வாய்ப்பை வழங்க வேண்டும். அப்படி வழங்காத காரணத்தால் நான் சொல்ல முடியும், 10 ஆண்டுகளுக்குமுன் பஞ்சாயத்துடன் இருந்த பகுதி, 76-வது வட்டம், 32-வது வட்டம், 33-வது வட்டம் இப்போது, சென்னை நகரத்தோடு இணைக்கப்பட்டிருக்கின்றன. அங்குள்ள மக்கள் சென்னை நகரத்தினுடைய இரண்டாந்தர குடி மக்களாக இன்றைக்கும் இருந்துகொண்டிருக்கிறார்கள். அதற்குப் போலீஸ் தனி. அதற்கு நீதிமன்றம் தனி. சென்னை நகரத்தோடு இணைக்கப்பட்டபிறகு என்னுடைய தொகுதியைச் சேர்ந்த அந்த மூன்று டிவிஷன்களில் இப்படி ஒரு நிலைமை. ஒரு வழக்கு என்றால் அவர்கள் செங்கல்பட்டு நீதிமன்றத்தை அணுக வேண்டும். அல்லது ஏதாவது தகராறு என்றால் செங்கல்பட்டு போலீஸ் அதிகாரியிடம் செல்ல வேண்டும். இதே சட்டமன்றத்திலே சட்ட அமைச்சர் அவர்கள் பல தடவை அது திருத்தப்படும் என்று சொல்லியும், இன்றைய வரையிலும் திருத்தப்படவில்லை. இந்த மாநகராட்சியிலே ஒரு பகுதியாக இருந்தும் அந்தச் சலுகைகளைப் பெறுவதற்கு அந்தப் பகுதி மக்களால் முடியவில்லை.

அது மட்டுமல்ல. பட்டா வழங்குகிற பிரச்சனையிலே நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். என்ன கொள்கை இந்த நகரசபைக்கு உண்டு, இந்தக் கொள்கையை நிர்ணயிப்பது யார்? நகரமன்றத்திற்குத் தேர்தல் நடந்து நகர மன்றத்திலே அந்தந்தக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் உட்கார்ந்து அந்த கமிஷனருக்கோ, அல்லது மற்ற அதிகாரிகளுக்கோ இந்த முறையிலே பட்டா வழங்கப்படவேண்டும் என்று ஒரு கொள்கையை வகுக்க வேண்டாமா? அது மட்டுமல்ல, நான் வேதனையோடு சொல்கிறேன். பணக்காரர்கள் எவ்வளவு நிலத்தை வேண்டுமானாலும் ஆர்ஜிதம் செய்ய முடியும். நான் ஏற்கனவே இங்கே பேசியபோது, சில ஆதாரங்களைச் சுட்டிக் காட்டிப் பேசினேன். ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை அவர்கள் சொந்தமாக வைத்துக் கொள்கிறார்கள். அரசாங்கம் அவர்களுக்குத் தலை வணங்குகிறது, அதிகாரிகள் தலை வணங்குகிறார்கள். ஆனால் ஏழைக் குடிமகன், ஒரு அரிசன மகன், ஒரு தொழிலாளி 20 ஆண்டு காலமாக குடியிருந்தும் அந்தப் பகுதியிலே அவனுக்குப் பட்டா வழங்கப்படவில்லை. பட்டா வழங்காத காரணத்தால், அவனுக்குச் சொந்தமாக நிலம் இல்லை என்ற காரணத்தால், என்.ஓ.சி. கிடையாது, மின்சார விளக்கு அவனுடைய வீட்டிலே எரியாது. சட்டமன்றத்திலேயும், மேடைகளிலேயும் குடிசைக்கு ஒரு விளக்கு என்று அருமையாக பேச்சுக்கள் நடந்தாலும், அங்கே விளக்கு கிடையாது; தெரு விளக்கு எரியாது, தெருவைச் சுத்தப்படுத்துவதற்கு ஆள் இருக்காது. குடிநீர் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. பல ஆயிரக்கணக்கான வீடுகள் இப்படி சென்னை நகரத்திலே இருந்து கொண்டு இருக்கின்றன. இதை யார் நிர்ணயிப்பது? கமிஷனர் திறமையாக இருக்கக்கூடியவர்களாக இருக்கலாம். அதிகாரிகள் மீது குறைபாடு இருக்கிறதா இல்லையா என்ற விவாதத்திற்கு நான் செல்ல விரும்பவில்லை. இந்த விவாதம் தேர்தலை நடத்த வேண்டுமா, வேண்டாமா என்பதைப் பற்றித்தான். ஆகவே தேர்தல் நடத்தவேண்டுமா, வேண்டாமா என்ற பிரச்சனை கொள்கையோடு இணைந்து நிற்கிற பிரச்சனை. கொள்கை சம்பந்தமாக முடிவுகள் எடுக்கவேண்டிய பிரச்சனை. ஆகவேதான் இவ்வாறு ஆண்டுதோறும் ஒத்திப் போடுவது எந்த விதத்திலேயும் நியாயமாக இல்லை.

நீங்கள் அவசரச் சட்டத்தின் மூலம் கவர்னருடைய அதிகாரத்தை துர்உபயோகம் செய்வதை நான் வன்மையாக ஆட்சேபிக்கிறேன். கவர்னர் பதவி எதற்கு என்று கேட்ட இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் நீங்கள். இப்படிச் சட்டமன்றம் இல்லாத நேரத்திலே ஒரு அவசரச் சட்டத்தைக் கொண்டு வருவதற்காக கவர்னரைத் தூண்டுகிறீர்கள்? அவசரச் சட்டத்தைக் காட்டி, தேர்தலை ஒத்திவைக்கிறீர்கள். இந்தச் சட்டமன்றத்திலே உங்களுக்கு மெஜாரிட்டி இருக்கிறது என்ற ஒரு காரணத்தைத் தவிர வேறு எந்த நியாயத்தை நீங்கள் சொல்ல முடியும்? சென்ற தடவை பேசிய நியாயத்தை இந்தத் தடவை அமைச்சர் அவர்கள் சொல்லமாட்டார்கள் என்று நினைக்கிறேன். நியாயமாக இருந்தால்தானே திருப்பித் திருப்பிச் சொல்ல முடியும்.



எங்களைப் பொறுத்தவரையில், எதிர்க்கட்சியிலே உள்ள
வர்கள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள்
திருப்பித் திருப்பிச் சொல்கிறோம், தேர்தலை நடத்து,
தேர்தலை நடத்து என்று. நீங்கள் ஏன் தயங்குகிறீர்கள்?
உங்களுக்கு மக்கள் மீது நம்பிக்கையில்லை; ஜனநாயகத்தில்
நம்பிக்கையில்லை; திறமையான ஒரு ஆட்சியை நடத்தவேண்டு
மென்பதிலே உங்களுக்கு அக்கறை இல்லை. ஆகவே இந்தத்
தீர்மானத்தை நான் வன்மையாக ஆட்சேபிக்கிறேன். இப்போது
நான் ஒன்று கேட்கிறேன். அமைச்சர் அவர்கள் இதற்காவது
பதில் சொல்லவேண்டும் என்று நான் விரும்புகிறேன்; வலி
யுறுத்திக் கேட்கிறேன். 6 மாத காலத்திற்கு நீங்கள் அவகாசம்
கேட்கிறீர்கள். நிச்சயமாக உங்களுடைய கோரிக்கையை இந்தச்
சட்டமன்றம் ஏற்றுக்கொள்ளும். இந்தச் சட்டமன்றத்தைப் புரிந்த
காரணத்தாலே நான் சொல்கிறேன். எனக்கு எந்த நப்பாசையும்
கிடையாது. இப்போதும் நான் உங்களைக் கேட்டுக்
கொள்கிறேன், இந்த 6 மாதம் முடிந்ததற்குப் பிறகு, தேர்தலை
நடத்துவதற்கு, தேதியை நிர்ணயிப்பதற்கு நீங்கள் ஒத்துக்
கொள்வீர்களா? அப்படிச் செய்தால் சென்னை நகர மக்களுக்
காகவும், மதுரை மக்களுக்காகவும், கோவை மக்களுக்காகவும்
நீங்கள் செய்கிற நியாயமாக அது அமையும்.

உலக வங்கியிலேயிருந்து கடன் கேட்டார்கள், பல குடிநீர்த்
திட்டங்களுக்காக புதிய அமைப்புகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள்
என்ற பிரச்சனையை நான் இங்கே விவாதிக்க விரும்பவில்லை
என்னுடைய தொகுதியைச் சேர்ந்த நகர மன்றப் பகுதிகளிலே
உள்ள கோரிக்கைகளை எல்லாம் பட்டியல் போட்டு காட்டுகிற
ஒரு சந்தர்ப்பமாக இதை நான் பயன்படுத்த விரும்பவில்லை.
எனக்கு ஒரு சந்தேகம், கலைக்கப்பட்டவர்கள் மீண்டும்
** ஆட்சிக்கு வந்துதான் அங்கே தேர்தல் நடத்தவேண்டியநிலைமை **
ஏற்படுமோ? அதுவும் எனக்குப் புரியவில்லை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் ஸ்பெசி
பிக்காக இருந்தால் சொல்லுங்கள். ஸ்வீப்பிங்காகச் சொல்லக்
கூடாது. பிறகு இங்கே இருப்பவர்களும் பதில் சொல்வார்கள்.
** என்று சொல்லிவிட்டால் பிரச்சனை வரும். ஆகவே
ஸ்பெசிபிக்காக இருந்தால் சொல்லுங்கள். ஒட்டுமொத்தமாக
சொன்ன அந்தப் பகுதி நீக்கப்படுகிறது.

திரு. வி. பி. சிந்தன்: **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்போது சொன்ன
அந்த வாசகத்தையும் நீக்க உத்தரவிடுகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்
கிணங்க அகற்றப்பெற்றது.

(பிற்பகல் 12-10)

திரு. வி. பி. சிந்தன் : எந்த ஊழலைப் பற்றியும் நான் இங்கே பேசவில்லை. ஊழல் என்று சொன்னால், எப்போது ஊழல் என்று சொன்னால், எந்த நேர்ந்தெடுக்கப்பட்ட மன்றத்திலும்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் சொல்லுவதை குறிப்பிட்டு ஊழல், தவறு என்று சொன்னால் பதில் அளிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஒட்டுமொத்தமாக நீங்கள் சொல்லி விட்டால் இங்கே மட்டும் அல்ல, அந்தத் தரப்பிலிருந்தும் சொல்ல ஆரம்பித்து விடுவார்கள். எங்கள் நேரம்தான் போய்விடும், அதற்காகத்தான் சொல்லுகிறேன். The allegation must be specific. That is our contention.

திரு. வி. பி. சிந்தன்: ஒரு குறிப்பிட்ட ஊழலைப் பற்றி நான் இங்கே சொல்லவில்லை, சொல்ல முடியாது என்ற காரணத் திற்காக அல்ல. இந்த நேரத்தை அதற்காகப் பயன்படுத்தக் கூடாது என்ற காரணத்தால்தான். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களின் உத்தரவுக்குக் கட்டுப்பட்டு பேசுகிறவன் நான்.

Mr. DEPUTY SPEAKER: If it is specific, there is no problem in allowing it. If it is sweeping we are disallowing it.

திரு. வி. பி. சிந்தன்; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆகவே இந்தத் தேர்தலை விரைவில் நடத்துவதற்கான தேதியைக் குறிப்பிடவேண்டும். 6 மாதம் என்று நீங்கள் இப்போது சொல்லுவது நியாயம் அல்ல, அப்படி ஏதேனும் காரணத்திற்காக சொல்லப்படுமானால் 6 மாதத் திற்குப் பிறகு எந்தத்தேதி என்பதை இந்தச் சட்டமன்றத்திலே அறிவிக்கவேண்டும் என்று கேட்டு நான் அமைகிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே மீண்டும் சென்னை மாநகராட்சி யின் தேர்தலை ஒத்தி வைத்து தனி அதிகாரியின் பதவிக்காலத்தை நீட்டிப்பதற்கான ஒரு மசோதா, கடந்த 9 ஆண்டுக்காலமாக வழக்கமாக எப்படிக் கொண்டு வரப்பட்டதோ அதேபோல் இப்போதும் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆனால் ஒரு மாற்றம். இப்போது இந்த இலாகாவிற்குப் புதிய அமைச்சராக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. கே. ஏ. கே. அவர்கள் பொறுப்பு ஏற்றிருக்கிறார்கள். படம் பழைய படம் தான். ஆனால் அதில் நடிக்கிற கதாநாயகன் மட்டும் மாற்றப்பட்டு இருக்கிறார். அந்த நாட்களில் கண்ணகி சினிமாப் படத்திலே சின்னப்பா நடித்தார். இடையில் பூம்புகார் படத்தில் எஸ்.எஸ்.ஆர். நடித்தார். அதே போல் இந்த மன்றத்திலே இது பழைய படம், ஆனால் புதிய கதாநாயகன் என்ற முறையிலே இது பழைய சட்டம்தான். இது 9 ஆண்டுக் காலமாக தொடர்ந்து மீண்டும் மீண்டும் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆனால் அமைச்சர் அவர்கள் மட்டும் புதியவராக இந்த இலாகாவிற்கு வந்திருக்கிறார்.



இங்கே முதலில் ஒன்றை நான் தெரிவிக்க விரும்புகிறேன். இந்திரா காங்கிரஸ் சார்பாக சகோதரர் சட்டமன்ற உறுப்பினர் திரு. வேணுகோபால் அவர்கள் பேசுகிறபோது மாநகராட்சியின் சீர்கேடுகளை எடுத்துக்காட்டி தனி அதிகாரிகளின் கரங்களில் அதிகாரம் இருக்கக்கூடாது. மாறாக மக்கள் பிரதிநிதிகள் அங்கே இடம் பெற்றால் அந்த நிர்வாகத்தில் அவர்கள் பொறுப்பு ஏற்பார்கள். எனவே தேர்தல் நடத்தவேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் அதற்குப்பிறகு பேசிய அதே இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சௌரிராஜன் அவர்கள் ஒரு விரக்தி மனப்பான்மையோடு தேர்தல் நடந்தால்தான் என்ன ஆகப் போகிறது, எந்த மாற்றமும் நடைபெறப் போவது இல்லை என்று சொல்லி, தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பதை வலியுறுத்தாத விதத்தில் அவர்கள் பேசினார்கள். எனவே அந்தக் கட்சியில் தேர்தல் நடத்த வேண்டுமா? வேண்டாமா என்பதில் கூட இரண்டு விதமான கருத்து இருக்கிறதோ என்னவோ என்ற ஐயப்பாடு எனக்கு இருக்கிறது. ஆனால் எங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் அவசியம் மாநகராட்சிகளுக்குத் தேர்தல் நடைபெறவேண்டும் என்று மீண்டும் நாங்கள் வலியுறுத்துகிறோம்.

அதைப் போல ஆளுகின்ற கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு
7 உறுப்பினர் திரு. மா. சின்னராசு அவர்கள் பேசும்போது, கல்கத்தாவைக் கண்டேன், பம்பாயைப் பார்த்தேன் அந்த மாநகராட்சிகளோடு இங்கே சென்னை மாநகராட்சியை ஒப்பிடுகிறபோது எவ்வளவோ மேலாக இருக்கிறது. சென்னை சொர்க்கமாக இருக்கிறது என்று சொன்னார்கள்.

திரு. எஸ். வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் மாண்புமிகு டாக்டர் சௌரிராஜன் அவர்கள் பேசும்போது தேர்தல் வேண்டாம் என்று சொல்லவில்லை. அவர்கள் அதற்குரிய காரண காரியங்களை இப்படி, இப்படி இருக்கிறது. இதற்கொல்லாம் இப்படி செய்யவேண்டும் என்று சொன்னார்கள் தேர்தல் வேண்டாம் என்று சொல்லவில்லை. காங்கிரஸ் கட்சியினுடைய கொள்கை தேர்தல் வேண்டும் என்பதுதான்.

திரு. அ. ரகுமான்கான்; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேர்தல் நடத்தவேண்டும் என்ற எங்களுடைய கோரிக்கையை இந்திரா காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும் ஏற்றுக்கொண்டதற்கு, வலியுறுத்தியதற்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே சென்னை நகரம் சொர்க்கமாக இருக்கிறது என்று சகோதரர் திரு. சின்னராசு அவர்கள் சொன்னார்கள். ஆனால் அமைச்சராக பொறுப்பு ஏற்று இருக்கக்கூடிய

நம்முடைய மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய திரு. கே.ஏ.கே. அவர்கள் கூட அவர்களுடைய தொகுதியான ஆயிரம் விளக்கு தொகுதியைச் சொர்க்கமாக இருக்கிறது என்று ஒத்துக்கொள்ள மாட்டார்கள். அதேபோல் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினரும் அப்படி சொல்லிக்கொண்டு அந்த தொகுதிக்குப் போகமாட்டார். நம்முடைய சைதை சட்டமன்ற உறுப்பினர் திரு. துரைசாமி அவர்கள் கூட சென்னை நகரத்தில் உள்ள தொகுதிகள் எல்லாம் சொர்க்கமாக இருக்கின்றன என்று சொல்லிக்கொண்டு மக்கள் மத்தியிலே போகமாட்டார் நானும் போகமாட்டேன். காரணம் இன்றைக்குச் சென்னை நகரத்தில் இருக்கக்கூடிய தொகுதிகள் சொர்க்கமாக இல்லை. நரகமாகத்தான் இருக்கின்றன. மக்கள் பல்வேறு குற்றச் சாட்டுகளை எடுத்துச்சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். குடிநீர் வசதி இல்லை. உதாரணமாக அண்ணா நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினரான திரு. சே. மா. இராமச்சந்திரன் அவர்கள் தொகுதியில் ஒரு கூட்டத்தில் பேசுகிறபோது குறிப்பிட்டார்கள். அண்ணாவின் பெயரால் எங்கள் தொகுதி இருக்கிறது. ஆனால் அண்ணாவிற்கே இங்கே சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. குழாய்களில் தண்ணீர் இல்லை. உங்கள் அண்ணா நகரைவிட மேல் என்னைக் கேட்டால், எங்களுடைய சேப்பாக்கம் தொகுதி ஆயிரம் மடங்கு உயர்வானது. உங்களுடைய குழாய்களில்தண்ணீர் இல்லை. எங்களுடைய தொகுதியில் குழாய்களே இல்லை என்ற அளவிற்கு பெருமையுடையது என்று சொன்னேன். இப்படி இருக்கக் கூடிய, ஜெயில் பகுதிக்குப் பின்னால், பரியல் கிரவுண்ட் பகுதியில், பல்வேறு இடங்களில் குழாய்களே இல்லை. பிரசிடென்சி காலேஜிற்குப் பின்னால் இருக்கக் கூடிய பகுதிகளும் என்னுடைய தொகுதியில் வருகின்றன. அங்கேயும் குழாய்கள் இல்லை.

மின்சார விளக்குகளைப் பற்றிக்கூட எடுத்துச் சொன்னேன். சமீபத்திலே ஒரு திருமண விழாவிலே, மனித வாழ்வுக்கு எப்படி மின்சாரம் முக்கியமோ, அது போன்று குடும்ப வாழ்க்கைச்கு சம்சாரம் மிகவும் அவசியம் என்று சொன்னேன். தொடர்ந்து பேசிய எங்களுடைய தலைவர்கூட மனித வாழ்வுக்கு மின்சாரம் எப்படி மிகவும் அவசியமோ, அது போன்று குடும்ப வாழ்க்கைக்கு சம்சாரம் மிகவும் முக்கியம்தான் என்றாலும் மணமகளை இங்கே இருக்கின்ற தமிழக மின்சாரத்தோடு ஒப்பிட வேண்டாம் தமிழக மின்சாரமாக அவர்கள் இருக்க வேண்டாம். தமிழ்நாட்டில் இப்போது மின் தடை அடிக்கடி ஏற்படுகிறது. மின்சார இலாகாவிலே நடப்பது போன்று இங்கேயும் தடை இருக்க வேண்டாம் என்று சொன்னார். அந்த அளவிற்குப் பல்வேறு தொகுதிகளிலே மின்சார விளக்குகள் இல்லாமல் இருக்கின்றன. நேற்று பத்திரிகையிலே படித்தேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் கோவை நகரத்தில் அதிகாலை சுற்றுப் பயணம் வந்திருக் கிறார்கள். அங்கே ஒரு இடத்தில் ''குன்ற''னைய குப்பைகள்



இருந்தன. அதனை அகற்றுவதற்கு உத்தரவிட்டிருப்பதாக பத்திரிகைச் செய்தியில் படித்தேன். நான் உங்கள் மூலமாக அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதெல்லாம் அங்கேயிருக்கின்ற சாதாரண குப்பைகளைக் ''குன்று'' என்று சொன்னால், இமயமலை அளவிற்கு இங்கே இருக்கிறது. என்னுடைய தொகுதிக்கு அதிகாலையிலே வராவிட்டாலும்கூட, எப்போது வந்தாலும், அழைத்துக் கொண்டுபோய் காட்டத் தயாராக இருக்கிறேன். அமைச்சரவர்கள் இந்தக் குப்பைகளை அகற்றுவதற்கும் உத்தரவு போடவேண்டும்.

இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். கழிவு நீர் சாதாரணமாக போய்க் கொண்டிருக்கிறது. அதிகாரிகளை அழைத்துக் கொண்டு வந்து காட்டுகின்ற நேரத்திலே, அதிலே நிர்வாகப் பிரச்சினை வருகிறது. இது எங்களுடைய இலாகா இல்லை. இது கழிவு நீர் அகற்று வாரியத்தைச் சார்ந்தது என்கிறார்கள். அவர்களைக் கேட்டால் இது எங்களுடைய இலாகா பணி இல்லை, கார்ப்பொரேஷனைச் சார்ந்தது என்று சொல்கிறார்கள். ஆக மொத்தத்தில் மக்கள்தான் பாதிக்கப் படுகிறார்கள். யாரை வேண்டுமானாலும் சட்டமன்ற உறுப்பினராக்க மக்களுக்கு உரிமையிருக்கிறது. அந்தத் தொகுதி மக்களுடைய ஒட்டுமொத்தமான பிரச்சினைகளைக் கவனிப்பது ஒரு அரசாங்கத்தினுடைய கடமை. ஆனால் துரதிருஷ்டவசமாக அமைச்சரவர்கள் சமீபத்திலே ரகுமான்கானுக்கு ஓட்டு போட்டீர்களே. கொசுவை ஒழித்தாரா, குப்பைகளை அகற்றினாரா என்று கேட்டார்கள். உத்தரவு போடும் இடத்திலே அமைச்சரவர்கள் இருக்கிறார்கள்...... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வெளியிலே பேசியதை இங்கே சொல்ல வேண்டாம், அதில் பிரச்சினை வந்துவிடும்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரகுமான்கான் அவர்கள் தவறான தகவலைச் சொன்னார்கள். அப்படிச் சொன்னதாக எனக்கு நினைவில்லை. அப்படி அண்ணா அவர்கள் எங்களை வளர்க்க வில்லை. நாகரிகத்துடனும், கண்ணியத்துடனும் இருப்பதுதான் எங்களுடைய கொள்கை.

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்திடைய துணைத் தலைவர் அவர்களே, தனிப்பட்ட முறையிலே அமைச்சரவர்கள் பேசினார்கள் என்று சொல்லவில்லை. திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகும் கூட, அவர்கள் தொகுதியில் இன்னும் பிரச்சனைகள் தீர்க்கப் படவில்லை என்று குற்றச்சாட்டாகச் சொன்னார்கள். அமைச்சர் மறுக்கிறார், மிகுந்த நன்றி. ஆக இதுபோன்ற பிரச்சினைகளையெல்லாம் களைந்தெடுக்கவேண்டும் என்றால் மாநகராட்சித் தேர்தல் நடைபெற்று, மக்கள் பிரதிநிதிகள் இருக்கவேண்டியது அவசியம்.

[திரு. அ. ரகுமான்கான்] [1986 நவம்பர் 1

இப்போது கொண்டு வந்த சட்டத்திலே என்ன சொலகிறீர்கள்? இந்த மசோதாவில் இந்தியா முழுவதும் இருக்கக்கூடிய கார்ப்பொரேஷன் சட்டங்கள் எல்லாம் எப்படி இருக்கின்றன என்று பரிசீலித்து, ஒரு பொதுவான சட்டத்தைக் கொண்டு வந்து, கோவை, மதுரை, சென்னை மாநகராட்சி களுக்கு ஒட்டுமொத்தமாக தேர்தல் நடத்தப் போகிறோம் என்று சில காரணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. முதலில் காரணத்தை விவாதிக்க விரும்புகிறேன். உங்கள் மூலம் அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அஞ்சாயத்து தேர்தல் நடத்தினோம், பஞ்சாயத்து யூனியன் தேர்தல் நடத்தினோம். அடுத்து நகராட்சித தேர்தல் நடத்தினோம். இந்தத் தேர்தலை நடத்தியபோது இந்தியாவி லுள்ள பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன், நகராட்சி இவற்றுக் கான சட்டங்களை எல்லாம் பரிசிலித்து விட்டு தேர்தலை நடத்துவோம் என்று சொன்னோமா? இல்லை. ஆக இவற்றுக் கெல்லாம் இந்தியாவிலே உள்ள அகில இந்திய சட்டங்களைப் பரிசீலிக்க வேண்டியதில்லை. ஆனால் சென்னை மாநகராட்சிக்கு மட்டும், மதுரை மாநகராட்சிக்கு மட்டும், கோவை மாநகராட்சிக்கு மட்டும் அகில இந்திய ரீதியில் ஆராய்ச்சி நடத்தவேண்டும். அந்த ஆராய்ச்சியில் ஏன் ஈடுபட வேண்டுமென்ற எண்ணம் எங்களுக்கு வந்திருக்கிறது.

அடுத்து இன்னொன்று. 6 மாதத்திற்குள் தேர்தல் நடைபெறும். எப்போதுதான் தேர்தல் நடைபெறும்? எந்த ஆண்டிற்குள் நடைபெறும்? எந்தத் தேதிக்குள் நடைபெறும் என்ற நிலை இல்லாமல், சில காலம் ஆகும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. அந்தச் சில காலத்தைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன் இந்தியாவில் இருக்கக்கூடிய மொத்த மாகாணங்கள் 22. 22 மாகாணங்களில் இருக்கக் கூடிய கார்ப்பரேஷன்கள் சட்டங்களில் முதலிலே பரிசீலித்து, பிறகு பொதுச் சட்டத்தைக் கொண்டு வந்து, அதற்கு ரூல்ஸ் ஃபிரேம் பண்ணி, பிறகு சென்சஸ் எடுத்து, அதற்குப் பிறகு யாராவது இது சம்பந்தமாக கோர்ட்டிற்குப் போய் ஸ்டே வாங்காமல் இருந்தால், தேர்தல் நடத்துவதற்கு சாத்தியக் கூறுகள் இருக் கின்றன.

(பிற்பகல் 12-20)

ஒரு உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடத்த வேண்டுமென்று நீண்ட காலமாகச் சொல்லி வந்தோம். உடனே விரைவிலே நடக்கும் என்று சொன்னார்கள். 9 வருடங்களாக, மஹாராஷ்டிராவில் இருக்கக் கூடிய கூட்டுறவுச்சங்கங்களுடைய சட்டம் சிறப்பாக இருக்கிறது. அந்தச் சட்டத்தினுடைய ஷரத்துக்களையெல்லாம் பரிசீலித்து அந்தச் சட்டத்தினுடைய அடிப்படையிலே கூட்டுறவுச் சங்கங் களுக்குத் தேர்தல் நடத்தலாம் என்று சொல்லி அதற்கு ஒரு கமிட்டியைப் போட்டு, அந்தக் கமிட்டியும் சுற்றுப் பயணம் செய் , 9 வருடங்களுக்குப் பிறகு இப்பொழுதான் அதற்கான சட்டம் தயாராகிக் கொண்டு இருக்கிறது. ஒரு காம்ப்ரெஹன்சிவ் ஆக்ட் இப்போதுதான் தயாராகிக் கொண்டிருக்கிறது.



1986 நவம்பர் 17] [திரு. அ. ரகுமான்கான்]

நம்முடைய மந்திரி சபையிலே அமைச்சர்கள் மாற்றத்திற்குப் பிறகு, திருச்சியிலே நாவலர் அவர்களை ஒரு பத்திரிகை நிருபர் இந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கெல்லாம் எப்போது தேர்தல் வரும் என்று கேட்டார். அதற்கு நம்முடைய அவை முன்னவர், நான் இலாக்காவிற்குப் புதுசு, நானே புதுசு, இப்பொழுதுதான் வந்திருக்கிறேன். சட்டம் இருக்கிறது. ரூல்ஸ் இனிமேல்தான் ஃப்ரேம் பண்ண வேண்டுமென்று சொன்னார். ஆக இதிலிருந்து என்ன தெரிகிறது? ஒரு மாகாண சட்டத்தைப் பரிசீலிக்க 9 வருடங்கள். இன்னும் ரூல்ஸ் ஃப்ரேம் ஆகவில்லை. அப்படி யானால் 22 மாகாணங்களுடைய சட்டங்களை நீங்கள் உருவாக்க வேண்டுமானால் எவ்வளவு வருடங்கள் ஆகும்? ஆக இந்த ஜென்மத்திலே தேர்தல் நடைபெறுவதாக எனக்குத் தெரிய வில்லை?

ஒரு பருவப் பெண்ணிற்கு அந்த வயதிற்குட்பட்ட நேரத்திலே உடனடியாக ஆலோசித்து திருமணம் செய்வதுதான் சரியாக இருக்கும். பருவத்தே பயிர் செய்வதுதான் முறை. ஆனால் அந்தப் பருவப் பெண் பாட்டியானதிற்குப் பிறகு பந்தல் போட்டு கல்யாணம் பண்ணுகிறோம் என்று சொன்னால், அதில் என்ன அர்த்தம்? சென்னை மாநகராட்சி பருவப் பெண்ணைப் போல் அல்ல, வயதாகிக் கொண்டே இருக்கிறது. திருமண வயதுகூட அதிகமாகிக் கொண்டிருக்கிறது. காலாகாலத்திலே ஒரு மாப்பிள்ளை தயார் செய்யக் கூடாதா? காலாகாலத்திலே திருமணம் நடத்தக் கூடாதா? தேர்தல் நடத்தக் கூடாதா என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். ஆனால் இந்த ஜென்மத்தில் அது நடக்காது. பாட்டிக்குக் கல்யாணம் நடத்துவதைப் போல நீங்கள் எந்தக் காலத்தில் தேர்தல் கொண்டுவரப் போகிறீர்கள் என்பது விளங்காத ஒரு புதிராக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் பணிவன்போடு உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் இங்கே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே கொண்டுவந்த சட்ட சம்பந்தமான ஒரு கேள்வியை நான் கேட்டேன். மஸ்டர் ரோல் வழக்கு இருக்கிறது ஆகையினால் தேர்தல் நடத்த முடியாது என்று சொன்னார்கள், அப்பொழுது நானும் பதில்சொன்னேன். **எனவே பெண்டிங்காக இருக்கிறது என்பதற்காக....(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பில்லுக்கு தொடர் பானதை மட்டும் பேசுங்கள். இது சம்பந்தமே இல்லாதது. இன்னும் 11 பேர்கள் பேச வேண்டும், அந்தப் பகுதியை நீக்கி விடுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான்; மாநகராட்சி மஸ்டர் ரோல் வழக்கு கிரிமினல் வழக்கு பெண்டிங்காக இருக்கிறது. அது முடிவிற்கு வந்ததற்குப் பிறகுதான் தேர்தல் என்று சொன்னால் நான் சொல்ல விரும்புகிறேன். இங்கிருக்கக்கூடிய பல்வேறு சட்டமன்ற

** மாண்புமிகு பேரவை துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்ற பெற்றது.

உறுப்பினர்கள், அமைச்சர்கள் மீதுகூட சில கிரிமினல் வழக்குகள் இருக்கின்றன. கோர்ட்டினுடைய தீர்ப்பு வரைக்கும் மக்கள் காத்துக் கொண்டு இல்லை. நாம் எம். எல். ஏ. ஆகி விட்டோம், மந்திரியாகி விட்டோம். எனவே அது, இதை தடுக்கவில்லை. அதுபோல மாநகராட்சித் தேர்தல் என்று சொன்னால், கிரிமினல் வழக்கு பெண்டிங் என்று சொல்லப் படுகின்ற காரணம் சரியல்ல.

இரண்டாவதாக ஒன்று சொன்னார்கள். 18 வயது வாக்காளர்களுக்கு அடையாள அட்டை வழங்குகிறோம். ஏனென்றால் திருட்டு ஓட்டு போட்டு விடுவார்கள். புகைப்படம் எடுக்கிறோம் என்று சொன்னார்கள். நான் கேட்கிறேன். புகைப்படம் எடுத்தீர்களா? அதைக் கைவிட்டு விட்டீர்கள், அடுத்து வாக்காளர் பட்டியல் என்று சொன்னார்கள். அந்தக் கோரிக்கையையும் கைவிட்டு விட்டார்கள். நான் கேட்க விரும்புவது இந்தக் கோரிக்கைகள் எல்லாம் என்னவாயிற்று? இப்பொழுது திடீரென்று பொது சட்டத்தைப் பார்க்கிறோம். அகில இந்திய சட்டத்தைப் பார்க்கிறோம் என்று சொல்கிறார்களே, அப்படியென்றால் இனிமேல் நடைபெறுகின்ற தேர்தல்களிலே திருட்டு ஓட்டு போடமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்? அப்படியானால் அடையாள அட்டை தேவையா இல்லையா, புகைப்படம் தேவையா இல்லையா இந்தக் கருத்தை நீங்கள் மாற்றிக் கொண்டு விட்டீர்களா இல்லை, இந்தக் கருத்தும் இருக்கிறதா? இவையெல்லா வற்றையும் பார்த்துவிட்டு, இந்தப் பொதுச் சட்டத்தையும் பார்த்துவிட்டு நடத்தப் போகிறோம் என்று சொன்னால் அது உள்ளபடியே ஜனநாயக விரோதப்போக்கு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் சொல்லப் போனால், தேர்தலில் யார் வெற்றி பெறுகிறார்கள் என்பது முக்கியம் அல்ல, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உங்களுக்குத் தெரியும்; தேர்தல் என்று சொல்வதில் சில நேரங்களில், யார் வேண்டுமானாலும் வெற்றியும் பெறலாம்; தோல்வியும் அடையலாம்; பெரியவர் காமராஜர் அவர்கள்கூட தோல்வி அடைந்தார்கள். இந்திரா காந்தி அவர்களும் தோல்வி அடைந்து இருக்கிறார்கள். அண்ணா அவர்கள்கூட தோற்றுப்போய் இருக்கிறார்கள். சாதாரணமானவர்கள் கூட மிகப் பெரிய பொறுப்புக்கு வந்துவிட முடியும். மக்கள் அந்த நேரத்தில் எப்படி முடிவு எடுக்கிறார்களோ, அதைப் பொறுத்தது. இந்த அரசாங்கம் மக்கள் தன் பக்கம் இருக்கிறார்கள் என்பதிலே அபார நம்பிக்கை உடைய அரசாங்கம். ஆனால் மக்கள் நீங்கள் எங்கள் பக்கம் இருங்கள்; தேர்தலை நடத்துங்கள் என்று சொல்கிறார்கள். ஆகையால், இந்தத் தேர்தலில், சென்னை ஆகட்டும், கோவை ஆகட்டும், மதுரை ஆகட்டும் யார் வேண்டுமானாலும் பொறுப்புக்கு வரட்டும். அது பிரச்சனை அல்ல, தேர்தலில்



எப்படி வேண்டுமானாலும் தீர்ப்பு வரலாம், பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள், நகராட்சிகள் தேர்தலில் மக்கள் ஒரு தீர்ப்பை வழங்கினார்கள். நடைபெற்று முடிந்த இடைத் தேர்தல்களில் ஒரு தீர்ப்பை வழங்கினார்கள், அண்ணா நகர், மயிலாடுதுறை தேர்தல்களில் ஒரு தீர்ப்பை வழங்கினார்கள், நாளைக்கு ஒரு பொதுத் தேர்தல் நடந்தாலும் மக்கள் ஒரு தீர்ப்பை வழங்கலாம், சென்னை மாநகராட்சித் தேர்தலிலும் ஒரு தீர்ப்பை வழங்கலாம். ஆனால் மக்கள் என் பக்கம் என்று சொல்வது, உங்களைப் பொறுத்தமட்டில் உங்களுக்குச் சரியாக இருக்கலாம், நாங்கள் எப்போதுமே மக்களின் பக்கம் இருப்பவர்கள், தேர்தலில் தோற்றாலும் சரி, ஜெயித்தாலும் சரி, ஜனநாயக மாளிகை இருண்டு கிடக்கிறது, விளக்கேற்றுங்கள் என்று கேட்டு உரையை நிறைவு செய்கிறேன், வணக்கம்,

*திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி, கோயம்புத்தூர் மாநகராட்சி, மதுரை மாநகராட்சி—இவை மூன்றுக்கும் தேர்தல் நடத்துவதை மேலும் 6 மாத காலத்திற்குத் தள்ளிப் போடுவதற்கான சட்ட முன்வடிவுகளை ஜனதா கட்சியின் சார்பாக நான் வன்மையாக எதிர்க்கிறேன்,

நீங்கள் இந்தத் தேர்தல்கள் நடத்தாததற்குச் சொல்கின்ற காரணங்கள் மிக, மிக விசித்திரமாக இருக்கின்றன, அனைத்து மாநிலங்களிலும் உள்ள மாநகராட்சிகள் சட்ட திட்டங்களைச் சரிபார்த்து, இந்த மூன்று மாநகராட்சிகளுக்கும் பொருந்தக் கூடிய சட்டத்தை ஏற்படுத்திய பிறகு தேர்தல் நடத்துவோம் என்று சொல்லி இருக்கிறீர்கள், அப்படியானால், 1978—லே மதுரை மாநகராட்சிக்குத் தேர்தலை நடத்தியிருக்கிறீர்களே, எப்படி நடத்தினீர்கள்? அப்போது, இந்தச் சட்டங்களை சரிபார்க்கவில்லையா? 1978-லே தேர்தல் நடத்தி மதுரை மாநகராட்சி மேயராக திரு. முத்து இருந்து, கடைசியாக திரு, பட்டுராஜன் அவர்கள் இருந்து இருக்கிறாரே அப்போது எல்லாம் சரி பார்க்கவில்லையா என்று கேட்க விரும்புகிறேன்,

அதேபோல், இன்னொன்று கூட சொன்னீர்கள்; எனக்கு முன்னாலே பேசியவர்கள் சொன்னது போல், அடையாள அட்டை கொடுத்துத்தான் நடத்தப் போகிறோம், ஏனென்றால் சென்னை மாநகரத்தில் கள்ள ஓட்டுகள் அதிகம் இருக்கின்றன என்று சொன்னீர்கள். இப்போது அது கைவிடப்பட்டு விட்டது. சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உள்ளாட்சித் தேர்தல் நடந்து முடிந்த பிறகு நடத்துவோம் என்றார்கள். அதுவும் போய்விட்டது. அது தவிர, சென்ற சட்டமன்றக் கூட்டத்தில் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. ப. உ. ச. அவர்கள் சென்னை மாநகராட்சிக்கு ஒரு பெரிய குழு அமைக்கப்போகிறோம். அதில் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மேலும் பல பொது

மக்கள் இருப்பார்கள் என்று சொன்னார். எங்களுக்குச் சென்னை மாநகரத்தின் சார்பில் சட்டமன்றத்திலே உறுப்பினர் எவரும் இல்லாததால், தென்சென்னை, வடசென்னை ஜனதா தலைவர்களை அதில் சிபாரிசு செய்து இருந்தோம். குழுவே இன்னும் அமைக்கப்படவில்லை. பல்வேறு காரணங்களினாலே, ஏன் இந்த மாநகராட்சித் தேர்தலை நடத்தத் தயங்குகிறீர்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

இந்த மாநகராட்சித் தேர்தலை நடத்தாத காரணத்தினால் பல்வேறு சட்டவிரோதமான காரியங்கள் அந்த மாநகராட்சியிலே நடந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக சொல்ல வேண்டுமானால், சென்னை என். எஸ். கே. நகர் பகுதியிலே புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்து வீடு கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அது குறித்து எங்களது கட்சியைச் சேர்ந்த மாநில மகளிர் அமைப்பாளர் திருமதி சி. ஆர். சரோஜா அவர்கள் அமைந்தகரை காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்து இருக்கிறார். அந்தப் புகாரில் 39 பெண்கள் கையெழுத்து போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். நானும் கூட, அமைநதகரை போலீஸ் சப்-இன்ஸ்பெக்டருக்கு போன் செய்து, அதை உடனடியாக கவனித்து அந்த இடத்திலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றவேண்டும் என்று சொல்லி இருந்தேன். ஆனாலும், இன்னும் அது எடுக்கப்படவில்லை. அது நடந்து கொண்டிருக்கிறது. மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் வந்திருந்தால், அது நடந்திருக்காது என்று சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல், திரு. கே. சண்முகம் என்ற 128-வது வட்ட ஜனதா தலைவர் சொல்கிறார் பல்லக்கு மானியம் திட்டப்பகுதியிலுள்ள வீட்டு வசதி வாரியத்தினால் ஒதுக்கப்பட்ட வீடுகள், மனைகள் எல்லாம் விற்கப்படுகின்றன என்றும் சட்டப்படி அதை யாரும் விற்கவோ, வாங்கவோ கூடாது என்றும், அதற்கு அபராதம் எல்லாம் உண்டு என்றும்கூட சொல்லப்பட்டிருக்கிறது. ஆனாலும் கூட, அந்த வீட்டு மனைகளைப் பயங்கரமான விலைக்கு விற்றிருப்பதாகவும், அப்படி யார் யார் விற்றிருக்கிறார்கள், யார் யார் வாங்கியிருக்கிறார்கள் என்றும் பட்டியலே போட்டுச் சொல்லியிருக்கிறார்கள். இதைக்கூட நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-30)

அடுத்து நம்மாள்வார்பேட்டையில் உள்ள சிந்தாமணி கூட்டுறவு சிறப்பங்காடியிலிருந்து உணவுப் பொருள்களைக் கடத்துவதில் இரண்டு கோஷ்டிகளிடையே சண்டை ஏற்பட்டிருக்கிறது. அது குறித்து ஜனதா கட்சியின் 41 வது வட்டத் தலைவர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் போலீசில் புகார் செய்திருக்கிறார். அவர்கூட தாக்கப்பட்டிருக்கிறார். அவர் கொடுத்த புகாரின்



இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இத்தகைய கோளாறுகளுக்கெல்லாம் காரணம் சென்னை மாநகரத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட மன்ற உறுப்பினர்கள் இல்லாதது தான் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். அது மட்டுமல்ல, நகரமெல்லாம் துப்புரவற்று, சுகாதாரக் கேடுகள் நிறைந்திருப்பதை நாம் பார்க்கிறோம். 1927 ஆம் ஆண்டில் சென்னை நகரில் 5 லட்சம் மக்கள் இருந்தபோது போடப்பட்ட பாதாளச் சாக்கடை திட்டம்தான் இன்னும் அப்படியே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. சென்னை மாநகரத்தில்தான் கொசுத்தொல்லை அதிகமாக இருக்கிறது. சுகாதாரக் கேடும் இங்கேதான் அதிகமாக இருக்கிறது என்பதும் நமக்கெல்லாம் நன்கு தெரிந்த உண்மையாகும். இந்தக் குறைகளைப் போக்க உடனடியாக மாநகராட்சி மன்றத்திற்குத் தேர்தலை நடத்தியாக வேண்டும்.

அதைப்போலவே கோவை நகராட்சி மாநகராட்சியாக உயர்த்தப்பட்டு 5 ஆண்டுகளாகிவிட்டன. இப்போது 6வது ஆண்டு நடக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் நான் ஒன்றை மட்டும் இங்கே கேட்க விரும்புகிறேன். கோவை நகராட்சியாக இருந்திருந்தால்கூட சென்ற ஆண்டு பிப்ரவரிமாதத்தில் தேர்தல் நடந்தபோது அங்கேயும் தேர்தல் நடைபெற்று அதற்கு ஒரு நகரசபைத் தலைவரும் கவுன்சிலர்களும் வந்திருப்பார்கள். அது இன்றைய தினம் மாநகராட்சியாக உயர்த்தப்பட்டதன் காரணமாக அதற்கும் தேர்தல் நடத்தாமல் இருப்பது சரிதானா என்பதையும் அரசு எண்ணிப்பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கோவையை மாநகராட்சியாக ஆக்கியே இருக்கவேண்டாம். நகராட்சியாகவேகூட விட்டிருக்கலாம் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து மதுரையைப்பற்றி நான் ஏற்கனவே குறிப்பிட்டுவிட்டேன். அங்கே ஏற்கனவே தேர்தல் நடத்தப்பட்டிருக்கிறது. அதிலே ஆளும் கட்சியே வெற்றி பெற்றிருக்கிறது. அப்படி இருக்கும்போது அங்கே தேர்தல் நடத்துவதற்கு ஆளும் கட்சிக்குத் தயக்கம் ஏன் என்றுதான் புரியவில்லை. ஏற்கனவே ஒரு காரணம் சொல்லப்பட்டது. அதாவது கடந்த உள்ளாட்சித் தேர்தல்களில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கலந்து கொள்ளாத காரணத்தால்தான் நாங்கள் தோல்வியுற்றோம் என்று சொல்லப்பட்டது. இப்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கேதான் இருக்கிறார்கள். எனவே தேர்தலை நடத்தத் தடையிருக்க முடியாது என்றுதான் நான் கருதுகிறேன். இந்த 3 மாநகராட்சிகளுக்கும் மாண்புமிகு முதலமைச்சரை வைத்துக் கொண்டு தேர்தலை நடத்தலாம். ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களே மேயர்களாகவும் கவுன்சிலர்களாகவும் வரலாம். மக்களுக்குத் தேவைப்படுவதெல்லாம் ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாட்சி, அவ்வளவுதான். அதை விட்டுவிட்டு, அண்ணா தி.மு.க.வா, தி. மு. க. வா, அல்லது காங்கிரசா அல்லது ஜனதாவா என்பதல்ல பிரச்சினை. எனவே மாநகராட்சிகளுக்கு உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மக்கள் இருப்பார்கள் என்று சொன்னார். எங்களுக்குச் சென்னை மாநகரத்தின் சார்பில் சட்டமன்றத்திலே உறுப்பினர் எவரும் இல்லாததால், தென்சென்னை, வடசென்னை ஜனதா தலைவர்களை அதில் சிபாரிசு செய்து இருந்தோம். குழுவே இன்னும் அமைக்கப்படவில்லை. பல்வேறு காரணங்களினாலே, ஏன் இந்த மாநகராட்சித் தேர்தலை நடத்தத் தயங்குகிறீர்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

இந்த மாநகராட்சித் தேர்தலை நடத்தாத காரணத்தினால் பல்வேறு சட்டவிரோதமான காரியங்கள் அந்த மாநகராட்சியிலே நடந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக சொல்ல வேண்டுமானால், சென்னை என். எஸ். கே. நகர் பகுதியிலே புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்து வீடு கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அது குறித்து எங்களது கட்சியைச் சேர்ந்த மாநில மகளிர் அமைப்பாளர் திருமதி சி.ஆர். சரோஜா அவர்கள் அமைந்தகரை காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்து இருக்கிறார். அந்தப் புகாரில் 39 பெண்கள் கையெழுத்து போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். நானும் கூட, அமைநதகரை போலீஸ் சப்-இன்ஸ்பெக்டருக்கு போன் செய்து. அதை உடனடியாக கவனித்து அந்த இடத்திலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றவேண்டும் என்று சொல்லி இருந்தேன். ஆனாலும், இன்னும் அது எடுக்கப்படவில்லை. அது நடந்து கொண்டிருக்கிறது. மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் வந்திருந்தால், அது நடந்திருக்காது என்று சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல், திரு. கே. சண்முகம் என்ற 128—வது வட்ட ஜனதா தலைவர் சொல்கிறார் பல்லக்கு மானியம் திட்டப்பகுதியிலுள்ள வீட்டு வசதி வாரியத்தினால் ஒதுக்கப்பட்ட வீடுகள், மனைகள் எல்லாம் விற்கப்படுகின்றன என்றும் சட்டப்படி அதை யாரும் விற்கவோ, வாங்கவோ கூடாது என்றும், அதற்கு அபராதம் எல்லாம் உண்டு என்றும்கூட சொல்லப்பட்டிருக்கிறது. ஆனாலும் கூட, அந்த வீட்டு மனைகளைப் பயங்கரமான விலைக்கு விற்றிருப்பதாகவும், அப்படி யார் யார் விற்றிருக்கிறார்கள், யார் யார் வாங்கியிருக்கிறார்கள் என்றும் பட்டியலே போட்டுச் சொல்லியிருக்கிறார்கள். இதைக்கூட நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

(பிற்பகல் 12—30)

அடுத்து நம்மாள்வார்பேட்டையில் உள்ள சிந்தாமணி கூட்டுறவு சிறப்பங்காடியிலிருந்து உணவுப் பொருள்களைக் கடத்துவதில் இரண்டு கோஷ்டிகளிடையே சண்டை ஏற்பட்டிருக்கிறது. அது குறித்து ஜனதா கட்சியின் 41 வது வட்டத் தலைவர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் போலீசில் புகார் செய்திருக்கிறார். அவர்கூட தாக்கப்பட்டிருக்கிறார். அவர் கொடுத்த புகாரின்மீது



இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இத்தகைய கோளாறுகளுக்கெல்லாம் காரணம் சென்னை மாநகரத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட மன்ற உறுப்பினர்கள் இல்லாதது தான் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். அது மட்டுமல்ல, நகரமெல்லாம் துப்புரவற்று, சுகாதாரக் கேடுகள் நிறைந்திருப்பதை நாம் பார்க்கிறோம். 1927 ஆம் ஆண்டில் சென்னை நகரில் 5 லட்சம் மக்கள் இருந்தபோது போடப்பட்ட பாதாளச் சாக்கடை திட்டம்தான் இன்னும் அப்படியே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. சென்னை மாநகரத்தில்தான் கொசுத்தொல்லை அதிகமாக இருக்கிறது. சுகாதாரக் கேடும் இங்கேதான் அதிகமாக இருக்கிறது என்பதும் நமக்கெல்லாம் நன்கு தெரிந்த உண்மையாகும். இந்தக் குறைகளைப் போக்க உடனடியாக மாநகராட்சி மன்றத்திற்குத் தேர்தலை நடத்தியாக வேண்டும்.

அதைப்போலவே கோவை நகராட்சி மாநகராட்சியாக உயர்த்தப்பட்டு 5 ஆண்டுகளாகிவிட்டன. இப்போது 6வது ஆண்டு நடக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் நான் ஒன்றை மட்டும் இங்கே கேட்க விரும்புகிறேன். கோவை நகராட்சியாக இருந்திருந்தால்கூட சென்ற ஆண்டு பிப்ரவரிமாதத்தில் தேர்தல் நடந்த போது அங்கேயும் தேர்தல் நடைபெற்று அதற்கு ஒரு நகரசபைத் தலைவரும் கவுன்சிலர்களும் வந்திருப்பார்கள். அது இன்றைய தினம் மாநகராட்சியாக உயர்த்தப்பட்டதன் காரணமாக அதற்கும் தேர்தல் நடத்தாமல் இருப்பது சரிதானா என்பதையும் அரசு எண்ணிப்பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கோவையை மாநகராட்சியாக ஆக்கியே இருக்கவேண்டாம். நகராட்சியாகவேகூட விட்டிருக்கலாம் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து மதுரையைப்பற்றி நான் ஏற்கனவே குறிப்பிட்டு விட்டேன். அங்கே ஏற்கனவே தேர்தல் நடத்தப்பட்டிருக்கிறது. அதிலே ஆளும் கட்சியே வெற்றி பெற்றிருக்கிறது. அப்படி இருக்கும்போது அங்கே தேர்தல் நடத்துவதற்கு ஆளும் கட்சிக்குத் தயக்கம் ஏன் என்றுதான் புரியவில்லை. ஏற்கனவே ஒரு காரணம் சொல்லப்பட்டது. அதாவது கடந்த உள்ளாட்சித் தேர்தல்களில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கலந்து கொள்ளாத காரணத்தால்தான் நாங்கள் தோல்வியுற்றோம் என்று சொல்லப்பட்டது. இப்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கேதான் இருக்கிறார்கள். எனவே தேர்தலை நடத்தத் தடையிருக்க முடியாது என்றுதான் நான் கருதுகிறேன். இந்த 3 மாநகராட்சிகளுக்கும் மாண்புமிகு முதலமைச்சரை வைத்துக் கொண்டு தேர்தலை நடத்தலாம். ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களே மேயர்களாகவும் கவுன்சிலர்களாகவும் வரலாம். மக்களுக்குத் தேவைப்படுவதெல்லாம் ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாட்சி, அவ்வளவுதான். அதை விட்டுவிட்டு, அண்ணா தி.மு.க.வா, தி. மு. க. வா, அல்லது காங்கிரசா அல்லது ஜனதாவா என்பதல்ல பிரச்சினை. எனவே மாநகராட்சிகளுக்கு உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நாங்கள் இங்கே என்னதான் சொன்னாலும் ஆளும்கட்சி, தனக்கிருக்கிற மெஜாரிட்டி காரணமாக இந்தச் சட்டத் திருத்தத்தை நிறைவேற்றத்தான் போகிறது. அதற்கு முன்பாக நான் ஒன்றை மட்டும் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். சென்ற ஆண்டு பிப்ரவரியில் உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் நடைபெற்று முடிந்தன. எனவே அடுத்த 1987 ஆம் ஆண்டு பிப்ரவரியிலாவது இந்த மாநகராட்சிகளுக்கான தேர்தல்களை நடத்த வேண்டும் என்று கேட்டு அதற்கான ஒரு உறுதிமொழியை அரசு மக்களுக்கு இப்போது கொடுக்க வேண்டும் என்று சொல்லி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் சென்னை, கோவை, மதுரை மாநகராட்சிகளின் தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை நீட்டிக்கும் சட்ட முன்வடிவுகளின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் பேசுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இங்கே பேசிய பல்வேறு உறுப்பினர்களும் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மாநகராட்சி மன்றங்களுக்குத் தேர்தல்களை நடத்த வேண்டும் என்பதில் எப்படி திராவிட முன்னேற்றக்கழகத்திற்கும் காங்கிரஸ்கட்சிக்கும் ஒரு நல்ல கருத்து இருக்கிறதோ அந்தக் கருத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எந்தவிதமான மாறுபாடும் இல்லை, எந்தவிதமான கருத்து வேறுபாடும், பிரச்சினையும் இல்லை. ஆனால் தேர்தலை நடத்துவதற்கு முன்பாக அதை எப்படி நடத்த வேண்டும் என்பதில்தான் ஒரு பிரச்சினை. ''செய்வன திருந்தச் செய்'' என்பதற்கு இணங்க சில சட்டதிட்டங்களை அமைத்துத் தேர்தலை நடத்த வேண்டிய நிலைமை இருக்கிறது என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் பேசும்போது ஏதோ கதையெல்லாம் சொன்னார். கூட்டுறவுத் துறையில் ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதற்கு முன்பு ஒரு மாகாணத்தின் பிரச்சினையை எடுத்து ஆராய்ந்து அலசிப் பார்த்து முடிவுக்கு வருவதற்கு 9 மாதம் ஆனது. இந்தியாவில் இருக்கிற எல்லா மாகாணங்களையும் எடுத்துப் பார்த்து ஆராய்ந்து அலசிப் பார்த்து முடிவெடுத்துச் செய்வது என்றால் ''பாட்டிக்குக் கல்யாணம் ஆன கதையாகத்தான்'' இருக்கும் என்றெல்லாம் சொன்னார். நான் அவருக்கு ஒன்றை மட்டும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஐந்து வயது குழந்தையை ஒருவரிடத்திலே ஒப்படைத்துவிட்டு இருபது ஆண்டுக் காலத்திற்குப் பிறகு மீண்டும் பார்த்தால் இரண்டடியாக இருந்த குழந்தை ஐந்தரை அடியாக வளர்ந்திருக்கும். அந்தக் குழந்தையை பக்கத்திலே மற்றொருவரிடம் விட்டுவிட்டு இருபதாண்டுக்காலம் கழித்துப் பார்த்தால் ஏற்கெனவே ஐந்தரை அடி உயர்ந்திருந்த அவன் இங்கே ஏன் அப்படியே இருக்கிறான்



என்று கேட்பதைப் போல அவருடைய பேச்சின் போக்கு இருக்கிறதே தவிர, அதிலே வேறு எந்தவிதமான சத்துமில்லை. சாரமுமில்லை. ஒரு பிரச்சினையை அலசி ஆராய்ந்து பார்க்கும் போது அதிலேயுள்ள சிக்கலைப் பற்றி நாம் நிச்சயமாக எண்ணிப் பார்க்க வேண்டும். மாநகராட்சித் தேர்தலைப் பற்றிப் பேசும் போது....

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நான் சொல்லிய ஒரு உவமை சம்பந்தமாக ஒரு கருத்தைத் தெரிவித்தார். அந்த ஆராய்ச்சியே வேண்டாம், இருக்கின்ற சட்டதிட்டங்களை நீங்கள் பரிசீலிக்க வேண்டாம், பொது விதிகளை உருவாக்க வேண்டாம், மயிலாடு துறையிலும், திருவிடைமருதூர் ஒன்றியத்திலும் நீங்கள் தேர்தலை நடத்தலாமே? அதிலே ஏன் காலதாமதமாகிறது? ஏன் சட்டத்தை ஆராய்ந்து கொண்டிருக்கிறீர்கள்?

டாக்டர் கே. சமரசம்: துணைத் தலைவர் அவர்களே, நான் சொன்ன கருத்துக்கு அவர் பதில் விளக்கம் சொல்லவில்லை, பரவாயில்லை, அதை ஒத்துக்கொண்டதற்காக நன்றி. அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லத்தானே நாங்கள் ஆட்சிக் கட்சியில் இருக்கிறோம், சொல்லுகிறோம்.

இங்கே பேசுகின்றபோது பல்வேறு விவரங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். சென்னை மாநகராட்சி கோவை. மதுரை மாநகராட்சித் தேர்தல்களை நடைமுறைப் படுத்துவதைப் பொறுத்த வரையில் திரு. வி. பி. சிந்தன் அவர்கள் சில கருத்துக்களைச் சொன்னார்கள். காங்கிரஸ் உறுப்பினர் டாக்டர் சௌரிராஜன் அவர்கள் சில கருத்துக்களைச் சொன்னார்கள். அதிலே நாங்கள் இரண்டறக் கலந்துதான் இருக்கிறோம். ஒரே நிர்வாகத்தின் கீழ் இரண்டு பகுதிகள் இருக்கக் கூடாது. இரண்டு நிர்வாகத்தின் கீழ் ஒரே பகுதி இருக்கக் கூடாது. செங்கற்பட்டில் ஒரு பகுதி, சென்னையில் ஒரு பகுதி இருக்கிறது: அப்படியிருக்கலாமா என்றால் வேண்டாம். அதற்காக சட்டத்தைக் கொண்டு வாருங்கள். அங்கே இருக்கின்ற இரண்டு பகுதி, மூன்று பகுதியாக இருக்கலாமா என்றால் வேண்டாம், அதற்காக சட்டத்திருத்தம் கொண்டு வாருங்கள். இப்படிச் சட்டத்தை ஒருமைப்படுத்திவிட்டுத் தேர்தலை நடத்தினால்தான் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஒழுங்காக ஆட்சி செய்ய முடியும். இல்லாவிட்டால் குத்து வெட்டுவரும். அப்படிச்சட்டம், ஒழுங்குக்குக் கேடு எதிர்காலத்திலே இருக்கக் கூடாது என்பதற் காகத் தான் இங்கேயுள்ள தனி அதிகாரிகளுடைய காலத்தை நீட்டிக்க சட்டத்தைக் கொண்டு வருகிறார்கள். அது ஒரு காரணமாகும்.

இங்கே பல விஷயங்களைப் பற்றி சொன்னார்கள். சம்சாரம் மின்சாரம் பற்றியெல்லாம் சொன்னார்கள். அது நாங்கள் பேசிப் பேசிப் பழகிப் போன விவகாரம்தான். மின்சாரத்தைப் போல சம்சாரத்தை வைத்துக்கொள்ளக்கூடாது, இப்போதுள்ள மின் சாரத்தைப் போல் சம்சாரம் இருக்கக்கூடாது என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் மின்சாரத்தை ஏலம் விட்டார்கள்.

** நீங்கள் சொன்னது தானே; (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அந்தப் பகுதியை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன்.

**டாக்டர் கே. சமரசம் :** அப்படிப்பட்ட நிலையில் சென்னை, கோவை மாநகராட்சிகள் தேர்தலைப் பொறுத்தவரையில் மூளைக் காய்ச்சலுக்கு மருந்து தேடும் நிலையில் இருப்பதைப் போல, அந்த அளவிற்கு இதிலே சிக்கல்கள் இருக்கின்றன. ஒரு பொதுத் தேர்தல் நடக்கிறதென்றால் தைரியமாக மக்கள் வாக்களிக் கிறார்கள். வெற்றி பெறுகிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் சென்னையிலேயே தேர்தல் வருகிறபோது, ஒவ்வொரு பிரச்சினையையும் பார்த்தால் தேர்தல் நடத்த முடிகிறதா என்றால், இல்லை. அப்படியே தேர்தல் நடந்தால் வாக்களிக்கக் கூடியவர்கள் வாக்களிக்கிறார்களா? வாக்களிக்கக் கூடியவர்கள் வாக்களிக்க முடியவில்லை. அவர்கள் பெயரைச் சொல்லி வேறு எவரோ வாக்களிப்பதை * * கலந்து கொண்டு விட்டுப் பார்த் தேன். யார் வந்து வாக்களிக்க வேண்டுமோ அவர்கள் வருவதேயில்லை. ஆனால் அவர்கள் வருவதற்கு முன்பே எல்லா வாக்குகளையும் போட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை இருப்பதால் இந்த நாட்டு மக்கள் யாருக்கு ஓட்டுப் போட வேண்டுமென்று கருதுகிறார்களோ அவர்களுக்கு ஓட்டு போடக் கூடிய வாய்ப்பை அரசாங்கம் உருவாக்கித் தர வேண்டும். அப்படிப்பட்ட சட்டதிட்டத்தைக் கொண்டுவர வேண்டும். வாக்காளர் உரிமைச் சீட்டு, குடியுரிமைச் சீட்டு ஆகியவற்றில் அவர்களுடைய புகைப்படத்துடன், கையொப்ப மிட்டு, தேர்தல் அதிகாரியுடைய கையொப்பமிட்டு, மாவட்ட ஆட்சித் தலைவருடைய பரிந்துரை இருக்கக் கூடிய வகையிலே இருந்தாலொழிய...

**திரு. சோ. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது * * ஆகவே அதை வாபஸ் பெறுவார் என்று கருதுகிறேன்.

**டாக்டர் கே.சமரசம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எல்லா குற்றவாளிகளும் ஜெயிலில் இல்லை, ஜெயிலில் உள்ள வர்கள் எல்லாம் குற்றவாளிகள் அல்ல. பல சந்தர்ப்ப சூழ்நிலை களில் பல வகைகளில் மாறுபாட்டுக்கு உட்படுகிறார்கள். ஜன நாயக சந்தர்ப்ப வசத்தால் இப்படிப்பட்ட நீதிகள் வழங்கப் படுகின்றன.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.



(பிற்பகல் 12-40)

**திரு. அ. ரகுமான்கான் :** எல்லாத் திருடர்களும் ஜெயிலில் இருப்பதில்லை என்றால். . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ** என்று சொன்ன பகுதியைப் பார்த்துவிட்டு நீக்குகிறேன்.

**டாக்டர் கே. சமரசம்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே. சென்னை, கோவை, மதுரை மாநகராட்சிகளுக்குத் தேர்தல் நடத்த வேண்டுமென்று சொல்கிறபோது, ஓட்டு சேகரிப்பிலே நிச்சயமாக மிக மிகக் கண்காணிப்பு தேவை. குடி உரிமைச் சீட்டில் பிறந்த தேதியைப்போட்டு, வரிசை எண் கொடுத்து, புகைப்படம் ஒட்டி, யார் வாக்குகளைச் சேகரிக்கிறார்களோ அவர்கள் கையொப்பமிட்டு, மாவட்ட ஆட்சித் தலைவரின் கையொப்பத்தைப்பெற்று, கடைசியில் ஓட்டுப்போடத் தகுதியான வர்கள் தவிர மற்றவர்கள் போட முடியாது என்ற நிலை வர வேண்டும். அப்படிப்பட்ட நிலை வரும்போதுதான், சென்னை, மதுரை, கோவை நகரங்களில் உள்ள மக்கள் யாருக்கு ஓட்டுப் போட விரும்புகிறார்களோ, அவர்கள் வெற்றி பெற்று பணியாற்ற முடியும். (மணி அடிக்கப்பெற்றது)

பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்போதுதான் ஆரம் பித்தேன். அப்படிப்பட்ட நிலையில், அதையெல்லாம் எண்ணிப் பார்த்து, இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் நிச்சய நிவாரணம் காண வேண்டும், செய்வன திருந்தச் செய்ய வேண்டும். எதிர்காலத்திலே யார் ஆட்சிக்கு வந்தாலும் இப்படி * * அதனால் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆட்சி செய்யக்கூடிய நிலை யில்லாமல், யாரை மக்கள் விரும்புகிறார்களோ, அவர்கள் தேர்ந் தெடுக்கப்பட்டு, வரக்கூடிய சூழ்நிலை வரவேண்டும். மாநகராட்சி யிலே குறைகள் அதிகமாக இருப்பதால், முதலாவதாக இங்கே அந்தத் திட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டுமென்ற சூழ்நிலை யில், இங்கே அவற்றைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, உள்ளாட்சித் துறையிலே வெற்றிபெற்று வந்தவர்கள் எல்லாம் மிக நல்ல முறையிலே இருக்கிறார்களா என்று பார்க்கும் போது, அப்படியில்லை, இங்கே பேசும்போது 2 உறுப்பினர்கள் ஒத்துக்கொண்டார்கள். விளக்கு எரியவில்லை. . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினரவர்கள் சொல்வது முதலிலே சொன்னதுதான். திருப்பித் திருப்பிச் சொல்லக்கூடாது. எல்லாமே தப்பு என்று சொல்லக்கூடாது. உங்களுக்கு பாதுகாப்பாக சொல்கிறேன்.

---

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. கு. ரமணி: The hon. Member is casting asperstion on them
அப்படிச் செய்யக்கூடாது. அதை அனுமதிக்கக் கூடாது.

டாக்டர் கே. சமரசம்: அப்படிப்பட்ட சூழ்நிலையில் தேர்தல்
நடக்கும்போது, அது மிக நல்ல முறையிலே நடைபெற இத்
தகைய சட்டம் தேவை என்றுதான் இப்போதிருக்கும் தனி
அலுவலரின் பதவிக் காலத்தை நீட்டிக்க வேண்டுமென்று
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அரசைக்
கேட்டுக்கொள்கிறது. ஏனென்றால், இப்போது நடந்த தேர்
தலிலே தேர்ந்தெடுக்கப்பட்டு, தலைவர்களாக வந்துகூட,
எங்களால் நல்ல பணிகளை நிறைவேற்ற முடியவில்லை. இது
வரையிலே இந்த நாட்டு மக்கள் எல்லாப் பிரச்சினைகளுக்கும்
அரசை குறை சொல்லிக் கொண்டிருந்தார்கள். இப்போது
எங்களைக் குறை சொல்கிறார்கள். அடுத்து வரும் பொதுத்
தேர்தலிலே 'நம் நிலை என்னவாகுமோ' என்று பலர் அஞ்சக்
கூடிய அளவுக்குக் குறை சொல்லும் நிலைமைகள் இருக்கின்றன.
அந்த நிலை மாறி, யார் ஆட்சிக்கு வந்தாலும், பொறுப்புக்கு
வந்தாலும் நிம்மதியாக ஆட்சி செய்யக்கூடிய வகையில்,
வருவாயைப் பெருக்கும் வகையில் நிலைமைகள் இருக்கவேண்டும்
ஒரு பிரச்சினையைத் தீர்க்க 3, 4 நிர்வாகங்கள் என்ற நிலை
மாறி, அவர்களே நினைக்கக்கூடியதை நேரடியாக நிறைவேற்றும்
அளவுக்கு அவர்களுக்கு வாய்ப்பு இருக்க வேண்டும். அப்படிப்
பட்டதொரு சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கோரி,
தனி அலுவலர் பதவிக்கால நீட்டிப்பு மிக மிக அவசியமென்று
சொல்லி, அமைகிறேன்.

*திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்: மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவரவர்களே, தமிழகத்திலே இருக்கின்ற சென்னை,
கோவை, மதுரை, மாநகராட்சிகளின் தேர்தல்களைத்
தள்ளி வைத்தே ஆகவேண்டுமென்ற இந்த சட்ட முன்வடிவின்
மீது நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்பு
கிறேன்.

முதலில் எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு
ரகுமான்கான் அவர்கள் காங்கிரஸ்காரர்களும் தேர்தல் வேண்டு
மென்று சொன்னதற்கு நன்றி என்று சர்காஸ்டிக்காக, இன்னும்
சொல்லப்போனால் சிறிது குறும்புத்தனமாகக் குறிப்பிட்டார்கள்.
காங்கிரஸ்காரர்களைப் பொறுத்தவரையில், காங்கிரஸ் பேரி
யக்கத்தைப் பொறுத்தவரையில் எந்த நிலையிலும் தேர்தலைச்
சந்திக்கத்தயங்காதவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
நெல்லையில் நடந்த இடைத் தேர்தலிலே போட்டியிடலாமா,
வேண்டாமா என்று ஒருவாரம் யோசித்தது திராவிட முன்னேற்றக்
கழகம் என்பதை இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.



அடுத்து, கோவை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் அது
நகராட்சியாக இருந்து மாநகராட்சியாக ஆக்கப்பட்டதிலிருந்து
அங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு இல்லை. அங்கே மேயர்
இல்லை. இன்னும் சொல்லப்போனால், அந்த ஊரிலே இருக்
கின்றவர்கள், நாங்கள் மேயரைப் பார்க்க வேண்டும், அவரைப்
பார்த்ததே இல்லை, சென்னையில் இருந்ததாகப் பத்திரிகையிலே
பார்த்திருக்கிறோம், அவரைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலில்
இருக்கிறார்கள். இதற்கு ஒரு உதாரணத்தைக் கூட நான் சொல்ல
முடியும். சமீபத்திலே பத்திரிகைகளிலே வந்தது.ஒரு அரபு நாட்டு
ஷேக் தன் குழந்தைகளுக்கு மழை இப்படிதான் இருக்குமென்பதைக்
காட்டுவதற்காக பம்பாய்க்கு வந்ததாக செய்தியைப் பார்த்தேன்.
அதே போல இங்கே மேயரைக் காட்ட வேண்டுமென்றால்
கண்டிப்பாக தமிழகத்திலே காட்டமுடியாத நிலை இருக்கின்றது.
காங்கிரஸ் பேரியக்கம் ஆளுகின்ற மாநிலமான பம்பாய்க்குக்
கொண்டு சென்றுதான் அவர்களுக்கு மேயரைக்காட்ட வேண்டிய
நிலை இருக்கின்றது. இந்த அவல நிலையை மாற்றி, தமிழகத்
திலே மேயர்கள் இருக்கின்ற நிலையை இந்த அரசு ஏற்படுத்தித்
தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றையும் நான் இங்கே கூறிக்கொள்ள விரும்பு
கிறேன். தமிழகத்திலே மருடம்சாவடி, கருப்பன்பாளையம்,
கனியூர் பகுதிகளிலே இருக்கின்ற மக்களுக்குக் கொடுக்கப்பட்ட
ஜனநாயக உரிமை மாநகரங்களிலே வசிக்கின்ற மக்களுக்கு
மறுக்கப்படுகிறது. அங்கே கிராமங்களில், பொள்ளாச்சி போன்ற
நகரங்களில் இருக்கின்ற மக்களுக்குத் தங்கள் பகுதியிலே,
ஊரிலேயே வசிக்கின்ற ஒருவரை தங்களுடைய பிரதிநிதியாகத்
தேர்ந்தெடுத்து, தங்களுடைய அன்றாடப் பிரச்சினைகளுக்குத்
தீர்வு காண வாய்ப்பிருக்கின்றது. ஆனால் கோவை, சென்னை,
மதுரை போன்ற மாநகரங்களிலே வாழ்கின்ற மக்களுக்கு அந்த
ஜனநாயக உரிமை பறிக்கப்படுகிறது என்றால், மாநகரங்
களிலே வாழ்கின்ற மக்கள், கிராமங்களிலே, நகரங்களிலே வாழ்
கின்ற மக்களை விட இரண்டாம் தர மக்களா என்று கேட்டுக்
கொள்ள விரும்புகிறேன். மக்கள் தங்களால் தேர்ந்தெடுக்கப்
பட்ட பிரதிநிதிகளிடம், கவுன்சிலரிடம் தங்களுடைய தொகுதி
யிலே இருக்கின்ற குறைகளை, அங்கே செய்யப்பட
வேண்டிய வசதிகளைப் பற்றி மனமுவந்து உரிமையோடு,
மனந்திறந்து பேசக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. ஆனால்
அதிகாரிகளிடம் அப்படி பேசுவதற்கு வாய்ப்பு கண்டிப்பாக
இல்லை. அதைக் கேட்பதற்கு அதிகாரிகளுக்கும் பொறுமை
இல்லை என்ற நிலை இருக்கின்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட
பிரதிநிதிகள் இருந்தால்தான் அதிகாரிகள் தங்களுடைய
பொறுப்புகளை உணர்ந்து ஓரளவுக்குக் கடமையாற்றுவார்கள்.
அப்படி இல்லை என்றால் அவர்களுக்குக் கண்டிப்பாக
மக்களைப் பற்றி கவலையில்லை. வேறு எதைப் பற்றியும்
கவலையில்லை. அவர்களுக்கு இருக்கிற கவலை எல்லாம் **

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்
கிணங்க அகற்றப்பெற்றது.

இந்தக் காலத்திலே, தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற பிரதிநிதிகள் கண்டிப்பாக மாநகராட்சிகளுக்கு வேண்டுமென்பதை நான் இங்கே வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நகரத்தைப் பற்றியும்....

திரு. மா. சின்னையா: இங்கே ஒரு முறை வைத்துப் பேசிக் கொண்டிருக்கிறார்கள் அதிகாரிகள் பற்றியும் ** என்று பேசுவதையும் அனுமதிக்க முடியாது. அவர்கள் அதை ஒப்பிட்டுப் பேசுகின்றார்கள். அதை நீக்கிவிடும்படி கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதை நீக்கிவிடுகிறேன்.

திரு ஈ. வே. கி. ச. இளங்கோவன்: கோவை மாநகராட்சி அதிகாரிகளைப் பற்றித்தான் சொன்னேனே தவிர, சென்னை மாநகராட்சி அதிகாரிகளைப் பற்றி எனக்கு அதிகம் தெரியாது. இன்னொன்று இந்த நிலை....

திரு மா. சின்னையா: மொத்த அதிகாரிகளைப் பற்றி நான் சொல்லவில்லை, ** பற்றி மட்டும் தான் சொல்கிறேன் என்று சொல்கின்றார்கள். அது இன்னும் ரெக்கார்டில்-ஆக இருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அப்படி சொல்வதாக இருந்தால்கூட பிரிவியஸ் ஆக என்னிடம் சொல்லியிருக்கவேண்டும். அப்படி சொல்லிவிட்டுப் பேசியிருந்தீர்கள் என்றால், அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்ல முடியும். அதனாலேதான் அது வேண்டாம் என்று சொல்கிறேன்.

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்: அருமை நண்பர் திரு. சின்னராசு அவர்கள் கூறியதுபோல, ** உள்ள அனைத்து அதிகாரிகளைப் பற்றியும் நான் கூறவில்லை. அங்கே Billing செக்ஷனிலே இருக்கின்ற சில அதிகாரிகளைப் பற்றி கூறிக் கொள்கிறேன்.

இன்றைக்கு கோவை மாநகராட்சி நிர்வாகம் யாரால் எப்படி நிர்வகிக்கப்படுகிறது? மாவட்ட ஆட்சியாளர் அவர்களால் நிர்வகிக்கப்படுகிறது. கோவை மாவட்டம் பெரிய மாவட்டம். அந்த மாவட்டத்திலே இருக்கின்ற விவசாயப் பிரச்சினை, தொழிலாளர்கள் பிரச்சினை, இன்னும் இருக்கின்ற நூற்றுக்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



கணக்கான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அங்கே கலெக்டர்
அவர்களுக்கு நேரம் போதவில்லை. அப்படி இருக்கின்ற நிலை
யிலே முழுமையாக அவர் மாநகராட்சி வேலையிலே எப்படித்
தன்னை ஈடுபடுத்திக்கொள்ள முடியும் என்பதை நான் அறிந்து
கொள்ள விரும்புகிறேன். அங்கே ஆலோசனைக் குழு இருக்
கின்றதா இல்லையா என்பதும் தெரியவில்லை. இருந்தாலும்
அது கூடுவதே இல்லை. இன்னும் சொல்லப்போனால், அங்கே
மாநகராட்சியினுடைய சாம்ராஜயம் இல்லை. அதிகாரி
களினுடைய சாம்ராஜயம் தான் அதிகமாக இருக்கின்றது,
இன்னும் சொல்லப்போனால் ஒப்பந்தக்காரர்கள் சாம்ராஜ்யம்
தான் அங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதைக்
கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கோவை நகரிலே வீட்டுவரி. மற்றும் குடிநீர் வரி என்று
இருக்கிறது. வரி விதிப்புகளில் முறைகேடுகள் நடந்து
கொண்டிருக்கின்றன. மாதந்தோறும் முறையாக அந்த வரிகள்
வசூலிக்கப்படாமல் ரூ. 10 வரி என்றால் பழைய கணக்கை
யெல்லாம் சேர்த்து, திரும்பவும் வரிகளை ஏற்றி ரூ. 10 என்று
இருப்பதை ரூ. 250, ரூ. 300 என்றும் அதை 24 மணி நேரத்தில்
கட்ட வேண்டும் என்றும் சொல்வது சர்வாதிகாரத்தனத்தைத்
தான் காட்டுகிறது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-50)

அடுத்து கோவை நகரில் பன்றிகளுடைய தொல்லை மிகவும்
அதிகம். இன்று காலையில் இம்மன்றத்தில் வைரஸ் மூளைக்
காய்ச்சல் பற்றி பரவலாக உறுப்பினர்கள் பேசினார்கள்.
மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அது சம்பந்தமாக
அட்டவணை வைத்தார்கள். நல்ல வேளையாக அந்தப்
பட்டியலில் கோவை நகரம் இடம் பெறவில்லை. ஆனால்
விரைவிலே கோவை நகரிலும் கழுதைகள் போல இருக்கின்ற
பன்றிகளால் அந்த நிலைமை கட்டாயம் வரும்.

அடுத்து, கோவையிலே தெரு விளக்குகள் எரிவதில்லை.
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சமீபத்தில் கோவைக்குச்
சென்ற போது ஒரு வழியாக அதை ஒப்புக்கொண்டிருக்கிறார்
கள். மாநகராட்சி பற்றி 'இந்து' பேப்பரில் "Referring to
the complaints about the poor street light, the Minister said that he
directed the officials to ensure that the fused bulbs and tube
lights were replaced without any delay .." என்று ஒரு செய்தி வந்தது.
அமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள் என்று செய்திவந்தது.
ஆனால் அப்படி அங்கே நடந்திருக்குமா என்று கேட்டால்
கண்டிப்பாக நடந்திருக்காது. " In turn the officials would have
directed the Contractors to do the needful and in turn the contractors
would have submitted their tenders and estimates and would have
received payment without replacing the bulbs and tube-lights.

என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே இத்தகைய அவல நிலை இருக்கின்ற கோவை மாநகராட்சிக்கு உடனடியாக தேர்தலை நடத்தினால் ஏற்கெனவே இருக்கின்ற குறைகள் ஓரளவுக்கு நீக்கப்படுகின்ற வாய்ப்பிருக்கிறது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக, இந்தத் தேர்தலை நடத்தும்போது கண்டிப்பாக அடையாள அட்டையும், போட்டோவை ஒட்டுகின்ற நிலையும் வர வேண்டும். அப்போதுதான் ** ** நிலையைத் தடுக்கின்ற முறை வரும். வருங்காலத்தில் நடத்தப்படுகின்ற சட்டமன்ற தேர்தல்கள் நாடாளுமன்ற தேர்தல்களில் இத்தகைய முறையை நாம் கடைப்பிடிக்க ஏதுவாக இருக்கும் என்று கூறி வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

*திரு கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீண்டும் வேதாளம் முருங்கை மரம் ஏறியது போல மதுரை, சென்னை, கோவை போன்ற மாநகராட்சி மக்கள் வாக்களிக்கும் உரிமை மறுக்கும் நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. மூன்று மாநகராட்சிகளுக்கும் தேர்தலைத் தள்ளிப் போடும் நோக்கம் குறித்த சட்ட முன் வடிவு இங்கே மொழியப்பட்டிருக்கிறது. எதிர்க் கட்சியில் இருக்கின்ற பல்வேறு உறுப்பினர்களும் தேர்தலை விரைவில் நடத்த வேண்டுமென்று பொய்யாய் வருத்தத்துடன் கேட்டுக் கொண்டார்கள். அ. இ. அ. தி. மு. க. ஆட்சி நிர்வாகத்தின்கீழ் அப்படி எல்லாம் வருத்தப்படும் அளவுக்கு நிலைமைகள் இல்லையென்று சொல்ல முடியாது. அவர்களுக்கு வெற்றி வாய்ப்பு குறைவு என்று சொல்லப்படும் இடங்களுக்கு நிச்சயமாகத் தேர்தலை வைக்க மாட்டார்கள். அதற்குப் பிரத்யட்சமான, தெளிவான உதாரணம் தான் இந்த 3 மாநகராட்சிகளுக்குமான தேர்தலைத் தள்ளி வைப்பது, நான் மிக மனவலிமையோடு ஒன்றைக் கேட்டுக் கொள்கிறேன். இங்கே இச்சட்ட முன்வடிவை மொழிந்திருக்கின்ற அமைச்சராக இருந்தாலும் சரி, அ. இ. அ. தி. மு. க. ஆட்சியாளர்களாக இருந்தாலும் சரி, இந்தத் தேர்தல்களை, ஒரு வருடமானாலும் சரி, இந்தத் தேதியில் நடத்துவோம் என்கிற ஒரு உத்தரவாதத்தைத் தர முடியுமா? அதற்கு முன் வர மாட்டார்கள். அவர்களால் அது முடியாது. தேர்தலைத் தள்ளி வைப்பதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கலாம். ஆனால் இவர்கள் தேர்தலைத் தள்ளி வைப்பதற்கு என்ன காரணம் சொல்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





ஒவ்வொரு முறையும் மாநகராட்சித் தேர்தல்களைத் தள்ளி
வைக்கும்போது ஒவ்வொரு காரணம் சொல்லப்படுகிறது.
இப்போது என்ன காரணம் சொல்லப்படுகிறது. என்பதை
நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ''இந்தியா
வின் பிற மாநிலங்களில் உள்ள மாநகராட்சிகள் இயங்குகின்ற
தன்மைகளை ஆய்ந்து அறிந்து தமிழ்நாட்டிலுள்ள எல்லா
மாநகராட்சிகளுக்கும் பொருத்தமான பொதுவான சட்டம்
ஒன்றைக் கொண்டு வர வேண்டும்'' என்று சொல்லியிருக்
கிறார்கள். இது தீவிர பரிசீலனையில் இருப்பதாகவும் சொல்லி
யிருக்கிறார்கள். இதை விட ஒரு கேலிக் கூத்து உண்டா?
அ. இ. அ. தி. மு. க. அகராதியில் தீவிர பரிசீலனையில் இருக்கிறது
என்றால் காலதாமதம் என்று பொருளா? எவ்வளவு கால
வரம்புக்குள் தீவிர பரிசீலனை முடிக்கப்படும்? இதற்கான
பதிலைப் பொறுப்பிலுள்ள அமைச்சர் அவர்களால் சொல்ல
முடியுமா ? இன்றைக்கு எதிர்த்தரப்பிலுள்ள மாண்புமிகு உறுப்
பினர்கள் பல்வேறு கருத்துக்களைக் கூறினார்கள். மாநகராட்சி
களில் குறைபாடுகள் தேங்கிக் கிடக்கின்றன என்பதால் தேர்தலை
நடத்தவேண்டுமென்று நான் சொல்லவில்லை, என்னைப் பொறுத்த
வரையில் கேட்கிறேன். வாக்காளர்களின் அடிப்படை உரிமையான
ஓட்டு அளிக்கும் உரிமையைப் பறிக்க உங்களுக்கு என்ன உரிமை
இருக்கிறது ? 1980 ஆம் ஆண்டு இந்த அரசு மத்திய அரசால்
டிஸ்மிஸ் செய்யப்பட்டது. அன்றைக்கு என்ன சொன்னார்கள் ?
கவர்னர் ஆட்சி ஜிந்தாபாத் என்று சொன்னார்களா ? எப்படி
எங்களைக் கலைக்கலாம், மக்களே தேர்ந்தெடுக்கும் முறையை
எப்படி மறுக்கலாம் என்று கேட்டார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட
அமைப்பை நீங்கள் எப்படிக் கலைக்கலாம் என்றெல்லாம் பூமிக்கும்
வானத்திற்கும் குதித்த அனைத்திந்திய அண்ணா திராவிட
முன்னேற்றக் கழக ஆட்சி ஏன் இந்த மூன்று மாநகராட்சிகளுக்குத்
தேர்தல் நடத்த அஞ்சுகிறது ? சென்னையிலும், கோவையிலும்,
மதுரையிலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்
கழகம் தோற்கின்ற வாய்ப்பு பிரகாசமாகத் தெரிவதால், எதிர்க்
கட்சிகளுக்கு வெற்றி வாய்ப்பு அதிகமாக இருப்பதால், தப்பித்துக்
கொள்கின்ற தந்திரோபாயமாக, தங்களுக்குச் சட்டம் வழங்கி
யிருக்கின்ற வாய்ப்பைப் பயன்படுத்தி மக்களுக்குச் சட்டம் வழங்கி
யிருக்கின்ற மக்களினுடைய உரிமைகளைப் பறிக்கின்ற குற்றத்தைச்
செய்கிறீர்கள். இது நியாயம்தானா ? இவற்றைச் செய்யலாமா ?
தவறு செய்ததைத் திருத்திக் கொள்ளுங்கள் என்று கேட்கலாம்
என நினைக்கிறோம். ஆனால் நீங்கள் ஒன்றும் திருந்தப்போவ
தில்லை. அது தெளிவாகத் தெரிகிறது.

இங்கே குறிப்பாகக் குறிப்பிட விரும்புவது தனி அதிகாரிகள்
ஆட்சியில் என்ன நிகழ்ந்து கொண்டிருக்கிறது? ஒரு உதாரணத்தைச்
சொல்ல விரும்புகிறேன். ஸ்பெஷல் ஆபீசர்களிடம் எதிர்க்
கட்சி எம்.எல்.ஏ. க்கள் சொன்னால் கேட்பார்களா கேட்க மாட்
டார்கள். யார் சொன்னால் கேட்பார்கள்? ஆளுகின்ற அதிகாரக்
குடை நிழலில் எவர் நின்று குரல் கொடுக்கிறாரோ அவர்

சொன்னால் செய்வார்களே தவிர, அதிகாரம் அற்ற எதிர்க்கட்சி எம்.எல்.ஏ.க்களைக் கிஞ்சித்தும் கண்டு கொள்ளமாட்டார்கள். அதுதான் நிலைமை. எனவே, அமைச்சரவர்களிடத்தில் நான் வலியுறுத்திக் கேட்க விரும்புவது, இந்த ஸ்பெஷல் ஆபீசர்களைப் பொறுத்தவரையிலும் இந்த மூன்று மாநகராட்சிகளில் ஸ்பெஷல் ஆபீசர்களின் காலங்களில் நடைபெற்ற மக்களின் வளர்ச்சித் திட்ட நிறைவேற்றப் பணிகளைப் பற்றிப் பொதுவான விசாரணைக் கமிஷன் நியமித்து, அதில் இருக்கின்ற பலன், பலவீனங்களைப் பற்றி, முறைகேடுகளைப் பற்றி ஆராய வேண்டும்.

இங்கே அருமை நண்பர்கள் பலர் குற்றச்சாட்டைக் குறிப்பிடுகிறபொழுதுகூட, பொதுவாகக் குறிப்பிடாதீர்கள் என்று, சட்டமன்ற மரபுகள் உங்களுக்கு அளித்திருக்கின்ற கேடயங்களை வைத்துக்கொண்டு தப்பிக்காதீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மரபு எல்லா உறுப்பினர்களுக்கும் அப்படிப்பட்ட பாதுகாப்பை அளித்திருக்கிறது. இல்லையென்றால், சிலவற்றை நீக்கவில்லை என்றால், இந்தத் தரப்பிலே உள்ளவர்கள் எழுந்து, திரு. சுப்பராயன் சொல்வதைத் தான் அதிகாரிகள் கேட்பார்கள் என்ற முறையில் தொடங்கி பேச ஆரம்பித்தால் என்ன ஆகும்? எனவே, எல்லா உறுப்பினர்களின் உரிமைகளையும், நலன்களையும் காப்பதற்காகத்தான் அந்த மரபுகள் விதிகள் இருக்கின்றன.

திரு. கு. சுப்பராயன் : துணைத் தலைவரவர்களே, ரொம்பவும் மகிழ்ச்சி. ஆனாலும் மைனாரிட்டியைக் காட்டிலும் மெஜாரிட்டியாக உள்ளவர்கள் சொல்வதைக் கேட்டு நடக்கின்ற வாய்ப்பு அதிகம் என்பதால் தான் அவற்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். எனவே, அதற்கு என்று விசாரணைக் கமிஷன் அமைக்க வேண்டுமென்பதைக் குறிப்பாகச் சொல்ல விருப்புகிறேன்.

டாக்டர் கே. சமரசம் : துணைத் தலைவர் அவர்களே, மெஜாரிட்டி, மைனாரிட்டி என்று சொன்னார்கள். மெஜாரிட்டி, மைனாரிட்டி வைத்து அல்ல. பொது மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற ஆர்வம் கொண்டு அதிகாரிகளிடத்தில்.. (மணி யடிக்கப்பெற்றது).

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே சென்னையைப் பொறுத்தவரையிலும், சென்னையில் 12 ஆண்டுக் காலமாக தேர்தலைத் தள்ளி வைத்தீர்கள், 1977 ஆம் ஆண்டிலே யிருந்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருக்கிறது அல்லவா? இதே சென்னையில் 80 ஆண்டு களுக்கு முன்னால் உருவாக்கப்பட்ட வடிகால் வசதிகள்தானே இருக்கின்றன? அரை மணி நேரம் சென்னையில் மழை பெய்தாலே மவுண்ட் ரோடு முழுவதும் முழங்கால் அளவுக்குத் தண்ணீர் போகிறதே, இது யாருக்கும் தெரியாதா? இந்த வடிகால் வசதியைச் செய்து தர இன்றுவரை சிந்தனை உண்டா?



சென்னையின் கூவம் நதிதானே கொசுப்பண்ணை. அந்தக் கொசுப்பண்ணையான கூவம் கடலோடு கலக்கும் இடத்தில் பம்பிங் செய்து இந்தக் கூவம் நதியில் கடல் நீரைக் கொண்டு வந்து சேர்த்து ஓரளவுக்குச் சுகாதாரத்தைப் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகளைப் பற்றி சிந்திக்க முடிகிறதா? இல்லை. என்ன காரணம்? அரசிடம் சம்பளம் பெறுகின்ற அதிகாரிகள் பல்வேறு இடையூறுகளின் காரணமாக சிலுவையைத் தூக்கத் தயாராக இல்லை, ஏனென்றால், பல்வேறு இடைஞ்சல்கள் வரும் என்பதால். ஆகவே, நான் குறிப்பிட விரும்புவது ஒரு எலக்டெட் பாடி இருக்குமேயானால், ஒரு தேர்வு செய்யப்பட்ட அமைப்பு இருக்குமேயானால்——அதிலே குறை கூட இருக்கலாம், ஆனால் அதைத் தேர்ந்தெடுப்பதற்கு அனுமதியுங்கள். அதுதான் நான் இங்கே குறிப்பாகக் கேட்டுக்கொள்ள விரும்புவது.

இறுதியாக ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். தொடர்ந்து நீங்கள் இப்படியே செய்து கொண்டிருந்தால் ஒரு வேளை மாநிலச் சட்டமன்றத்திலேயே ஒரு தீர்மானத்தைப் போட்டு, சட்டமன்றக் கால வரம்பைக் கூட்டிக் கொள்வதற்கு அரசியல் சட்டத்திலே திருத்தம் வேண்டுமென்று கேட்டாலும் கேட்பீர்கள் என்ற அச்சம் எனக்கு ஏற்படுகிறது. ஜனநாயகத்தைக் கண்டால் ஏன் இப்படிக் குமட்டுகிறீர்கள்? ஜனநாயகத்தைக் கண்டாலே அலர்ஜி ஏற்படுகிறதே. என்ன காரணம்? ஜனநாயக மரபுகளின் கழுத்தை நெறித்துக் கொல்லாதீர்கள், தயவு செய்து அவற்றை வாழவிடுங்கள் என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00)

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் மொழியப்பட்டிருக்கக்கூடிய இந்தக் கால நீட்டிப்புச் சட்டத் திருத்தங்களை நான் வரவேற்க விரும்பினாலும் ஜனநாயக உணர்வு அதற்கு இடம் தரவில்லையே என்று வருந்துகிறேன்.

இது கிட்டத்தட்ட இந்தச் சட்டமன்றத்திலே ஒரு சடங்காக மாறியிருக்கிறது. ஆறு மாதங்களுக்கு ஒரு முறை இந்த மன்றத்திலே தனி அதிகாரிகளின் காலக் கெடுவை நீட்டிப்பது என்பது சென்னையைப் பொறுத்தவரையில் 23 தடவைகளும், கோவையைப் பொறுத்தவரையில் 10 தடவைகளும், மதுரையைப் பொறுத்தவரையில் 4 தடவைகளும் மொழியப்பட்டிருக்கின்றன.

ஏதோ வாக்குப் பதிவு நடைபெறுவதிலே குறைபாடு இருப்பதாகவும் அதைச் செம்மைப்படுத்துவதற்காக கால நீட்டிப்புக் கேட்டிருப்பதாகவும், செம்மைப்படுத்திய பிறகு தேர்தலை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் விளக்கத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. இவற்றை எல்லாம் செம்மைப்படுத்துவதற்கு எவ்வளவு காலம் ஆகும் என்று குறிப்பிட்டுக் கூறப்பட வில்லை. அதிலும் குறிப்பாக, ஒவ்வொரு முறையும் செம்மைப்

படுத்தப்படக்கூடிய காரணம் மாறி, மாறி வருகிறபோது எதிர்க் கட்சிகளிலே இருக்கக்கூடியவர்களுக்கு ஏற்படுகின்ற சந்தேகம் நியாயமானதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

போதாததற்கு ஆளும் கட்சியின் சார்பாகப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சமரசம் அவர்கள் ஒட்டுமொத்தமாக சென்னை மாநகராட்சியிலே இருக்கக்கூடிய வாக்காளர்கள் எல்லாம் கூட ஏதோ தவறு செய்துவிட்டது போலவும் பலரும் அப்படி தவறு செய்யாமல் தடுப்பதற்குச் சட்டத்தைத் திருத்தி அமைக்க காலத்தை நீட்டித்துக் கேட்டிருப்பதாகவும் கூறினார் கள். அதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். (குறுக்கீடு) எல்லா வாக்காளர்களும் தவறு செய்திருக்க முடியாது. தங்களுக்கு இருக்கிற வாக்குரிமையை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதைத் தெரிந்துகொண்டு, ஜனநாயகத்தைப் புரிந்துகொண்டு, ஜனநாயக மரபைத் தெரிந்துகொண்டு, தவறு செய்பவர்கள் தனி அதிகாரிகளாக இருந்தாலும் அதைச் சுட்டிக் காட்டி கேட்கின்ற திறமை படைத்த வாக்காளர்களைத் தவறு செய்தார்கள் என்று எப்படி ஒட்டுமொத்தமாகக் கூற முடியும்? ஏனென்றால் ஆளும் கட்சியிலும் சில உறுப்பினர்கள் தேர்ந்தெடுக் கப்பட்டிருக்கிறார்கள் அல்லவா? இந்த மாநகராட்சி மக்கள் தங்களுடைய வாக்குரிமையை வெளிப்படுத்திய திறமையை, அறிவாற்றலை குற்றம் சொல்ல யாருக்கும் உரிமை இல்லை. அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் அல்லது வாபஸ் பெறவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தயவுசெய்து இதைப் பெரிதுபடுத்த வேண்டாம். ஏற்கெனவே அது நீக்கப்பட்டு விட்டது. அடையாள அட்டை கொடுக்கப்பட வேண்டும் என்பது அவருடைய கருத்து.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்: துணைத் தலைவரவர்களே, தேர்தலைத் தள்ளிப்போடுவதால் வாக்காளர்களைச் சந்திக்க உங்களுக்கு அச்சம் ஏற்படுகிறது என்று நாங்கள் சொல்கிறோம்.

டாக்டர் கே. சமரசம்: மாநகராட்சியிலே இருக்கக்கூடிய வாக்காளர்களை சிலர் திசை திருப்பிவிட்டு, அவர்களுடைய வாக்குரிமையை மோசடி செய்கிறார்கள். அப்படிப்பட்ட நிலை மைகளைத் தடுப்பதற்கு தகுந்த சூழ்நிலையை ஏற்படுத்த இந்தத் திருத்தச் சட்டம் வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ** ** என்பது அப்போதே நீக்கப்பட்டுவிட்டது. அதுபற்றி மேலும் பேச வேண்டாம்.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்: சிலர் திசை திருப்பி விடுவதினாலே மாநகராட்சி மக்கள் மனம் மாறக்கூடியவர்கள் அல்ல. நீங்கள் ஆயிரம்தான் குறை சொல்லுங்கள், இந்த மாநகராட்சி மக்கள் ** தவறு செய்தார்கள் என்று

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றன.



ஒட்டுமொத்தமாகச் சொல்லுகின்ற குற்றச்சாட்டை ஒருக்காலும் நாங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டோம். (குறுக்கீடு) அந்தக் குற்றச் சாட்டை ஒருகாலத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

The hon. Member is casting aspersions on the capacity of Madras City voters. That should not go on record. We will never allow it.

*திரு. மா. சின்னராசு: துணைத் தலைவரவர்களே, ஒரு விளக்கம் மட்டும் சொல்ல விரும்புகிறேன். சென்னை மாநகர வாக்காளர்களைப்பற்றி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சந்தேகித்து ஏதோ பேசியது போலவும் அதைத் தடுத்து, அந்த வாக்காளர்களை மற்றவர்கள் காப்பாற்றுவது போலவும் விவாதம் இருக்கிறது. அப்படி இல்லை. சென்னை மாநகரில் ** வாய்ப்பு இருக்கிறது. ஒரு சிலர் அதைப் பயன்படுத்தி, ஓட்டுப் போட்டிருக் கிறார்கள். இதைப் பலர் உணர்ந்து கூறினார்கள். இந்தக் குறையைப் போக்க வேண்டும் என்பதற்காக போட்டோ பற்றிச் சொல்லி, வாக்காளர்கள் ஏமாறக்கூடாது என்று இங்கே சொன் னார்கள். அதை வைத்துக்கொண்டு மாநகராட்சி மக்களை அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வினர் குறை சொன்னார்கள் என்ற கருத்தைக் கொண்டுவர வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, * * என்று வாதத்திற்கு ஒப்புக் கொள்வதாக இருந்தாலும் அது யாருக்கு போடப்பட்டது என்பது எப்போதாவது நிரூபிக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ப்ரொசீடிங்ஸிலே இருப்பது என்னவென்றால் சில வாக்காளர்கள் ஓட்டுப் போடச் சென்றபோது உங்களுடைய வாக்குகள் போட்டாகிவிட்டது என்று சொன்னார்கள். எனவே அதைத் தடுக்க சட்டத்தில் முறைப்படுத்தி, நெறிப்படுத்தி கொண்டுவாருங்கள் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே நீங்கள் பேசும்போது உங்கள் கருத்தைச் சொல்லலாம்.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்: பேரவைத் துணைத், தலைவர் அவர்களே, மாநகராட்சியிலே இருக்கக்கூடிய தொகுதி யிலே தான் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டது என்பதல்ல. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சமரசம் அவர்கள் தேர்ந்தெடுக்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

கப்பட்ட தொகுதியிலே கூட இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடந்து
இருக்கின்றன. அதை மாண்புமிகு உறுப்பினர் ஒத்துக் கொள்ள
வேண்டும். (குறுக்கீடுகள்) எனவே இதை நியாயப்படுத்த
விரும்பாதீர்கள். ஜனநாயகத்தையே கொச்சைப்படுத்துவதாக
அது அமைந்துவிடும்.

திரு. சோ. மா. இராமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, ** தொகுதியைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவ்வாறு குறிப்பிடப்
பட்டதாகத் தெரியவில்லை. தொகுதியின் பெயர் குறிப்பிடப்
பட்டதாகத் தெரியவில்லை. (குறுக்கீடுகள்) * என்று சொல்ல
வில்லை. அப்படி இருந்தால் அதை நீக்கலாம்.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்: பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாநகராட்சியிலே நடந்த உபதேர்தல் **
தொகுதியிலேதான் நடந்தது. பெயர் குறிப்பிடாவிட்டாலும்
கூட அவ்வாறு குறிப்பிடுவது....(கூச்சல், குழப்பம்)

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,
வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுத்தான் நாங்கள் வந்திருக்
கிறோம் (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தொகுதி பெயர்
இருந்தால் நீக்குவதில் தவறில்லை. அதுபற்றிப் பார்த்துவிட்டு
பின்னர் நீக்குகிறேன்.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்: பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, நீங்கள் சொல்வதில் பூரண நம்பிக்கை எனக்கு
உண்டு.

ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே
சொன்னதை நியாயப்படுத்த விரும்பும்போதுதான் அதைப்
பொறுத்தவரையில் என்னுடைய வழக்கத்திற்கு மாறாக நான்
பேசவேண்டிய நிலை ஏற்பட்டது. அதற்காக உங்களிடத்தில்
நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். ஆனால் ஒன்றை
ஒத்துக்கொள்ளவேண்டும். ஆயிரம் காரணங்கள் சொன்னாலும்
தமிழகத்தினுடைய தலைநகரத்திலே ஒரு மாநகராட்சிக்கு 12
ஆண்டுக்காலம் தேர்தல் நடத்தப்படாமல் இருக்கிறது என்பது
ஆளும் பொறுப்பிலே இருப்பவர்களுக்கு எந்த விதத்திலும்
பெருமை சேர்ப்பதாக அமையாது.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப்பெற்றது.



இந்தக் குறிப்பைப் பார்க்கும்போது கூட எங்களுக்கு ஏற்படக்
கூடிய நியாயமான சந்தேகம்—அடுத்த 6 மாத காலத்திற்
குள்ளாகவாவது இது நடக்குமா என்ற ஐய உணர்ச்சி இருப்பதால்
தான் அருமை நண்பர் டாக்டர் சௌரிராஜன் போன்றவர்கள்
இப்போதாவது அறிவியுங்கள் என்று கேட்டுக்கொண்டு இருக்
கிறார்கள். ஏனென்றால் ஏற்கெனவே கொடுக்கப்பட்ட
வாக்குறுதிகளில் ஒன்று கூட காப்பாற்றப்படவில்லை. இப்படித்
தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லை என்றாலும் கூட
இந்தச் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக்
கொண்ட ஒரு ஆலோசனைக் குழுவையாவது அமைத்தால்
அவர்கள் அதிகாரிகளுக்கு யோசனை சொன்னால் நடக்கக்கூடிய
வேலைகள் இன்னும் கொஞ்சம் முனைப்பாகவும், செம்மையாகவும்
நடக்க ஏதுவாகும் என்று தெரிவிக்கப்பட்டதை மாண்புமிகு
முதலமைச்சர் அவர்களும் ஒப்புக் கொண்டு High Level Committee
on Corporation என்ற மேம்பாட்டுக் குழுவை அமைத்தார்கள்.
அதற்கு அவர்களே தலைவராக அமர்ந்தபோது காரியங்கள் மிகத்
துரிதமாக நடக்கும் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டது.

(பிற்பகல் 1-10)

ஆனால் அந்தக் குழு ஒரே ஒரு முறைதான் கூடியதே தவிர
அதற்குப் பிறகு இரண்டாண்டுக்காலம் ஆகியும் அதைப்பற்றிய
குறிப்பு எதுவும் கொடுக்கப்படவில்லை, அந்தக் குழு கூட்டப்
படவே இல்லை. இதுபற்றி நான் ஒருமுறை இதே மன்றத்தில்
கேட்டபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேர்ந்தெடுக்கப்
பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுடன் கூட நான்
அஃபிஷியல் மெம்பர்ஸ் என்ற வகையில் நகரத்தினுடைய
பிரதிநிதிகள் சிலரையும் சேர்த்து விரிவுபட்ட குழுவாக அமைத்
தால் காரியங்கள் நடக்கும் என்று சொன்னார்கள். அதுவும்
நடக்கவில்லை. மாவட்டங்களைப் பொறுத்தவரையில் District
Development Council-இல் ஆங்காங்கே இருக்கக்கூடிய சட்டமன்ற
உறுப்பினர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இருந்து
ஆலோசனை சொல்வதற்கு வழி இருக்கிறது. ஆனால்
மாநகராட்சியில் அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற
உறுப்பினர்கள் ஆலோசனை சொல்வதற்குக் கூட ஒரு வாய்ப்பு
இல்லாத நிலை பற்றி டாக்டர் சௌரிராஜன் அவர்களால்
வேதனையோடு சொல்லப்பட்டது. அவ்வாறு நண்பர் டாக்டர்
சௌரிராஜன் அவர்கள் மெத்த ஆதங்கத்தோடு சொல்லியதைப்
போன்று, ஒரு சட்டமன்ற உறுப்பினர், கார்ப்பொரேஷன்
உறுப்பினர்கள பத்து பேர்களுடைய பொறுப்பைச் சேர்த்து
கவனிக்க வேண்டிய பொறுப்பில் இருக்கக்கூடிய அவல நிலையை
மாற்றி அமைக்க வேண்டும். அதில் நீங்கள் சற்று உண்மையான
அக்கறை காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.
மற்றவர்கள் வெற்றி தோல்வி பற்றிச் சொல்லுவார்கள். ஆனால்
அதைப் பற்றி யாருமே அறுதியிட்டுச் சொல்ல முடியாது என்பது

என் கருத்து நிலைமை மாறக்கூடும். தோல்வியுற்றவர்கள் வெற்றி பெற வாய்ப்புண்டு; வெற்றி பெற்றவர்கள் தோல்வியுறலாம். ஆளும்கட்சியில் இருப்பவர்கள் எதிர்க்கட்சியாகவும், எதிர்க் கட்சிகள் ஆளும் கட்சியாகவும் மாறலாம். அது எல்லாம ஜனநாயக மரபு. அதை யாரும் தடுத்து நிறுத்த முடியாது. அதைக் காரணமாக யார் காட்டினாலும் நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன்.

இன்னும் எத்தனை நாட்கள் தமிழகத்தினுடைய தலைநகரை, அதுவும் பெருநகரை, அதன் மக்களுக்கு அடிப் படை உரிமைகளை மறுத்து, அதிகாரிகளிடத்திலேயே முழுக்க முழுக்க பொறுப்பை ஒப்படைக்கப் போகிறீர்கள்? அப்படி ஒப்படைப்பது என்ற நிலைமை மிக நல்ல ஜனநாயக முறை ஆகாது, பெருமை தேடித் தராது என்பதை மாத்திரம் சொல்லிக் கொள்கிறேன்.

இந்த வாய்ப்பினை ஒட்டி அவரவர்கள் அவரவர்களுடைய தொகுதி பிரச்னைகளைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். பொதுவாக நகரம் எவ்வளவு சீரழிந்து இருக்கிறது என்பதை நான் கூட குறிப்பிட்டுக் காட்ட விரும்பினாலும் அதற்கு நேரம் போதாத காரணத்தாலே சொல்லவில்லை, இங்கே இன்றைக்கு 2 ஆயிரம் குடிசை வாழ் பகுதிகள் இருக்கின்றன என்றால், ஒவ்வொரு நாளும் 3 புதிய குடிசைப் பகுதிகள் இந்த நகரத்திலே தோன்றிக் கொண்டிருக்கின்றன, அதை எப்படித் தடுத்து நிறுத்தப் போகிறீர்கள்? மேல் கூரை கூட இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கிற மக்களுக்கு எப்படி நீங்கள் வாழ்க்கை வசது களை, அடிப்படை வசதிகளைத் தேடித் தரப் போகிறீர்கள் என்பதைப் பற்றி எல்லாம் இந்த அரசு தீவிரமாக சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, ஒன்றே ஒன்றைக் குறிப் பிட விரும்புகிறேன்.

உலகத்தில் இருக்கக்கூடியவர்கள் யார் தமிழகத்திற்கு வந்தாலும் மெரினா பீச்சைப் பார்த்துப் பாராட்டுகிறார்கள். உலகத்திலேயே சிறந்த கடற்கரை என்றும் சொல்லுகிறார்கள். ஆனால், அதற்கு Parallel-ஆக போகக்கூடிய அடுத்த தெருவைப் போய்ப் பார்த்தார்கள் என்றால், என்ன சொல்வார்கள் என்று சொல்லவே முடியாது. அவ்வளவு சீர்கெட்ட நிலையிலே ஒரு தெரு, மாநகராட்சியினுடைய பகுதியிலே, மெரினா கடற்கரையை ஒட்டிய பகுதியிலே இருக்கிறது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உணர்வார்கள் என்று கருதுகிறேன். அவர்கள் உள் ளாட்சித் துறைக்குப் பொறுப்பேற்றது எங்களுக்கெல்லாம் இந்த விஷயத்தில் ஒரு நம்பிக்கையை அளித்திருக்கிறது. அதிலும் காலையிலே தன்னுடைய தொகுதியை மாத்திரம் வலம் வரக்கூடிய அமைச்சராக இல்லாமல் எல்லா ஊர்களிலும் வலம் வரக்கூடிய அமைச்சராக இருக்கிறார்கள். ஆகவே, இந்த ஊரிலும் இந்தப் பகுதியை அவர் சுற்றிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



இன்னொன்றையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அண்ணா சமாதிக்கு முன்னாலே, ரோடு போடக்கூடிய ஒரு மெஷின் வைக்கப்பட்டிருக்கிறது. அந்த மெஷினையும் அங்கே சமாதியாக்கியிருக்கிறார்களா என்னவோ தெரியவில்லை. அது கொண்டு வரப்பட்ட போது செய்யப்பட்ட விளம்பரங்களைப் பார்த்த போது ஏதோ நகரத்தினுடைய சாலைகள் எல்லாம் செப்பனிடப்பட்டு மிக அழகான நகரமாக இது உருவாகப் போகிறது என்ற நம்பிக்கை ஏற்பட்டது. அதன் மூலம் ஒரு நாளைக்கு 10 மைல் தூரம் ரோடு போடலாம் என்று சொன் னார்கள். நான் கூட கணக்குப் போட்டுப் பார்த்தேன், அதன் படி ஒரு மாத காலத்திலே இந்த நகரத்தின் ரோடுகளைச் சீர் திருத்தி நெடுஞ்சாலையினுடைய பராமரிப்பிற்கும் கூட பயன் படுத்திக் கொள்ளலாம் என்று கருதினேன். ஆனால் அது அங்கே இப்போது படுத்துக் கிடக்கிறது. அது யாருக்குச் சொந்தமானது? அரசுக்குச் சொந்தமானதா? மாநகராட்சிக்குச் சொந்தமானதா? ஏன் உபயோகப்படுத்தவில்லை? தனியாருக்குச் சொந்தமானது என்றால், அப்படிப்பட்ட ஒரு அழகான இடத்தில் சுற்றுலாப் பயணிகள் நாள்தோறும் வந்து செல்லக் கூடிய ஒரு இடத்தில், அண்ணா சமாதி பெற்றிருக்கக் கூடிய இடத்தில், அவ்வளவு அழகையும், சிறப்பையும் கெடுக்கக் கூடிய நிலையில் அந்த இயந்திரம் அங்கே படுத்துக் கிடக்க வேண்டுமா? அதை அங்கிருந்து அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு ஏற்கெனவே தந்த வாக்குறுதிகளைப் போல இல்லாமல் இதற்கு விரைவிலே தேர்தலை நடத்துங்கள். அப்படித் தேர்தல் நடந்து, முறை யாக மாநகராட்சி உறுப்பினர்கள் வந்து செயலாற்றுவதற்கான இடைப்பட்ட காலத்திலே தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களையும், மற்ற குடிமக்களையும் இணைத்து ஒரு ஆலோசனைக் குழுவை அமைத்து, அவர்கள் அதிகாரிகளுக்கு ஆலோசனை தரவும், அவர்கள் செயல்படக்கூடிய பணிகளைப் பற்றி கண்காணிக்கவும் வாய்ப்புத் தரவேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்,

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து திரு. கு. ரமணி. அவர் பேசுவதற்கு முன், இங்கே எழுப்பப் பெற்ற பிரச்னை குறித்து ஒரு விளக்கம். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சமரசம் அவர்கள் பேசிய குறிப்புகளைப் பார்த்தேன். * * என்ற வார்த்தைகளை அவர் பயன்படுத்தவே இல்லை. (திரு. சோ. மா. இராமச்சந்திரன் எழுந்தார்), அந்த வார்த்தையை நீங்கள் தான் பயன்படுத்தியிருக்கிறீர்கள். நீங்கள் வேண்டுமானால் உங்களுடைய பேச்சைப் படித்துப் பார்த்து விட்டு பிறகு பேசுங்கள். நான் இப்போது குறிப்பிட்ட அந்த வார்த்தையையும் குறிப்பேட்டில் இருந்து நீக்குகிறேன்.

**திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் :** நீங்கள் இப்படி சொன்னால், எங்களுக்கெல்லாம் பெருத்த ஆச்சரியமாக இருக்கிறது. **

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அப்படியெல்லாம் இல்லை. ஓட்டுப் போடப் போனவர்கள், அவர்கள் ஓட்டுப் போடுவதற்குச் சந்தர்ப்பம் இல்லாமல் திரும்பி விட்டார்கள் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பிட்டு, டாக்டர் சமரசம் அவர்கள் அதைச் சொல்லவில்லை. இப்போது, அந்த வார்த்தையே குறிப்பேட்டில் இல்லை. எடுத்தாகிவிட்டது. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள் திரு. கு. ரமணி அவர்கள் பேசட்டும்.

*திரு. கு. ரமணி : துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்த மசோதாக்கள் மீது கொஞ்சம் சூடானதாகவும், அதே சமயத்தில் கொஞ்சம் கருத்து ஆழத்துடனும் விவாதங்கள் நடக்கின்றன. சூடு அதிகமாக ஏறாமல் உண்மையான கருத்துக்களை வெளியிடுவதுதான் சரியாக இருக்கும். அந்த முறையில் விவாதம் நடப்பது அவசியமென்று கருதுகிறேன்.

கோவை மாநகராட்சி சம்பந்தப்பட்ட வரையில் அது மாநகராட்சி ஆக்கப்படாமல் இருந்திருந்தால் இன்றைக்கு அதற்குத் தேர்தல் நடந்து கவுன்சில் வந்திருக்கும். அதுதான் உண்மை. அதுவும் போயிற்று, இதுவும் போயிற்று. இப்போது நாம் என்ன செய்வது என்பதுதான் யோசிக்க வேண்டிய விஷயம். 11-6-1986 வரைக்கும் ஒரு அவசரச் சட்டம் கொண்டு வந்தபோது நான் இங்கே அப்போது பேசினேன். நீங்கள் இப்போதாவது தேர்தல்நடத்துவதற்கு ஒரு டைம் சொல்லுங்கள் என்று. கட்டாயம் நடக்கும் என்று சொன்னார்கள். ஆனால் நடக்கவில்லை. இப்போது போட்டிருக்கிற இரண்டாவது அவசரச் சட்டத்திற்கு டிசம்பர் 11-ம் தேதி வரைக்கும் உயிர் இருக்கிறது. அது முடிந்த பிறகு தேர்தல் நடக்குமா என்று கேட்டால் நடக்காது. ஏனென்றால் அதற்கு முன்னாலே இப்போது முன் கூட்டியே, நாங்கள் ரொம்ப விரிவான ஒரு நல்ல சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்பதற்காக மறுபடியும் இதை ஆறு மாதங்கள் தள்ளுகிறோம் என்று ஒத்திப் போடப்படுகிறது. இப்படி 6 மாதம், 6 மாதம் என்று போய்க்கொண்டே இருக்கிறது. அது மாநகராட்சி ஆவதற்கு முன்பு, பல்லாண்டுகள் முன்பு மற்ற எல்லா முனிசிபாலிட்டிகளைப் போலத் தேர்தல் நடந்து, அதற்குப் பிறகு காலாகாலத்தில் தேர்தல் நடத்தப்படாமல் இருந்த இடம், ஆகவே அப்படிப்பட்ட நிலை அங்கே வந்தது, இதேமாதிரி சில பிரச்னைகள் சென்னைக்கும் இருக்கிறது, மதுரைக்கும் இருக்கிறது. ஆனால் கோவையில் இருப்பது ஒரு பிரத்யேகமான நிலை, இந்த மாநகராட்சித் தேர்தல் நடக்குமென்று நாம் எதிர்பார்த்தோம். ஆனால் முடியவில்லை. இன்னும் ஒன்றை நான் கேட்க விரும்புகிறேன். உணர்ச்சி வசப்படக் கூடாது. எந்தப் பக்கத்தில் இருந்தாலும் சரி, பஞ்சாயத்துத் தேர்தல்கள் பல ஆண்டுகள் நடக்காமல் இருந்தன. அதேமாதிரி



மாநகராட்சி, நகராட்சித் தேர்தல்கள் பல ஆண்டுகள் நடக்காமல் இருந்தன. கடுமையான விவாதத்தை நாம் இந்த மன்றத்திலே நடத்தியிருக்கிறோம், தேர்தல் நடத்தாமல் இருப்பது ஜனநாயக முறைக்குச் சரியானதல்ல என்று. இதை இன்றைக்கும் சொன்னோம், அன்றைக்கும் சொன்னோம். என்றைக்கும் அதைத் தானே சொல்ல வேண்டும். வேறு வழி என்ன? இந்தக் காலத்தில்தான் மூன்று முறை சட்டமன்றத்திற்கும், பாராளுமன்றத்திற்கும் நாம் தேர்தல் நடத்தினோம். ஏன் இதற்கு நடத்த முடியாது? இதற்குப் பதில் இல்லை. பதில் சொல்லமுடியாத கேள்வி இது. ஆகவேதான் ஆளும் கட்சியோ அல்லது வேறு எந்தக் கட்சியாக இருந்தாலும் அதற்குப் பதில் சொல்ல முடியாது. அப்படியானால் இன்றைக்குப் பல உறுப்பினர்கள், அல்லது கட்சித் தலைவர்கள் கிளப்பக்கூடிய கேள்வியானது ஒரு நியாயமான கேள்விதான். அதற்கு ஆளும் கட்சி பதில் அளிக்க வேண்டியது தான் ஜனநாயக முறை.

பஞ்சாயத்து, முனிசிபாலிட்டி தேர்தலில் ஏற்பட்டிருக்கிற பின்னடைவு அதே சூட்டோடு, அதே வேகத்தோடு இந்த மூன்று மாநகராட்சிகளுக்கும் தேர்தல் நடத்தினால் தோல்வி ஏற்படுமோ என்று அரசியல் தந்திரம் படைத்தவர்கள் கட்சிக்காரர்கள் சிந்திக்க மாட்டார்களா என்றால் சிந்திப்பார்கள். அந்தச் சிந்தனைதான் அடிப்படை. 'ஆற்றில் நின்று அரகரா என்றாலும் சோற்றில் இருக்குதடா தம்பி சொக்கலிங்கம்' என்பதைப் போல அங்கே தான் இருக்கிறது விஷயம் ஆகவே அப்படி ஒரு பின்னடைவு ஏற்பட்டால் பின்னாலே வரக்கூடிய பொதுத் தேர்தல்கள் போன்றவை பாதிக்கப்படுமா? இன்னும் இதுபோன்ற பல காரணங்கள் இருக்கலாம். ஆகவேதான் மக்கள் அதைக் கேட்கிறார்கள். அதற்கு நாம் சிம்பு வைத்து பலவிதமான நகாசு வேலைகளை வைத்துப்பேசும்போது விஷயங்கள் சூடேறிப்போய் விடுகிறது. லயன் விட்டு வேறு எங்கோ போய்விடுகிறது. நாம் என்ன சொல்கிறோம் என்றால் இப்படிப்பட்ட முறையை இந்த அரசு கையாள்வது சரியல்ல. இதைக் கைவிட வேண்டும். தேர்தலில் உங்களுக்கும் சக்தி இருக்கிறது. மற்றவர்களுக்கும் சக்தி இருக்கிறது. எதிர்த்து நின்று இந்தத் தேர்தல் போராட்டம் நடக்கட்டும். ஜனங்களுடைய பிரச்னைகள் பேரில் தேர்தல் நடக்கட்டும். அதிலே நல்ல முடிவு ஏற்படட்டும். தோல்வி வந்தால் தோல்வியை ஏற்றுக்கொண்டு திரும்பவும் அதை வெற்றியாக மாற்றுவதற்கு முயற்சி எடுப்பதுதானே முறை.

(பிற்பகல் 1-20)

. சென்ற பொதுத் தேர்தலில் நாங்கள் பட்ட அவஸ்தை குறித்து எனக்கு முன்னாலே பேசிய சில உறுப்பினர்கள் சொன்னார்கள். கோவை மாநகரத்தில் ஜனங்கள் கேட்டது உண்மைதான். நீங்கள் சட்டசபையில் போய் செய்வது ஒரு பக்கம் இருக்கட்டும்

[திரு. கு. ரமணி] [1986 நவம்பர் 17

இப்போது எங்களுக்கு வேண்டியது குப்பை மேடுகளை அகற்றுங்கள் சாக்கடைகளினுடைய துர் நாற்றத்தைக் குறையுங்கள், கொசுவை அகற்றுவதற்கு வழி செய்யுங்கள், எந்த இடத்திலேயும் ரோடுகள் ரிப்பேர் இல்லாமல் இருக்கும்படியான நிலைமைக்கு மாற்றங்கள் வேண்டும் என்றுதான் அவர்கள் சொல்கிறார்கள். சில சாதாரண முனிசிப்பாலிட்டிகளிலே செய்யக்கூடிய காரியங்கள் எல்லாம் செய்யப்படாமல் இருக்கின்றன. சுடுகாட்டை குப்பைமேடாக மாற்றுகிறார்கள். அப்படியானால் வேறு இடங்களுக்கு இறந்தவர் களைக் கொண்டுபோக முடியுமா? இதற்குப் பதில் சொல்லுங்கள், இதைப் பற்றிப் பேசுங்கள் என்று தான் மக்கள் கேட்கிறார்கள். கோவை மாநகரத்திலே போட்டியிட்ட அத்தனை மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் இது தெரியும். இந்த விஷயத்தைப் பற்றித்தான் நாங்கள் பேச வேண்டியிருந்தது. வேறு எந்த அரசியலைப் பற்றியும் நாங்கள் அப்போது பேசவில்லை. அவ்வளவு உணர்ச்சி வசப்பட்டு இருக்கிறார்கள் ஜனங்கள். இந்த நிலைமை களுக்கு இன்றைக்கும் மாற்றங்கள் ஏற்படவில்லை. ஒரு தேர்ந் தெடுக்கப்பட்ட கவுன்சில் இருந்தால் உடனே எல்லாமே மாறி விடும் என்று நான் சொல்லவில்லை.

எனக்கு ரொம்பவும் வேண்டிய மரியாதைக்குரிய உறுப்பினர் திரு. சின்னராஜ் அவர்கள் எங்கேயோ சில மாநகரங்களைப் பார்த்துவிட்டு, சென்னை நகரத்தை சொர்க்கம் என்று சொன்னார்கள். நான் கேட்கிறேன், சொர்க்கத்தினுடைய டெபனிசன் என்ன? அதாவது விளக்கம் சொல்ல முடியுமா? அப்படி சொல்லமுடியாது. சொர்க்கத்திற்கு எந்த டெபனிசனும் கொடுக்க முடியாது சொர்க்கம் என்று ஒன்று இருக்கிறதா? (குறுக்கீடு) நரகமும் அப்படித்தான். சொர்க்கத்திற்கு விளக்கம் சொல்ல முடியாது. சொர்க்கம் இருக்கிறதா? யார் தீர்மானித்தது? எந்த கோர்ட் ஜட்ஜ்மென்ட் கொடுத்தது? அங்கே போனவர்கள் 15 பைசா கார்டையாவது போட்டு இருக்கிறார்களா? போடவில்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சொர்க்கத்திற்கும் விளக்கம் இல்லை, நரகத்திற்கும் விளக்கம் இல்லை என்று உறுப் பினர் சொல்லிவிட்டார்கள். அவர் தொடர்ந்து பேசட்டும்.

திரு. கு. ரமணி : நானே என்னுடைய விளக்கத்தைச் சொல்லி விடுகிறேன். சொர்க்கம் என்று சொல்வது ஒரு பழமொழிச் சொல். ஒரு மிதலாஜியிலிருந்து உருவாக்கப்பட்டதை, நாம் சொல்லிக்கொண்டு வருகிறோம். நாம் என்ன அர்த்தப்படுத்து கிறோம் இன்றைக்கு இந்த விஞ்ஞான யுகத்திலே என்றால், எல்லா விதமான நன்மைகளும் இங்கே கிடைக்கவேண்டும். அது அங்கே கிடைத்துக்கொண்டிருக்கிறது சொர்க்கத்திலே, நமக்குத் தெரியாத இடத்திலே, போய்த் திரும்பி வராத இடத்திலே, கடிதப் போக்கு வரத்து நடத்த முடியாத இடத்திலே, ரேடியோ, தந்தி இல்லாத இடத்திலே, என்ன இருக்கிறது என்று நமக்குத் தெரியாது. ஆகவே



1986 நவம்பர் 17] [திரு. கு. ரமணி]

கிடைக்க வேண்டும் என்பதுதான் நல்ல வாழ்க்கை இங்கே வேண்டும். Not in the Heaven, but on சொர்க்கம். அது இங்கே வேண்டும். ஆகவே அதை the earth. அதைத்தான் நாங்கள் சொல்கிறோம். சென்னை வைத்து நாம் வாதாடிப் பிரயோஜனம் இல்லை. என்றைக்காவது தடுக்க நகரத்திலே கூவத்தினுடைய நாற்றத்தை முடியுமா? அப்படித் தடுத்தால் அதுவே பெரிய சாதனை. இப்படித்தான் நாம் விஷயத்தைப் பார்க்கவேண்டும். இதுமாதிரி கோவை மாநகரத்திலே இருக்கிறது, பல இடங்களிலே இருக்கிறது. ஆகவே இந்த மாதிரி நடவடிக்கைகளை எடுப்பதற்குப் பொதுஜன பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்துவிட்டால் நல்லது, எல்லாமே ஒரே நாளிலே முடிந்துவிடுமா? யார் சொல்வது அப்படி? செய்ய முடியாது. ஒரு நாளிலே முடியாது, ஒரு வருடத்திலே முடியாது, அதற்கு நாள் பிடிக்கும். தேர்தல் நடந்தால், ஜனங்களுக்கு ஒரு திருப்தி ஏற்பட்டு, நம்முடைய பக்கத்திலே ஆட்கள் இருக்கிறார்கள். நாளைக்கு ஏதாவது பிரச்சனை என்றால், அவர்களைப் பிடித்துக் கொள்ளலாம். தெரு சுத்தமாக இல்லை, சாக்கடை சுத்தமாக இல்லை, ரோடு சுத்தமாக இல்லை, அவர்களை கேட்கலாம் என்று அவர்களுக்கு தைரியம் இருக்கும், நம்பிக்கை இருக்கும். அந்த ஜனங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் வந்து பதில் சொல்ல வேண்டி யிருக்கும். இப்போது சட்டமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொரு தெருவிலேயும் போய் நின்று, குறைகளைக் கேட்கும்போது, எங்கள் வீட்டிலே கழிவு தண்ணீர் போகவில்லை என்று சொன்னால், சட்டமன்ற உறுப்பினர்கள் தண்ணீர் அகற்றிவிட முடியுமா? அவர்கள் அங்கேதான் வருகிறார்கள். ஆகவே குறைந்த பட்ச ஜனநாயக எண்ணங்களை, மக்களுடைய எண்ணங்களை அவர்கள் செயல்படுத்துவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு கவுன்சிலை வைக்காமல் இருப்பதற்கு எந்த நியாயமும் சொல்வதற்கில்லை. எந்தச் சட்டமும் குறுக்கே நிற்கவில்லை. இப்போது சொல்லக்கூடிய காரணத்தை வைத்துப் பல ஆண்டு களுக்குத் தள்ளிக்கொண்டு போக முடியும். நல்ல சட்டம், விரிவான சட்டம் கொண்டு வருவதற்கான ஆராய்ச்சி என்று சொல்லிக்கொண்டு போக முடியும். இது தவறு, இதை அரசாங்கம் செய்வது சரியல்ல. ஆகவேதான் நாங்கள் அறிமுக நிலையிலேயே இதை எதிர்த்தோம். நீங்கள் தேர்தலுக்கு நாள் குறியுங்கள். அதைச் சொல்லுங்கள் என்றுதான் நாங்கள் இப்போதும் கேட்கிறோம். இதை மேலும் நீட்டிக்கமாட்டார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதமும் நீங்கள் கொடுத்தால் கூட, நாங்கள் எப்படி எடுப்பது, எடுத்தால் நிறைவேறாது. ஆகவே, இது சரியில்லை. தேர்தலை நடத்த வேண்டும்.

மாநகராட்சியில் நடக்கும்படியான பிரச்சனைகளைப் பற்றி பேசிக் கொண்டு இருக்க முடியாது. சுகாதாரம் என்பது பல விதத்திலே சீரழிந்து இருக்கிறது. மலேரியா கொசு இல்லை என்று சொல்கிறார்கள், பல இடங்களில். அது எல்லாம் தப்பு. இந்தக் கொசுவினுடைய நிலைமை என்ன ஆயிற்று என்றால், அது பன்றியைக் கடித்து, அந்த பன்றி மேல் இருந்த கொசு நம்மைக்

கடித்து, மூளைக் காய்ச்சல் வந்து, அதற்கு மருந்தே இல்லை என்ற அளவிற்கு இப்போது நிலைமை வந்துவிட்டது. ஆகவே நிலைமை ரொம்பவும் மோசமாகிவிட்டது. உடனடியாக இதை கவனிக்கக்கூடிய நிலைமை இல்லை.

என்னுடைய தொகுதியிலே ஒரு பாதாள சாக்கடைத் திட்டம் பல கோடி ரூபாயை மண்ணுக்கு அடியிலே போட்டு பல வருடம் ஆயிற்று. பைப் புதைத்தாகிவிட்டது, வெட்டியாயிற்று, எல்லாம் செய்தாயிற்று. ஆனால் இன்றைக்கும் அந்தச் சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்ற முடியவில்லை. காரணம் 150, 200 ஏக்கர் நிலத்திலே கொண்டு போய் அந்தக் கழிவு நீரைப் பாய்ச்சி புல்லை வளர்க்கிற திட்டம் போட்டோம். அந்த ஊர் ஜனங்கள் பூராவும் அதை எதிர்க்கிறார்கள். ஒன்றும் பண்ண முடியவில்லை. பைப் அடியிலே பதித்து கிடக்கிறது. வேறு எந்த வழியும் செய்ய வில்லை. நாம் என்ன செய்வது? இப்படி நிலைமை வந்தால் என்ன ஆகும்? ஆகவே இதிலே ஜனங்களுடைய பிரதிநிதிகள் இருந்தால், அதிலே ஒருவிதமான விவாதம் வந்து, அந்த வட்டாரத்திலே உள்ள மக்களோடு பேசி, அதற்குத் தீர்வு காண வழி பிறக்கும். அது அப்படி நடக்கும்.

இதே மாதிரி வரி உயர்வை நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள். இந்தப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்து அவர்கள் உட்கார்ந்து வரி உயர்வு பற்றி பேசி தீர்மானிக்கட்டும் என்று சொல்லி சென்னை தண்ணீருக்குப் போட்ட அதிக வரியைக் கட்ட வேண்டாம் என்று தடுத்து நிறுத்தி இதே அவையில் முன்பு இருந்த மாண்புமிகு அமைச்சர் ஒருவரும் அதுவரைக்கும் இதை நிறுத்தி வைக்க வேண்டும் என்று சொல்லி நிறுத்தி வைத்து இருக்கிறார்கள். இன்று அதை எல்லாம் சேர்ந்து பழைய கணக்குகள் என்று சொல்லி பில் போட்டிருக்கிறார்கள். அந்தப் பில்களைப் பார்க்கிற பொது மக்களுக்கு ஆத்திரம் வருகிறது,

கோவை நகரம் ஒன்றுதான் குடிநீர்ப்பஞ்சம் இல்லை என்று இருக்கக்கூடிய ஒரு நகரம். அது ஒரு நல்ல அம்சம். அதை நாங்கள் பல இடங்களில் சொல்லியிருக்கிறோம். ஒரு முறை சிறு வாணி அணை நிரம்பி விட்டால் 6 மாதத்திற்கு அந்தத் தண்ணீர் நமக்கு விநியோகம் ஆகும். ஆனால் எல்லா இடத்திற்கும் ஒழுங்காக கிடைக்கிறதா என்றால் அப்படி இல்லை. வித்தியாசம் இருக்கிறது. இருந்தாலும் தண்ணீர் இருக்கிறது. ஆனால் தண்ணீருக்குப் போட்ட கட்டண உயர்வு, ஏற்கனவே இந்த நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. ப. உ. ச. அவர்கள் கோவையில் வந்து எல்லோரிடமும் மனுக்களை வாங்கும்போது அத்தனை பேரும் கேட்ட கேள்வி அதுதான். தண்ணீருக்கு இந்தக் கட்டண உயர்வு ரொம்ப அநியாயம். அதிகாரி களுடைய கமிட்டிதானே தீர்மானிக்கிறது. அதற்கு நீங்கள் இங்கே இருந்து உத்திரவு போடலாம். இதை மக்கள் எதுவும் செய்ய முடியாது. ஆகவே இதைக் குறைக்க வேண்டும்.





அதே மாதிரி வீட்டு வரி எத்தனை மடங்கு உயர்ந்து இருக்கிறது? இப்போது நீங்கள் சொல்லிக்கொண்டு இருக்கிறீர்கள் வீட்டு வரியை உயர்த்துங்கள், பணக் கஷ்டத்தைத் தீருங்கள் என்று. இதைப் பேசுவதற்கு மக்கள் பிரதிநிதிகள் எதுவும் செய்ய முடியாது. அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. இந்த நிலைமைகளை ஏன் அரசாகிய நீங்கள் தலையில் தூக்கிக்கொள்ள வேண்டும். ஜனநாயகப் பிரதிநிதிகளே பேசட்டுமே, அவர்கள் சட்ட விரோதமாக நடந்தால் நீங்கள் தலையிடுங்கள். அதை நீங்கள் செய்யாமல், இதை எல்லாம் முன்நிறுத்தி அதிகாரிகளை வைத்துச் செய்வது என்று சொன்னால் அது நல்லதல்ல. அதிகாரிகள் உங்களுடைய உத்திரவு இல்லாமல் அசைய மாட்டார்கள். அவர்கள் செய்வதற்கு உங்களைத்தான் மூல காரணமாக ஜனங்கள் நினைப்பார்கள். அந்த நிலையில்தான் இருக்கிறது நடைமுறை. அதனால்தான் இந்த வரி உயர்வுகள் எல்லாம் கூட புதிய கவுன்சிலர்கள் வந்தால் விவாதிக்க முடியும், குறைக்க வேண்டியதைக் குறைக்கலாம். அதே சமயத்தில் வரி உயர்த்தப்பட வேண்டியதும் இருக்கிறது. கோடிக்கணக்கில் மாநகராட்சிகள் பணம் செலவழித்து பூதாகாரமாக கட்டணம் எல்லாம் உயர்கிறது. அங்கே எல்லாம் இந்த வரி உயர்வு இருக்க வேண்டாமா? சட்டத்திற்கு முன்னால் அனைவரும் சமம் என்ற பெயரிலே அப்படிப்பட்டவர்களுக்கு எல்லாம் வரி குறைக்கப்பட்டும், ஏழைகளுக்கு வரி உயர்த்தப் பட்டும் இருக்கக்கூடிய நிலைமைக்கு மாறுதல் கொண்டு வருவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டாமா? அது இல்லை என்றால் ஜனநாயகத்தைப் பற்றி பேசுவதற்கு என்ன உரிமை இருக்கிறது? அதை நாம் செய்வதற்குத் தயாராக இல்லை. அதை நாம் செய்ய வேண்டும்.

தொழிற்சாலைகள் வளர்கின்றன. பல்வேறுவிதமான வழிகளில் வளர்கின்றன. ஆகவே அபிவிருத்தி அடையும் விதத்திலே தொழிற்சாலைகள் வளர்கிறபோது சலுகைகள் கொடுக்கலாம். வளர்ந்து நிற்கக்கூடிய இடத்திலே கோடீஸ் வரர்கள் மூலதனத்தைப் போட்டு தொழிற்சாலைகளைக் கட்டுவதோ, கட்டிடங்கள் கட்டுவதோ, பெரும் வியாபாரம் நடத்துவதோ செய்பவர்களுக்கு வரியை உயர்த்த முடியும். அப்படி வரியை உயர்த்துவதற்கு ஏழைகளை வருத்தாமல், மத்திய தர மக்களை வருத்தாமல், உழைப்பாளிகளுக்கு வருத்தம் கொடுக்காமல், கிட்டத்தட்ட அவர்கள் தலையில் சுமையை வைக்காமல், வரியைக் கண்டுபிடிப்பதற்கு புதிய திட்டத்தை உருவாக்கி வைக்க வேண்டும். அப்படி வைத்தால் நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயார். அதை நீங்கள் செய்யாமல் What kind of comprehensive legislation you are going to introduce -- we do not know. இதை எல்லாம் நீங்கள் செய்தால் இப்படி எல்லாம் இருக்காது. ஏன் என்றால் சமாசாரம் இவ்வளவுதான். ஆகவேதான் சொல்கிறேன், இப்படிப்பட்ட நிலைமைகளை மாற்ற வேண்டும்.

கல்வியைப் பற்றி ரொம்ப பேசலாம். பள்ளிக் கூடங்களைப் பரவலாகப் பார்க்கலாம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அடிக்கடி கோவை வருகிறார்கள். ஒரு முறை நானே உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கொண்டு போய் காட்டுகிறேன். 4, 5 பள்ளிக்கூடங்களை நான் குறிப்பிட்டுக் காட்டுகிறேன். வேண்டுமானால் At random you can select — போய் பார்க்கலாம். 6-வது வகுப்பு வரைக்கும் நிச்சயமாக பிள்ளைகளுக்கு உட்காருவதற்கு பென்ச் கிடையாது, பலகை கிடையாது. இன்று போய் உட்காருகிற பையனுடைய துணியை நாளைக்குத் துவைத்துக் கொடுக்கவில்லை என்றால் பள்ளிக்கூடத்திற்குப் போக முடியாது. இப்படி பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் இருக்கிறார்கள். இது நடக்கவில்லையா? பள்ளிக்கூடத்தில். ஆசிரியர்கள் உட்காருவதற்கு பென்ச், நாற்காலி இல்லாத நிலை இல்லையா? பள்ளிக்கூடங்களிலே. இந்தப் பள்ளிக்கூடங்களுக்கு எல்லாம் முதலாளிகள் யார்? கார்ப்பரேஷன் அல்லது முனிசிபாலிட்டி அல்லது பஞ்சாயத்து; அவர்கள்தான் முதலாளிகள். அவர்களுடைய சொத்துதான் இது. இதை அவர்கள்தான் செய்ய வேண்டும். இங்கிருந்து அரசாங்கத்திலிருந்து அவர்களுக்குத் தேவையான சில நிதி உதவிகளைச் செய்யவேண்டும். ஆனால் பிரதானமான பொறுப்பு அவர்களுடையதுதான். செய்கிறார்களா? இல்லை.

என்னுடைய வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது. அதனுடைய சுற்றுப்புறம் முழுவதும் அசிங்கப் படுத்தப்பட்டது. அதைத் தடுத்து நிறுத்துவதற்கு 3 வருடம் சண்டைப் போட்டு அப்புறம்தான் முள்கம்பி வேலி போட்டு தடுத்து நிறுத்தினோம். இப்போது கம்பி வேலியைக் கூட உடைத்து, வளைத்து அதன் மேலேயே ஆட்கள் உள்ளே போகக் கூடிய நிலைமை இருக்கிறது. அங்கே ஒரு வாட்ச்மேன் இல்லை. ஒரு பெண்கள் ஹைஸ்கூல் உருவாகி, 3, 4 வருடங்கள் ஆகியும் அங்கே பியூன் இல்லை, கிளார்க் இல்லை, ஸ்வீப்பர் இல்லை, ஆயா இல்லை. அந்தப் பள்ளிக்கூடம் எப்படி நடக்கும்? நான் மேற்கொண்டு விரிவாகச் சொல்லவில்லை. இப்படிப்பட்ட நடவடிக்கைகளை எல்லாம் இங்கே விவாதிக்க முடியுமா? இங்கே விவாதிக்க முடியாது. ஆகவேதான் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் இருக்க வேண்டும். ஜனநாயகம் என்பது வெறும் ஒரு வார்த்தை அல்ல. ஜனநாயகத்தைக் கொலை செய்து விட்டார்கள், குழி தோண்டிப் புதைத்து விட்டார்கள். என்று வார்த்தைகளை மட்டும் பேசிப்பயனில்லை.

(பிற்பகல் 1—30)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவையின் முன் அனுமதியுடன், அலுவல் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

**திரு. கு. ரமணி:** நானும் சிறிது நேரத்தில் முடித்து விடுகிறேன். இந்த ஜனநாயகம் என்ற வார்த்தையை வார்த்தையாக மட்டும் பேசி பிரயோசனம் இல்லை. ஜனநாயகம் என்ற உணர்வு மக்களுக்கு இருக்கவேண்டும். இன்றைக்கு எல்லாப் பள்ளிகளிலும், மாணவர்களுக்கு பென்ச் கிடைத்திருக்கிறது, ஆசிரியர்களுக்கு உட்காருவதற்கு நாற்காலிகள் கிடைத்திருக்கின்றன என்பதை பெற்றோர்களும் மாணவர்களும் உணரவேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கமிட்டியில் இருக்கிறார்கள். அவர்கள் வந்த பணத்தை ஒழுங்காக செலவழிக்கிறார்கள், நடவடிக்கை எடுக்கிறார்கள் என்பதை எல்லோரும் உணரவேண்டும். இது நடைமுறையில் வரவேண்டும். அப்போது தான் ஜனநாயக ஃபீலிங் ஏற்படும், இது கூட இல்லையென்று சொன்னால், வெறும் வார்த்தையில் பேசி, நன்மை விளையாத, தங்கள் இஷ்டம் போன்று சர்வாதிகார காரியங்கள் நடக்கும். Local Self Government என்கிற ஒரு ஸ்தாபனத்தை உண்டாக்கியதற்குக் காரணமே இதுதான்.



கோயம்புத்தூர் நகரம் அழகான நகரம் என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராசு அவர்கள் சொன்னார்கள் உண்மைதான், இன்னும் இதை விட அழகாக வைக்கமுடியும். நாங்கள் அத்தனை அரசியல் கட்சிகளும் சேர்ந்து நாங்களே வேலை செய்கிறோம், அரசியல் கட்சிகள் கூட்டம் போடுவதற்கு ஒரு மைதானம் கிடையாது. சிதம்பரம் பூங்கா மைதானம் ஒன்று தான் அங்கே இருக்கிறது, தனி மாநகராட்சியாக இருந்தும்கூட, ஒரு கூட்டம் கூட்டுவதற்கு வேறு ஒரு மைதானம் அங்கே கிடையாது, ஒரு மேடையை அந்த மைதானத்தில் போட்டிருக்கிறார்கள். சாதாரணமாக எந்தக் கட்சியும் அங்கே கூட்டத்தை நடத்த முடியாது. அப்படி நடத்த வேண்டுமென்றால் ஒரு நாளைக்கு ரூ.6,000 வாடகையாகக் கொடுக்கவேண்டும். அப்படிக் கொடுத்து நாம் யாராவது கூட்டம் நடத்த முடியுமா? முடியாது. நாங்கள் மாநகராட்சிக்கு எழுதிக் கேட்டிருக்கிறோம், மேடை வேண்டாம், Excluding the Stage அந்தக் கட்டிடம் போக பாக்கி காலி இடத்தைக் கொடுங்கள் என்று கேட்டால்கூட, ஒரு நாளைக்கு ரூ. 400 கொடுக்கவேண்டும். மற்றவையெல்லாம் நாங்கள் செய்கிறோம். எதற்குச் சொல்கிறேன் என்றால், அங்கே மக்கள் கூட்டம் நடத்த மைதானங்கள் இல்லை, பள்ளிக்கூடங்களிலும் இப்படிப்பட்ட வசதிகள் இல்லை.

சாக்கடை நீர் சுத்தம் செய்ய மிகப் பெரிய ஸ்கீம்ஸ் இருக்கின்றன. அந்த ஸ்கீம்ஸ் இன்னும் நடைமுறையாக்கப்படவில்லை. கோடிக் கணக்கில் மதிப்புள்ள திட்டம் ட்வாடு போர்டால் போடப்பட்டு, அந்தத் திட்டம் மண்ணுக்குக் கீழே புதைக்கப்பட்டிருக்கிறது. இன்னும் நடைபெறவில்லை. இதனால் கோயம்புத்தூர் நகரில் ஒன்றும் இல்லை என்று சொல்வது தப்பு. பல கட்டிடங்கள், வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டிருக்கின்றன. பல நூற்றுக்கணக்கான. ஆயிரக்கணக்கான வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன, ஆனால் அங்கே ஸ்வீப்பர்கள் இல்லை. அதுதான் பிரச்சினை. இப்படிப்பட்ட நிலையில் இன்றைய தினம் கோவை நகரம் இருக்கிறது. அங்கே வளர்ச்சியும் இருக்கிறது, குறைகளும் உள்ளன. மிகப் பெரிய செல்வச் செழிப்பிற்கு மத்தியில் பிய்த்துப்பிடுங்குகிற தரித்திரமும்

அவலட்சணமும் சேர்ந்திருக்கிறது. அந்த நிலையை மாற்ற வேண்டும். அதற்குத்தான் மக்கள் பிரதிநிதிகள் இருந்து நடத்த வேண்டுமென்பதுதானேயொழிய, இந்த அரசாங்கத்தின் மீது எப்படியாவது குறை சொல்ல வேண்டுமென்பது அல்ல. ஒரு கட்டத்தில் நாங்களும் உங்களுடன் சேர்ந்து போராடினோம். அது அல்ல பிரச்சினை. இப்படிப்பட்ட காரியங்களைச் செய்து முடிப்பதற்குத் தேர்தலை நடத்த வேண்டும். உங்களுக்குத் தேர்தலில் உண்மையாக பயம் இருக்கிறது என்று நாங்கள் சொல்லவில்லை. பயமோ, இல்லையோ அது போகட்டும். அந்தத் தேர்தலை நடத்துவதற்குரிய முடிவிற்கு வாருங்கள். மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு நிறைய பொறுப்பு இருக்கிறது. தொழிலாளர் நலத்துறை அமைச்சராக இருப்பதால் நிறைய பொறுப்பு இருக்கிறது. அவர் அந்தத் துறையில் இல்லையென்றால், எங்களுக்குத்தான் கஷ்டம். அந்த இலாகாவை அவரிடம் கொடுத்து இருப்பதனால் அவருக்கு அதிக பொறுப்பு வந்திருக்கிறது. அவர் இன்றைக்குப் பதில் சொல்லும்போது நாங்கள் இந்த மாதத்தில் தேதிகூட இல்லாவிட்டாலும் பரவாயில்லை. தேதியைச் சொல்ல முடியாது, தேதியை கேபினெட் கூடித்தான் முடிவு செய்ய வேண்டும்—தேர்தலை நடத்தத் தயாராக இருக்கிறோம் என்று அவர் இங்கே சொல்ல வேண்டும். இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டாம். நீங்கள் எந்த மாதத்தில் தேர்தலை நடத்தப் போகிறீர்கள் என்பதைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டு, என்னுடைய கருத்துக்களைச் சொல்லி இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்த விவாதத்தில் பங்கு கொள்ள பெயர் கொடுத்தவர்கள், நாளை அனுமதிக்கப் படுவர்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை (18–11–1986) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–34 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

140. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுறு விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள்–சமய அறக்கட்டளைகள் துறையின் 26–2–1986-ஆம் நாளிட்ட 196 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுறுச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1975) 58 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]



141. 1985 ஆம் ஆண்டு சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் (திருத்த) சட்டம் அமுலுக்கு வரும் தேதியினை நியமனம் செய்வது குறித்து நகராட்சி நிர்வாகம்–குடிநீர் வழங்கு துறையின் 8–7–1986 ஆம் நாளிட்ட 807–ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1978-ஆம் ஆண்டு சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் (திருத்த) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1978) 88 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

142. நகராட்சி மன்றங்கள் வரவு-செலவினங்கள் பற்றிய விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்கல் துறையின் 21-7-1986–ஆம் நாளிட்ட 857-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1920-ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

143. தமிழ்நாடு குழாய்கிணறுகள் கழகத்தின் 1984–85 ஆம் ஆண்டிற்கான மூன்றாவது ஆண்டறிக்கை, 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

144. தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் 1981–82 ஆம் ஆண்டிற்கான எட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

145. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் 1984–85 ஆம் ஆண்டிற்கான பதினோராவது ஆண்டு அறிக்கையும், கணக்குகளும். [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள் ஏதுமில்லை.

[.. 1ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா 21–க்கான விடையைக் காண்க]

195 கிராம நிர்வாக அலுவலர் பணியிடங்கள் கீழ்க்கண்டவாறு மாவட்ட வாரியாக காலியாக உள்ளன:—

| மாவட்டத்தின் பெயர். | நிரப்பப்பட வேண்டிய பணியிடங்கள். |
|---|---|
| (1) | (2) |
| 1. சென்னை | 1 |
| 2. செங்கல்பட்டு | 74 |
| 3. வடார்க்காடு | 29 |
| 4. தென்னார்க்காடு | 11 |
| 5. தஞ்சாவூர் | 8 |
| 6. திருச்சி | 3 |
| 7. புதுக்கோட்டை | 5 |
| 8. மதுரை } | 4 |
| 9. அண்ணா } | |
| 10. இராமநாதபுரம் | |
| 11. காமராஜர் | 23 |
| 12. பசும்பொன் முத்து இராமலிங்கம் | |
| 13. திருநெல்வேலி | 9 |
| 14. கோவை | 9 |
| 15. பெரியார் | 10 |
| 16. சேலம் | .. |
| 17. தருமபுரி | 1 |
| 18. நீலகிரி | 8 |
| 19. கன்னியாகுமரி | .. |
| மொத்தம் .. | 195 |

V211,31 N86
N86-29.3
136496
சென்னை-600 008